ISSN-0971-8362

# திட்டம்

சிறப்பிதழ்

மார்ச் – 2022 வளர்ச்சிக்கான மாத இதழ் ₹ 30

## மத்திய பட்ஜெட் 2022-23




**வரி விதிப்புத் திட்டங்கள்**
தருண் பஜாஜ்

**வேளாண்மை, உணவுப் பதப்படுத்துதல் துறையில் ஏற்படக்கூடிய தாக்கங்கள்**
தே.சுரேஷ்குமார், வெ.சரவணகுமார், ந.கிருத்திகா

**உள்கட்டமைப்பு வசதி விரிவாக்கம்**
நிதின் கட்கரி

**சூழலுக்கு ஏற்ற நிதிநிலை அறிக்கை**
டி.வி.சோமனாதன்

**வீரபாண்டிய கட்டபொம்மன்**
என்.எஸ்.கணேஷ்ராம்
மூ.கவிதா

**கூட்டாட்சித் தத்துவத்தை வலுப்படுத்துதல்**
ராஜீவ் குமார்

# பொருளாதார ஆய்வறிக்கை 2021-22

## பொருளாதார நிலைமை

- இந்தியப் பொருளாதார வளர்ச்சி 2020-21இல் 7.3 சதவிகிதமாகக் குறைந்திருந்ததைத் தொடர்ந்து 2021-22இல் முன்கூட்டியே மேற்கொள்ளப்பட்ட முதலாவது கணக்கீடுகளின்படி பணவீக்கத்தையும் கணக்கில் எடுத்துக் கொண்டு பார்க்கும் போது 9.2 சதவிகிதமாக வளர்ச்சி அடையும் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- பணவீக்கத்தையும் கணக்கில் எடுத்துக் கொண்டு பார்க்கும் போது 2022-23இல் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியானது 8 முதல் 8.5 சதவிகிதமாக உயரும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.
- வருகின்ற ஆண்டில் பொருளாதார மீட்டெடுப்புக்கு ஆதரவு வழங்கும் வகையில் நிதிசார் அமைப்போடு தனியார்துறை முதலீடும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- உலக வங்கி, ஆசிய வளர்ச்சி வங்கி ஆகியவற்றின் 2022-23க்கான அண்மைக்கால முன்கணிப்பு மதிப்பான முறையே 8.7 சதவிகிதம், 7.5 சதவிகிதம் ஆகியவற்றோடு ஒப்பிடக்கூடிய விதமாக முன்மதிப்பீடு இருக்கிறது.
- பொருள்களின் தேவை குறித்துப் பார்க்கும் போது 2021-22இல் நுகர்வுத்தன்மை 7.0 சதவிகிதமாக வளரும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அதே போன்று ஒட்டு மொத்த வைப்பு மூலதன உருவாக்கம் (GFCF) 15 சதவிகிதமாகவும், ஏற்றுமதி 16.5 சதவிகிதமாகவும், இறக்குமதி 29.4 சதவிகிதமாகவும் இருக்கும் என மதிப்பிடப்பட்டது.
- 2022-23இல் சவால்களை எதிர்கொள்ளும் வகையில் இந்தியப் பொருளாதாரம் சிறப்பான இடத்தில் உள்ளது.
- அதிக அளவிலான அந்நியச் செலாவணி இருப்பு, நீடித்த தொடர்ச்சியான வெளிநாட்டு நேரடி முதலீடு, அதிகரித்து வரும் ஏற்றுமதி வருவாய் ஆகியவை ஒன்று சேர்ந்து 2022-23இல் உலகளாவிய பணவீக்கத் திருப்புதல் நடவடிக்கைகளுக்கு எதிரான போதுமான பாதுகாப்பை வழங்கும்.

## நிதிசார் அபிவிருத்திகள்

- 2021-22 பட்ஜெட் மதிப்பீட்டில் (2020-21ஆம் ஆண்டின் தற்காலிக மதிப்பீட்டின் மேல்) எதிர்பார்க்கப்படும் 9.6 சதவிகித வளர்ச்சிக்குப் பதிலாக மத்திய அரசில் இருந்து வரவு (ஏப்ரல் - நவம்பர் 2021) 67.2 சதவிகிதம் அதிகரித்துள்ளது.
- ஆண்டுக்கு ஆண்டு என்ற அடிப்படையில் ஏப்ரல் முதல் நவம்பர் 2021 வரை ஓட்டுமொத்த வரிவருவாய் 50 சதவிகிதத்திற்கும் மேல் அதிகரித்துள்ளது. பெருந்தொற்றுக்கு முன்பான 2019-2020 நிலைகளை ஒப்பிட்டாலும் கூட இந்த வளர்ச்சி சிறந்ததாகவே உள்ளது.
- ஏப்ரல் - நவம்பர் 2021 காலகட்டத்தில், உள்கட்டமைப்பு வசதிகளில் அவசியம் தேவைப்படும் பிரிவுகளைக் கவனத்தில் கொண்டு பார்க்கும் போது மூலதனச் செலவினம் 13.5 சதவிகிதம் (ஆண்டுக்கு ஆண்டு என்ற அடிப்படையில்) அதிகரித்துள்ளது.
- நீடித்த தொடர்ச்சியான வருவாய் வசூல், நிர்ணயிக்கப்பட்ட இலக்குடன் கூடிய செலவினக் கொள்கை ஆகியன ஏப்ரல் - நவம்பர் 2021 காலகட்டத்திற்கான நிதிப்பற்றாக்குறையை பட்ஜெட் மதிப்பீட்டில் 46.2 சதவிகிதமாகக் கட்டுப்படுத்தியுள்ளன.
- கோவிட்-19 பெருந்தொற்றின் காரணமாக, கடன் பெறும் வரம்பு அதிகரிப்பட்டதால், மத்திய அரசின் கடன் பொறுப்பு 2019-20ஆம் ஆண்டில் இருந்த 49.1 சதவிகிதம் என்பதிலிருந்து, 2020-21இல் 59.3 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. பொருளாதார மீட்சியின் காரணமாக இது விரைவில் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## வெளியுறவுப் பிரிவுகள்

- இந்தியாவின் வணிகப் பொருள் ஏற்றுமதியும் இறக்குமதியும் வலுவாக மீண்டெழுந்து வருகின்றன. நடப்பு நிதியாண்டில் இது கோவிட் பெருந்தொற்றுக்கு முன்பான நிலையை விட மேம்பட்டிருக்கிறது.
- சுற்றுலா மூலமான வருவாய் குறைவாக இருந்த போதிலும் கூட வரவு, செலுத்துகை இரண்டிலும் நிகரச் சேவைகள் பெருந்தொற்றுக் காலத்திற்கு முன்பான நிலைகளைத் தாண்டி அதிகரித்துள்ளன.
- தொடர்ச்சியாக அந்நிய முதலீடு செய்யப்படுதல், நிகர வெளிப்புற வர்த்தகக் கடன்களைப் புதுப்பித்தல், அதிக அளவிலான வங்கி மூலதனம், கூடுதலாக சிறப்புக் கடன் பெறும் உரிமைகள் (SDR) ஒதுக்கீடு ஆகியவற்றின் காரணமாக 2021இன் செப்டம்பர் இறுதி வரை 2021-22இன் முதல் அரையாண்டில், நிகர மூலதன வரத்து 65.6 பில்லியன் அமெரிக்க டாலராக அதிகரித்துள்ளது.
- ஓராண்டுக்கு முன்பு 556.8 பில்லியன் அமெரிக்க டாலராக இருந்த இந்தியாவின் வெளிநாட்டுக் கடன் 2021இன் செப்டம்பர் இறுதியில் 593.1 பில்லியன் அமெரிக்க டாலராக அதிகரித்து இருக்கிறது. அதிக அளவு வர்த்தகக் கடன்களோடு பன்னாட்டு நிதியத்தின் எஸ்டிஆர் நிதி ஒதுக்கீடும் சேர்ந்ததால் இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.
- 2021-22இன் முதல் அரையாண்டில், அந்நியச் செலாவணி இருப்பு 600 பில்லியன் அமெரிக்க டாலர்கள் என்ற அளவைத் தாண்டி விட்டது. 31 டிசம்பர் 2021இல் இது 633.6 பில்லியன் அமெரிக்க டாலர் என்ற அளவைத் தொட்டுள்ளது.

## விலைகள், பணவீக்கம்

- சராசரி மொத்த நுகர்வோர் விலைக் குறியீட்டுடன் இணைக்கப்பட்ட (CPI-C) பணவீக்கம் 2021-22 (ஏப்ரல் - டிசம்பர்) 5.2 சதவிகிதமாக நடுத்தர அளவில் உள்ளது. 2020-21இல் இதே காலகட்டத்தில் இது 6.6 சதவிகிதமாக இருந்தது.
- கடந்த ஆண்டு ஏப்ரல் - டிசம்பர் காலகட்டத்தில் 9.1 சதவிகிதமாக இருந்த உணவு பணவீக்கம் 2021-22 இதே காலகட்டத்தில் 2.9 சதவிகிதமாகக் குறைந்து உள்ளது.

தொடர்ச்சி 75ஆம் பக்கம்




# திட்டம்
மாத இதழ்

Azadi Ka Amrit Mahotsav

மலர் 53
இதழ் 03

மார்ச் 2022
பால்குண - சைத்ர 1943
பிலவ வருடம் மாசி - பங்குனி


ஆசிரியர்
**சஞ்சய் கோஷ்**

கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவர்களுடையதே. எல்லாக் கருத்துக்களும் அரசின் கருத்துக்களை ஒட்டி இருக்கும் என்று கூற இயலாது.

திட்டமிடுதல் மற்றும் நாட்டின் வளர்ச்சியைப் பற்றியது இந்த ஏடு. மொத்தம் 13 மொழிகளில் இது வெளியாகிறது. திட்டங்களால் ஏற்படும் நன்மைகளை இது விளக்குகிறது என்றாலும் அரசின் கருத்துக்களை மட்டுமே தெரிவிப்பது இதன் நோக்கமல்ல.

### சந்தா விபரம்

| | | |
|---|---|---|
| தனிப்பிரதி | ... | ரூ. 22.00 |
| சிறப்பிதழ் | ... | ரூ. 30.00 |
| ஓர் ஆண்டு | ... | ரூ.230.00 |
| இரண்டாண்டு | ... | ரூ.430.00 |
| மூன்றாண்டு | ... | ரூ.610.00 |


சந்தா-வை DD மூலம் அனுப்ப வேண்டிய முகவரி:
துணை இயக்குநர்
திட்டம்
வெளியீட்டுப்பிரிவு
A Wing இராஜாஜி பவன்
பெசன்ட் நகர், சென்னை -600 090
தொலைபேசி : 044 24465382, 044 24917673.
மின்னஞ்சல்: editorthittam@gmail.com
bmsechennai@gmail.com



பொருளாதார ஆய்வறிக்கை 02
தலையங்கம் 04
உள்கட்டமைப்பு வசதிகளின் விரிவாக்கம்
- நிதின் கட்கரி 06
தற்போதைய சூழலுக்கு ஏற்ற நிதிநிலை அறிக்கை
டி.வி.சோமநாதன் 11
கூட்டாட்சித் தத்துவத்தை வலுப்படுத்துதல்
- ராஜீவ் குமார்
- ரவீந்தர் பிரதாப் சிங்
- ரன்வீர் நாகைச் 14
வரி விதிப்புத் திட்டங்கள்
- தருண் பஜாஜ் 20
கிராமப்புறப் பெண்களுக்கான முனைவுகள்
- சரண்ஜித் சிங் 27
நிதிநிலை அறிக்கையின் சிறப்பம்சங்கள் 33
சர்வதேச சிறுதானிய ஆண்டு - 2023 35
வீரபாண்டிய கட்டபொம்மன்
- என்.எஸ்.கணேஷ்ராம்
- மூ.கவிதா 37
வேளாண்மை, உணவுப் பதப்படுத்துதல் துறையில் ஏற்படுத்தும் தாக்கங்கள்
- தே.சுரேஷ்குமார்
- வெ.சரவணகுமார்
- ந.கிருத்திகா 45
வேலைவாய்ப்பும் மனிதவள மேம்பாடும்
- அருண் சாவ்லா 53
சுற்றுச்சூழலும், காடுகளும்
- எஸ்.சி.லஹிரி 58
தொடர் பெருக்க விளைவை நாடி
- சாஜன் சிங் யாதவ் 62
இந்தியப் பெருவணிக நிறுவனங்களின் கடன் பற்றாக்குறையைப் போக்குதல்
- அவினேஷ் மிஸ்ரா
- பிரியங்கா ஆனந்த் 68
வேளாண்மைக்கு உன்னதமான 13 திட்டங்கள் 74


Log on to **http://publicationsdivision.nic.in/**
*in collaboration with* **bharatkosh.gov.in**

## தலையங்கம் திட்டம்

# சவாலான நேரத்தில் நிதிநிலை அறிக்கை

பெருந்தொற்று காரணமாக கடந்த இரண்டு ஆண்டுகள் உலகப் பொருளாதாரத்திற்கு மிகக் கடினமான நேரமாக இருந்தது. அலைஅலையாக வரும் தொற்று, பொருள் வழங்கு வலைத்தொடரில் தடங்கல்கள், சமீபகாலங்களில் உலகளாவிய விலையேற்றம் ஆகியவற்றால் கொள்கை வடிவமைப்பாளர்களுக்கு ஒரு சவாலான நேரமாக அது இருந்தது. 2021–22ஆம் ஆண்டிற்கான பொருளாதார ஆய்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளது போல இந்திய அரசு இவற்றால் ஏற்பட்ட தாக்கங்களால் பாதிக்கப்படக்கூடிய மக்களுக்கு சற்று ஆறுதல் அளிக்கும் வண்ணம், ஓர் அணுகுமுறையை மேற்கொண்டது. பிறகு, உள்கட்டமைப்பு வசதிகள் போன்றவற்றிற்கான மூலதனச் செலவினங்களைக் கணிசமான அளவுக்கு உயர்த்தி, மக்களின் நுகர்வுத் தன்மையை அதிகரித்து, அதே சமயம் பொருள் உற்பத்தி மற்றும் வழங்கல் ஆகியவற்றில் உள்ள சிக்கல்களைத் தீர்த்து நம்முடைய பொருளாதாரம் நீண்ட காலத்திற்கு நிலைத்து வளர்ச்சி பெறுவதற்கான பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. கள நிலைமைகளை உடனுக்குடன் அறிந்து கொண்டு, நெகிழ்ந்து கொடுக்கக்கூடிய, பலமுனை அணுகுமுறை துடிப்பான செயல் வடிவத்தில் மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வறிக்கையின்படி, இனிவரும் ஆண்டுகளில் பொருளாதாரத்திற்கு ஆதரவு அளிக்க நம்முடைய நிதி அமைப்புகளும் சிறந்த நிலையில் உள்ளதால் தனியார் துறை மூலதனம் அதிகரித்து, பொருளாதாரம் புத்துணர்ச்சி பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் பெருந்தொற்றினால் விவசாயமும், அதைச் சார்ந்த துறைகளும் மிகக் குறைந்த அளவே பாதிக்கப்பட்டுள்ளதால் 2021–22இல் அவற்றின் வளர்ச்சி 3.9 சதவிகிதமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு முந்தைய ஆண்டில் இந்த வளர்ச்சி விகிதம் 3.6 ஆக இருந்தது. 2020–21ஆம் ஆண்டில் தொழில் உற்பத்தி ஏழு சதவிகிதம் குறைந்த நிலையில் இந்த நிதியாண்டில் அது 11.8 சதவிகிதம் விரிவடைந்தது. பொருள் உற்பத்தி, கட்டுமானம், சுரங்கம் சார்ந்த உள்துறைகள் இதே மாற்றத்தைக் கண்டன. ஆனால், பெருந்தொற்று சமயத்தில் நிலவிய முழு அடைப்புக் காலங்களிலும் மின்சாரம் மற்றும் தண்ணீர் வழங்கல் ஆகியவை சீராக இருந்ததால் பொதுச்சேவைத் துறையில் மாற்றங்கள் பெரிதாக இல்லை. பொருளாதார ஆய்வறிக்கையின்படி, இந்தப் பெருந்தொற்றினால் சேவைகள் துறை மிகப்பெரிய அளவில் பாதிக்கப்பட்டது. இந்தத் துறையில் கடந்த ஆண்டு, 8.4 சதவிகிதம் குறைந்த உற்பத்தி ஏற்பட்ட நிலையில் இந்த ஆண்டு சேவைசார் உற்பத்தி 8.2 சதவிகிதம் உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சிக்கலான நேரங்களில் நிதித்துறை ஆழ்ந்த அழுத்தத்திற்கு உள்ளாவது இயல்பு தான் என்று ஆய்வறிக்கை சுட்டிக் காட்டுகிறது. ஆனாலும், இந்திய நிதிச்சந்தைகள் மிகச்சிறப்பாகச் செயல்பட்டு, இந்திய நிறுவனங்கள் மூலதனத் திரட்டலை சாதனை அளவாக செய்துள்ளன. பொருளாதார ஆய்வறிக்கையில் ஆங்காங்கே தொடர்ந்து கூறப்பட்டுள்ள ஒரு கருத்து “செயல்முறை சீர்திருத்தங்கள்” என்பதாகும். மக்களின் தேவைகள் சார்ந்த செயல்பாடுகளில் உதவி செய்பவராகவோ, நெறிமுறை செய்பவராகவோ அரசு செயல்பட்டு நடவடிக்கைகளை எளிமைப்படுத்துவதன் அவசியத்தை இது குறிப்பிடுகிறது.

2022–23க்கான மத்திய நிதிநிலை அறிக்கை பிரதமரின் கதிசக்தி திட்டத்தின் நான்கு தூண்களையும், அனைவரையும் உள்ளடக்கிய மேம்பாட்டையும், உற்பத்தித்திறன் மேம்பாட்டையும், முதலீட்டையும் புதிய துறைகளில் வாய்ப்புகளை வழங்குவதையும், எரிசக்தி மாற்றங்களையும், மூலதனங்களினால் ஏற்படும் பருவநிலை செயல்பாடுகளையும் குறிப்பிட்டு வலியுறுத்துகிறது.


பிரதம மந்திரியின் கதிசக்தித் திட்டம், பொருளாதார வளர்ச்சி மற்றும் நிலைத்து நிற்கும் மேம்பாட்டுச் செயல்பாடுகளில் பெரிய அளவிலான மாற்று அணுகுமுறைகளைக் கொண்டுள்ளது. சாலைகள், ரயில்வே, விமான நிலையங்கள், துறைமுகங்கள், சரக்குப் போக்குவரத்து, நீர்நிலைப் போக்குவரத்து மற்றும் போக்குவரத்திற்கான உள்கட்டமைப்பு வசதி மேம்பாடு ஆகிய ஏழு முனைப்புகளை கதிசக்தித் திட்டம் கொண்டுள்ளது. ஒரு புதிய திட்டமான வடகிழக்குப் பகுதிகளுக்கான பிரதம மந்திரியின் மேம்பாட்டு முனைவு, வடகிழக்குக் கவுன்சில் மூலம் செயல்பட்டு உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கு நிதி வழங்கப்படும். விவசாயத்துறையில் நவீன தொழில்நுட்பங்களான ட்ரோன் கருவிகள், இரசாயன பொருள்கள் அல்லாத இயற்கை வேளாண்மை நாடெங்கிலும் ஊக்குவிக்கப்படும். புதிய கல்விக் கொள்கையின் தொலைநோக்கைச் செயல்படுத்தும் வண்ணம், பிரதம மந்திரியின் “ஒரு வகுப்பிற்கு ஒரு தொலைக்காட்சி அலைவரிசை” திட்டமான இ–வித்யா திட்டத்தில் தற்போதுள்ள 12 தொலைக்காட்சி அலைவரிசைகளை 200 ஆக அதிகரித்து அதனால் எல்லா மாநிலங்களும் அவர்களுடைய மாநில மொழிகளில் 1 ஆம் வகுப்பு முதல் 12 வகுப்பு வரையிலான மாணவர்களுக்குக் கூடுதல் கல்வி நிகழ்ச்சிகளை வழங்க முடியும். இது அல்லாமல் நாடெங்கிலும் உள்ள மாணவர்கள் உலகத்தரம் வாய்ந்த வகையில் எல்லோரும் கல்வி பெற மின்மயப் பல்கலைக்கழகம் ஒன்று அமைக்கப்படும். மக்கள் நல்வாழ்வுத்துறையில் ஆயுஷ்மான் பாரத் மின்மய இயக்கத்தில் மக்கள் நல்வாழ்வுச்சூழல் தொடர்பான தேசிய மின்மய திறந்த தளம் ஒன்று அமைக்கப்பட்டு, அதனால் அனைவரும் மருத்துவ சிகிச்சை வசதி உருவாக்கப்படும். இந்தப் பெருந்தொற்றுக் காலத்தில் எல்லா வயதினருக்கும் மனநலப் பிரச்சினைகள் உருவாகியிருப்பதால் மக்கள் அனைவரும் தரமான மனநல சிகிச்சைகளையும், சேவைகளையும் பெற “தேசிய தொலைதூர மனநல சிகிச்சைத் திட்டம்” துவக்கப்படும்.


எல்லா மக்களுக்கும் நிதிசார் சேவைகள் கிடைக்க ஏதுவாக 2022இல் நாட்டிலுள்ள அனைத்து 1.5 இலட்சம் தபால் அலுவலகங்களும் வங்கித்துறையின் அடிப்படைத் தொகுப்பில் இணைக்கப்படும். இந்தியாவின் 75வது சுதந்திர ஆண்டைக் குறிக்கும் வண்ணம், பட்டியலிடப்பட்ட வணிக வங்கிகள் மூலம் 75 மின்மய வங்கி மையங்களை 75 மாவட்டங்களில் அரசு துவக்கும். 2022–23ஆம் நிதியாண்டில் இந்திய ரிசர்வ் வங்கி பிளாக் செயின் மற்றும் பிற தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி மெய்நிகர் நாணயத்தை அறிமுகப்படுத்தத் திட்டமிட்டுள்ளது. மெய்நிகர் மின்மயச் சொத்துக்கள் பணப்பரிமாற்றம் ஏற்படும் போது 30 சதவிகித வரி விதிக்க நிதிநிலை அறிக்கை வழிவகை செய்துள்ளது.

இந்த நிதிநிலை அறிக்கை அனைவரின் நலம் சார்ந்த, மின்மயப் பொருளாதாரத்தையும், நிதிசார் தொழில்நுட்பத்தையும் மேம்படுத்தி, தொழில்நுட்பம் சார்ந்த மேம்பாடு, மாற்று எரிசக்தி, பருவநிலை மாற்றத்திற்கான நடவடிக்கைகள், தனியார் முதலீடு, போக்குவரத்து ஆகியவற்றை மையப்படுத்தியதாக அமைந்துள்ளது.

– ஆசிரியர்

# மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களுக்கு 173.59 கோடிக்கும் மேற்பட்ட கோவிட் தடுப்பூசி மருந்து வழங்கப்பட்டுள்ளது





2022, பிப்ரவரி 25ஆம் நாள் நிலவரத்தின்படி, இந்தியாவிலுள்ள மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களுக்கு, 173.22 கோடிக்கும் மேற்பட்ட (1,73,59,44,160) தடுப்பூசி மருந்துகள் மத்திய அரசு மூலம் இலவசமாகவும், மாநிலங்களின் நேரடிக் கொள்முதல் மூலமும் இதுவரை வழங்கப்பட்டுள்ளன.

மாநிலங்களிலும், யூனியன் பிரதேசங்களிலும் 11.02 கோடிக்கும் மேற்பட்ட (11,02,69,507) தடுப்பூசி மருந்துகள் இருப்பில் உள்ளன.

தடுப்பூசி போட்டுக் கொண்டவர்களும் கூட முகக்கவசம் அணிவது, கைகளை அடிக்கடி கிருமி நாசினி அல்லது சோப் கொண்டு கழுவுவது, தனி நபர் இடைவெளி ஆகியற்றைத் தொடர்ந்து கடைபிடித்து வருவது அவசியம்

ஐந்து டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை நோக்கி

# உள்கட்டமைப்பு வசதிகளின் விரிவாக்கம்

- நிதின் கட்கரி

வளர்ச்சியின் பலன்கள் எல்லோரும் அறிந்ததே. அனைத்துக் குடிமக்களின் நல வாழ்வை மேம்படுத்தி, அவர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்வதே வளர்ச்சியின் நோக்கமாகும். பொருளாதார வாய்ப்புகளுக்கு ஏற்ற சூழலை உருவாக்கும் புதிய கொள்கைகள் மேம்பட்ட வாழ்க்கைத் தரத்தையும், எளிதான வாழ்க்கை முறைகளையும் உருவாக்கும். அதிகரிக்கும்; பொருளாதார வளர்ச்சியால் சமூக மேம்பாட்டிற்கு அதிகமான நிதி கிடைக்கும், நம்முடைய மொத்த உள்நாட்டு உற்பத்தியை ஐந்து டிரில்லியன் அமெரிக்க டாலராக உயர்த்த நாம் இலக்கு வைத்திருப்பது ஒரு உயரிய எதிர்பார்ப்பு தான். அதனை அடைய நாம் மேற்கொள்ள வேண்டிய அணுகுமுறை உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி, சுயசார்பு இந்தியாவை உருவாக்க ஏதுவான வளர்ச்சிக்கான சூழலை உருவாக்குவதாகும். சுதந்திர இந்தியாவின் 75வது நிறைவு ஆண்டை நாம் கொண்டாடும் இந்தத் தருணத்தில், உயரிய எதிர்பார்ப்புடன் பயணத்தை நாம் துவக்கியிருக்கிறோம்.

பொருளாதார வளர்ச்சியை கூர்மைப்படுத்துவதற்கு உள்கட்டமைப்பு வசதிகளின் மேம்பாடுதான் 2014லிருந்து அரசின் முயற்சிகளின் மையமாக இருந்து வருகிறது. கட்டுமானப் பணிகள் மட்டுமல்லாமல், மின்மய உள்கட்டமைப்பு வசதிகளுக்கும் கவனம் செலுத்தப் பட்டிருக்கிறது. ஒருங்கிணைக்கப் பட்ட பணப்பரிமாற்ற இடைமுகம் (UPI) என்ற மின்மய வசதி மூலம் மேற்கொள்ளப்பட்டிருக்கும் மின்மய உள்கட்டமைப்பு வசதி ஒரு மிகப் பெரிய வெற்றியாகும். ஒருங்கிணைக்கப்பட்ட பணப்பரிமாற்ற இடைமுகத்தின் மூலம் நாம் இப்போது மிக எளிதாகப் பணப்பரிமாற்றம் செய்வதை கற்பனை செய்து கூட பார்த்திருக்க முடியாது. இன்று சாலையோரம் ஒரு கோப்பை தேநீர் வாங்கிப் பருகினால் கூட அதற்கான பணத்தை இந்த ஒருங்கிணைந்த பணப் பரிமாற்ற இடைமுக வசதியின் மூலம் எளிதாகக் கொடுக்கலாம். இதுவரை நம் வங்கித்துறைக்கு அதன் மிகப் பெரிய அளவிலான கிளைகளே அதன் வலிமையாக இருந்து வந்தது. ஆனால் இப்போது, மிக வலுவான மின்மய உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்பட்டுள்ளதன் மூலம் குடிமக்கள் வங்கிக் கிளைகளுக்கு செல்லாமலேயே நிதி சார்ந்த சேவைகளைப் பெறுவதற்கான அரிய பல வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. இதைப் போலவே பிற மின்மய முனைவுகளான 2.5 இலட்சம் கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள பாரத் நெட் எனப்படும் அகன்ற அலைவரிசை தொலைத்தொடர்பு, ஆதார் மற்றும் ஆயு';மான் பாரத் மின்மய சுகாதார அமைப்பு போன்றவை இந்த மின்மய உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி நிதி வசதிகளையும், சமூக வசதிகளையும் வழங்குவதில் எல்லா மக்களையும் உள்ளடக்கி மக்களை மையப்படுத்திய ஆளுகையை மேம்படுத்தியுள்ளது.

மேம்பட்ட பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்கும் கட்டுமான உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கல் மிகவும் அவசியமாகும். தரமான உள்கட்டமைப்பு வசதிகள் பொருள்கள் மற்றும் சேவைகளின் உற்பத்தித் திறனை மேம்படுத்துகின்றன. பொருளாதார வளர்ச்சி நிலைத்து நிற்க வேண்டுமானால் அந்த வளர்ச்சி பொருள் மற்றும் சேவை உற்பத்தியின் திறன்களை மேம்படுத்த வேண்டும். வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துவதாலும், முக்கியமான அடிப்படைத் துறைகளில் தனியார் முதலீட்டை அதிகரிப்பதாலும், பொருளாதாரத் திற்கான பொருள் போக்குவரத்தின் செலவுகளைக் குறைப்பதாலும், இந்தியாவிலும், உலகச் சந்தைகளிலும் இந்தியப் பொருள்களின் போட்டித் தன்மையை மேம்படுத்துவதாலும், அரசாங்கத்திற்கான வரிவருவாயை அதிகரிப்பதாலும் மக்கள் மேலும் எளிதாக வாழ இயலுவதாலும் உள்கட்டமைப்பு வசதிகளில் முதலீடுகளை அரசு அதிகரிக்கிறது.

உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்க பெருமளவிலான முதலீடுகள் தேவைப்படும் என்பதால் நாம் மேற்கொள்ள வேண்டிய உள்கட்டமைப்புத் திட்டங்கள் படிப்படியாக எப்படி உருவாக்கப்பட வேண்டும் என்று முதலில் அறியப்பட்டது. இந்த வகையில் ரூ.111 இலட்சம் கோடி





அளவுக்கு முதலீடு தேவைப்படும் திட்டங்களை உருவாக்க தேசிய உள்கட்டமைப்பு வழிமுறை (NIP) உருவாக்கப்பட்டது. இந்த முயற்சி அரசின் உயர் எதிர்பார்ப்பை மிகத் தெளிவாக சந்தைகளுக்கு தெரியப்படுத்துகிறது, ஒரு முழுமையான அணுகுமுறை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்ற நம்பிக்கையை முதலீட்டாளர்களுக்குத் தருகிறது. உள்கட்டமைப்பு வசதிகளின் முதலீடு எந்த அளவிற்கு தொடர் வளர்ச்சியை ஏற்படுத்துகிறது என்பதை உறுதி செய்ய அவ்வப்போது திட்டமிடுதலிலும், திட்டங்களைச் செயல்படுத்துவதிலும் கால தாமதம் ஆகியனவற்றைத் தவிர்க்க வேண்டும். தேசிய உள்கட்டமைப்பு வழி முறையும் இப்போது துவக்கப் பட்டுள்ள கதிசக்தி என்ற திட்டமும் ஒரு முழுமையான அணுகுமுறையை உருவாக்கும். சிறந்த ஒருங்கிணைப்பும், திட்டமிடுதலும் குறிப்பிட்ட நேரத்தில், குறிப்பிட்ட காலத்தில் இந்த உள்கட்டமைப்பு வசதிகளையும், சேவைகளையும் வழங்க ஏதுவாக இருக்கும்.

மத்திய வணிக மற்றும் தொழில் துறை அமைச்சகம் சமீபத்தில் துவக்கிய பிரதம மந்திரி கதிசக்தி தேசியப் பெருந்திட்டம் ரயில்வே, சாலைப் போக்குவரத்து உள்ளிட்ட 16 அமைச்சகங்களை உள்ளடக்கியதாகும். இவை அனைத்தும் ஒன்றாக ஒன்றிணைந்து திட்டங்களைத் தீட்டி உள்கட்டமைப்பு வசதிகளை ஒருங்கிணைந்து செயல்படுத்தும். இந்தப் பெருந்திட்டத்தில் புவிசார் தகவல் அமைப்பு சார்ந்த GIS நிறுவனங்களின் வள திட்டமிடல் தளத்தை வான்வழி செயல்பாடு மற்றும் புவிசார் தகவல்களுக்கான பாஸ்கராச்சார்யா தேசியக் கழகத்தோடு (BISAG-N) இணைந்து, சம்மந்தப்பட்ட எல்லா அமைச்சகங்கள் மற்றும் துறைகளின் குறிப்பிட்ட செயல்திட்டங்கள் அனைத்தின் தகவல்களும் ஒருங்கிணைக்கப்பட்டுத் தொகுக்கப்படும்.

பரந்து விரிந்த நம்நாட்டில் உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்க முழுமையான திட்டமிடுதலும் வசதிகளை உருவாக்குதலும் அவசியமாகும். நாட்டிற்கான திட்ட அணுகுமுறையில் சாலைகள் மற்றும் நெடுஞ்சாலைகளின் வலைத்தொடர்பை உள்ளடக்க வேண்டும். இந்த வழியில் தான் நெடுஞ்சாலைகளின் மேம்பாட்டை ஒருங்கிணைந்து செயல்படுத்த ஒரு திட்ட வடிவை பாரத்மாலா பரியோஜனா நமக்கு வழங்கியது. இந்தத் திட்ட வடிவின் பயனாக நாம் ஒவ்வொரு திட்டத்திற்கான விவரமான அறிக்கைகளைத் தயாரிக்கத் துவங்கி, சாலைகளின் வழிகளை ஒருங்கிணைத்து அதற்கான நில ஆய்வுகளை மேற்கொள்ள முடிந்தது. நாடெங்கிலும் காணப்பட்ட மிக முக்கியமான உள்கட்டமைப்பு சார்ந்த இடைவெளிகளை நிரப்ப பாரத்மாலா பரியோஜனா என்ற பொதுவான திட்டம் உருவாக்கப் பட்டது. இந்தத் திட்டத்தில் 34,800 கிலோமீட்டர் அளவிற்கு தேசிய நெடுஞ்சாலைகள் உருவாக்கத் திட்டமிடப்பட்டு, தேசிய நெடுஞ்சாலை வாரியம் (90%), சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறைகள் சார்ந்த பொதுப்பணித் துறை (6%), தேசிய நெடுஞ்சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம் (4%) என்ற மூன்று அமைப்புகள் மூலம் செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்தில் வழித்தொடர் தேசிய நெடுஞ்சாலை மேம்பாட்டு அணுகுமுறையில் 550க்கும் மேற்பட்ட மாவட்டங்கள்

இணைக்கப்பட்டு, நாட்டின் மொத்த சரக்குப் போக்குவரத்தில் 70 முதல் 80 சதவிகிதம் வரை தேசிய நெடுஞ்சாலைகளில் நிகழும் வண்ணம் செயல்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இப்போது திட்டமிட்டுள்ள 34800 கிலோ மீட்டர் தொலைவிற்கான திட்டங்களில் ரூ.5.76 இலட்சம் கோடி மதிப்பிலான 19,470 கிலோ மீட்டர் தூரத்திற்கான திட்டங்கள் கட்டுமானத்திற்காக வழங்கப் பட்டுள்ளன.

இந்தப் புதிய திட்டம் விரைவுப் போக்குவரத்து உள்கட்டமைப்பு வசதி உருவாக்கலில் புதிய வழித்தடங்களை இணைத்து உருவாக்கும் ஒரு மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. ஏற்கனவே உள்ள நெடுஞ்சாலை களை விரிவாக்கி மேம்படுத்துவது ஒரு முக்கியமான பணியாகும். ஆனால் சரக்குகள் உற்பத்தி செய்யப்படும் இடங்களையும், மக்களால் பயன்படுத்தப்படும் இடங்களையும் இணைக்கும் புதிய விரைவு வழிச்சாலைகள் பொதுப் போக்குவரத்து செலவைக் குறைத்து பெரிய மாற்றத்தை ஏற்படுத்த வல்லதாகும். இந்த வகையில் பாரத்மாலா முதல் கட்ட மேம்பாட்டில் ரூ.3.6 இலட்சம் கோடி செலவில் மிக முக்கியமான ஐந்து விரைவுப் போக்குவரத்து நெடுஞ்சாலைகளும், 17 அணுகு கண்காணிப்பு வழித்தடங்களும் உருவாக்கப்படுகின்றன. இந்த ஐந்து விரைவுப் போக்குவரத்துத் திட்டங்களாவன: டெல்லி - மும்பை, அகமதாபாத் - துலேரா, பெங்களூரு - சென்னை, தில்லி - அம்ரித்சர் - கட்ரா மற்றும் கான்பூர் - லக்னௌ திட்டங்கள் ஆகும். 2485 கிலோ மீட்டர் நீளத்திற்கு ரூ.1.63 இலட்சம் கோடியில் இவை திட்டமிடப் பட்டுள்ளன. இது அல்லாமல் ராய்பூர் விசாகப்பட்டினம், அம்பாலா - கோட்புத்லி, அம்ரித்சர் - படின்டா - ஜாம்நகர் உள்ளிட்ட 11 அணுகு கண்காணிப்பு வழித்தடங்கள் 5924 கிலோ மீட்டர் தொலைவிற்கு சுமார் 1.97 இலட்சம் கோடி செலவில் உருவாக்கப்பட உள்ளன. இதில் 8400 கிலோ மீட்டர் தொலைவிற்கான புதிய வழித்தடங்களில் சுமார் 5000 கிலோ மீட்டர் அளவிற்கு ஏற்கனவே கட்டுமான ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளன. அடுத்த சில மாதங்களில் சுமார் 1000 கிலோ மீட்டர் தொலைவு தூரத்திற்கான வழித்தடங்கள் போக்குவரத் திற்காகத் திறந்து விடப்படும்.

பொருளாதார மேம்பாட்டின் பலன்களை எல்லோருக்கும் வழங்குவது அரசின் முக்கியமான பணியாகும். இந்த விரைவு வழித்தடங்கள் இதுவரை அதிகம் பயனடையாத மற்றும் சிறிதே பயனடைந்துள்ள பகுதிகளின் வழியாகச் செல்வதால் அந்தப் பகுதியில் வாழும் மக்களுக்கு பொருளாதார வாய்ப்புகளையும், தனியார் முதலீடுகளையும் மேம்படுத்தி மேம்பாட்டின் பலன்களை மக்களுக்கு அளிக்கும். தற்போது பாரத்மாலா திட்டத்தின் இரண்டாவது கட்டப் பணிகளை மேற்கொள்ளும் தருணமாகும். நாடெங்கிலும் உள்ள மக்களின் எதிர்பார்ப்புகளைப் பார்க்கும் போது நமக்கு உயர் அளவு ஆர்வம் உள்ளது.

நிலைமைகளைச் சிறப்பாகப் புரிந்து கொள்ள மொத்த சாலை வழிகளின் வலைத்தொடர்பு நீள அளவையும், விரிவாக்கங்கள் சார்ந்த தகவல்களையும் பார்க்க வேண்டும். 2009-10 நிதியாண்டு முதல் 2013-14 நிதியாண்டு வரை ஆண்டொன்றுக்கு 5900 கிலோ மீட்டர் அளவிற்கான தேசிய நெடுஞ்சாலைகள் திட்டத்திற்கான கட்டுமான ஒப்பந்த அனுமதிகள் வழங்கப்பட்ட நிலையில் 2014-15 நிதியாண்டிற்குப் பிறகு அது ஆண்டொன்றுக்கு 11000 கிலோ மீட்டர் அளவாக உள்ளது. இதைப் போலவே, 2009-10 நிதியாண்டு முதல் 2013-14 நிதியாண்டு வரை ஒவ்வொரு ஆண்டும் சுமார் 4900 கிலோ மீட்டர் அளவிற்கான நெடுஞ்சாலைத் திட்டங்கள் நிறைவேற்றி முடிக்கப்பட்ட நிலையில் 2014-15க்குப் பிறகு ஆண்டொன்றுக்கு 9000 கிலோ மீட்டர் அளவிற்கு, அதாவது 1.8 மடங்கு உயர்ந்து தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

குறிப்பாக, கடந்த நிதியாண்டில் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகம் ஓர் ஆண்டில் 13327 கிலோ மீட்டர் தொலைவிற்கு, அதாவது நாளொன்றுக்கு 37 கிலோ மீட்டர் நெடுஞ்சாலைப் பணிகளை நிறைவு செய்து ஒரு புதிய சாதனையைப் படைத்துள்ளது.

பொருள் போக்குவரத்து செலவைக் குறைக்க வேண்டும், ஒரு அளவிற்கு நெடுஞ்சாலை களை மேம்படுத்துவதன் மூலம் இது நிகழ்கிறது. ஆனால், நெடுஞ் சாலைகளில் முதலீடு செய்வதற்கு இது ஒன்று மட்டுமே போதிய காரணம் இல்லை. பல போக்கு வரத்துகளை இணைக்கும் கூட்டு அமைப்பு நமக்குத் தேவை. இவை நெடுஞ்சாலைகள், நீர்வழிப் போக்குவரத்து வழிகள், விமான நிலையங்கள், ரயில்வே கட்டமைப்புகள் ஆகியவற்றோடு இணைக்கப்பட வேண்டும். அப்போது தான் சரக்குகள் தடையின்றிப் பயணிக்க முடியும். பிரதம மந்திரியின் கதிசக்தி தேசியப் பெருந்திட்டத்தின் தொலைநோக்கின்படி ஒருங்கிணைந்த திறமையான



போக்குவரத்தை அமைக்க இந்தப் பலமுனை போக்குவரத்துகளை இணைக்கும் கூட்டமைப்புகள் (MMPLs) தேவை. இந்தத் தொகுப்பின் மூலம் சரக்குகள் பல வழியான போக்குவரத்துகள் மூலம் தடையின்றி தொடர்ந்து பயணிக்கும். இந்த அமைப்பில் ஒரு மைய அமைப்பும், அதிலிருந்து பல வழியான போக்குவரத்து களுக்கான வழித்தளங்களும் இருக்கும். ஒரு மையத்திலிருந்து இன்னொரு மையத்திற்கு ரயில், கடல்வழி, உள்நாட்டு நீர் வழி ஆகியவை மூலம் நீண்ட பயணங்களும் ஆரம்ப கட்ட, இறுதிக் கட்ட பயணங்களும் டிரக் போன்ற சரக்குந்துகளின் மூலம் நடைபெறுகிறது. பல முனைப் போக்குவரத்துகளை இணைக்கும் கூட்டமைப்புகளை உருவாக்க பெரிய திட்டங்கள் வகுக்கப் பட்டுள்ளன. இந்த பல முனைப் போக்குவரத்துகளை இணைக்கும் கூட்டமைப்புகள், உயர்தர சேமிப்புக் கிடங்குகள், உள்கட்டமைப்பு வசதிகளையும் ஆரம்ப கட்ட, இறுதி கட்ட வழித் தொடர்புகளையும் சுங்கத்துறை செயல் வசதிகளையும், கடைசி கட்ட பொருள் உருவாக்கு வசதிகளையும் வழங்கும். ஆகவே, இந்தக் கூட்டமைப்புகள் பொருள் போக்குவரத்துச் செலவுகளைக் குறைக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இந்தக் கூட்டமைப்புத் தொகுப்புகள் ஜோகிகொப்பா, நாக்பூர், சென்னை இந்தூர், பெங்களூரு உள்ளடக்கிய சரக்குப் போக்குவரத்துத் துறையில் தரக்குறைவுகள் உள்ள 35 இடங்களில் அமைக்கப்படுகின்றன. இந்த 35 தொகுப்புகள் நாட்டின் 50 சதவிகித பொருள் போக்கு வரத்திற்கு உதவி செய்யும்.


2014க்குப் பிறகு, இடதுசாரி தீவிரவாதம் காணப்படும் மாவட்டங்களில் நெடுஞ்சாலைப் போக்குவரத்து சிறப்பு கவனம் பெற்றுள்ளது. உதாரணமாக, ராய்பூர் மற்றும் விசாகப் பட்டினத்திற்கு இடையே ஒரு புதிய தேசிய நெடுஞ்சாலை சத்தீஸ்கர், ஒடிசா மற்றும் ஆந்திரப்பிரதேச மாநிலங்களின் பின் தங்கிய பகுதிகளை இணைக்கிறது. பாரத் மாலா பரியோஜனா திட்டத்தின் முதலாவது கட்டத்தில் உருவாக்கப் படும் வழித்தடங்கள் இடதுசாரி தீவிரவாதம் பாதிக்கப் பட்ட பகுதிகளிலும், மக்களின் உயர் எதிர்பார்ப்பு உள்ள மாவட்டங்களிலும் தொடர்புகளை மேம்படுத்தும். மேலும், கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை யில் காணப்படும் வகையில் பாரத்மாலா பரியோஜனா திட்டத்தின் கீழ் உருவாக்கப்படும் 34800 கிலோ மீட்டர் அளவிற்கான தேசிய நெடுஞ்சாலைகளில் எல்லைப் பகுதிகளுக்கும், வட கிழக்கு மாநிலங்களுக்கும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

| மாநிலம் | பாரத்மாலா திட்டத்தில் நெடுஞ்சாலை கள் (கி.மீ) |
|---|---|
| ஜம்மு காஷ்மீர் (லடாக் உள்ளிட்ட) | 398 |
| நாகாலாந்து | 193 |
| மிசோரம் | 361 |
| மேகாலயா | 128 |
| அஸ்ஸாம் | 512 |
| மணிப்பூர் | 607 |
| திரிபுரா | 75 |
| மொத்தம் | 2274 |

(பாரத்மாலா பரியோஜனா திட்டத்தின் கீழ் வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் எல்லைப் பகுதிகளில் அமைக்கப்படும் நெடுஞ்சாலைகளின் தூரம்)

ஸ்ரீநகர் லே சாலையில் அமைக்கப்பட்டுள்ள 14.96 கிலோ மீட்டர் நீள ஸோஜிலா சுரங்கப்பாதை ஆசியாவிலேயே மிக நீளமான இரு வழிச்சாலை சுரங்கப் பாதையாகும். இந்தச் சுரங்கப் பாதையினால் சோனாமார்க் பகுதியிலுள்ள பல்தால் என்ற இடத்திலிருந்து லடாக் பகுதியிலுள்ள மினாமார்க் இடையேயான தூரப் பயணம் 40 கிலோ மீட்டரிலிருந்து 13 கிலோ மீட்டராகக் குறைக்கப்படுகிறது. மூன்று மணி நேரப்பயணம் இப்போது 15 நிமிடங்களாக குறைக்கப்பட்டிருக்கிறது.

உள்கட்டமைப்பு வசதிகளை அமைக்க மிகப்பெரிய அளவிலான முதலீடுகள் தேவைப்படுகின்றன. தேவைப்படும் முதலீடுகள் குறித்து சந்தைக்கு வழிகாட்டுதல்களை முன்னதாகவே அளிக்க ஒரு ஆரம்ப கட்டம் தேவை. தேசிய உள்கட்டமைப்பு வழிமுறை இதற்காக சரியான பாதையில் எடுக்கப்பட்ட நடவடிக்கையாகும். திட்டங்களை உரிய காலகட்டத்தில் முழுமைப்படுத்தவும், தேவையான போது அரசு நடவடிக்கை எடுப்பதும் முதலீட்டாளர்களின் நம்பிக்கையை வலுவாக்க உதவும் (கதிசக்தித் திட்டம் இந்த வகையில் தான் செயல்படுகிறது). இந்தத் திட்டங்களைச் செயல்படுத்த நிதிச்சந்தைகளை நன்றாகப் புரிந்து கொண்டு பல வகையான வழிமுறைகளை வழங்கி, புதிய முறைகளில் நிதிகளைத் திரட்ட வேண்டும். தேசிய சொத்துக்களை நிதியாக்கும் வழிமுறை NMPஇன் ஒரு பகுதியாக இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் உள்கட்டமைப்பு மூலதன அறக்கட்டளை ஐஸீஎஐவுஎன்ற அமைப்பைத் துவக்கியுள்ளது. தேசிய நெடுஞ்சாலைச் சொத்துக்கள் நீண்ட கால




அமைப்புகளாக இருப்பதால் இந்த உள்கட்டமைப்பு மூலதன அறக்கட்டளையின் பங்குகள் பன்னாட்டு மற்றும் தேசிய நிதி முதலீட்டு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதன் முக்கியமான அடித்தள முதலீட்டாளர்களாக இரண்டு வெளிநாட்டு நிறுவனங்கள், அதாவது கனடாவின் ஓய்வூதியத் திட்ட முதலீட்டு வாரியம் மற்றும் ஒன்டாரியோ ஆசிரியர்களின் ஓய்வூதியத் திட்ட வாரியம் ஆகியவை ஏற்கப்பட்டு, முதலீடுகள் செய்துள்ளன. ஐந்து சாலைகள் கொண்ட முதல் தொகுப்பிற்கு ரூ.8000 கோடி நிதி திரட்டப்பட்டுள்ளது. இதில் 50 சதவிகித முதலீடு மற்ற நாடுகளிலிருந்து பெறப்பட்டுள்ளது. இனிவரும் காலங்களில் உள்கட்டமைப்பு முதலீடு அறக்கட்டளைக்கு அதிகப்படியான சாலைகள் ஒதுக்கப்படும். தேசிய சொத்துக்களை நிதியாக்கும் வழிமுறை (NMP) யில் பலவகையான நவீன முதலீட்டாளர்களை ஈர்க்க வலுவான திறமை உள்ளது என்று இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் நிரூபித்துள்ளது.

இறுதியாக ஆனால் மிக முக்கியமாக கருதப்பட வேண்டியது, உள் கட்டமைப்பு வசதிகளை உருவாக்கும் போது, சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது மிகத் திறமையான சமன்செய் செயலாகும். என்னுடைய அணுகுமுறையில் நிலைமைகளுக்கு ஏற்ப சுற்றுச்சூழலைக் காப்பதே முதன்மைப் பணியாகும். நெடுஞ்சாலை நெடுகிலும் மரங்களை நடுவதை நான் நேரடியாகக் கண்காணிக்கிறேன். செப்டம்பர் 2015வாக்கில் சாலைகள் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைப் போக்குவரத்து அமைச்சகம் பசுமையான வழித்தடங்களை அமைப்பதின் அவசியத்தை உணர்ந்து பசுமை தேசிய நெடுஞ்சாலைகளை உருவாக்க முனைந்தது. அதன்படி நிலைத்து நிற்கும் சுற்றுச்சூழலுக்காக தேசிய நெடுஞ்சாலைகள் நெடுகிலும் புதிய மரங்களை வளர்த்தும், அப்புறப்படுத்த வேண்டிய மரங்களை வேறு இடத்தில் நட்டும் சாலைகளை அழகுபடுத்திப் பராமரிப்பது, இதனால் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம், தேசிய நெடுஞ்சாலைகளில் சுற்றுச்சூழலுக்கு உகந்த மர வளர்ப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்ட பின் 2016–17 முதல் 2020–21 வரை இரண்டு கோடிக்கும் மேற்பட்ட மரங்கள் நடப்பட்டுள்ளன. நவம்பர் 2021 வரை இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் 63 இலட்சம் புதிய மரக்கன்றுகளை நட்டுள்ளது. இதில் நெடுஞ்சாலைகளின் இரு பக்கங்களிலும் 27.5 இலட்சம் மரங்களும், இரு வழிப்பாதைக்கு நடுவே உள்ள பகுதியில் 35.6 இலட்சம் மரக்கன்றுகளும் நடப்பட்டுள்ளன. இந்த மரத் தொகுப்புகளைத் தொடர்ந்து கண்காணிக்க, பறக்கும் கருவிகள் மூலம் வீடியோ படங்கள் எடுக்கப்படுகின்றன. செயற்கை கோள்கள் மூலமும் இவை கண்காணிக்கப்படுகின்றன, பாரம்பரிய முறையிலான நேரடிக் கண்காணிப்பும் மேற்கொள்ளப்படுகிறது.

---

– **நிதின் கட்கரி**, மத்திய சாலைப்போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர்.





# தற்போதைய சூழலுக்கு ஏற்ற நிதிநிலை அறிக்கை

**– டி.வி.சோமநாதன்**

மகாகவி சி.சுப்ரமணிய பாரதி தனது "பாரத தேசம்" என்ற கவிதையில் வங்கத்தில் பாயும் அதிகப்படியான நீரை மத்திய இந்தியாவில் பயிர் விளைச்சல் செய்யப் பயன்படுத்துவோம் என்று தீர்க்க தரிசனத்துடன் கனவு கண்டிருந்தார். 1921இல் இந்த உலகை விட்டு அவர் மறைந்தார். அவர் மறைந்த நூறாண்டுகளுக்குப் பிறகு கென்பெட்வா திட்டத்தின் மூலம் முதலாம் நதிஇணைப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. புதிய வரிவிதிப்பு ஏதும் இல்லாமல், பட்ஜெட்டானது 2025–26ஆம் ஆண்டில் 4.5 சதவீத ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியை அடைய வேண்டும் என்று கடந்த ஆண்டு பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட இலக்கை நோக்கி இந்தப் பட்ஜெட்டானது வேகமாக பயணிக்கிறது. எதிர்காலத்திற்கான தொலைநோக்குப் பார்வையுடன் தற்போதைய செயல்பாடுகளை சமச்சீராக மேற்கொள்வது, அணுகுமுறையில் கொள்கைப் பிடிப்பு, செய்முறையில் விவேகம் ஆகியவற்றின் அடிப்படையில் 2022–23ஆம் ஆண்டு பட்ஜெட் சமச்சீரான பட்ஜெட்டாக விளங்குகிறது.

நாடாளுமன்ற ஜனநாயகத்தில் பட்ஜெட்டுகள் பலவிதமான நோக்கங்களைப் பூர்த்தி செய்கின்றன. ஒரு பக்கம் அவை வருடாந்திர நிதிநிலை அறிக்கையாக உள்ளன இது வழக்கமான தொடர் அம்சம் தான் என்றாலும், மிகவும் முக்கியமானது. மறுபக்கம் அவை கொள்கை நோக்கத்தின் அறிக்கைகளாகவும் உள்ளன. அரசுகள் தங்களது வாடிக்கையாளர்களை தனியார் துறையைப் போன்று தேர்ந்தெடுக்க முடியாது அரசுகள் குடிமக்கள் அனைவருக்கும் சேவை ஆற்ற வேண்டும். "முக்கியமான திறன்களில்" மட்டும் அவை கவனம் செலுத்திவிட முடியாது நாடாளுமன்றம் எதிர்பார்க்கும் அனைத்து விஷயத்திலும் கவனம் செலுத்தியாக வேண்டும். அரசுகள் பல இலவசங்களை மக்களுக்கு வழங்குகின்றன. எனவே சாத்தியமாகக் கூடிய விநியோகம் அல்லது செலவைத் தாண்டி தேவையானது அதிகமாகவே உள்ளது. அரசுகள் வரி வசூலிக்கின்றன அவை தவிர்க்க முடியாததாக இருப்பதோடு விரும்பப்படாததாகவும் உள்ளன. இத்தகைய அனைத்து காரணங்களாலும் பட்ஜெட் தாயரிப்பு என்பது அதிக சிக்கல் நிறைந்த சமச்சீரான செயல்பாடு ஆகும்.


2022–23ஆம் நிதி ஆண்டுக்கான பட்ஜெட் என்பது இன்றைய குறிப்பிட்ட காலநிலைமைகளுக்கான பட்ஜெட்டாக இருக்கிறது. நடப்பு இரண்டாம் ஆண்டில் பொது முதலீடுகளை அதிகரிப்பதன் மூலமும் வேளாண்மை, சுகாதாரம், கல்வி மற்றும் நலவாழ்வுத் திட்டங்களுக்கு தொடர்ந்து ஆதரவு அளிப்பதன் மூலமும் வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பை அதிகரிப்பதே இந்த பட்ஜெட்டின் மையக்கருத்தாகும். மூலதனச் செலவுக்கான நிதி ஒதுக்கீடானது 35 சதவிகிதத்துக்கும் மேலாக அதிகரிக்கப்பட்டுள்ளது. பிரதம மந்திரியின் கதிசக்தித் திட்டமானது உள்கட்டமைப்பு வசதிகளை குறிப்பிடத்தக்க அளவு விரிவுபடுத்துதல் என்பது மட்டும் அல்ல. மிகவும் திறன்மிக்க திட்டமிடல் மூலம் தரத்தை மேம்படுத்துவதும் இந்தச் செயல் திட்டத்தின் நோக்கமாகும். சாலை வசதிக்கும் ரெயில் வசதிக்கும் இடையில், ரெயில் மற்றும் மெட்ரோவுக்கு இடையில், துறைமுகம் மற்றும் சாலைகளுக்கு இடையில் மிக மோசமான ஒருங்கிணைப்பு இருப்பதை நாம் பலமுறை பார்த்திருக்கிறோம். ஒருங்கிணைந்த திட்டமிடல் மற்றும் செயலாக்கம் என்பது உள்நாட்டு உற்பத்தித் திறன் மற்றும் ஏற்றுமதிப் போட்டித் திறனை அதிகரிக்கச் செய்யும்.

மற்றுமொரு முன்னுரிமை எதுவெனில் பலன் தரக்கூடிய வகையில் வேலைவாய்ப்பை உருவாக்குவது ஆகும். மூலதனச்



செலவு என்பதே அதனளவில் இலட்சக்கணக்கான நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளை உருவாக்கும் (அதாவது இதர துறைகளின் மீது ஏற்படுத்தும் பல்பெருக்க விளைவுகளின் மூலம் இது ஏற்படும்). சிறப்பு அம்சம் என்னவென்றால் மாநிலங்களுக்கு அவற்றின் மூலதனச் செலவுக்காக இதுவரை இல்லாத அளவில் உதவிக்கரம் நீட்டப்பட்டுள்ளது. வட்டி இல்லாத 50 ஆண்டுக்கால கடனாக ரூபாய் 1 இலட்சம் கோடி வழங்குவதன் வாயிலாக மாநிலங்களுக்கு உதவி வழங்கப்படுகிறது. குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு கடன் உத்திர வாதத் திட்டம் என்பது பெருமளவில் ரூபாய் 2 இலட்சம் கோடி புதிய கடன் தொகை வழங்குதல் என்பதன் மூலம் மறுசீரமைக்கப்படுகிறது. விருந்தோம்பல் துறை, சுற்றுலா மற்றும் அது தொடர்பான துறைகளுக்கு (பெருந்தொற்றால் பாதிக்கப்பட்ட துறைகள்) கூடுதல் கடன் வழங்கப்படுகிறது. மிகவும் வெற்றிகரமாகச் செயல்படும் அவரசக்காலக் கடன் உத்திரவாதத் திட்டம் மூலம் இந்த உதவி வழங்கப்படுகிறது. பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டத்துக்கான ஒதுக்கீடு 27 சதவிகிதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. சில குறிப்பிட்ட முன்னுரிமைப் பிரிவுகளில் தங்களது பங்கு நிதிச்செலவைச் சமாளிக்கும் வகையில் மாநிலங்களுக்குக் கூடுதல் நிதி உதவியும் வழங்கப்பட இருக்கிறது.


உர மானியங்கள் மற்றும் தானியக் கொள்முதல் உள்ளிட்ட வேளாண்மைக்கு உதவும் வகையில் போதுமான நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. தற்போது செயலாக்கத்தில் இருக்கும் தேசிய சுகாதார இயக்கம் மற்றும் ஆயுஷ் திட்டங்கள் ஆகியவற்றோடு புதியதாக பிரதம மந்திரி சுயசார்பு




பாரத் சுகாதார உள்கட்டமைப்பு இயக்கம் செயல்படுத்தப்படும். இந்த இயக்கமானது இந்தியாவின் சுகாதாரத் திறனின் தரநிலையை நிரந்தரமாக உயர்த்தும். நெகிழ்ச்சியான, தேவை அடிப்படையிலான,"பிரதம மந்திரியின் வடகிழக்கு பிராந்தியத்துக்கான வளர்ச்சி முன்னெடுப்பு" (PM DevINE) என்பது வழக்கமான திட்டங்களின் வரையறை மற்றும் அளவுக் காரணிகளுக்குப் பொருந்திவராமல் போகக்கூடிய செயல் திட்டங்களுக்காகவே ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. நிதிக்கமிஷனின் பரிந்துரைகளுக்கு ஏற்ப 130 மத்திய நிதிநல்கைத் திட்டங்கள் மறுசீரமைப்பு செய்யப்பட்டு 65 திட்டங்களாக மறுவடிவாக்கம் செய்யப்பட்டுள்ளன. இது மிகச் சிறப்பான நெகிழ்ச்சித் தன்மையை அளிப்பதோடு சாதகமான தாக்கத்தையும் ஏற்படுத்தும்.

இன்றைய பொருளாதார நெருக்கடிகளைச் சமாளித்து வரும் அதே சமயத்தில், நாளைய கொள்கைப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கான அஸ்திவாரத்தையும் பட்ஜெட் எழுப்புகிறது. இந்த பட்ஜெட் விரிவாகவும், கவனமாகவும் தயாரிக்கப்பட்ட பல வகையான நிதி ஒதுக்கீடுகளைக் கொண்டுள்ளது. மேலும் 2047ஆம் ஆண்டின் இந்தியாவுக்கான கொள்கை முன்னெடுப்புகளையும் கொண்டுள்ளது. உலகத் தரத்திலான உள்நாட்டு ரெயில் தொழில்நுட்பம், விவசாயத்துக்கான கிசான் ட்ரோன்கள், ஒரு சேவையாக ட்ரோன்களைப் பயன்படுத்துதல், டிஜிட்டல் சுகாதாரத் தகவல், தொலைமருத்துவம், எலெக்ட்ரானிக் பாஸ்போர்ட், டிஜிட்டல் பணம், சுத்தமான பொதுப்போக்குவரத்து, பேட்டரிகளை மாற்றிக் கொள்ளுதல், பசுமை ஹைட்ரஜன், நிலக்கரியை வாயுவாக மாற்றுதல் மற்றும்






கண்ணாடி ஒளியிழை மூலமான இணைய இணைப்பினை அனைவருக்கும் கிடைக்கச் செய்தல் முதலானவை இதில் அடங்கும். கிரிப்டோ சந்தைக் கருவிகள் மீதான வரி விதிப்பில் காணப்படும், குறைகளை நிவர்த்தி செய்தல், சிறப்புப் பொருளாதார மண்டலங்களின் சுங்க நிர்வாகத்தை நவீனமாக்குதல் ஆகியன பட்ஜெட்டின் குறிப்பிடத்தக்க முக்கியமான அம்சங்கள் ஆகும்.

மகாகவி சி.சுப்ரமணிய பாரதி தனது "பாரத தேசம்" என்ற கவிதையில் வங்கத்தில் பாயும் அதிகப்படியான நீரை மத்திய இந்தியாவில் பயிர் விளைச்சல் செய்யப் பயன்படுத்துவோம் என்று தீர்க்க தரிசனத்துடன் கனவு கண்டிருந்தார். 1921இல் இந்த உலகை விட்டு அவர் மறைந்தார். அவர் மறைந்த நூறாண்டுகளுக்குப் பிறகு கென்பெட்வா திட்டத்தின் மூலம் முதலாம் நதிஇணைப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பேரியல் பொருளாதார நிலைத்தன்மையைப் பேணும் வகையில் நிதிசார் கொள்கைக்காக இந்த அனைத்து அம்சங்களும் மிகவும் கவனமாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. பெருந்தொற்று தொடர்பான செலவினங்கள் மற்றும் பங்கு விலக்கல் செயல்பாடுகளில் பற்றாக்குறை ஆகியன இருந்த போதிலும் கூட, அதிக வருவாய் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. மேலும் செலவினக் கட்டுப்பாடுகள் தீவிரமாகக் கடைபிடிக்கப்படுகின்றன. இவை எல்லாம் சேர்ந்து 2021–22க்கான நிதிப் பற்றாக்குறையை ஜிடிபியில் 6.9 சதவிகிதமாக வைத்திருக்க உதவின. இது சற்றேறக்குறைய பட்ஜெட் முன்வைக்கும் அளவாகும். நிதிப் பற்றாக்குறையை ஓராண்டில் பெருமளவில் குறைத்தது இதுவே முதல் முறையாகும். அடுத்த ஆண்டு நிதிப்பற்றாக்குறை ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6.4 சதவிகிதமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மூலதனச் செலவினத்துக்காக மாநிலங்களுக்கு சிறப்பு நிதிப் பரிமாற்றம் செய்ததை நீக்கிவிட்டுப் பார்த்தால் உண்மையில் நிதிப் பற்றாக்குறை என்பது 6.0 சதவிகிதம் மட்டுமே ஆகும். வருவாய்ப் பற்றாக்குறையானது 4.7 சதவிகிதத்தில் இருந்து 3.8 சதவிகிதமாக குறையும் என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது.

புதிய வரிவிதிப்பு ஏதும் இல்லாமல், பட்ஜெட்டானது 2025 26ஆம் ஆண்டில் 4.5 சதவீத ஒட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியை அடைய வேண்டும் என்று கடந்த ஆண்டு பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட இலக்கை நோக்கி இந்தப் பட்ஜெட்டானது வேகமாக பயணிக்கிறது. 2020–21இல் 9.2 சதவீதமாக இருந்ததில் இருந்து இந்தப் பயணமானது தொடங்குகிறது. பொருளாதாரத்தில், சமச்சீரான பட்ஜெட் என்பது செலவும் வருவாயும் சமமாக இருக்கும் பட்ஜெட் ஆகும். 2022–23ஆம் ஆண்டு பட்ஜெட் மற்றொரு அர்த்தத்தில் ஒரு சமச்சீரான பட்ஜெட் ஆகும். எதிர்காலத்திற்கான தொலை நோக்குப் பார்வையுடன் தற்போதைய செயல்பாடுகளை சமச்சீராக மேற்கொள்வது, அணுகுமுறையில் கொள்கைப் பிடிப்பு மற்றும் செய்முறையில் விவேகம் ஆகியவற்றில் இந்த பட்ஜெட் சமச்சீரான பட்ஜெட்டாக விளங்குகிறது.

– **டாக்டர் டி.வி.சோமனாதன்,**
இந்திய அரசின் நிதித்துறைச் செயலாளர்.

# கூட்டாட்சித் தத்துவத்தை வலுப்படுத்துதல்

- ராஜீவ் குமார்
- ரவீந்தர் பிரதாப் சிங்
- ரன்வீர் நாகைச்

2022–23ஆம் நிதி ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதைப் போன்று இந்தியாவில் ஜிஎஸ்டி எனப்படும் பொருள்கள் மற்றும் சேவை வரி அறிமுகம் செய்யப்பட்டது, "சுதந்திர இந்தியாவில் கூட்டுறவுக் கூட்டாட்சித் தத்துவ உணர்வை வெளிப்படுத்தக்கூடிய வரலாற்றுச் சிறப்புமிக்க சீர்திருத்தம்" இதுவாகும். இந்தியாவில் பொருள்கள் மற்றும் சேவை வரி ஜிஎஸ்டி குழுவால் நிர்வகிக்கப்படுகிறது. இந்தக் குழுவில் மத்திய அரசுக்கு இணையாக மாநில அரசுகளும் சம பங்குதாரர்களாக உள்ளனர். நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நடப்பு ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை, இந்தியாவில் கூட்டாட்சி அமைப்பு முறையை வலுப்படுத்திவரும் தொடர்ச்சியான சீர்திருத்தங்கள், கொள்கை உருவாக்கங்கள் ஆகியவற்றின் தொடர்ச்சியாகும்.

இந்தியா என்பது துணைக் கண்டங்களின் அம்சங்களைக் கொண்ட ஒரு நாடு. இந்தியாவின் மிகப்பெரிய வலிமையாகக் கருதப்படுவது அதன் பன்முகத்தன்மையேயாகும். இந்தியா விடுதலை அடைந்த பின்னர், அதற்கு மிகவும் பொருத்தமாக இருக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு தான், கூட்டாட்சித் தத்துவ முறை ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஒட்டுமொத்த நாட்டிற்கும் தேவையான அதிவேக வளர்ச்சியைக் கருத்தில் கொண்டும், அதிகரித்து வரும் மாநில எதிர்பார்ப்புகள், இந்தியாவின் வளங்களில் அதிகப் பங்கைக் கைப்பற்ற வேண்டும் என்பதற்கான தேடல் ஆகியவற்றை கருத்தில் கொண்டு பார்க்கும் போது, கூட்டாட்சித் தத்துவத்தின் வலிமையான அம்சங்கள் முன்பே கவனத்திற்கு வந்தன. கூட்டாட்சித் தத்துவத்தைக் கடைபிடிக்கும் நாட்டில், மக்களின் தேவைகளையும் எதிர்பார்ப்புகளையும் சிறப்பாக நிறைவேற்றும் நோக்கத்துடன், மையப்படுத்தப்பட்ட திட்டமிடல் முறையில் இருந்து விலகி, பரவலாக்கப்பட்ட பங்கேற்பு அம்சங்களுடன் கூடிய திட்டமிடலை உருவாக்கும் நோக்குடன், இந்தியாவில் ஏற்கெனவே நடைமுறையில் இருந்த திட்ட ஆணையம் கலைக்கப்பட்டு, அதற்குப் பதிலாக நிதிஆயோக் எனப்படும் தேசிய அமைப்பு கடந்த 2015ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் தேதி தொடங்கப்பட்டது. இந்தியாவில் திட்ட ஆணையம் செயல்பாட்டில் இருந்த போது, அதன் கொள்கைகள் மாநிலங்கள் மீது திணிக்கப்பட்டன. அதுமட்டுமின்றி, திட்ட ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களுக்கு மட்டும் நிதிஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்த நிதியை வேறு எதற்கும் செலவிடாத முடியாத அளவுக்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. ஆனால், இப்போது இந்தியா உருவாக்கியுள்ள நிதிஆயோக் அமைப்பு என்பது, புதிய சிந்தனைகளை உருவாக்கிச் செயல்படுத்தக் கூடிய அமைப்பாகும். கொள்கைகளை வகுப்பதில் மாநில அரசுகளின் பங்களிப்புக்கு இது அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. அதுமட்டுமின்றி, நிதிஆயோக் உருவாக்கியுள்ள அதிநவீன வளங்கள் மையத்தின் மூலமாக மாநில அரசுகளுக்கு வல்லுநர்களின் வழிகாட்டுதல்களையும், கொள்கை ஆலோசனையையும் நிதி ஆயோக் வழங்குகிறது.

கூட்டாட்சித் தத்துவம் என்ற ஒற்றை நாணயத்தின் இரு பக்கங்கள் ஒத்துழைப்பும், போட்டித் தன்மையுமே ஆகும். புதிய இந்தியாவை பொருளாதார அடிப்படையிலும், சமூக அடிப்படையிலும் முன்னெடுத்துச் செல்வதற்கு இந்த இரு அம்சங்களும் மிகவும் அவசியமாகும். ஒருபுறம் மாநிலங்களுக்கு வளங்களையும், வலிமையான கொள்கை ஆலோசனைகளையும் வழங்கி உதவி செய்ய வேண்டிய அவசியம் உள்ள நிலையில், மறுபுறம் மாநில அரசுகளின் செயல்பாடுகளை மேம்படுத்துவதற்காக அவற்றுக்கு ஊக்கம் அளிக்க வேண்டி இருக்கிறது. நிதிஆயோக் அமைப்பு உருவாக்கப்பட்ட நாளில் இருந்து இந்த இரு கடமைகளையும் சமநிலையுடன் செய்து வருகிறது. அதுமட்டுமின்றி, மாநிலங்களுக்குத் தேவையான ஆதரவையும் வழங்கி வருகிறது.



## கூட்டுறவுக் கூட்டாட்சித் தத்துவம்

கூட்டுறவுக் கூட்டாட்சித் தத்துவத்தை உருவாக்குவதற்காக, மாநிலங்களுடன் தீவிர பங்கேற்புடன் கூடிய தேசிய வளர்ச்சிக்கான முன்னுரிமைகள் என்ற பகிர்ந்து கொள்ளப்பட்ட தொலைநோக்கு இலக்கை எட்டுவதற்காக நிதி ஆயோக் உழைத்து வருகிறது. நிதி ஆயோக் அமைப்பின் நிர்வாகக்குழு பிரதமரின் தலைமையில் செயல்பட்டு வருகிறது. அந்த அமைப்பில் அனைத்து மாநிலங்களின் முதலமைச்சர்களும், யூனியன் பிரதேசங்களின் துணைநிலை ஆளுநர்களும், தேர்ந்தெடுக்கப்பட்ட சில மத்திய அமைச்சர்களும் சம அதிகாரம் கொண்ட உறுப்பினர்களாக அங்கம் வகிக்கின்றனர். இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கான பகிர்ந்து கொள்ளப்பட்ட தொலைநோக்கு இலக்கை உருவாக்குவதற்காக நிதிஆயோக் அமைப்பின் நிர்வாகக்குழு ஆண்டுக்கு ஒரு முறை கூடுகிறது. நிதிஆயோக் அமைப்பின் ஆறாவது நிர்வாகக் குழுக் கூட்டம் கடந்த 2021ஆம் ஆண்டு பிப்ரவரி 20ஆம் தேதி நடைபெற்றது. தனித்துவமான அந்தக் கூட்டத்தில் நிர்வாகக் குழு ஆலோசனைகளுக்கான செயல் திட்டத்தை இறுதி செய்வதற்காக நிதிஆயோக் மாநில அரசுகள், மத்திய அமைச்சகங்கள் ஆகியவற்றுக்கு இடையேயான விரிவான பயிலரங்குகள் நடத்தப்பட்டன.


நிதிஆயோக் அமைப்பு உருவாக்கப்பட்ட பின்னர் அதனால் மேற்கொள்ளப்பட்ட மிகப்பெரிய முன்முயற்சி என்பது 2017ஆம் ஆண்டில் இந்தியா@75 என்ற உத்தி வகுப்பு ஆவணத்தை உருவாக்கியதுதான். விரிவான பங்கேற்பு அணுகுமுறையைப் பின்பற்றி அதன் உருவாக்கம் மேற்கொள்ளப்பட்டது. மத்திய அரசு, மாநில அரசுகள் மற்றும் மாவட்ட அளவிலான உள்ளாட்சி அமைப்புகளைச் சேர்ந்த 800க்கும் கூடுதலான பங்குதாரர்களிடமும், சுமார் 550 வல்லுநர்களிடமும் ஆலோசனை நடத்தி நடத்தித்தான் இந்த ஆவணம் தயாரிக்கப்பட்டது. 2022ஆம் ஆண்டில் 75வது சுதந்திர நாளைக் கொண்டாடும் புதிய இந்தியாவுக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்குகளை முழுமையாக எட்டவும், இந்தியாவை ஐந்து இலட்சம் கோடி அமெரிக்க டாலர் உற்பத்தி மதிப்பு கொண்ட பொருளாதாரமாக உயர்த்தவும், தேவையான பங்களிப்பை தனியார் முதலீட்டாளர்களும், பிற பங்குதாரர்களும் அளிப்பதற்கு ஏற்ற கொள்கைச் சூழலை உருவாக்குவதுதான் இந்தியா@75 உத்தியை வகுக்கும் ஆவணத்தின் முக்கியமான நோக்கமாக இருந்தது.

இந்தியாவில் கூட்டுறவுக் கூட்டாட்சித் தத்துவத்தை வளர்த்தெடுப்பதற்காக ஏராளமான நடவடிக்கைகளை நிதிஆயோக் அமைப்பு மேற்கொண்டிருக்கிறது. உத்தரப்பிரதேசம், திரிபுரா மற்றும் மத்தியப்பிரதேச அரசுகளுடன் கூட்டாக இணைந்து உருவாக்கப்பட்டுள்ள வளர்ச்சிக்கான செயல் திட்டங்களில் இந்த நடவடிக்கைகள் பிரதிபலிப்பதைக் காணமுடியும். மாநில அரசுகள், யூனியன் பிரதேசங்களுடன் வளர்ச்சிக்கான சிறந்த நடைமுறைகளை தொடர்ச்சியாகப் பகிர்ந்துகொள்ளுதல், மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேச அதிகாரிகளுக்கு கொள்கை ஆதரவு மற்றும் திறன் மேம்பாடு அளித்தல் உள்ளிட்டவற்றில் மாநில அரசுகளுடன் நிதிஆயோக் அமைப்பு பங்குதாரராகச் செயல்படுகிறது.

மாநில அரசுகளுடன் நிதி ஆயோக் அமைப்பு தொடர்ந்து கலந்தாலோசனை நடத்தி ஆலோசனைகளை வழங்குவதன் மூலம், பல மாநில அரசுகள்



தங்களின் திட்டமிடல் மற்றும் நிதித் துறை பணிகளை மறுசீரமைத்திருப்பது உட்பட அமைப்பு சார்ந்த விஷயங்களில் ஏராளமான மாற்றங்களைச் செய்திருப்பதைக் காணமுடிகிறது. நீட்டித்த வளர்ச்சி இலக்குகளின்படி நிர்ணயிக்கப்பட்ட 17 இலட்சியங்கள் மற்றும் 169 இலக்குகள் ஒன்றுடன் ஒன்று சம்பந்தப்பட்டவை என்பது மட்டுமின்றி, ஒன்றையொன்று சார்ந்தவையும் ஆகும். அந்த இலக்குகளை எட்டுவதற்கு அரசின் பல்வேறு துறைகளுக்கு இடையே ஒருங்கிணைந்த தொடர்ச்சியான நடவடிக்கைகள் தேவை. நீடித்த வளர்ச்சி இலக்குகளின் இத்தகைய தன்மை காரணமாக மாநில அரசுகள், அரசு அமைப்புகளில் தொடர்ந்து நிலவி வரும் ஒரே மாதிரியான செயல்பாடுகளைக் கைவிடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. அதற்கு மாறாக, மாநில அரசுகளுக்கும், நிதி ஆயோக் அமைப்புக்கும் இடையே ஏற்பட்டுள்ள கூட்டாண்மை காரணமாக, பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் அவற்றின் செயல் வடிவம் மற்றும் பயனாளிகளின் அடிப்படையில் ஒருங்கிணைப்பதற்கு வாய்ப்பு ஏற்பட்டு இருக்கிறது. அத்துடன் வளங்களைச் சிறப்பாகப் பயன்படுத்தி, சிறப்பான முடிவுகளை எடுப்பதற்கும் இந்தக் கூட்டாண்மை வகை செய்துள்ளது. இவ்வாறாக, மாநிலங்கள் மற்றும் மாநிலங்களின் கீழ் உள்ள துணை அமைப்புகளுடன் நவீனமான, இலக்குகளை எட்டக்கூடிய கூட்டாண்மைகளை ஏற்படுத்துவதற்கான அடித்தளம்




அமைக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய அமைப்பு சார்ந்த முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்காக மாநிலங்களும், யூனியன் பிரதேசங்களும் பல்வேறு புதுமையான வழிகளை ஆராய்ந்து கண்டு பிடித்துள்ளன.

**போட்டித் தன்மை கொண்ட கூட்டாட்சித் தத்துவம்**

மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேச அரசுகளின் செயல்பாடுகளை மேம்படுத்துவதற்கான உதவிகளைச் செய்து தருவதன் மூலம், போட்டித் தன்மை கொண்ட கூட்டாட்சி முறையை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை நிதி ஆயோக் அமைப்பு மேற்கொண்டு வருகிறது. வளர்ச்சிக்கான குறியீடுகளை உருவாக்குதல், பல்வேறு துறைகளில் ஒவ்வொரு மாநில அரசும் எந்த அளவுக்கு முன்னேற்றம் அடைந்துள்ளது என்பதை அறிவதற்கான வெளிப்படையான தர வரிசையைத் தயாரித்தல், மறுஆய்வுக்கான பொறிமுறைகள், திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் ஆகியவற்றை உருவாக்கியிருப்பதன் மூலம் மாநிலங்களிடையே ஆரோக்கியமான போட்டியை நிதிஆயோக் அமைப்பு தூண்டியுள்ளது. எளிதாக வணிகம் செய்ய ஏற்ற மாநிலங்கள் என்பதில் தொடங்கி, நீடித்த வளர்ச்சி இலக்குகள் வரை பல்வேறு அம்சங்களை அளவிடுவதற்கான காரணிகள் மூலம் ஒவ்வொரு மாநிலத்திற்கும் தர வரிசை உருவாக்கப்படுகிறது. எண்ணிக்கைகளின் அடிப்படையிலான நோக்கக் காரணிகளின் அடிப்படையில் சமூகக் குறியீடுகளைக் கொண்டு வழங்கப்படும் தரவரிசைகள் மாநிலங்களும், மாவட்டங்களும் தங்களின் செயல்பாடுகளை அதிகரித்துக் கொள்வதற்கு ஊக்குவிக்கிறது.

இந்தியாவில் மாற்றத்தைக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளில் ஒன்றாக, இந்தியாவில் உள்ள முன்னேறத் துடிக்கும் மாநிலங்களின் செயல்பாடுகளில் ஒவ்வொரு மாதமும் ஏற்படும் மாற்றத்தை அடிப்படையாகக் கொண்ட தர வரிசையை நிதி ஆயோக் அமைப்பு மாதம் தோறும் வெளியிட்டு வருகிறது. நிதி ஆயோக் அமைப்பின் முன்னேறத் துடிக்கும் மாநிலங்கள் திட்டம், மாவட்டங்கள் திட்டம் 2018ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடங்கப்பட்டது. சுகாதாரம் மற்றும் நுண்ணூட்டச்சத்து; கல்வி; வேளாண்மை; நீர்வளம்; அடிப்படை கட்டமைப்பு; நிதி உள்ளடக்கம் மற்றும் திறன் மேம்பாடு ஆகிய துறைகளில் வளர்ச்சி சார்ந்து மிகவும் பின்தங்கிய 112 மாவட்டங்கள் முன்னேறத் துடிக்கும் மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டு, அவற்றின் முன்னேற்றத்தில் முன்னேறத் துடிக்கும் மாவட்டங்கள் திட்டம் அதிக கவனம் செலுத்தி வருகிறது. முன்னேறத் துடிக்கும் மாவட்டங்களுக்கான தரவரிசையைத் தயாரித்து வெளியிடுவது என்பது, அந்த மாவட்டங்களின் செயல்பாடுகளில் உடனடியாக முன்னேற்றத்தை ஏற்படுத்துவதாகும். முன்னேறத் துடிக்கும் மாவட்டங்களின் செயல்பாடுகள் அடிப்படையில் மாதந்தோறும் தரவரிசை வெளியிடுவதன் மூலம், அவற்றின் நிர்வாகத்தில் திறனை அதிகரித்து, முன்னேற்றத்தை அளவிடுவதுதான் இந்தத் தரவரிசை தயாரிப்பதன் நோக்கம் ஆகும். முன்னேறத் துடிக்கும் மாவட்டங்களாக அறிவிக்கப்பட்ட மாவட்டங்கள் அனைத்தும் முதலில் அந்த மாநிலங்களில் சிறப்பாகச் செயல்படும் மாவட்டத்திற்கு இணையாக வளர இயலுமா? என்று சவால் விடப்பட்டு, அந்தச் சவாலில் வெற்றி பெறுவதற்கு ஊக்குவிப்புகளும் வழங்கப்படுகின்றன. பின்னர், போட்டித்தன்மையும், கூட்டுறவுத்தன்மையும் கொண்ட கூட்டாட்சித் தத்துவத்தின் அடிப்படையில் மற்றவர்களிடம் இருந்து நல்ல விசயங்களைக் கற்பதன் மூலமாகவும், போட்டியிடுவதன் மூலமாகவும், இந்தியாவின் சிறந்த மாவட்டங்களில் ஒன்றாக வளர்ச்சி அடைவதற்கு அவை ஊக்குவிக்கப்படுகின்றன. போட்டித்தன்மை மற்றும் கூட்டுறவுத் தன்மை கொண்ட கூட்டாட்சித் தத்துவ உணர்வை மேம்படுத்துவதற்காக ஒவ்வொரு மாவட்டமும் அதன் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் செயல்படுத்தப்படும் முக்கியமான திட்டங்களில் தீவிர கவனம் செலுத்துவதற்காக கூடுதல் நிதி உதவி வழங்கப்படுகிறது. இந்திய அளவில் முதலிடம் பிடிக்கும் முன்னேறத் துடிக்கும் மாவட்டத்திற்கு 10 கோடி ரூபாயும், இரண்டாவது இடத்தைப் பிடிக்கும் மாவட்டத்திற்கு ஐந்து கோடி ரூபாயும், ஒவ்வொரு துறையிலும் சிறந்து விளங்கும் மாவட்டத்திற்கு மூன்று கோடி ரூபாயும் பரிசாக வழங்கப்படுகிறது.

இதற்காக நிதிஆயோக் உருவாக்கியுள்ள சில குறியீடுகளில் விரிவான நீர் மேலாண்மைக் குறியீடு, இந்தியா புதுமைக் கண்டுபிடிப்புக் குறியீடு, ஏற்றுமதி போட்டித் தன்மைக் குறியீடு, பள்ளிக் கல்வித் தரக்குறியீடு, மாநில சுகாதாரக் குறியீடு மற்றும் நீடித்த வளர்ச்சி இலக்கக் குறியீடு ஆகியவை அடங்கும்.

**நீடித்த வளர்ச்சி இலக்குகள் உள்ளூர் மயமாக்கப்படுவதை ஊக்குவித்தல்**

2018ஆம் ஆண்டில் தொடங்கி, நீடித்த வளர்ச்சி இலக்குகளை நோக்கிய முன்னேற்றத்தை அளவிடுவதற்காக உருவாக்கப்பட்ட நீடித்த வளர்ச்சி இலக்குகள் இந்தியா குறியீடு மற்றும் தகவல்களை கண்காணிப்பதற்காக நிதி ஆயோக் உருவாக்கிய செயல் திட்டத்தின் அடிப்படையில் முக்கிய தேசிய வளர்ச்சி முன்னுரிமைகளின் அடிப்படையில் நாட்டின் முன்னேற்றத்தைக் கண்காணிப்பதற்கான வரையறைகளை நிதிஆயோக் வகுத்திருக்கிறது. அதன் பின்னர் மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேச அரசுகளிடம் இருந்து பெறப்படும் கருத்துகள் மற்றும் மத்திய அரசு அமைச்சகங்களுடன் நடத்தப்படும் கலந்தாலோசனைகளின் அடிப்படையில், நீடித்த வளர்ச்சி இலக்குகள் அடிப்படையிலான கண்காணிப்புச் செயல்திட்டத்தை விரிவுபடுத்தும் வகையில், அச்செயல் திட்டம் மாற்றப்பட்டு வருகிறது. நீடித்த வளர்ச்சி இலக்குகள் இந்தியா குறியீட்டின் சமீபத்திய வடிவத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட காரணிகள் உள்ளன. இந்தச் செயல்திட்டம் உருவாக்கப்பட்டதன் நான்காவது ஆண்டான நடப்பாண்டில் மாநில அளவிலான முன்னேற்றத்தை அளவிடுதற்கான நாட்டின் முதன்மை மற்றும் அதிகாரப்பூர்வ கொள்கைக் கருவியாக 'நீடித்த வளர்ச்சி இலக்குகள் இந்தியா குறியீடு' அறிவிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி, மாநிலங்களுக்கிடையே போட்டியை ஏற்படுத்தும் பணியையும் இது செய்கிறது.

நீடித்த வளர்ச்சி இலக்குகளை உள்ளூர் மயமாக்கும் நடவடிக்கைகளின் ஒரு கட்டமாக அண்மையில் முதலாவது பிராந்திய வளர்ச்சி இலக்குகள் குறியீட்டை நிதிஆயோக் அமைப்பு அண்மையில் வெளியிட்டது. வடகிழக்குப் பிராந்திய மாவட்ட நீடித்த வளர்ச்சி இலக்குக் குறியீடு என்பது தான் அந்தக் குறியீடாகும். வடகிழக்குப் பிராந்தியத்தில் உள்ள அருணாச்சலப் பிரதேசம், அசாம், மணிப்பூர், மேகாலயா, மிசோரம், நாகலாந்து, சிக்கிம், திரிபுரா ஆகிய எட்டு மாநிலங்களில் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட மாவட்டங்கள் தங்களுக்கான நீடித்த வளர்ச்சி இலக்குகளை எட்டுவதில் எந்த அளவு முன்னேற்றத்தை அடைந்துள்ளன என்பதை இந்தக் குறியீடு அளவிடுகிறது. நீடித்த வளர்ச்சி இலக்குகளை உள்ளூர் மயமாக்கும் வெற்றிகரமான திட்டத்தை மாவட்ட அளவில் இருந்து அடுத்தக் கட்டமாக நகர்ப்புறப் பகுதிகளுக்குக் கொண்டு செல்லும் நோக்குடன் நீடித்த வளர்ச்சி இலக்குகள், நகர்ப்புறக் குறியீடு மற்றும் தகவல்களை (2021 22) நிதி ஆயோக் அமைப்பு உருவாக்கி 2021ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வெளியிட்டது. 77 நீடித்த வளர்ச்சி இலக்குக் காரணிகளின் அடிப்படையில் 56 நகர்ப்புறப் பகுதிகளை அந்தக் குறியீடு வரிசைப்படுத்தியிருக்கிறது. அதுமட்டுமின்றி, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் நிலையிலான தகவல்கள், கண்காணிப்பு, அறிக்கை அளிக்கும் முறை ஆகியவற்றின் வலிமைகளையும், குறைகளையும் அந்தக் குறியீடு வெளிப்படுத்தியுள்ளது. நீடித்த வளர்ச்சி இலக்குகளை மாநகர அளவில் உள்ளூர் மயமாக்குவதை வலுப்படுத்துதல், தகவல்களின் அடிப்படையில் முடிவு எடுக்கும் திறனை அனைத்துப் பங்குதாரர்களும் பெறுவதற்கான சூழலை உருவாக்குதல் ஆகியவை தான் இந்தக் குறியீட்டின் நோக்கம் ஆகும். நீடித்த வளர்ச்சி இலக்குகளை உள்ளூர் மயமாவதற்கான நடைமுறை என்பது உயர்ந்த செயல்திட்டங்களை உள்ளூர் அளவில் செயல்படுத்துவது மட்டும் அல்ல. அதையும் தாண்டிய விரிவான நோக்கங்கள் ஆகும்.

நீடித்த வளர்ச்சி இலக்குகளை உள்ளூர் மயமாக்கும் நடைமுறை என்பது உள்ளூர் அளவிலான செயல்திட்டங்களை உருவாக்குதல், உள்ளூர் அளவில் நிர்ணயிக்கப்பட்ட காரணிகளின் அடிப்படையில் முடிவெடுத்தல் மற்றும் நடைமுறைகளைக் கண்காணித்தல் உள்ளிட்ட அம்சங்களை உள்ளடக்கியதாகும். இவை அனைத்தும் இணைந்து, நீடித்த வளர்ச்சி இலக்குகளை உள்ளூர் அளவில் வெற்றிகரமாகச் செயல்படுத்துவதற்குத் தேவையான சக்தியை வழங்குகிறது. அந்த வகையில், நீடித்த வளர்ச்சிக்கான செயல்திட்டங்கள் உள்ளூர்த் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ற வகையிலும், பொருந்தும் வகையிலும் கவனம் செலுத்த வேண்டியது மிகவும் அவசியம் ஆகும். நீடித்த வளர்ச்சி இலக்குகள் சார்ந்த வளர்ச்சிச் செயல்திட்டத்தை எட்டுவதற்காக மாநிலங்களுடன் இணைந்து வலிமையான கூட்டாண்மையை நிதிஆயோக் அமைப்பு உருவாக்கியுள்ளது. மத்திய அரசு மற்றும் மாநிலங்களுக்கு இடையே வளர்ச்சிக்கான தொலைநோக்குப்பார்வை ஒரு புள்ளியில் ஒருங்கிணைவதுடன் கூடிய, கூட்டுறவுடன் கூடிய கூட்டாட்சித் தத்துவத்தை ஏற்படுத்துவதற்கு இது வகை செய்கிறது.

**நிதிக் கூட்டாட்சியை வலுப் படுத்துவது**

இந்தியாவின் நிதிக்கூட்டாட்சியும் 2014ஆம் ஆண்டில் இருந்து கணிசமான அளவில் வலுப்படுத்தப்

பட்டிருக்கிறது. அடுத்தடுத்து அமைக்கப்பட்ட நிதி ஆணையங்கள் மத்திய அரசின் வரி வருவாயில் மாநிலங்களுக்கு வழங்க வேண்டிய பங்கின் அளவை படிப்படியாக அதிகரித்து வருகின்றன. 2000 2005 ஆம் ஆண்டு காலத்தில் மத்திய அரசின் வரி வருவாயில் 29.5 சதவீதம் மட்டுமே மாநிலங்களுக்கு வழங்கப்பட்ட நிலையில், தற்போது இது 42 விழுக்காடாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இதன் மூலம் மாநில அரசுகள் தங்களின் வளர்ச்சிக்கான முன்னுரிமைகளைச் செயல்படுத்தத் தேவையான நிதிச்சுதந்திரம் விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது. தேசிய திட்ட ஆணையம் கலைக்கப்பட்டது, பொருளாதாரத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கும் முறை கைவிடப்பட்டது ஆகியவற்றின் மூலம் தான் மாநிலங்களுக்கு வழங்கப்படும் மத்திய அரசின் வரி வருவாய்ப் பங்கு அதிகரித்திருக்கிறது. மையமாக்கப்பட்ட கொள்கை உருவாக்கம் மற்றும் முடிவெடுக்கும் நடைமுறை கைவிடப்பட்டு அதிகாரப் பரவல் அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் மாநில அரசுகளுக்கு இன்னும் கூடுதலான நிதித் தன்னாட்சியும், நெகிழ்வுத் தன்மையும் கிடைத்திருக்கின்றன.

மத்திய அரசால் நிபந்தனைகளுடன் கூடிய நிதி வழங்கப்படும் முறைக்கு மாறாக, நிபந்தனைகள் இல்லாத நிதி வழங்கும் முறை அதிகரிக்கப்பட வேண்டும் என்று மாநில அரசுகள் அடிக்கடி கோரிக்கை விடுத்து வந்தன. மத்திய அரசின் நிபந்தனைகளுடன் கூடிய நிதி ஒதுக்கீடு என்பது, பொதுவாக மத்திய அரசு ஆதரவுடன் செயல்படுத்தப்படும் திட்டங்களின் மூலம் வழங்கப்படும். பொதுப் பயன்பாட்டுக்கான நிதி ஒதுக்கீடு என்பது எந்த நிபந்தனைகளும் இல்லாமல் வழங்கப்படும் நிதி ஒதுக்கீடு ஆகும். இதைத் தான் மாநில அரசுகள் அதிக அளவில் எதிர்பார்க்கின்றன. மத்திய அரசின் ஒட்டுமொத்த நிதி ஒதுக்கீட்டில் நிபந்தனைகள் இல்லாத பொதுப் பயன்பாட்டுக்கான நிதி ஒதுக்கீட்டின் அளவு 2011–12 ஆம் ஆண்டில் 64.8 சதவீதம் ஆகும். இது 2019–2020ஆம் ஆண்டில் 74 சதவீதமாக அதிகரித்துள்ளது. அதே நேரத்தில், நிபந்தனைகளுடன் கூடிய குறிப்பிட்டப் பயன்பாட்டுக்கான நிதி ஒதுக்கீடு, இதே காலத்தில் 35.2 சதவீதத்திலிருந்து 25.7 சதவீதமாகக் குறைந்திருக்கிறது. கொரோனா நோய்ப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்தல் உள்ளிட்ட குறிப்பிட்ட நோக்கங்களுக்காக மாநிலங்களுக்கு உதவும் வகையில், மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது. அவற்றில், 2020 –21ஆம் ஆண்டில் மாநிலங்கள் கடன் பெறுவதற்கான உச்சவரம்பு, அதன் ஒட்டுமொத்த உற்பத்தி மதிப்பில் மூன்று சதவீதத்திலிருந்து ஐந்து சதவீதமாக உயர்த்தப்பட்டதும், மாநிலங்களுக்கு மத்திய அரசு ரூ.4.3 இலட்சம் கோடி கூடுதல் நிதியை ஒதுக்கீடு செய்ததும் குறிப்பிடத்தக்கவையாகும்.

2022–23ஆம் நிதி ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் குறிப்பிடப் பட்டிருப்பதைப் போன்று இந்தியாவில் ஜிஎஸ்டி எனப்படும் பொருள்கள் மற்றும் சேவை வரி அறிமுகம் செய்யப்பட்டிருப்பது, "சுதந்திர இந்தியாவில் கூட்டுறவுக் கூட்டாட்சித் தத்துவ உணர்வை வெளிப்படுத்தக்கூடிய வரலாற்றுச் சிறப்புமிக்க சீர்திருத்தம்" ஆகும். இந்தியாவில் பொருள்கள் மற்றும் சேவைவரி ஜிஎஸ்டி குழுவால் நிர்வகிக்கப்படுகிறது. இந்தக் குழுவில் மத்திய அரசுக்கு இணையாக மாநில அரசுகளும் சம பங்குதாரர்களாக உள்ளனர். நாடு முழுவதும் கொரோனா நோய்த்தொற்று மிக அதிக அளவில் பரவிய போதிலும், 2022ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்கான ஜி.எஸ்.டி. வரி வசூல் ரூ.1,40,986 கோடியாக அதிகரித்துள்ளது. ஜிஎஸ்டி வரி விதிப்பு முறை அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு இந்த அளவுக்கு அதிக வரி வசூலாகி இருப்பது இதுவே முதல் முறையாகும். மத்திய நிதிநிலை அறிக்கையில் திருத்தப்பட்ட மதிப்பீட்டுகளின் படி, 2021–22ஆம் ஆண்டில் ஜிஎஸ்டி வரி வசூல் வளர்ச்சி விகிதம் 23 சதவீதம் என்ற அளவில் இருக்கும். இந்தியப் பொருளாதாரத்தை வடிவமைப்பதில் ஜிஎஸ்டி வரி இப்போது முக்கியப் பங்காற்றத் தொடங்கியுள்ளது. ஜிஎஸ்டி வரிவிதிப்பு முறை நடைமுறைப்படுத்தப்பட்டது முதல் கடந்த காலங்களில் கணக்கில் காட்டப்படாமல், வரிவிதிப்பு வளையத்திற்கு வெளியில் செய்யப்பட்ட பரிமாற்றங்கள் அனைத்தும் ஒழிக்கப்பட்டுள்ளன. ஜிஎஸ்டி வரி வசூல் மூலம் அரசுக்குக் கிடைக்கும் தகவல்கள் மறைமுக வரி வசூலை மட்டுமின்றி, நேரடி வரி வசூலையும் அதிகரிப்பதற்குத் துணை செய்கின்றன. இதன் மூலம் கடுமையான வரி ஒழுங்கு நடைமுறையும், வெளிப்படைத் தன்மையும் ஏற்படுத்தப்பட்டிருப்பதால், வரி செலுத்துவது தொடர்பான முறைகேடுகள் அனைத்தையும் தடுக்க முடிந்திருக்கிறது.

கூட்டுறவுக் கூட்டாட்சித் தத்துவத்தின் உண்மையான உணர்வை வெளிப்படுத்தும் வகையில், மாநிலங்கள் ஆக்கபூர்வமான சொத்துக்களை உருவாக்குதல் மற்றும் அதிக ஊதியம் கிடைக்கும் வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் ஆகியவற்றுக்குத் தேவையான மூலதனத்தை அதிகரிப்பதன் மூலம் மாநிலங்களின் கரங்களை வலுப்படுத்த மத்திய அரசு உறுதி



பூண்டிருக்கிறது. 2022–23 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்து பேசிய மத்திய நிதியமைச்சர், "மூலதன முதலீட்டுக்காக மாநில அரசுகளுக்கு நிதியுதவி வழங்குவதற்கான திட்டம் மாநில அரசுகளால் சிறப்பான முறையில் வரவேற்கப்படுகிறது என்று குறிப்பிட்டது முக்கியமானது. மாநிலங்களின் முதலமைச்சர்கள் மற்றும் நிதி அமைச்சர்கள் உடனான சந்திப்புகளின் போது பெறப்பட்ட வேண்டுகோள்களின் அடிப்படையில், 2021–22ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதியின் அளவு 10 ஆயிரம் கோடி ரூபாயிலிருந்து 15 ஆயிரம் கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. 2022–23ஆம் ஆண்டில் இந்த ஒதுக்கீடு ஒரு இலட்சம் கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இது இத்திட்டத்திற்காக 2021–22ஆம் ஆண்டில் முதலில் ஒதுக்கப்பட்டதைவிட 10 மடங்கு அதிகம் ஆகும். இந்தியப் பொருளாதாரத்தில் ஒட்டுமொத்த முதலீடுகளை அதிகரிப்பதில் மாநில அரசுகளுக்கு உதவும் நோக்குடன் இந்த நடவடிக்கையை மத்திய அரசு மேற்கொண்டிருக்கிறது. அதுமட்டுமின்றி, மாநில அரசுகளுக்காக அனுமதிக்கப்படும் வழக்கமான கடனுக்கு மேலாக 50 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தக்கூடிய வகையிலான வட்டி இல்லாக் கடன் வழங்கும் திட்டத்தையும் மத்திய அரசின் நிதிநிலை அறிக்கை அறிவித்திருக்கிறது. 15வது நிதி ஆணையத்தின் பரிந்துரைகளுக்கு இணங்க, 2022–23ஆம் ஆண்டில் மாநிலங்களின் நிதிப்பற்றாக்குறை அதன் ஒட்டுமொத்த உற்பத்தி மதிப்பில் நான்கு விழுக்காடாக இருக்கும் என்றும், இதில் 0.5 சதவீதம் மின்சாரத்துறையில் செய்யப்படும் சீர்திருத்தங்களின் அளவைப் பொறுத்தே அனுமதிக்கப்படும் என்றும் மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தேசிய ஓய்வூதியத் திட்டத்தில், மாநில அரசின் பணியாளர்களுக்காக, மாநில அரசு செலுத்தும் தொகைக்கான வரிக்கழிவு வரம்பை தற்போது உள்ள 10 சதவீதத்திலிருந்து மத்திய அரசுப் பணியாளர்களுக்கு இருந்துவரும் 14 சதவீதமாக உயர்த்தவும், அதன் மூலம் மத்திய, மாநில அரசுப் பணியாளர்கள் சமநிலையில் நடத்தப்படுவதற்கும் மத்திய அரசின் நிதிநிலை அறிக்கை வகை செய்துள்ளது. நகர்ப்புறத் திட்டமிடலுக்கான ஆதரவை மாநில அரசுகளுக்கு வழங்குவது குறித்தும் மத்திய அரசின் நிதிநிலை அறிக்கை கவனம் செலுத்தி உள்ளது. நகர்ப்புற வளர்ச்சிக்கான திறன் மேம்பாட்டிற்காக கட்டட நவீனமயமாக்கல் விதிகள், நகர்ப்புறத் திட்டமிடல் திட்டங்கள், குடியிருப்புகள் மற்றும் பொழுதுபோக்கு மையங்களுக்கு மிக அருகில் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தும் திட்டம் ஆகியவற்றைச் செயல்படுத்துவதில் மாநிலங்களுக்கு மத்திய அரசு உதவும் என்றும் நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதிவேகப் போக்குவரத்துத் திட்டங்கள், அம்ருத் திட்டம் ஆகியவற்றுக்கான மத்திய அரசின் நிதி ஒதுக்கீடு, மாநில அரசுகளின் நகர்ப்புறத் திட்டமிடல் திட்டங்கள், குடியிருப்புகள் மற்றும் பொழுதுபோக்கு மையங்களுக்கு மிக அருகில் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்துதல் ஆகியவற்றுக்கான திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்துவதை ஊக்குவிக்கும் வகையில் அமையும்.

மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையில் இடம்பெற்றுள்ள மற்றொரு முக்கியமான திட்டம், வடகிழக்குப் பிராந்தியத்திற்கான பிரதமரின் வளர்ச்சி முன்முயற்சி ஆகும். இந்தத் திட்டம் 1,500 கோடி ரூபாய் தொடக்க நிதி ஒதுக்கீட்டுடன் அறிவிக்கப்பட்டுள்ளது. வடகிழக்கு மாநிலங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், அங்குள்ள மக்களின் தேவைகளுக்கு ஏற்ற வகையிலான சமூக மேம்பாட்டுத் திட்டங்கள் ஆகியவற்றுக்குத் தேவையான நிதியை இந்தத் திட்டம் வழங்கும்.

நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நடப்பு ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை என்பது, இந்தியாவில் கூட்டாட்சி அமைப்பு முறையை வலுப்படுத்தியுள்ள தொடர்ச்சியான சீர்திருத்தங்கள், கொள்கை உருவாக்கங்கள் ஆகியவற்றின் தொடர்ச்சியாகும். உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான மூலதனச் செலவுகளுக்கான நிதிஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டிருப்பதன் மூலம், நாடு முழுவதும் பொருளாதார நடவடிக்கைகள் விரிவாக்கப்படும். கூட்டுறவு மற்றும் போட்டித்தன்மை கொண்ட கூட்டாட்சித் தத்துவ உணர்வுடன் நிதிக் கூட்டாட்சியும் இணையும் போது, அது இந்தியாவை கொரோனாவுக்குப் பிந்தைய காலத்தில் அதிநவீன மற்றும் சமத்துவ வளர்ச்சியை நோக்கியும், பொதுமக்கள் எளிதாக வாழும் தன்மை மற்றும் சுற்றுச்சூழலின் நீடித்த தன்மையை மேம்படுத்துவதை நோக்கியும் அழைத்துச் செல்லும்.

---

– **முனைவர் ராஜீவ் குமார்**, துணைத்தலைவர், நிதிஆயோக், புதுதில்லி

– **ரவீந்தர் பிரதாப் சிங்**, நிதிஆயோக், துணைத் தலைவரின் தனிச் செயலாளர்.

– **ரன்வீர் நாகைச்**, பொதுக் கொள்கை ஆலோசகர், நிதி ஆயோக், புதுதில்லி.

வளர்ச்சியை சாத்தியமாக்கும் கருவி

# வரி விதிப்புத் திட்டங்கள்

- தருண் பஜாஜ்

**இந்திய நிதிநிலை அறிக்கையின் விரிவான தொலைநோக்குப் பார்வைக்கு இசைந்த வகையில், இந்தியாவை வளமான எதிர்காலத்தை நோக்கி வழிநடத்திச் செல்வதற்கான கருவியாகவும், உதவும் சக்தியாகவும் இந்திய வரிவிதிப்பு அமைப்பை மாற்றும் நோக்குடன் இந்த ஆண்டிற்கான வரிவிதிப்புத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. தலையீடு இல்லாத, சிறப்பான வரி நிர்வாகத்தை உறுதி செய்வதில் பெருந்தரவு பகுப்பாய்வு முக்கியப் பங்காற்றும்.**

இங்கிலாந்து நாட்டின் தத்துவ ஞானி பெர்ட்ராண்ட் ரசல் ஒரு முறை, “யாரெல்லாம் இருள் நிறைந்த பள்ளத்தாக்கின் வழியாகப் பயணிக்கிறார்களோ அவர்கள் பயணத்தின் நிறைவில், அழகு நிறைந்த ஒரு நாட்டைச் சென்றடைவார்கள்” என்று கூறினார். அதை உறுதி செய்யும் வகையில், கொரோனா வைரஸ் பெருந்தொற்றும், அதன் பாதிப்புகளும் படிப்படியாகக் குறைந்து வரும் நிலையில், நடப்பு நிதியாண்டில் 9.2 சதவீதம் என்ற அதிவேக வளர்ச்சிப் பாதையில் இந்தியா மீண்டும் பயணிக்கத் தொடங்கியுள்ளது. நடப்பு நிதியாண்டில் 9.2 சதவீதம் என்ற இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி தான் உலகில் உள்ள பெரிய நாடுகளின் மிக அதிகமான வளர்ச்சி ஆகும். இனி வரும் ஆண்டுகளிலும் உலகின் பெரிய நாடுகளில் மிகவேகமாக வளர்ச்சி அடையும் நாடாக இந்தியாதான் தொடர்ந்து திகழும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.


இந்தியாவை வளமான எதிர் காலத்தை நோக்கி வழிநடத்திச் செல்வதற்கு உதவும் சக்தியாக இந்திய வரிவிதிப்பு அமைப்பை மாற்றும் நோக்குடன் இந்த ஆண்டிற்கான வரிவிதிப்புத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. வரி அமைப்பை எளிமைப்படுத்துதல், வரி செலுத்துபவர்கள் தாமாக முன்வந்து வரி செலுத்தும் முறையை மேம்படுத்தி வழக்குகள் போடப்படுவதைக் குறைத்தல் ஆகியவற்றின் மூலம் நம்பத்தகுந்த வரி நிர்வாகத்தை ஏற்படுத்தும் நோக்குடன் சீர்திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. நேரடி வரிகள் தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ள சில முக்கியத் திட்டங்கள் மற்றும் அதற்கான காரணங்கள் குறித்து இந்தக் கட்டுரை விரிவாக விளக்குகிறது.

### புதிய தகவல்கள் சேர்க்கப்பட்ட வருமான வரி கணக்கு அறிக்கை

வருவாய் ஈட்டுவது என்பது ஒரு நாட்டு அரசின் இறையாண்மை கொண்ட பணி ஆகும். அதன்படி, ஒருவரின் ஆண்டு வருமானம் குறிப்பிட்ட அளவுக்கு மேல் இருந்தால், அவர் 1961ஆம் ஆண்டின் வருமான வரிச் சட்டத்தின்படி தன்னுடைய வருமானம் குறித்த தகவல்களை வருமான வரித்துறையிடம் தாக்கல் செய்ய வேண்டியது அவருடைய கடமையாகும். வருமானம் ஈட்டும் ஒருவர், வருமான வரிக் கணக்கு தாக்கல் செய்வதற்கான கடைசி நாளுக்கு முன்பாக வருமான வரிக் கணக்கைத் தாக்கல் செய்ய வில்லை என்றால், சம்பந்தப்பட்ட வரி மதிப்பீட்டு ஆண்டு முடிவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பு வரை வருமான வரிக் கணக்கை தாக்கல் செய்ய, வருமான வரிச் சட்டம் அனுமதிக்கிறது. ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் வருமான வரிக் கணக்கைத் தாக்கல் செய்த பிறகு, அந்த வரி மதிப்பீட்டு ஆண்டு முடிவடைவதற்கு மூன்று மாதங்கள் முன்பு வரையிலோ அல்லது வருமான வரி மதிப்பிடும் பணி முடிவடைவதற்கு முன்பாக வோ சம்பந்தப்பட்ட நபர் எத்தனை முறை வேண்டுமானாலும் அவரது வருமான வரிக் கணக்குகளை திருத்தித் தாக்கல் செய்வதற்கு இந்திய வருமான வரிச் சட்டம் அனுமதிக்கிறது.

வரி செலுத்துபவர், ஒரு குறிப்பிட்ட ஆண்டில் வருமான வரி செலுத்துவதற்கான படிவத்தில் உள்ள அவரைப் பற்றிய விவரங் களைத் தாக்கல் செய்வதற்கோ, அல்லது மேம்படுத்துவதற்கோ வழங்கப்படும் கால அவகாசம் போதுமானதில்லை என்று உணரப் பட்டது. வருமான வரித்துறையில் வலிமையான தரவு சேகரிப்பு மற்றும் தரவுப் பகிர்வுப் பொறி






முறையில் வருமான வரிக் கணக்கைத் தாக்கல் செய்வது அல்லது தாக்கல் செய்யப்பட்ட வருமான வரிக்கணக்கு அறிக்கையில் திருத்தம் செய்வது ஆகியவற்றுக்குப் போதிய நேரம் கிடைக்காதது பெரும் கவலையாக உருவெடுத்தது.

தலையீடு இல்லாத, சிறப்பான வரி நிர்வாகத்தை உறுதி செய்வதில் பெருந்தரவு பகுப்பாய்வு முக்கியப் பங்காற்றும் என்ற பாடத்தை மத்திய அரசு கற்றுக்கொண்டதன் பயனாக, ஏற்கெனவே தாக்கல் செய்யப்பட்ட வருமான வரிக் கணக்கு தவிர்த்து, மேம்படுத்தப் பட்ட புதிய தகவல் கொண்ட வருமான வரிக்கணக்கு அறிக்கை யையும் தாக்கல் செய்யலாம் என்று அறிவிப்பு வெளியாகியிருக்கிறது. இதன் மூலம், வருமானவரி செலுத்துபவர் தாமாகவே முன்வந்து, வருமான வரி சட்டங்களைப் பின்பற்றி நடப்பதை வருமான வரித்துறையால் உறுதி செய்ய முடியும்.

மேற்கண்ட அம்சங்கள் மட்டு மின்றி, வருமான வரி செலுத்தும் ஒருவர், வருமான வரிக்கணக்கு தாக்கல் செய்வதற்கான கடைசி நாளுக்கு முன்பாக வருமானவரிக் கணக்கைத் தாக்கல் செய்யத் தவறினாலோ அல்லது மிகவும் தாமதமாக வருமானவரிக் கணக்கைத் தாக்கல் செய்தாலோ அல்லது திருத்தப்பட்ட வருமான வரிக் கணக்கைத் தாக்கல் செய்தாலோ அல்லது தவறுதலாக துல்லியமற்ற தகவலைத் தெரிவித்திருந்தாலோ, அதை சரி செய்வதற்காக பல்வேறு கட்ட ஆய்வுகளுக்கு தன்னை அவர் உட்படுத்திக் கொள்ள வேண்டும். இல்லையெனில், நீண்ட, கடினமான, அதிக செலவு பிடிக்கக்கூடிய மேல்முறையீட்டு நடைமுறையை அவர் எதிர்கொள்வதுடன், கடுமை யான அபராதம் செலுத்தவும், வழக்குகளை சந்திக்க வேண்டியும் வரும்.

இதைக் கருத்தில் கொண்டு, 2022ஆம் ஆண்டிற்கான நிதிச் சட்டத்தில், மேற்கண்ட தவறுகளைச் செய்தவர்கள் அவர்கள் தாக்கல் செய்த கணக்குக்கான மதிப்பீட்டு ஆண்டு முடிவடைந்த பின், இரு ஆண்டுகளுக்குள் மேம்படுத்தப் பட்ட தகவல்கள் அடங்கிய வருமான வரிக்கணக்கைத் தாக்கல் செய்யலாம் என்ற புதிய திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக வருமானவரிச் சட்டத்தின்படி, 2022–23 மதிப்பீட்டு ஆண்டுக்கான வருமான வரிக்கணக்குகள் 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் தேதிக்கு முன்பாகத் தாக்கல் செய்யப்பட வேண்டும். அந்த வருமான வரிக் கணக்கில் ஏதேனும் திருத்தங்கள் இருந்தால், அத்தகைய திருத்தங்கள் செய்யப்பட்ட வருமான வரிக்கணக்கை 2023 ஜனவரி 1ஆம் தேதி முதல் 2025ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் தேதி வரை தாக்கல் செய்ய இயலும். இது வருமானவரிக் கணக்குத் தாக்கல் செய்பவர்கள், அவர்களின் வருமானவரிக் கணக்குத் தொடர்பான உண்மை விவரங்களைத் தாமாக முன்வந்து தெரிவிப்பதற்கான மிகச் சிறந்த நடவடிக்கையாகும்.

வருமானவரி செலுத்தும் ஒருவர், குறிப்பிட்ட தேதிக்குள் வருமான வரிக்கணக்கைத் தாக்கல் செய்யாவிட்டாலோ, அல்லது தாமதமாகத் தாக்கல் செய்தாலோ, அல்லது திருத்தப்பட்டப் படிவம் தாக்கல் செய்யப்பட்டிருந்தாலோ மேம்படுத்தப்பட்ட தகவல்கள் அடங்கிய வருமான வரிக் கணக்கை அவர் தாக்கல் செய்ய முடியும். அவ்வாறு மேம்படுத்தப்பட்ட வருமான வரிக் கணக்கு அறிக்கை தாக்கல் செய்பவர், அவரது முதல் அறிக்கையில் குறிப்பிடப் பட்டிருந்ததை விட, எவ்வளவு தொகை கூடுதலாக கணக்கில் சேர்க்கப்பட்டிருக்கிறதோ, அந்தத் தொகைக்கு கூடுதல் வருமான வரித் தாக்கல் செய்ய வேண்டும். வருமான வரி மதிப்பீட்டு ஆண்டுக்கு மூன்று மாதங்களுக்கு முன்பாக மேம்படுத்தப்பட்ட தகவல்கள் கொண்ட அறிக்கை தாக்கல் செய்யப்பட்டிருந்தால், அதில் கூடுதலாகக் காட்டப் பட்டுள்ள கணக்கிற்கு 25 சதவீதம் கூடுதல் வரி வசூலிக்கப்படும். ஓர் மதிப்பீட்டு ஆண்டுக்கு ஒரு முறை மட்டுமே மேம்படுத்தப்பட்ட வருமான வரிக்கணக்கைத் தாக்கல் செய்ய முடியும். வருமான வரிக் கணக்கு தாக்கல் செய்யாததற்காக சம்பந்தப்

பட்டவர்கள் மீது வருமான வரிச் சட்டத்தின்படி, வழக்கு தொடரப்படுவதில் இருந்தும் இந்த முறை பாதுகாப்பு அளிக்கிறது.

அதே நேரத்தில் வரி ஏய்ப்பில் ஈடுபடும் வருமான வரி செலுத்துவோருக்கு மன்னிப்பு வழங்குவதற்காகவும் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. வருமானவரி தொடர்பான விசாரணை, தேடுதல் உள்ளிட்ட நடவடிக்கைகளை எதிர்கொண்டு வருபவர்கள் இத்தகைய வருமானவரித் தாக்கல் படிவத்தை தாக்கல் செய்ய முடியாது. அதே போல் ஒரு நபர் மீது சம்பந்தப்பட்ட வருமான வரி மதிப்பீட்டுக் காலத்தில் வருமான வரி மதிப்பீட்டு நடைமுறைகளோ அல்லது மறுமதிப்பீட்டு நடைமுறைகளோ வருமான வரித்துறையால் மேற்கொள்ளப்பட்டிருந்தால், அவர்களும் மேம்படுத்தப்பட்ட வருமான வரிக் கணக்கைத் தாக்கல் செய்ய முடியாது. கருப்புப் பணச் சட்டம், கருப்புப் பணத்தை வெள்ளையாக்கும் சட்டம் 2022 ஆகியவற்றின் கீழ், ஒருவர் மீது ஏதேனும் குற்றச்சாட்டு இருந்தால் அவரும் மேம்படுத்தப்பட்ட வருமான வரிக் கணக்கைத் தாக்கல் செய்ய முடியாது. வேறு யார் யாரெல்லாம் இந்தப் புதிய விதிமுறைப்படி மேம்படுத்தப்பட்ட வருமான வரிக் கணக்கை தாக்கல் செய்ய இயலாது என்பது குறித்து சட்டத்தில் விரிவாக விளக்கப்பட்டிருக்கிறது.

மத்திய நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ள இந்தத் திட்டம், வருமான வரி செலுத்துபவர்கள் அனைவரும் தாங்களாகவே முன்வந்து வருமான வரிக் கணக்குகளைத் தாக்கல் செய்தல், வெளிப்படைத்தன்மையும் நம்பிக்கையும் கொண்ட சூழ்நிலையை ஏற்படுத்தும்.

**புத்தொழில் நிறுவனங்கள் மற்றும் புதிய உற்பத்தி நிலையங்கள்**

புத்தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியை ஊக்குவித்தல், புதிய உற்பத்தித் தொழிற்சாலைகளை உருவாக்குவதன் மூலம், தற்சார்பு இந்தியா என்ற இலக்கை நோக்கி முன்னேற வேண்டும் என்ற தேடலின் அடிப்படையில் அந்நிறுவனங்களுக்கு சில வருமான வரிக்கழிவுகள் மற்றும் வரிச் சலுகைகளை மத்திய அரசு அறிவித்திருந்தது. ஆனால், கொரோனா வைரஸ் பரவல் காரணமாக இந்த நிறுவனங்கள் அவற்றின் செயல்பாட்டைத் தொடங்கவில்லை என்பதால், அரசு அறிவித்த பயன்களையும் அனுபவிக்க இயலவில்லை. அந்நிறுவனங்களுக்கு ஆதரவுக் கரம் நீட்டும் நோக்குடன், அரசு அறிவித்த சலுகைகளையும், பயன்களையும் பெறுவதற்காக புத்தொழில் நிறுவனங்கள் தொடங்குவதற்கான கால அவகாசத்தை மத்திய அரசு நீட்டித்திருக்கிறது. புத்தொழில் நிறுவனங்கள் மற்றும் உற்பத்தி நிறுவனங்களுக்கான வரி விதிப்பு விகிதம் அவற்றுக்குச் சாதகமான வகையில் உள்ளது. அந்நிறுவனங்களுக்கு 15 சதவீதம் என்ற அளவில் தான் பெருநிறுவன வரி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**சர்வதேச நிதிச் சேவை மையத்திற்குச் சலுகைகள்**

குஜராத் தலைநகர் காந்திநகரில் அமைக்கப்பட்டுள்ள கிஃப்ட் சிட்டியில் உள்ள சர்வதேச நிதிச் சேவைகள் மையத்திற்கு பல வகையான ஊக்கத் தொகைகளை வழங்குவதன் மூலம், அதை உலக அளவில் போட்டித் தன்மை நிறைந்த நிதி மையமாக மாற்ற மத்திய அரசு உறுதி பூண்டிருக்கிறது. கிஃப்ட் சிட்டிக்கு ஊக்கத்தொகை வழங்குவதன் முதன்மை நோக்கம் உலகம் முழுவதும் பல்வேறு இடங்களில் செயல்பட்டுவரும் நிதிச்சேவை மையங்களில் நடைபெறும் அனைத்து நிதிச் சேவைகளையும் கிஃப்ட் சிட்டியில் அமைந்துள்ள சர்வதேச நிதிச்சேவைகள் மையத்திற்குக் கொண்டு வருவதுதான். இதன் பயனாக, உலகம் முழுவதும் உள்ள ஏராளமான நிறுவனங்களும், நிதியங்களும் தங்களின் அலுவலகத்தை சர்வதேச நிதிச்சேவைகள் மையத்திற்கு மாற்றி வருகின்றன. அதன் காரணமாக, கிஃப்ட் சிட்டி மிக வேகமாக மிகப்பெரிய நிதி மையமாக மாறி வருகிறது.

சர்வதேச நிதிச்சேவை மையத்தை மேலும் வளர்த்தெடுக்கும் நோக்கத்துடன், 2022–23ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் பல புதிய திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. அதன்படி, வெளிநாடுகளில் பணியாற்றும் இந்தியர்கள் அங்குள்ள வங்கிகளால் வெளியிடப்பட்ட டெரிவேட்டிவ் இன்ட்ருமண்ட்ஸ் அல்லது கவுன்ட்டர் டெரிவேட்டிவ்ஸ், ராயல்டி மூலம் கிடைத்த வருவாய், கப்பல்களைக் குத்தகைக்கு விடுவதன் மூலம் கிடைக்கும் வருமானம், மேலாண்மைச் சேவைகள் மூலம் கிடைக்கும் வருமானம் ஆகியவற்றுக்கு சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு, வரி விலக்கு அளித்து, சர்வதேச நிதிச்சேவை மையங்களில் அனுமதிக்கலாம் என்று மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.



**டிஜிட்டல் சொத்துகளுக்கு வரிவிதிப்பு**

உலகில் உள்ள பெரும்பான்மையான நாடுகளின் பொருளாதாரம் மின்னணுமயமாக்கப்பட்டு வரும் நிலையில், அதைக் கண்காணித்தல், ஒழுங்குபடுத்துதல், வரி வசூலித்தல் ஆகியவை ஒவ்வொரு நாட்டு அரசுக்கும் புதிய சவால்களை ஏற்படுத்தியுள்ளன. மெய்நிகர் நாணயங்கள் (Digital Currency) துல்லியமான மதிப்பு இல்லாதவை; கற்பனையான மதிப்பு கொண்டவை; அவற்றில் முதலீடு செய்வது மிகவும் ஆபத்தானது; அவற்றில் செய்யப்படும் முதலீடுகளுக்கு அசாதாரணமான இலாபம் அல்லது இழப்பு ஏற்படுவதையும், இந்த வகை மெய்நிகர் நாணயங்கள் மூலமாக செய்யப்படும் பரிமாற்றங்கள் அதிகரித்து வருவதையும் மத்திய அரசு அறிந்திருக்கிறது. மெய்நிகர் நாணயங்கள் மூலம் செய்யப்படும் பரிமாற்றங்கள் மிகப்பெரிய அளவிலும், மிக அதிக எண்ணிக்கையில் பரிமாற்றங்களும் நடைபெறுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதால், இதன் காரணமாக அரசுக்குக் கிடைக்க வேண்டிய வருவாய் குறைவதைத் தடுக்கும் நோக்குடன், அவற்றுக்கு வரி விதிப்பது என்பது அரசுக்கு தவிர்க்க முடியாததாக மாறி இருக்கிறது. அதன்படி, மெய்நிகர் நாணயங்கள் மூலம் செய்யப்படும் பரிமாற்றங்களில் இருந்து கிடைக்கும் வருமானத்திற்கு 30 சதவீதம் வரி விதிக்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது. மெய்நிகர் சொத்துக்களை ஒரு குறிப்பிட்ட தொகைக்கு மேல் விற்பனை செய்யும் போது, அதன் மதிப்பில் ஒரு சதவீதம் ஆதாரத்தில் பிடித்தம் செய்யப்படும் வரியாக வசூலிக்கப்படும். அதே நேரத்தில் இவ்வாறு வரி விதிக்கப்படுவதன் காரணமாக, கிரிப்டோ கரன்சிகளுக்கு இந்திய அரசு அங்கீகாரம் அளித்துவிட்டதாகக் கருத முடியாது. அதற்கான தனி நடைமுறை தற்போது செயல்பாட்டில் உள்ளது. இடைப்பட்ட காலத்தில் இத்தகைய வரிவிதிப்பு நடைமுறை கொண்டுவரப்பட்டுள்ளது.

**மீண்டும் மீண்டும் வழக்குகள் தொடுக்கப்படுவதைத் தடுப்பதற்கான விதிகள்**


கடந்த சில ஆண்டுகளாக வரிவிதிப்புக்கு எதிராக அதிக அளவில் வழக்குகள் தொடரப்படுவது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பெரும் தடையாக இருப்பதாக உணரப்பட்டது. ஒரு வரி விதிப்புக்கு எதிராக வழக்குகள் தொடரப்படும் போது, அந்த வரியை வசூலிக்க முடியாது. அதனால், அரசின் வரி வசூல் ஒருபுறம் பெருமளவில் குறைகிறது. மற்றொருபுறம் இத்தகைய வழக்குகளால் நீதிமன்றங்களுக்கு பணிச்சுமை அதிகமாக ஏற்படுகிறது. பல ஆண்டுகளுக்கு மேல் இழுத்துக் கொண்டே போகும் வழக்குகள் வரி நிர்வாகத்தில் நிச்சயமற்ற சூழலை ஏற்படுத்துகின்றன. அதனால், சாதகமான பொருளாதாரச் சூழல் ஏற்படுவது தடுக்கப்படுகிறது.

இதனைக் கருத்தில் கொண்டு நேரடி வரி விதிப்பில் வரி முரண்பாடுகள், வழக்குகள் ஆகியவற்றை மேலாண்மை செய்யும் நோக்குடன் கடந்த சில ஆண்டுகளில் ஏற்கெனவே பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மேல்முறையீடு செய்வதற்கான நிதி உச்சவரம்பை அதிகரித்தல், தாவா தீர்ப்பு குழுக்களை உருவாக்குதல் ஆகியவை 2016ஆம் ஆண்டில் நிதிச்சட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளாகும். முன்கூடிய விலை நிர்ணய ஒப்பந்தங்கள், இரட்டை வரி விதிப்புத் தவிர்ப்பு உடன்பாடு, பாதுகாப்பான புகலிட விதிகள் உள்ளிட்டவை மூலமாக உருவாக்கப்பட்ட தீர்வுப் பொறி முறைகளும் வழக்குகளின் எண்ணிக்கையைக் குறைக்கும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தான்.

ஒரே பிரச்சினைக்காக மீண்டும் மீண்டும் வழக்குகள் தொடரப்படுவதைத் தடுக்க 2022–23ஆம் ஆண்டுக்கான நிதிச் சட்டத்தில் ஒரு தீர்வு வழங்கப்பட்டது. அதன்படி வரி செலுத்துபவர், வரி சார்ந்த சட்டப்பிரிவுகளின் அடிப்படையில் தொடரப்பட்ட வழக்குகள் ஏதேனும் உச்சநீதிமன்றத்திலோ, உயர்நீதிமன்றத்திலோ நிலுவையில் இருக்கும் பட்சத்தில், அதே காரணத்திற்காக அவர் மீண்டும் வழக்குத் தொடர முடியாது. ஏற்கெனவே உச்சநீதிமன்றத்திலோ அல்லது உயர்நீதிமன்றங்களிலோ நிலுவையில் உள்ள வழக்குகளில் தீர்ப்பு அளிக்கப்பட்ட பிறகு தான் அதே போன்ற இன்னொரு வழக்கைத் தொடர முடியும் என்று நிதிச் சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தீர்வை வகைப்பாடுகள்**

வரிகளைக் கணக்கிடும் போது, சுகாதாரம் மற்றும் கல்விக்கான தீர்வையை வருமானத்தின் ஒரு பகுதியாகச் சேர்த்துக் கொள்ளலாமா, கூடாதா என்பதில் உள்ள குழப்பம், சில வழக்குகளுக்குக் காரணமாக அமைந்துள்ளது. சுகாதாரம் மற்றும் கல்விக்கான தீர்வையை வணிகச் செலவாகக் கருதலாம் என்று சில நீதிமன்றங்கள் தீர்ப்பளித்துள்ளன. ஆனால், அது நிதிச்சட்டத்தின் நோக்கத்திற்கு




எதிரானதாகும். வருமானவரி மீதான தீர்வை அல்லது கூடுதல் வரியை செலவாகக் கருதமுடியாது. இது தொடர்பான சில நீதிமன்றத் தீர்ப்புகள் சட்ட விதிகளைத் தவறாகப் புரிந்துகொள்வதற்கான சூழலை ஏற்படுத்தியிருக்கின்றன. வேறு சில நிகழ்வுகனளில் வருமான வரி செலுத்துபவர்கள் கல்வி மற்றும் சுகாதாரத் தீர்வையை மேல் முறையீட்டு வழக்குகளில் செலவாகக் கருதி பயனடைய முயல்கின்றனர். எனவே, சுகாதாரம் மற்றும் கல்வித் தீர்வை எதற்காக கொண்டுவரப்பட்டது? அது தொடர்பான சட்டத்தின் நோக்கம் என்ன? என்பதைத் தெளிவுபடுத்தும் வகையிலும், மீண்டும் வலியுறுத்தும் வகையிலும், வருமானம் அல்லது இலாபத்தின் மீது விதிக்கப்படும் எந்தவொரு தீர்வையும், கூடுதல் வரியையும் வணிகச் செலவாகக் கருத முடியாது என்றும், அந்தத் தொகையும் வரி விதிக்கப்பட வேண்டிய தொகைதான் என்றும் 2022-23ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

**பங்குகள் மீதான போனஸ் மற்றும் ஈவுத்தொகையை அகற்றும் பிரிவுகளை விரிவுபடுத்துதல்**

போனஸ் பயன்களை அகற்றும் பிரிவுகளை பங்குகள், பத்திரங்கள் உள்ளிட்ட அனைத்திற்கும் நீட்டிக்க நிதிநிலை அறிக்கையில் வகை செய்யப்பட்டுள்ளது. போனசை அகற்றுவது என்பது, ஒரு நிறுவனத்தின் பங்குகள் மீது அந்த நிறுவனம் ஒரு குறிப்பிட்ட தேதியில் போனஸ் பங்குகளை அறிவிக்கும் போது, அந்தத் தேதிக்கு முன்பாக ஒரு வரி செலுத்துபவர் பங்குகளை வாங்கியதைக் குறிக்கும். அந்தக் குறிப்பிட்ட தேதியில் வரி செலுத்துபவருக்கு வழங்கப்பட்ட போனஸ் பங்குகள் கணக்கில் கொள்ளப் படாது. போனஸ் பங்குகள் வழங்கப்பட்டதன் பயனாக, பங்குச் சந்தையில், வரி செலுத்துபவர் ஏற்கெனவே வாங்கிய பங்கின் விலையும், போனஸாக வழங்கப்பட்ட போனஸின் விலையும் கணிசமாகக் குறையும். போனஸ் பங்குகள் ஒதுக்கீடு செய்யப்பட்டதற்குப் பிந்தைய குறுகிய காலத்தில் ஒரு வரி செலுத்துபவர் பங்குகளை வாங்கும் போது, அது அவருக்கு இழப்பை ஏற்படுத்தும். அந்த இழப்பு வரி விதிப்பிற்கான வருமானத்தில் இருந்து கழிக்கப்படும். கடந்த காலங்களில் இது வரி திட்டமிடலுக்கான கருவியாகப் பயன்படுத்தப்பட்டது.

அதே போல், ஈவுத்தொகை அகற்றுதல் என்பது ஒருவர் ஒரு பங்கின் மீதான ஈவுத்தொகை அறிவிப்புக்கான நாளுக்கு சிறிது காலம் முன்பாக, சம்பந்தப்பட்ட பங்கை வாங்கி, ஈவுத்தொகை அறிவிக்கப்பட்ட சில நாட்களில் அப்பங்கை விற்பனை செய்வதைக் குறிக்கும். வழக்கமாக ஈவுத் தொகை அறிவிக்கப்படுவதற்கு முந்தைய காலத்தின் பங்குவிலை, ஈவுத்தொகை அறிவிக்கப்பட்டதற்கு பிந்தைய காலத்தின் விலையை விட சற்று அதிகமாக இருக்கும். அவ்வாறு அதிக விலை கொடுத்து வாங்கியவர், ஈவுத்தொகை அறிவிக்கப்பட்டதற்குப் பிறகு விற்பனை செய்யும் போது அவருக்கு இழப்பு ஏற்படும். இந்த இழப்பு வரிவிதிப்புக்கான வருவாய் வரியிலிருந்து கழிக்கப்படும். இத்தகைய நடவடிக்கைகளால் அரசின் வரி வசூல் குறையும். அதே போல், வட்டி அகற்றும் நடைமுறையும் வரி வசூல் குறைவதற்கே வழி வகுக்கும்.

பரஸ்பர நிதியைப் பொறுத்தவரை போனஸ் அகற்றம், ஈவுத்தொகை அகற்றம் ஆகியவற்றைத் தடுப்பதற்கு ஏற்கெனவே விதிகள் வகுக்கப்பட்டுள்ளன. உள்கட்டமைப்பு மூலதன அறக்கட்டளை அல்லது ரியல் எஸ்டேட் மூலதன அறக்கட்டளை, அல்லது மாற்று முதலீட்டு நிதி மற்றும் பங்குகள் ஆகியவற்றுக்கும் இடையேயான நடைமுறைகளில் கொண்டு வருவதற்கான விதிகள் 2022-23ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளன.

**தொண்டு அறக்கட்டளைகள் தொடர்பான விதிகள்**

தொண்டு அறக்கட்டளைகள் மூலம் சமூகத்திற்குச் செய்யப்படும் உதவியும், பயன்களும் குறிப்பிடத்தக்கவை. அவற்றின் பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில், தொண்டு அறக்கட்டளைகள் செய்யும் அர்த்தமுள்ள செயல்களுக்கு வரிவிலக்கின் மூலம் அங்கீகரிக்கப்படுகிறது. எனினும் தொண்டு அறக்கட்டளைகள் தொடர்பாக தற்போது நடைமுறையில் உள்ள சில விதிகளில் நிலவும் குழப்பம் காரணமாக, தொண்டு அறக்கட்டளைகள் சார்பில் தொடரப்படும் வழக்குகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதை அரசு அறிந்துள்ளது. அதைக் கருத்தில் கொண்டு, தொண்டு அறக்கட்டளைகள் தொடர்பான விதிகளில் சில திருத்தங்கள் செய்யப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது. தொண்டு அறக்கட்டளைகள், தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றுக்கான வரிவிலக்கைக் கையாளும் வருமான வரிச் சட்டப்பிரிவுகள் 10 (23C) மற்றும் 11, 12 ஆகியவை ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவையாகவே உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

**வணிகத்தின் போது கிடைக்கும் பயன்களுக்கும் வரி**

வணிகத்தின் போது வணிகர்களுக்கு சில பயன்கள் மற்றும் பரிசுகள் கிடைக்கின்றன. ஆனால், அதை சம்பந்தப்பட்டவர்கள் வருமான வரி செலுத்துவதற்கான கணக்கில் சேர்க்காமல் கைவிடும் போக்கு அதிகரித்து வருவதை அரசாங்கம் அறிந்திருக்கிறது. வணிகத்தின் போது கிடைக்கும் பயன்களையும் வரி விதிப்பின் கீழ் கொண்டு வருவதற்காக 20 ஆயிரம் ரூபாய்க்கும் கூடுதலான மதிப்பு கொண்ட பயன்கள் மற்றும் பரிசுகளுக்கு ஆதாரத்தில் வரிப்பிடித்தம் செய்யும் முறை (TDS) அறிமுகப்படுத்தப்படும்.

**நேரடி வரிகள்**

**சுங்க வரி விலக்குகள் மறு ஆய்வு**

இந்தியாவில் தற்போது நடைமுறையில் உள்ள 400க்கும் கூடுதலான சுங்கவரி விலக்குகள் குறித்த விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மத்திய அரசின் Digital MyGov தளத்தைப் பயன்படுத்தி பொது மக்களிடமிருந்து கருத்துக்கள் பெறப்பட்டன. பல்வேறு மத்திய அமைச்சகங்கள், தொழில்துறை அமைப்புகளுடனும் கலந்தாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட மறு ஆய்வுகளின் அடிப்படையில், எந்தெந்தப் பொருள்களையெல்லாம் போதிய அளவில் உள்நாட்டில் தயாரிப்பதற்கான வாய்ப்புகள் உள்ளனவோ, அவற்றுக்கும், கடந்த சில ஆண்டுகளில் மிகக் குறைந்த அளவிலேயே இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களுக்கும், பயனற்ற நிலைக்கு சென்றுவிட்ட பொருள்களுக்கும், பேஜர்கள், ஃபிளாப்பி டிஸ்குகள் போன்ற இப்போது தேவைப்படாத பொருள்களுக்கும் வழங்கப்பட்டிருந்த சுங்கவரி விலக்குகள் திரும்பப் பெறப்பட்டிருக்கின்றன.

**எளிமையான சுங்க வரி நிர்வாகம்**

சுங்கக் கட்டண அட்டவணை மூலம் சுங்கவரி விகிதங்கள் வெளியிடப்படுகின்றன. எனினும், குறைந்தபட்ச சுங்கவரி என்பது அறிவிக்கை மூலம் நிர்ணயிக்கப்படுகிறது. சுங்கவரிக்கு ஏராளமான விலக்குகள் அளிக்கப்படுவதால், சுங்கவரி விகிதம் மிகவும் சிக்கலானதாக மாறி இருக்கிறது. அதுமட்டுமின்றி, இத்தகைய குழப்பங்கள் காரணமாக இந்தியாவில் சுங்கவரி எவ்வளவு வசூலிக்கப்படுகிறது என்பது குறித்த விவரங்களைப் படிப்பவர்கள், இந்தியாவில் மிக அதிக அளவில் சுங்கவரி வசூலிக்கப்படுகிறதோ என்ற எண்ணத்திற்கு ஆளாகக் கூடும். சுங்கவரி விகிதத்தை எளிமையாக்கும் நோக்குடன் தனித்த அறிவிக்கை மூலம் செயல்படுத்தக் கூடிய வரி விகிதங்கள் 01.05.2022 முதல் நடைமுறைப்படுத்தப்பட உள்ள்ன. இதன் மூலம் எதிர்காலத்தில் சுங்கவரி விகிதம் எளிமையானதாக மாறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**சுங்கவரி விகிதத்தில் மாற்றம்**

சில பொருள்களுக்கான மூலதனச் செலவைக் குறைக்கவும், வரிவிகிதத்தை எளிமையாக்கவும் வரிக் கட்டமைப்பை திருத்தம் செய்யவும், எளிமையாக வணிகம் செய்யும் சூழலை உருவாக்கவும், அதன் மூலம் வேளாண்மை, ஜவுளி, இரத்தினக்கற்கள் மற்றும் நகைகள், உலோகங்கள், மூலதனப் பொருள்கள் போன்ற துறைகளில் உள்நாட்டு மதிப்புக் கூட்டுதலை ஊக்குவிக்கவும் வசதியாக, அடிப்படைச் சுங்கக் கட்டணம் குறைக்கப்பட்டிருக்கிறது.

அதே போல், உழவர்கள், குறு, சிறு. நடுத்தரத் தொழில்துறையினர், புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை, மின்னணு துறை ஆகியவற்றில் சமவாய்ப்புச் சூழலை உருவாக்குவதற்கும், உள்நாட்டில் மதிப்புக் கூட்டுதலை ஊக்குவிக்கவும்

வசதியாக, சில பொருள்களுக்கு அடிப்படை சுங்கவரி விகிதம் உயர்த்தப்பட்டிருக்கிறது.

**மூலதனப் பொருள்கள் துறை சார்ந்த திருத்தங்கள்**

மூலதனப் பொருள்கள் மற்றும் திட்டங்களுக்காக இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் ஆகிய வற்றுக்கான சுங்கவரி விகிதங்கள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. மூலதனப் பொருள்கள் மற்றும் இறக்குமதித் திட்டங்களுக்காக வழங்கப்பட்டு வரும் 42க்கும் கூடுதலான சுங்கவரி விலக்குகள் படிப்படியாக நீக்கப்பட்டு வருகின்றன. இதற்குக் காரணம் தற்சார்பு இந்தியா இலக்கை அடையும் நோக்குடன் உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிப்பதற்காகவே இந்த வரி விலக்குகள் இரத்து செய்யப்பட்டு வருகின்றன. சுங்க வரி விலக்குகள் சீரமைக்கப்பட்ட பிறகு, இந்தியாவின் பெரும்பான் மையான மூலதனப் பொருள்களுக்கு 7.5 சதவீதம் என்ற குறைந்த வரி வசூலிக்கப்படும். இதன் மூலம், பொருள்களின் விலை உயராது என்று நாங்கள் கருதுகிறோம்.

**வரி இல்லாத இறக்குமதிகள்**

கைவினைப் பொருள்கள், ஆயத்த ஆடைகள், தோல் பொருள்கள் ஆகியவற்றை ஏற்றுமதி செய்யும் சான்றிதழ் பெற்ற ஏற்றுமதியாளர்கள், அப்பொருள்களைத் தயாரிப் பதற்காக பட்டன்கள், முத்திரைகள், அலங்காரப் பொருள்கள், ஜிப்புகள், தோல்பொருள்கள், லைனிங் பொருள்கள், ஃபிட்டிங் பொருள்கள் போன்றவை ஏற்றுமதியாளர்களின் தேவைக்கு ஏற்ப வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட வேண்டும். ஒரு பொருளைத் தயாரித்து ஏற்றுமதி செய்வதற்காக தேவைப்படும் இத்தகைய பொருள்களை வரியின்றி இறக்குமதி செய்ய ஏற்றுமதியாளர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.

**துறை சார்ந்த முக்கிய அம்சங்கள்**

**மின்னணு துறை**

ஸ்மார்ட் வாட்ச்கள் போன்ற மனிதர்கள் அணியக் கூடிய கருவிகள், வயர்லஸ் ஹெட்ஃபோன்கள் / இயர்ஃபோன்கள், கையடக்க ப்ளூடுத் ஸ்பீக்கர்கள் போன்ற கேட்கக்கூடிய கருவிகள், ஸ்மார்ட் மீட்டர்கள் போன்ற பொருள்களின் உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்குடன் படிப்படியான உற்பத்தித் திட்டங்களின் கீழ் தரப்படுத்தப்பட்ட இறக்குமதி வரி விகிதம் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

செல்பேசிகளில் பொருத்து வதற்கான கேமரா லென்ஸ்கள், சார்ஜர்கள் / அடாப்டர்களை தயாரிப்பதற்கான டிரான்ஃபார்மர்கள் போன்ற உதிரிப் பொருள்களின் உற்பத்தியை உள்நாட்டில் ஊக்குவிக்கும் நோக்குடனும், அவற்றின் மீதான எதிர் வரியைப் போக்கும் நோக்குடனும், மின்னணு பொருள்கள் மீதான சுங்க வரிகள் குறைக்கப்பட்டுள்ளன.

**ஜவுளித்துறை**

ஜவுளித்துறை மீதான வரிவிகிதங்கள் குறிப்பிடத்தக்க அளவில் எளிமையாக்கப் பட்டுள்ளன. ஜவுளித்துறை சார்ந்த வரிவிகிதங்கள் இனி சுங்கவரி விகிதத்தின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படும். மெத்தை தயாரிப்புக்கான பொருள்கள் மற்றும் மெத்தை தயாரிப்பு தவிர்த்த பிற துணி வகைகளுக்கான வரி விகிதம் ஒரே அளவில் இருக்கும் வகையில் மாற்றியமைக்கப் பட்டுள்ளது. ஏராளமான ஜவுளிப் பொருள்களுக்கு தனித்தனி வரிவிகிதம் நிர்ணயிக்கும் முறை ஒழிக்கப்பட்டு, ஆடைகளுக்கான சுங்கவரி விகிதம் மிகவும் எளிமையாக்கப்பட்டுள்ளது.

**கலால் வரி விகிதம் மாற்றம்**

பெட்ரோலுடன் எத்தனாலையும், டீசலுடன் பயோ டீசலையும் கலந்து விற்பனை செய்வதை ஊக்கு விக்கும் நோக்குடன், இந்தப் பொருள்களைக் கலக்காமல் விற்பனை செய்யப்படும் பெட்ரோல், டீசல் மீது 2022ஆம் ஆண்டு அக்டோபர் ஒன்றாம் தேதி முதல் 2 ரூபாய் கூடுதல் கலால் வரி விதிக்கப்பட உள்ளது.

இந்திய முன்னேற்றப் பாதையில் வெற்றிநடை போட்டுக் கொண்டிருக்கும் சூழலில், உலகப் பொருளாதார வரைபடத்தில் இந்தியா உயர் சிறப்பு இடத்தை அடைவதற்கான நடவடிக்கைகளில் வரி செலுத்துவோருக்குத் தேவையான ஆதரவை வழங்கவும், ஊக்குவிக்கவும் மத்திய அரசு உறுதிபூண்டிருக்கிறது. இந்தத் தொலைநோக்குத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான செயல் திட்டம் தான் 2022-23ஆம் ஆண்டுக்கான மத்திய நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ள வரி விதிப்புத் திட்டங்கள் ஆகும். இது தவிர, இந்தியாவில் உள்ள வரி செலுத்துவோர் அனைவரும் தாங்களாகவே முன் வந்து வரி செலுத்துவதன் மூலம், சமூகக் கடமைகளைச் செய்வதற்கான முயற்சியில் மத்திய அரசுடன் கைகோர்த்துச் செயல்பட வேண்டும் என்றும் மத்திய அரசு எதிர் பார்க்கிறது

– **தருண் பஜாஜ்**, வருவாய்த் துறைச் செயலாளர், நிதி அமைச்சகம், இந்திய அரசு, புதுதில்லி





# கிராமப்புறப் பெண்களுக்கான முனைவுகள்

**- சரண்ஜித் சிங்**

"தீன்தயாள் உபாத்யாயா திட்டத்தின் மூலம் பெண்கள் நாடெங்கிலும் சுய உதவிக்குழுக்களிலும், கிராமப்புற அமைப்புகளிலும் ஈடுபடுத்தப்பட்டு வருகிறார்கள். சுய உதவிக்குழுக்களில் இணைந்திருக்கும் மகளிர் உண்மையில் சுய சார்பு பாரத இயக்கத்தின் தலைவர்களாக விளங்குகிறார்கள். சுய உதவிக்குழுக்களை நாட்டு உதவிக்குழுக்கள் என்றே கூட அழைக்கலாம். 2014ஆம் ஆண்டிற்கு முன்பான ஐந்து ஆண்டுகளை ஒப்பிடும் போது, கடந்த ஏழு ஆண்டுகளில் தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் அளிக்கப்பட்டுள்ள உதவித்தொகை கிட்டத்தட்ட 13 மடங்கு உயர்ந்துள்ளது. முன்பு எந்தவொரு உத்தரவாதமுமின்றி ஒவ்வொரு சுய உதவிக்குழுவும் ரூ.10,00,000 வரை கடன் வாங்க முடியும் என்ற நிலையில் அது இப்போது ரூ.20,00,000மாக உயர்ந்துள்ளது". பிரதம மந்திரி 21, டிசம்பர் 2021.

**தீன்தயாள் அந்தியோதயா திட்டம்**

கிராமப்புறக் குடும்பங்களுக்குப் பலவகையான வாழ்வாதாரங்களை வழங்கி கிராமப்புற ஏழ்மையை ஒழிக்கும் மத்திய அரசின் திட்டமான தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் (DAY-NRLM) உண்மையிலேயே மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி யுள்ளது. 2011இல் துவக்கப்பட்ட இந்த தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் மூலம் 2023-24க்குள் 9 முதல் 10 கோடி கிராமப்புற ஏழைக் குடும்பங்களுக்குப் பயனளிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த இயக்கத்தின் மூலம் கிராமப்புற அமைப்புகளுக்கும,; மத்திய அரசின் திட்டமான அதன் உறுப்பினர்களுக்கும் நீண்ட கால ஆதரவு வழங்கப்பட்டு, அவர்களுடைய வாழ்வாதாரங்கள்



பல வழியில் மேம்படுத்தப்பட்டு அவர்களின் வருமானமும், வாழ்க்கைத் தரமும் உயர்த்தப்பட்டுள்ளது.

**முக்கியமான கொள்கைகள்:**

கிராமப்புற அமைப்புகளில் பெண்களை பங்கேற்கச் செய்து, பலவகையான வாழ்வாதார வசதி நடவடிக்கைகளில் அவர்களை ஈடுபடுத்தி கடன் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தால் அவர்களுடைய வாழ்க்கையில் பெரிய முன்னேற்றம் ஏற்படும்.

தேசிய கிராமப்புற வாழ்வாதார இயக்கத்தின் முக்கியமான கொள்கைளாவன:

1. ஏழை மக்கள் தங்களுடைய ஏழ்மையிலிருந்து வெளிவர மிகவும் ஆர்வமாக உள்ளனர், அவர்களால் அது இயலக்கூடியதுதான். வாய்ப்பில்லாதவர்களுக்கு வாய்ப்பளிப்பதற்காக இந்தப் பெண்களை சமூக அமைப்புகளில் ஒருங்கிணைத்து அந்த அமைப்புகளை வலுப்படுத்துவது அவசியம்;
2. கிராமப்புற ஏழைக் குடும்பங்கள் தங்களுடைய ஏழ்மையிலிருந்து வெளிவர அவர்களுக்கு நீண்ட கால நிதியும், வாழ்வாதார ஆதரவுகளும் வழங்கப்படும்;
3. ஏழைக் குடும்பங்களின் திறன்களை வளர்த்துப் போற்றுவதே அவர்களுடைய மேம்பாடு நிலைத்து நிற்க உதவும் அதனை அவர்களே செய்து கொண்டால் மேலும் சிறப்பாக இருக்கும்.
4. ஏழைகளின் மேம்பாடு நிலைத்துத் தொடர அவர்களுக்குப் பலவகையான வாழ்வாதார வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டும் விவசாயம் மற்றும் விவசாயம் அல்லாத துறைகளில் அவர்களுக்கு சொத்துக்களும், திறன் சார்ந்த வாழ்வாதார ஆதரவுகளும் தேவை.

**இந்தத் திட்டத்தின் செயல்பாடுகள்:**

**அமைப்புகளை உருவாக்கித் திறன்களை வளர்த்தல்:**

தேசிய கிராமப்புற வாழ்வாதார இயக்கத்தின் ஒரு அடிப்படைப் பகுதியாக கிராமப்புற அமைப்புகளை உருவாக்கி அவற்றின் திறன்களை வளர்க்க வேண்டும். இந்த இயக்கத்தின் மூலம் ஒவ்வொரு ஏழைக் குடும்பத்திலிருந்தும் ஒரு மகளிரையாவது சுய உதவிக் குழுக்களில் சேர்க்க வேண்டும். ஒவ்வொரு குழுவிலும் 10 முதல் 15 உறுப்பினர்கள் வரை உள்ளனர். இந்த சுய உதவிக்குழுக்களின் கூட்டமைப்பு கிராமப்புற அளவில் உருவாக்கப்படுகிறது. இப்படிப்பட்ட 10 முதல் 15 எண்ணிக்கையில் உள்ள கிராமப்புற அமைப்புகளின் கூட்டமைப்பு ஒன்றும் உருவாக்கப்படுகிறது. இந்த சமுதாய அமைப்புகள் கிராமப்புற ஏழைக்குடும்பங்கள் தங்களுடைய ஏழ்மையிலிருந்து வெளிவர நிதி, தொழில்நுட்பம் மற்றும் விற்பனை சார்ந்த வளங்களைப் பெறுவதற்கு ஏதுவாக உள்ளது. இந்த அமைப்புகளுக்கு தொடர்ந்து திறன் மேம்பாடும், பயிற்சியும் தேவைப் படுகிறது. இந்த அமைப்புகளின் நிதிசார் அடித்தளத்தை வலுப் படுத்தவும், கூடுதல் நிதிகளைப் பெறவும் சுழற்சி நிதி மற்றும் சமுதாய முதலீட்டு நிதி என்ற வகையில் இந்த இயக்கம் நிதி உதவி வழங்குகிறது. இந்த இயக்கம், இதுவரை சுழற்சி நிதி மற்றும் சமுதாய முதலீட்டு நிதி ஆகிய சமுதாய முதலீட்டு ஆதரவுத் திட்டங்கள் மூலம் ரூ.16,189 கோடி வழங்கியுள்ளது.

தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் தற்போது டெல்லி, சண்டிகர் நகரங்களைத் தவிர மற்ற அனைத்து மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களிலுள்ள 706 மாவட்டங்களில் 6782 வளர்ச்சித் தொகுதிகளிலும் செயல்படுத்தப் பட்டு வருகிறது. இந்த இயக்கம் இதுவரை 8,09,00,000 மகளிரை 73.93 இலட்சம் சுய உதவிக் குழுக்களில் இணைத்துள்ளது. இந்த சுய உதவிக் குழுக்கள் 4.2 இலட்சம் கிராமப்புற அமைப்புகளாகவும் 32,899 கிராமப்புற அமைப்புகளில் கூட்டமைப்புகளாகவும் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த திட்டம் நாடெங்கிலும் பரவி இருப்பதை இது காட்டுகிறது.

இந்தத் திட்டத்தில் திறன் வளர்ப்பு அணுகுமுறை அந்தந்த சமுதாயங்களிலிருக்கும் மக்கள் மற்றவர்களுக்கு ஒவ்வொரு நாளும் 24 மணி நேரமும், பயிற்சியும் ஆதரவும் அளித்து வருகிறார்கள். இந்த வகையில் இந்த இயக்கம் வங்கித்துறை, விவசாயம், கால்நடைப் பராமரிப்பு, மீன் வளர்ப்பு, காடுகள் வளர்ப்பு போன்ற துறைகளில் 3.5 இலட்சம் சமுதாய அளவிலான பயிற்சி / ஆதரவு தரும் மக்களை உருவாக்கியுள்ளது.

**எல்லோரையும் உள்ளடக்கிய நிதி நிலைமை:**

தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் எல்லா ஏழை மக்களுக்கும் அவர்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய நம்பகத்தன்மையான நிதிச் சேவைகளை வழங்குகிறது. இந்தச் செயல்பாடுகள் அவர்களுடைய தேவைகளையும், அதற்கான வழங்கல்களையும், இருபுறங்களிலும் செயல்பட்டு, ஏழை மக்களிடையே நிதி சார்ந்த கல்வி அறிவு அளித்து, கல்வி அறிவில்லாதவர்களுக்கு அதனை வழங்கி சுய உதவிக்குழுக்களுக்கும், அதன் கூட்டமைப்புகளுக்கும் மூலதன நிதி வழங்கி அவர்களின் நுகர்வு அளவை அதிகப்படுத்துகிறது.



அதே சமயம் நிதித்துறை அமைப்புகளோடு இணைந்து இந்த மக்கள் மின்மய நிதித் தொழில்நுட்பம், வணிகக் கருத்துப் பரிமாற்றம் மற்றும் சமுதாய உதவியாளர்கள் ஆகியோரை அளித்து, உதவி செய்கிறது. இந்த ஏழை மக்கள் அனைவரையும் நிதிசார்ந்த செயல்பாடுகளில் உள்ளடக்க, சுய உதவிக் குழுக்கள் சம்மந்தப்பட்ட வங்கிகளோடு தொடர்பு இணைக்கப்பட்டு, அவர்களுக்கு எல்லா வகையான நிதிச் சேவைகளையும், கடன்களையும் பெற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

2021–22 நிதியாண்டில் இதுவரை வங்கிக்கடன் தொடர்பு கொடுக்கப்பட்டுள்ள சுயஉதவிக் குழுக்களில் 32,00,000 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.82,092 கோடி அளவிற்குக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. டிசம்பர் 2021 வரை இந்த சுய உதவிக்குழுக்கள் இதுவரை மொத்தமாக ரூ.4.61 இலட்சம் கோடி கடன் பெற்றுள்ளன. இவ்வளவு பெரிய அளவிற்கு சுய உதவிக்குழுக்களுக்குக் கடன்கள் வழங்கப்பட்டிருந்தாலும் இவற்றில் வாராக் கடன்களின் அளவு 2.34 சதவிகிதமாகவே உள்ளது. இந்த அளவையும் குறைக்க சுய உதவிக் குழுக்கள் முயன்று வருகின்றன. இந்த சுய உதவிக் குழுக்களின் சிறப்பான செயல்பாட்டை உணர்ந்த அரசு அவர்கள் உத்திரவாதம் இன்றி பெறும் கடன் அளவை ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ. 20 இலட்சமாக உயர்த்தியுள்ளது.

தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் வங்கி வசதிகளே இல்லாத ஊரகப் பகுதிகளில் உள்ள மக்களுக்கும் நிதி வசதிகளை வழங்க வழி ஏற்பட்டுள்ளது. இது மின்மயத் தொழில்நுட்பத்தோடு சுய உதவிக் குழக்களிலுள்ள மகளிரை அந்தந்தப் பகுதிக்கான வங்கி அலுவலர் போல் நியமனம் செய்து அந்தப் பகுதியிலுள்ள ஏழை மக்களுக்கு வங்கிச் சேவைகள் அளிக்கப்படுகின்றன. இதற்காக இந்தக் கிராமப்பகுதியிலுள்ள பொதுச்சேவை மையங்களும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இதுவரை 68,000 சுய உதவிக் குழு மகளிர் அடையாளம் காணப்பட்டு, பயிற்சி அளிக்கப்பட்டு கிராமப்புற வங்கி அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த அலுவலர்கள் அந்தப் பகுதியிலுள்ள ஏழை கிராம மக்கள் வங்கிகளில் பணம் சேமிப்பதற்கும், கடன் பெறுவதற்கும், பணப் பரிமாற்றங்களுக்கும், ஒய்வூதியங்கள், கல்வி உதவித்தொகை ஆகியவை பெறுவதற்கும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டங்களின் கீழ் ஊதியம் பெறவும், காப்பீடு, ஒய்வூதியத் திட்டங்களில் சேரவும் வசதிகள் ஏற்பட்டுள்ளன.

2021–22 நிதியாண்டில் டிசம்பர் 2021 வரை இந்த மகளிர் அலுவலர்கள் 215 இலட்சம் பரிவர்த்தனைகளை ரூ.10,001 கோடி அளவிற்கு செய்துள்ளனர். குறிப்பாக இந்தப் பெருந்தொற்றுக் காலத்தில் அவர்களின் பணி மிகவும் மகத்தானதாகக் கருதப் படுகிறது.

வட்டிக் குறைப்பு தேசிய கிராமப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் இயங்கும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடன்களுக்கு அவர்கள் அளிக்கும் வட்டியில் தள்ளுபடியும் கிடைக்கிறது. இந்தத் திட்டத்தின் கீழ் உள்ள மிகவும் ஏழையான உறுப்பினர்கள் உள்ள சுயஉதவிக் குழுக்களுக்கு அவர்கள் அளிக்க வேண்டிய வட்டி விகிதத்திற்கும், 7 சதவிகிதத்திற்கும் உள்ள இடைவெளி தள்ளுபடி செய்யப்படுகிறது. இது அல்லாமல், 250 மாவட்டங்களில் உள்ள அனைத்து மகளிர் சுய உதவிக் குழுக்களும் ரூ.3 இலட்சம் வரை ஆண்டுக்கு 7 சதவிகித வட்டி மட்டுமே கொடுத்து கடன் உதவி பெறலாம். மேலும் அவர்கள் உரிய நேரத்தில் கடனை திருப்பி அளித்தால் இந்த வட்டி விகிதம் மேலும் 3 சதவிகிதம் குறைக்கப் பட்டு, 4 சதவிகித வட்டியிலேயே அவர்களுக்குக் கடன்கள் கிடைக்கும்.

**வாழ்வாதார மேம்பாடுகள்:**

தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் இயங்கும் சுய உதவிக் குழு மகளிருக்கு மேற்கூறப்பட்ட பல நிதிவசதிகள் அளிக்கப்படுவதோடு மட்டுமல்லாமல் விவசாயம் மற்றும் விவசாயம் அல்லாத பிற துறைகளில் அவர்களின் வாழ்வாதாரங்களைப் பெருக்க பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**விவசாய மகளிருக்கு அதிகாரமளிக்கும் திட்டம்:**

தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் 2011இல் இந்தப் பெண்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்த மகளிர் விவசாயத்துறை அதிகாரமளிக்கும் திட்டம் துவங்கப் பட்டது. இந்தத் திட்டத்தின் முக்கிய இலக்கு, மகளிருக்கு அதிகாரமளித்து அவர்களின் செயல்திறன்களை மேம்படுத்தி, நிலைத்து நிற்கும் வாழ்வாதாரங்களை வழங்குவதாகும். இந்தத் திட்டம் ஒரு இயக்கமாகச் செயல்படுகிறது. இந்தத் திட்டத்தின முக்கிய இலக்குகளாவன:

1. பெண்கள் விவசாயப் பணிகளில் வருமானம் பெரும் அளவில் ஈடுபடுதல்.
2. விவசாயத் துறையில் பெண்களுக்கு நிலைத்து நிற்கும் வாழ்வாதார வாய்ப்புகளை வழங்கல்.

3. இந்த கிராமப்புறப் பெண்களின் செயல்திறன்களை மேம்படுத்தி, அவர்களை விவசாயம் மற்றும் விவசாயம் அல்லாத பிற பணிகளில் பங்கு கொள்ள வைத்தல்.
4. ஒரு குடும்ப அளவிலும், சமுதாய அளவிலும் இந்த மகளிருக்கு உணவு மற்றும் சத்துணவுப் பாதுகாப்பு வழங்கல்.
5. அரசாங்கம் மற்றும் அதன் அமைப்புகளிலிருந்து வழங்கப்படும் பொருள்களையும், சேவைகளையும் இந்த மகளிர் பெறுவதற்கான வாய்ப்புகளை அளித்தல்.
6. பல்லுயிர் வளங்களைச் சிறப்பாக நிர்வகிக்க விவசாயத் துறையில் பெண்களுக்கான மேலாண்மைத் திறன்களை மேம்படுத்தல்.

இப்போது நிகழ்ந்து வரும் பருவநிலை மாற்றச் சூழலில் இந்த மகளிர் விவசாய அதிகாரமளிக்கும் திட்டம், நிலைத்து நிற்கும் வேளாண்மையை உறுதி செய்ய முக்கியமான பங்காற்ற உள்ளது. சமுதாய அளவில் தங்களுடைய பணிகளை நிர்வகிக்கத் தேவையான சமுதாய மகளிரை உருவாக்க இந்தத் திட்டம் ஆதரவளிக்கிறது. மகளிர் விவசாய அதிகாரமளிக்கும் திட்டத்தில் முக்கியமான மூன்று திட்டங்கள் உள்ளன: (i) நிலைத்து நிற்கும் வேளாண்மை (ii) மரம் அல்லாத பிற வன உற்பத்திப் பொருள்கள் மற்றும் (iii) பொருள்களின் மதிப்பைத் தொடர்ந்து வலுவூட்டல். நிலைத்து நிற்கும் வேளாண்மை மற்றும் மரம் அல்லாத பிற பொருள்களின் உற்பத்தி ஆகிய திட்டங்களோடு கால்நடைப் பராமரிப்பும் மேற்கொள்ளப்படுகிறது. இந்த அணுகுமுறையின் கீழ், இதுவரை 1.47 கோடி பெண் விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

மகளிர் விவசாயிகள் குறைந்த விலையில் பல வகையான வேளாண் கருவிகளை எளிதில் பெற வாடகை வேளாண் கருவி மையங்கள் அமைக்கப்படுகின்றன. இதனால், மகளிர் விவசாயிகளின் வேலைச்சுமை குறைவதோடு, சிறிய மற்றும் விளிம்பு நிலை விவசாயிகளுக்கு விவசாயக் கருவிகளின் பயன்பாடும் கிடைக்கிறது. இதுவரை, 22,800க்கும் மேற்பட்ட வாடகை வேளாண் கருவி ஒகள் மையங்கள்; அமைக்கப்பட்டுள்ளன.

மகளிர் சுய உதவிக்குழுக்களில் உள்ளவர்கள் தங்கள் வீடுகளிலேயே ஊட்டச்சத்து செடி, கொடிகளை வளர்க்கும் திட்டம் முக்கியமான மற்றொரு செயல்பாடாகும். இதனால், அவர்களுக்கு ஆண்டு முழுவதும் ஊட்டச்சத்து உணவு கிடைக்கிறது. மேலும், இந்த உணவுப் பொருள்களை அவர்கள் விற்பதன் மூலம் சிறிது வருவாயும் கிடைக்கிறது. இதுவரை சுயஉதவிக் குழுக்கள் உறுப்பினர்களின் வீடுகளில் 80.44 இலட்சம் சத்துணவு விவசாயத் தோட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

இப்படிப்பட்ட விவசாயம் சார்ந்த வாழ்வாதார நடவடிக்கைகளை வலுப்படுத்தும் போது, அடுத்த கட்டமாக அது நம்மை இயற்கை வேளாண்மைக்கு அழைத்துச் செல்கிறது. உள்ளூர் குழுக்களை அமைத்து, அவற்றிற்கு வேளாண் சான்றிதழ் வழங்குவதற்கு நீண்ட காலமானாலும் இதுவரை 2,41,961 விவசாயிகள் இயற்கை வேளாண் சான்றிதழ்களைப் பெற்றிருக்கிறார்கள்.

சுய உதவிக்குழுக்களின் உறுப்பினர்கள் ஒன்றாக இணைந்து செயல்படக்கூடிய நிலையில் அவர்கள் சந்தைகளை அணுகுவது எளிதாகிறது. இந்த வகையில், தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் ஊரக வளர்ச்சி அமைச்சகம் இந்த சுய உதவிக்குழுப் பெண்கள் ஒன்றாக இணைந்து உற்பத்தியாளர்கள், குழுக்கள், நிறுவனங்கள் ஆகியவற்றை உருவாக்கி, தயாரிக்கப்படும் பொருள்களை ஒன்று திரட்டி அதற்கு மதிப்புக் கூட்டி விற்பனை செய்கின்றனர். இதன் முக்கியமான நோக்கம், அடிப்படை உற்பத்தியாளர்களுக்கு வணிக ரீதியில் எல்லாத் திறன்களையும் வழங்கி, உற்பத்தியாளர் சங்கங்கள் சிறந்த சந்தை அணுகுமுறையை மேற்கொள்வதாகும்.

இப்படிப்பட்ட செயல்பாடுகளுக்கு தொழில்நுட்பத் திறன்களை வளர்ப்பதோடு மட்டுமல்லாமல், மிகப்பெரிய அளவிலான உற்பத்தியாளர்கள் நிறுவனங்களை உருவாக்க இந்த அமைச்சகம் டாடா அறக்கட்டளையின் ஆதரவோடு கிராமப்புற மதிப்புக் கூட்டுத் தொடர் அமைப்பு மேம்பாட்டு அமைப்பை உருவாக்கியுள்ளது. இந்த அமைப்பு, தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள மாநிலங்களிலுள்ள அமைப்புகள் இந்த மதிப்புகூட்டுத் தொடர் அமைப்புகளை அமைத்து, மேம்படுத்தி மிகப்பெரிய அளவிலான உற்பத்தியாளர்கள் நிறுவனங்களை உருவாக்க ஆதரவளிக்கிறது.

தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் இதுவரை 183 உற்பத்தியாளர்களின் பெருநிறுவனங்கள் அமைக்கப்பட்டு, அதில் 3.86 இலட்சம் மகளிர் உறுப்பினர்களும் 1.22 இலட்சம் உற்பத்தியாளர்கள் பொருள்களும் இணைந்துள்ளன.

**கிராமதொழில்முனைவு புது நிறுவனங்கள் துவக்கல்:**

தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும்



கிராமத் தொழில் முனைவு, புது நிறுவனங்கள் துவக்க அமைப்பும், ஊரக பகுதிகளில் சிறு வணிகங்களும்; வளர ஏதுவான சூழலை உருவாக்குகிறது. இந்தச் சூழலில் வணிகத்திற்கான ஆதரவுச் சேவைகள், தொடர்பயிற்சி, வணிகம் துவங்க முதல் முதலீடு, வணிகம் மற்றும் தொழில்நுட்பத் தேவைகளில் திறன் வளர்ப்பு மற்றும் வியாபாரத்திற்கான ஆதரவுகளும் வழங்கப்படுகின்றன. இந்தச் சேவைகள் ஒரு ஒன்றியத்தின் எல்லாப் பகுதிகளிலும் வழங்கப்படுகின்றன. இதுவரை 23 மாநிலங்களிலும், யூனியன் பிரதேசங்களிலும்; 1,86,576 தொழில் முனைவுகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

**ஆஜிவிகா கிராமப்புறப் போக்குவரத்துத் திட்டம்:**

தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் ஆஜீவிகா கிராமப்புறப் போக்குவரத்துத் திட்டத்தின்கீழ் ஊரகப் பகுதிகளில் பாதுகாப்பான, ஏற்றுக் கொள்ளக்கூடிய விலையிலான சமுதாயக் கண்காணிப்புள்ள போக்குவரத்து வசதிகள் வழங்கப்படுகின்றன. இதற்குத் தேவையான வாகனங்களை சுய உதவிக் குழுக்கள் வாங்கி நடத்துகின்றன. இந்தச் சேவைகளின் மூலம் தொலைதூரங்களிலுள்ள கிராமங்களுக்கு சந்தைகள், கல்வி மற்றும் மருத்துவ அமைப்புகள் உள்ளிட்ட பல இடங்களுக்கான போக்குவரத்து இணைப்புகள் கிடைத்து, சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு மேலும் வாழ்வாதார வாய்ப்புகள் அளிக்கப்படுகின்றன. இந்தத் திட்டம் 2017இல் துவக்கப்பட்டு, டிசம்பர் 2021 வரை 23 மாநிலங்களில் 1811 வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

**மின்மய சந்தைப் பணிகள்:**

தற்போது நாட்டில் வணிகங்களில் மின்மயப் பயன்பாடு அதிகரித்துள்ள நிலையில் இந்தப் பயன்களை சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களும் பெற பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அரசின் மின்மய வணிகச் சந்தைத் (GeM) தளத்தில் சிறந்த கைவினைப் பொருள்களின் தொகுப்பு தி சாராஸ் கலெக்ஷன்ஸ் என்ற பெயரில் வெளியிடப்பட்டுள்ளது. அரசின் மின்மயச் சந்தைத் தளத்திற்கும், தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கும் இடையிலான இந்த முயற்சியின் காரணமாக, கிராமப்புற சுய உதவிக்குழுக்கள் தயாரிக்கும் பொருள்கள் விளம்பரப்படுத்தப்பட்டு, கிராமப்புறங்களிலுள்ள சுயஉதவிக்குழுக்கள் அரசு நிறுவனங்களுக்கு பொருள்களை விற்பதில் வசதிகள் ஏற்பட்டுள்ளது.

அஸ்ஸாம், பீகார், மத்தியப் பிரதேசம், சிக்கிம், கேரளா போன்ற பல மாநிலங்கள் தங்கள் மாநிலங்களிலுள்ள சுய உதவிப்பொருள்களை மின்மய வியாபாரம் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளன. ஊரக வாழ்வாதார அமைச்சகமும் ஒரு வலைதளத்தை உருவாக்கி, நாடெங்கிலுமுள்ள சுய உதவிக் குழுக்கள் தங்களுடைய பொருள்களைக் காட்சிப்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.


வாழ்வாதாரம் ஊக்குவித்தலுக்கான கூட்டு முயற்சி/ ஒருங்கிணைந்த செயல்பாடு:

அனைத்து சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கும் உரிய பலன்களை அளிக்க மிகப்பெரிய அளவிலான முயற்சி தேவை என்று தேசிய வாழ்வுரிமை இயக்கம் கருதுகிறது. ஆகவே, தேசிய ஊரக வளர்ச்சி அமைச்சகம் மற்றும் பிற மத்திய அமைச்சகங்கள் மற்றும் மாநில அரசுகளின் திட்டங்கள் ஆகியவை அனைத்தையும் ஒருங்கிணைத்து, ஏழை மக்களின் அமைப்புகள் மூலம் இவற்றைச் செயல்படுத்த அதிக கவனம் அளிக்கப்பட்டுள்ளது.

கீழ்க்கண்ட துறைகள், அமைச்சகங்கள் மற்றும் தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் ஆகியவற்றிற்கிடையே ஒருங்கிணைப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

1. விவசாயம் மற்றும் விவசாயிகள் நலன் அமைச்சகத்தின் விவசாயம் மற்றும் விவசாயிகள் நலன் துறை.
2. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தைச் செயல்படுத்தும் ஊரக வளர்ச்சித் துறை.
3. கால்நடைப் பராமரிப்பு, பால்வளம், மீன்வளத்துறை.
4. பழங்குடி மக்கள் நலன் அமைச்சகம்.
5. உணவுப் பதனீட்டுத்துறை அமைச்சகம்.
6. குறு, சிறு, நடுத்தரத்தொழில் முனைவுகள் அமைச்சகம்.
7. சமூக நீதி மற்றும் அதிகாரமயமாக்கல் அமைச்சகம்.
8. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நல அமைச்சகம்.

இப்படிப்பட்ட இணைந்த செயல்பாடுகள் எப்படி சிறப்பாகச் செயல்படுகின்றன என்பதற்கு உதாரணமாக, குறு உணவுப் பதனீட்டுத் தொழில் முனைவுகளுக்கு மாநிலங்களின் ஊரக வாழ்வாதார அமைப்புகள் இணைந்து வழங்கும் முதல்




முதலீட்டு நிதியுதவியைக் கூறலாம். இந்த நிதியாண்டில் மிகக் குறுகிய காலகட்டத்தில் 86000 பயனாளிகளைத் திரட்டி அவர்களுக்கு ரூ.256 கோடி வழங்கப்பட்டுள்ளது. ஆகவே, இந்த ஒருங்கிணைந்த செயல்பாடு பல அமைச்சகங்கள் ஒன்றிணைந்து திட்டங்களைச் செயல்படுத்த சிறந்த தளம் உருவாக்கப் பட்டுள்ளது.

**கோவிட் பெருந்தொற்றிற்கான எதிர்வினைகள்:**

நாடு சந்திக்கும் ஒவ்வொரு நிலைமைகளிலும் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் துடிப்பாக ஈடுபட்டுள்ளனர். கோவிட் பெருந்தொற்று நாட்டைத் தாக்கிய போது இந்த சுய உதவிக்குழுக்கள் கோவிட் பெருந்தொற்றைத் தவிர்க்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் சார்ந்த விழிப்புணர் வையும், தடுப்பூசிகளின் அவசியம் பற்றியும், கிராமப்புறங்களிலுள்ள அனைத்து குடும்பங்களுக்கும் எடுத்துரைத்துள்ளனர்.

இந்த கோவிட் பெருந்தொற்று காலத்தில் கிராமப்புற மக்களுக்கு ஆதரவாக சுய உதவிக்குழுக்கள் பங்காற்றியதை நாடெங்கிலும் உள்ள மக்கள் வரவேற்றுள்ளனர். அவர்கள் 16,89,27,854 முகக் கவசங்களையும் 5,29,741 பாதுகாப்பு உடைகளையும் 5,13,059 லிட்டர் கிருமி நாசினிகளையும் உற்பத்தி செய்துள்ளனர். கோவிட் பெருந்தொற்று பாதித்துள்ள மக்களுக்கு உணவு வழங்க 1,22,682 சமுதாயச் சமையலறை களையும் நடத்தியுள்ளனர். அவர்கள் படிப்படியாக அடுத்தகட்ட உறுப்பினர்களுக்கு தரமான பயிற்சிகளையும் வழங்கியுள்ளனர். இந்த வகையில் கோவிட் பெருந்தொற்றைத் தடுக்கவும், மக்களை தடுப்பூசிகளை போட்டுக் கொள்வதற்கு ஊக்குவிக்கவும், 5.5 கோடி சுயஉதவிக் குழு உறுப்பினர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

சுதந்திரத்தின் அம்ரித் மஹோத்சவ் என்று இந்தியா சுதந்திரமடைந்த 75வது ஆண்டை நாம் கொண்டாடிக் கொண்டிருக்கும் இந்தத் தருணத்தில் தீன்தயாள் உபாத்யாய தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் கிராமப்புறங் களிலுள்ள மகளிருக்கு அதிகாரம் அளிக்க பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. ஆனால், நாம் இன்னும் தொலைதூரம் செல்ல வேண்டியுள்ளது. ஆகவே, கிராமப்புற மகளிர் ஆண்களுக்கு இணையாக வாழ்க்கையில் முன்னேற அதிகாரமயமாக்கல் பணிகள் தொடர்கின்றன.

---

– **சரண்ஜித் சிங்**, இணைச் செயலாளர் (கிராமப்புற வாழ்வாதாரம்), ஊரக வளர்ச்சி அமைச்சகம்,



# நிதிநிலை அறிக்கையின் சிறப்பம்சங்கள்




- ✓ இந்தியாவின் முதல் மெய்நிகர் நாணயம் (டிஜிட்டல் கரன்சி), கைபேசிகளில் 5ஜி சேவை , ஒரே நாடு, ஒரே பதிவு, இ-பாஸ்போர்ட் ஆகிய முக்கியமான பல திட்டங்கள் 2022-23ஆம் நிதியாண்டிற் கான மத்திய பட்ஜெட்டில் இடம் பெற்றுள்ளன.
- ✓ அடுத்த 25 ஆண்டுகளில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியை இலக்காகக் கொண்டு பட்ஜெட் தயாரிக்கப் பட்டுள்ளது.
- ✓ புதிய இந்தியாவைக் கட்டமைப்பதற்கான பட்ஜெட் டாக இந்த பட்ஜெட் இருக்கும்.
- ✓ பொருளாதார வளர்ச்சி நடப்பாண்டில் 9.2 சதவீதமாக இருக்கும் என்று கணிக்கப் பட்டுள்ளது.
- ✓ சிறு, குறு, நடுத்தரத் தொழில் துறையை மேம்படுத்தும் வகை யில் புதிய வரி விதிப்புகள் இருக்காது.
- ✓ சுயசார்பு இந்தியா திட்டத்தின் கீழ் அடுத்த ஐந்து ஆண்டு களில் 60 இலட்சம் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட உள்ளன.
- ✓ ஒருங்கிணைந்த வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு மத்திய பட்ஜெட் தாக்கல் செய்யப் பட்டுள்ளது.
- ✓ எல்ஐசி நிறுவனத்தின் பொதுப் பங்குகள் விரைவில் வெளியிடப்படும்.
- ✓ உற்பத்திக்கான ஊக்கத் தொகைத் திட்டம் நல்ல பலனை அளித்து வருகிறது.
- ✓ One station, One product திட்டம் உள்ளூர் வணிகத் திற்கு உதவியாக இருக்கும், பொருள்களின் விநியோகப் பாதையை மேம்படுத்தும்
- ✓ நாட்டின் தேசிய நெடுஞ் சாலை வரும் நிதியாண்டில் 25,000 கி.மீ. தொலைவுக்குப் புதிதாக அமைக்கப்பட உள்ளது. போக்குவரத்து உள்கட்டமைப்புகளை மேம்படுத்த ரூ.20,000 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.
- ✓ 400 புதிய வந்தே பாரத் ரயில்கள் அடுத்த மூன்று ஆண்டுகளில் அறிமுகப்

படுத்தப்படும்; 100 சரக்கு முனையங்கள் அமைக்கப்படும். ரயில் நிலையங்களையும் நகர்ப்புற மெட்ரோக்களையும் இணைக்க பெரிய அளவில் திட்டம் வகுக்கப்படும். சரக்குப் போக்குவரத்தை எளிதாக்கும் வகையில் சாலை, ரயில் கப்பல் போக்குவரத்துகள் இணைக்கப்படும். மெட்ரோ ரயில் திட்டங்கள் புதிய வசதிகளுடன் மேம்படுத்தப்படும்.


- ✓ இரசாயன உரங்களின் பங்களிப்பு இல்லாத இயற்கை விவசாயம் நாடு முழுவதும் ஊக்குவிக்கப்படும். விவசாயிகள் தாங்கள் விளைவிக்கும் பொருள்களுக்கு உரிய விலை கிடைக்க நடவடிக்கை.
- ✓ உள்நாட்டில் எண்ணெய் வித்துகள் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். நாட்டில் 1.63 கோடி விவசாயிகளிடம் இருந்து தானியங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.
- ✓ இயற்கை விவசாய முறையில் விளைவிக்கப்படும் பொருள்களை மதிப்புக்கூட்டி விற்க நடவடிக்கை எடுக்கப்படும். புதிய ஊரகத் தொழில் மற்றும் வேளாண் நிறுவனங்களுக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.
- ✓ வேளாண் பொருள்களுக்கு ரூ.2.73 இலட்சம் கோடி குறைந்தபட்ச ஆதரவு விலையாக வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகளிடம் இருந்து விளைபொருள்களைக் கொள்முதல் செய்யும் திறன் அதிகரிக்கப்பட்டுள்ளது. வேளாண் ஏற்றுமதிக்கு ரயில்வே துறையை திறம்படச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.சிறு, குறு நிறுவனத் தொழிலாளர்கள் மற்றும் சிறு விவசாயிகளுக்கான புதிய பொருள்களை ரயில்வே தயாரிக்கும்.
- ✓ கிருஷ்ணா நதி பெண்ணாறு காவிரி நதிநீர் இணைப்புத் திட்டம் செயல்படுத்தப்படும். காவிரி கிருஷ்ணா நதிநீர் இணைப்புத் திட்டம் இறுதி செய்யப்பட்டுள்ளது. ஆத்மநிர்பர் பாரத் என்ற தற்சார்பு இந்தியா திட்டம் பெரிய அளவில் வளர்ச்சியைக் கண்டுள்ளது. ரூ.44 ஆயிரம் கோடியில் நீர்ப்பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்படும்.
- ✓ அவசர காலக் கடன் உதவித் திட்டங்கள் மூலம் 1.30 கோடி சிறு, குறு தொழில் நிறுவனங்கள் பலன் பெற்றுள்ளன.
- ✓ சிறு, குறு தொழில் நிறுவனங்களை ஊக்குவி க்க வழங்கப்படும் அவசர காலக் கடன் உதவித் திட்டம் 2023 மார்ச் வரை நீட்டிப்பு செய்யப்படுகிறது,
- ✓ சிறு, குறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு அவசர கால கடன் வழங்க ரூ.2 இலட்சம் கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. சிறு, குறு, தொழில் நிறுவனங்களின் கடன் உத்தரவாதத் திட்டத்திற்கு கூடுதலாக 50 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.
- ✓ ஒவ்வொரு வீட்டிற்கும் குடிநீர் இணைப்புத் திட்டத்தின்கீழ் ரூ.60,000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 3.8 கோடி இல்லங்களுக்கு இணைப்பு வழங்கப்படவுள்ளது.
- ✓ வேளாண் நிலங்களை அளவீடு செய்ய டிரோன்களைப் பயன்படுத்த அனுமதிக்கப்படும். நாடு முழுவதும் 2 இலட்சம் அங்கன்வாடி மையங்கள் மேம்படுத்தப்படும்.
- ✓ நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த சாலை, ரயில்வே, விமான நிலையங்கள், துறைமுகங்கள், நீர்வழித்தடங்கள், பொதுப் போக்குவரத்து, சரக்குப் போக்குவரத்து ஆகிய முக்கியமான ஏழு துறைகளை உள்ளடக்கிய பிரதமரின் கதி சக்தித் திட்டம் செயல்படுத்தப்படும்.
- ✓ பிரதமரின் இ-வித்யா திட்டத்தின் மூலமாக ஒரு வகுப்பு, ஒரு சேனல் என்ற வகையில் 200 டிவி சேனல்கள் புதிதாக உருவாக்கப்படும். இரண்டு ஆண்டுகளாக பள்ளிகள் செயல்படாததால் கற்பதில் ஏற்பட்ட பாதிப்பை சீர்செய்ய இந்தத் திட்டம் உதவும். 1 முதல் 12ஆம் வகுப்பு வரை மாநில மொழிக் கல்வி ஊக்குவிக்கப்படும். மாணவர்களுக்கு அனிமேஷன், VFX, டிஜிட்டல் விளையா ட்டுகள் தயாரிப்பு ஆகியவற்றில் திறனை மேம்படுத்த திட்டங்களை வடிவமைக்க சிறப்புக்குழு அமைக்கப்படும்.
- ✓ மகளிருக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் சகி இயக்கம், வாத்சல்யா இயக்கம், ஊட்டச்சத்து 2.0 இயக்கம் ஆகிய மூன்று திட்டங்கள் அறிமுகம் செய்யப்பட உள்ளது.
- ✓ பள்ளிக் கல்வித் துறையில் டிஜி ட்டல் முறையில் கற்பிக்க கூடுதல் வசதி ஏற்படுத்தும் வகையில் நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் டிஜிட்டல் பல்கலைக்கழகங்கள் நிறுவப்படும்.





உங்களுக்குத் தெரியுமா?

## சர்வதேச சிறுதானிய ஆண்டு - 2023




கோதுமை, அரிசி தவிர பிற தானியங்கள் சிறிய விதை கொண்ட வருடாந்திர பயிர்கள் ஆகும். இவை சிறுதானியங்கள் எனப்படுகின்றன, முதன்மையாக உணவு தானியங்களாக இவை பயிரிடப்படுகின்றன. அதிக அளவிலான ஊட்டச்சத்து மதிப்பு கொண்ட இந்த சிறுதானியங்களில் புரதங்கள், நார்ச்சத்து, விட்ட மின்கள், கனிமங்கள் ஆகியவை செறிவாக நிறைந்துள்ளதோடு, முக்கியமான நுண்ணூட்டச் சத்துக்களும் இவற்றில் உள்ளன. 130க்கும் அதிகமான நாடுகளில் பயிரிடப்படுகின்ற இந்த சிறுதானியங்கள் பருவநிலை மாறுதல்களைத் தாங்கி வளரக் கூடியவை ஆகும். ஊட்டச்சத்து நிரம்பிய இந்த தானியங்கள் கடுமையான சீதோஷ்ண நிலையிலும் வளரக் கூடியவை. மூலவளங்கள் குறைவாக இருக்கும் சூழல்களிலும் இவை தாக்குப் பிடித்து வளரும். இத்தகைய இயல்பண்புகள் இருந்த போதிலும் கூட, சிறுதானியங்கள் பல சமூக பொருளாதார, பண்பாட்டுக் காரணங்களினால் புறக்கணிக்கப்பட்டே வந்திருக்கின்றன. ஆனால், அண்மையில் உலகம் முழுவதிலும் ஏற்பட்டுள்ள ஆரோக்கியம் பற்றிய விழிப்புணர்வின் காரணமாக சிறுதானியங்கள், சிறு தானியங்களைக் கொண்டு தாயரிக்கப்படும் உணவு / நொறுக்குத் தீனிகளுக்கான தேவை சர்வதேச அளவில் அதிகரித்து வருகிறது. இந்தத் தேவையானது இந்தியா விற்கு மிகச் சிறப்பான வர்த்தக வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது. குறைந்த முதலீட்டில் விவசாயிகள் வருமானம் ஈட்டுவதற்கான உள்ளார்ந்த வாய்ப்பு இதல் அடங்கியுள்ளது. உலக அளவில் சிறுதானியங்களைப் பிரபலப்படுத்துவதற்காக இந்திய அரசு ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் 2023ஆம் ஆண்டை சர்வதேச சிறுதானிய ஆண்டாகக் கடைபிடிப்பதற்கு அறிவிப்பு செய்ய வேண்டும் என்ற ஒரு தீர்மானத்தை முன்மொழிந்தது, 70 நாடுகள் இதற்கு ஆதரவு அளித்த நிலையில், ஏப்ரல் 2021இல் ஐ.நா.பொதுச்சபையில் 193 உறுப்பினர்களும் ஏகமனதாக இந்த தீர்மானத்தை ஏற்றுக் கொண்டனர். சிறுதானியங்களின் ஆரோக்கியப் பயன்கள் குறித்தும் கடினமான சீதோஷ்ண நிலைமைகளிலும் கூட இவற்றைப் பயிரிடலாம் என்பது குறித்தும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதையே ஐ.நா.வின் இந்தத் தீர்மானம் நோக்கமாகக் கொண்டு இருந்தது.

இந்தப் பின்னணியில் நிதி அமைச்சர் தனது பட்ஜெட் முன்மொழிவில் ”அறுவடைக்கு பின்பு மதிப்புக் கூட்டல், உள்நாட்டு நுகர்வை அதிகரித்தல், சிறுதானியத் தயாரிப்புப் பொருள் களை தேசிய அளவிலும், சர்வதேச அளவிலும் வணிக முத்திரையை உருவாக்கிக் கொடுத்தல் ஆகியவற்றுக்கு ஆதரவும் உதவியும் வழங்கப்படும்” என்று அறிவித்துள்ளார்.

இந்தியாவில் முதன்மையாக வானம் பார்த்த நிலம் / வறண்ட நிலங்களில் பல வகையான சிறுதானியங்கள் (சோளம், கம்பு, கேழ்வரகு மற்றும் குறுதானியங்கள்) பயிரிடப்படுகின்றன. ஹைதராபாத்தில் உள்ள ஐசிஏஆர் – சிறு தானிய அபிவிருத்திக்கான இந்திய நிறுவனமே இந்திய அரசின் ஆராய்ச்சி அபிவிருத்திக்கான முதன்மை நிறுவனமாகும். உற்பத்தி மற்றும் உற்பத்திப் பொருள் அபிவிருத்தித் தொழில் நுட்பங்கள் ஆகிய முக்கியமான பிரச்சினைகளை இந்த நிறுவனம் கையாண்டு வருகிறது. அதிக விளைச்சல் தரும் வகைகளை உருவாக்குதல், நடைமுறைத் தொகுப்பை மேம்படுத்துதல் ஆகியவற்றோடு, சிறுதானிய உற்பத்தி அமைப்புகள் பொருளாதார ரீதியில் நீண்ட காலம் நீடித்து இருப்பதற்கான சந்தைகளை உருவாக்குதலுக்கான முயற்சியை முன்னெடுத்தலையும் இந்த நிறுவனம் மேற்கொள்கிறது. பல்லுயிர்த்தன்மையைப் பேணுதல், மனிதர்கள், கால்நடைகளுக்கான ஊட்டச்சத்துத், தொழிலகப் பயன்பாடு, செறிவூட்டப்பட்ட உணவுகள் மூலமான சிகிச்சை சார்ந்த உணவுத்திட்டம் ஆகிய வற்றில் சிறுதானியங்கள் குறிப்பிடத்தகுந்த பங்கினை வகிக்கின்றன என்று ஆய்வுகள் எடுத்துக் காட்டுகின்றன. உணவு, நொறுக்குத் தீனி, தீவனம், ஊட்டச் சத்து, வாழ்வாதாரப் பாதுகாப்பு ஆகியவற்றை வறண்ட நில சூழல்சார் அமைப்பு அனைத்திலும் மேம்படுத்த இந்த ஊட்டச்சத்து தானியங்கள் உதவும். வணிக முத்திரைச் செயலை மேம்படுத்து தல், மதிப்புக் கூட்டுதல், சிறுதானியங்களைப் பதப்படுத்துதல், ஆகியவை குறித்த விரிவான திட்டம் குறித்த அறிவிப்பானது உள்ளூர் நுகர்வை மேம்படுத்தவும், சர்வதேசத் தேவையை நிறைவு செய்யும் வகையில் ஏற்றுமதியை அதிகரிக்கவும் நீண்ட காலத்திற்கு உதவும். ”உள்ளூர் பொருள் களுக்குக் குரல் கொடுத்தல்” என்பது சிறுதானிய உற்பத்தியில் ஈடுபட்டுள்ள இலட்சக்கணக்கான சிறு விவசாயிகளின் தலைவிதியையும் மாற்றியமைக்கும்.

FORM IV

Statement about ownership and other particulars about Newspaper/Journal Yojana (Tamil) to be published in the first issue **every year** after the last day of **February**.

| | | |
|---|---|---|
| 1 | Place of publication | Chennai |
| 2 | Periodicity of its publication | Monthly |
| 3 | Printer's Name, Nationality & Address | Mr. A. Sivakumar<br>Indian<br>Pavai Printers (P) Ltd<br>No.142, Jani Jan Khan Road<br>Royapettah<br>Chennai 600014 |
| 4 | Publisher's Name, Nationality & Address | Ms Monideepa Mukerjee<br>Indian<br>Publications Division<br>'A' Wing Ground Floor<br>Rajaji Bhavan<br>Chennai 600090 |
| 5 | Editor's Name, Nationality & Address | Sanjay Ghosh<br>Indian<br>Publications Division<br>'A' Wing Ground Floor<br>Rajaji Bhavan<br>Chennai 600090 |
| 6 | Name and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital | Wholly owned by Ministry of I&B Government of India, New Delhi- 110001 |

I, Monideepa Mukerjee, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Date: 11/02/2022

Monideepa Mukerjee
(Signature of Publisher)





# வீரபாண்டிய கட்டபொம்மன்

- என்.எஸ்.கணேஷ்ராம்
- மூ.கவிதா

திக்குவிசய கட்டபொம்மு ஆறுமுகத்தம்மாள் இணையருக்கு 1760, ஜனவரி 3 இல் பாஞ்சாலங் குறிச்சியில் பிறந்தவர் வீரபாண்டியன் என்னும் இயற்பெயர் கொண்ட வீரபாண்டியக் கட்டபொம்மன். இவரை பொம்மு நாயக்கர் என்று மக்கள் அழைத்தனர். தமது முப்பதாவது வயதில் இவர் பாளையக்காரராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். ஒன்பது ஆண்டுகள் ஆட்சி புரிந்தார். திருவைகுண்டம், ஆழ்வார் திருநகரி, ஆத்தூர், ஆற்றுமங்கலம் ஆகிய வளமான நெல் விளையும் பகுதிகள் அடங்கிய சார்மகால் பகுதியில் வெள்ளையர் நேரடியாக வரி வசூல் செய்யத் தொடங்கினர். கட்டபொம்மன் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. வெள்ளை ஏகாதிபத்தியத்தோடு போராடி கட்டபொம்மன் வீரமரணம் அடைந்தார்.

## கம்பளத்தார்

வீரபாண்டிய கட்டபொம்மன் தமிழகத்தில் ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்துப் போரிட்ட 18ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பாளையக்காரர் ஆவார். கட்ட பொம்முவின் முன்னோர் ஆந்திராவிலுள்ள பல்லாரி என்ற பகுதியிலிருந்து இங்கு குடிபெயர்ந்து வந்தனர் என்று சொல்லப் படுகின்றது. இவர்கள் தமிழக ஆந்திர எல்லை ஓரம் வாழ்ந்த இருமொழியாளர் என்கிறார் ம.பொ.சி. பாஞ்சாலங்குறிச்சிப் பாளையத்தில் வாழ்ந்த கம்பளத் தர்ருக்கு "எத்து வீரன்" என்ற பட்டம் உண்டு. "எத்து" என்ற சொல்லுக்குக் காளை என்பது பொருள். இவர்கள் கம்பளத்தார் பிரிவைச் சேர்ந்தவர்கள்.

"கெத்துப் பல்லாரியை ஆண்டவனே கோத்திரக் கம்பளத் தோத்திரனே" என்று கதைப்பாடல் கூறுகிறது. "பல்லாரியின் கம்பளி என்ற பகுதியில் வாழ்ந்ததால் கம்பளத்தார் என்று இவர்கள் அழைக்கப்பட்டனர் என்று தி.நா. சுப்பிரமணியமும், கம்பளத்தை எப்போதும் போர்த்தியிருப்பதாலும், கம்பளம் விரித்து வழக்குப் பேசுவதாலும் இந்தப் பெயர் வந்தது என்று ஜெகவீரபாண்டியனாரும், கம்பிலி என்ற கோட்டையை இவர்கள் வீரத்தோடு காத்ததால் கம்பளத்தார் என்று பெயர் பெற்றனர் என்று குருகுகதாசப் பிள்ளையும் கூறுகின்றனர். இம்மூவருள் ஜெகவீரபாண்டியனார் கருத்தே ஏற்றுக் கொள்ளக்கூடியது என்று வே.மாணிக்கம் அவர்கள் கட்டபொம்மன் வரலாற்று உண்மைகள் என்ற நூலில் எடுத்துக் காட்டியுள்ளார்." இவர்களின் தொழில் கால்நடைகளைப் பராமரிப்பது. அத்தொழிலின் அடிப்படையில் இவர்களில் ஒன்பது பிரிவுகள் ஏற்பட்டன என்பதை "ஒன்பது கம்பளச் சாதியிலே உண்டான குற்றங்கள் என்ன சொல்வீர்" என்று கட்ட பொம்மன் கூத்துக் கதைப்பாடல் கூறுவதிலிருந்து அறிய முடிகிறது. பசு மாடுகளை உடையவர்




தோக்கலவார், வெள்ளாடு வளர்ப்போர் கொல்லவார், செம்மறி ஆடுகளை உடையவர் சில்லவார், பால் கறந்து உதவியவர் பாலவார் என்று பல பிரிவுகள் உள்ள நிலையில் கட்டபொம்மு இனத்தார் தோக்கலவார் பிரிவைச் சார்ந்தவர்கள். இதை,

"ஆதியிலே பாஞ்சால நகர்தனிலே சாமி

சாதியிலே கம்பளத்தார்களெல்லாம் குலமாம்

சாதியிலே கம்பளத்தார் களெல்லாம் சாமி

தானங்கே தோக்குலவார் குலத்தார்''

என்று குறிப்பிடுகிறது கதைப் பாடல்.

இவர்கள் திருநெல்வேலிப் பகுதியில் பாஞ்சாலங்குறிச்சி, காடல்குடி, மேல்மாந்தை, கல்லூரணி ஆகிய நான்கு பாளையங்களில் வசிப்பவர்கள். இவர்களுக்குக் குல அடைமொழிப் பெயர்கள் உண்டு. காடல்குடியார் "சிறுமல்" என்றும், மேல்மாந்தையார் சக்கன குஞ்சியார் இராஜேந்திர என்றும் கல்லூரணியார் "அனு சின்னு" என்றும் பாஞ்சாலங்குறிச்சியார் "எத்தின வீர கெட்டி பொம்மு" என்றும் அழைக்கப்படுகிறார்கள். இக்குலத்தார்கள் தங்கள் இயற்பெயரோடு இந்த அடைமொழிகளையும் இணைத்துக் கொள்வர். அவ்வரிசையில் "கெட்டி" என்பது கட்டபொம்முவின் குல அடைப் பெயரில் இருந்து உருவாகியதாகும்.

**புலம்பெயரக் காரணங்கள்:**

கம்பளத்தார் தமிழ் நாட்டிற்குக் குடிபெயர்ந்ததற்கு இரண்டு காரணங்கள் சொல்லப்படுகின்றன.

1. முகம்மதியர் பெண் கேட்டதால் மறுத்து வந்தவர்கள்
2. பஞ்சத்தின் காரணமாக வந்தவர்கள்

இவை இரண்டிற்கும் போதிய சான்றுகள் கிடைக்கவில்லை.

**கம்பளத்தாரின் கிளைப்பெயர்கள்**

அவர்கள் புலம்பெயர்ந்துவரும் போது வழியில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளின் அடிப்படையில் சில கிளைப் பெயர்களும் கம்பளத்தாரிடம் வழங்குவதைக் கதைப் பாடல்களின் வழி அறிய முடிகிறது. வரும் வழியில் ஆற்றைக் கடந்து முதலாவது கரை சேர்ந்தது தோக்கலவார் பசு. எனவே தோக்கலவாருக்கு "முந்தாவுலா'' என்னும் பெயர் ஏற்பட்டது என்று தேவதாஸ் நாயுடு பாஞ்சாலங்குறிச்சி வரலாற்றில் கூறுகிறார். இரவு புறப்படும் போது ஒரு குடும்பத்தினர் தூங்கிப் பின் அடைந்ததால் அவர்கள் 'நித்திரை வார்'' என்று அழைக்கப்பட்டனர். வரும் போது பசியின் கொடுமையால் இறந்த மாட்டின் இறைச்சியைச் சாப்பிட்டவர்களைப் "பெத்தலு'' என்றும், பாதி வழியில் வேறு திசையில் திரும்பியவர்களை "மல்லவார்'' என்றும், ஓரிடத்தில் தங்கிக் கொண்டு வழி அனுப்பி வைத்தவர்களை "அனுப்பாலு'' என்றும் அழைத்தனர் என்று வே.மாணிக்கம் அவர்கள் எடுத்துக் காட்டுகிறார். இத்தகைய கம்பளத்தார் குடிப்பெயர்ச்சி ஒரே நேரத்தில் ஒட்டுமொத்தமாக நடந்திருக்க முடியாது. பல காலங்களில் பல்வேறு காரணங்களுக்காக ஏற்பட்டிருக்கவேண்டும் என்று ஆய்வாளர்கள் கருதுவதற்கும் இடம் இருக்கின்றது. இத்தகைய கம்பளத்தார் பிரிவில் ஒன்றான கட்ட பொம்மு பரம்பரையினர் எத்தனை தலைமுறைகள் ஆட்சி செய்தார்கள் என்ற தகவல்களை அறியமுடியவில்லை என்றாலும் பாஞ்சாலக்குறிச்சிப் பாளையக்காரர்களாகிய பொல்லாப் பாண்டியன், ஜெகவீரபாண்டியன், வீரபாண்டியக் கட்டபொம்மு, ஊமைத்துரை ஆகியோர் வெள்ளை ஏகாதிபத்தியத்தோடு போராடி வீரமரணம் அடைந்தனர் என்ற உண்மையை நாம் வரலாறுகளின் வழி காண முடிகிறது.

**ஊமைத்துரை வீரபாண்டியக் கட்டபொம்மு**

கட்டபொம்மனுக்கு குமாரசாமி என்ற ஊமைத்துரை, துரைசிங்கம் என்ற இரு சகோதரரர்களும், ஈசுவர வடிவு, துரைக்கண்ணு என்ற இரு சகோதரிகளும்



இருந்தனர். இவரது துணைவியார் சக்கம்மாள். கட்டபொம்மனுக்குப் பிள்ளைப் பேறு இல்லை.

**மேற்குநாடுகளின் ஆதிக்கம்**

இந்தியாவை அதிலும் பருத்தி அதிகமாக விளையும் தென்னிந்தியாவைத் தங்களது வணிகச் சந்தையாக ஆக்கிக் கொள்வதில் மேற்கு நாடுகள் போட்டியிட்டன. கருநாடக நவாபின் ஆதரவோடு ஆங்கிலேயர்களும், இவர்களைத் தொடர்ந்து பிரெஞ்சுக்காரர்களும், டச்சுக்காரர்களும் தென்னிந்தியக் கடற்கரையில் வணிகத்திற்காக முகாமிடத் தொடங்கினர். வணிகத்திற்காக வந்தவர்கள் தென்னிந்திய அரசியலில் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டும் முயற்சியில் ஈடுபட்டனர். இவர்களுக்கு ஆதரவாக இங்குள்ள பாளையக் காரர்களும் துணை நின்றனர்.

சாந்தா சாகிப்பிற்கு, டுப்ளே நவாபு பட்டம் சூட்டிய போது இவருக்குப் போட்டியாக ஆங்கிலேயர் முகமது அலியை நவாபாக அறிவித்தனர். புலித்தேவருள்ளிட்ட மேற்குப் பாளையக்காரர்கள் பிரெஞ்சுக்காரர்களை ஆதரித்தனர். பாஞ்சாலங்குறிச்சியார் இரு அணியிலும் சேராமல் டச்சுக்காரர்களோடு உடன்பாடு கொண்டிருந்தனர். பாஞ்சாலங்குறிச்சியார் டச்சுக்காரர்களை மதித்ததற்குக் காரணம் ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர்களைப் போல் டச்சுக்காரர்கள்



தென்னாட்டு அரசியலில் அதிகமாகத் தலையிடவில்லை என்பதேயாகும். அவர்கள் பாளையக் காரர்களின் உரிமையை மதித்து நடந்தனர். எனவே தான் பாஞ்சாலக்குறிச்சியார், தென்னாட்டில் மிகப்பெரிய ஆளுமையாக விளங்கிய கும்பினி, பிரெஞ்சு ஆகிய அணிகளில் சேராமல் டச்சுக்காரர்களோடு ஒப்பந்தம் செய்து கொண்டனர். டச்சுக் காரர்களோடு ஒப்பந்தம் செய்ததன் அடிப்படையில் தங்கள் பகுதியில் வாழும் நெசவாளர்களை ஆங்கில வணிகர்களுக்குத் துணி நெய்து கொடுக்கக் கூடாது என்று கட்டபொம்மு தடைசெய்தார். பொல்லாப்பாண்டியர் காலம் முதற் கொண்டே பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரர்கள் கும்பினியாரிடம் வெறுப்புக் கொண்டிருந்தனர்

**நவாப்புகள்**

கர்நாடகப் பிரதேசத்தின் ஆட்சியாளர்களான ஆற்காடு நவாப்புகள், கும்பினியாரிடம் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்



அடிப்படையில் பாளையக் காரர்களிடம் வரி வசூலிக்கும் உரிமையை கும்பினியாரிடம் ஒப்படைத்தனர். அதன்படி நெல்லைச்சீமையில் வரி வசூலிக்கும் பொறுப்பையும் பாளையங்களை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கையையும் மேற்கொள்ள மாக்ஸ்வெல் என்பவருக்கு, கர்னல் காமில்டன் உரிமை வழங்கினார்.

**பாளையங்கள் பறிப்பு**

மாக்ஸ்வெல் 1792 நவம்பரில் அனைத்துப் பாளையக்காரர்களையும் கயத்தாற்றிற்கு வரவழைத்து ஆளுநர் கிளைவால் கையெழுத்திடப்பட்ட நடவடிக்கையின் படிகளை எல்லோருக்கும் கொடுத்தார். இந்த நடவடிக்கையின் படி மாக்ஸ்வெல் நில அளவையின் பேரில் பாஞ்சாலங்குறிச்சி ஆதனூர் வணிதத்தைச் சார்ந்த அருங்குளம், சுப்பலாபுரம் என்ற இரண்டு கிராமங்களையும் எட்டையபுரத்தாருக்குக் கொடுத்தார். இதன் மூலம் ஆங்கிலேயர்களிடம் வெறுப்புக் கொண்டுள்ள கட்டபொம்மனைப் பழி வாங்கியதோடு மட்டுமன்றி, எட்டையபுரத்தாரையும் கட்டபொம்மனுக்கு எதிராகத் திருப்பி விட்டார்.

**நேரடி வரி வசூல்**

அதுமட்டுமன்றிக் கட்டபொம்மன் வரிவசூல் செய்து வந்த சார்மகால் எனப்படும் திருவைகுண்டம், ஆழ்வார் திருநகரி, ஆத்தூர், ஆற்றுமங்கலம் ஆகிய வளமான நெல் விளையும் பகுதிகளைச் சர்க்கார் கிராமமாக அறிவித்ததோடு மட்டுமன்றி அங்கு வரி வசூல் செய்யவும் தொடங்கினர் வெள்ளையர். கட்டபொம்மன் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. வழக்கம் போல் இந்தப் பகுதிகளில் வரி வசூல் செய்து வருவதற்குத் தானாதிப் பிள்ளையை கட்டபொம்மன் நியமித்தார்.

" எள்ளளவும் இந்த நாட்டில் வெள்ளையர்க்கு

இல்லை இடமென ஏறிவந்து

உள்ள பொதிகளில் நெல்லை வாரியே

பிள்ளை மகன் அன்று வென்று போனான்.''

என்று கட்டபொம்மன் கும்மிப் பாடல் பாடுகின்றது. இவ்வாறு சார்மகால் பகுதியில் வரி வாங்குவது தொடர்பாகவும் கட்டபொம்மனுக்கும், கும்பினி நிருவாகத்திற்கும் மீண்டும் மோதல் ஏற்பட்டது.

**கட்டபொம்மனை ஒடுக்குதல்**

பாளையங்களின் எல்லையை வரையறை செய்ததோடு மட்டுமல்லாமல், வரித் தொகையையும் வெள்ளையர்களே அளவீடு செய்தனர். பாளையக்காரர்கள் வெறும் குத்தகைதாரர் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டனர். இதன் மூலம் பாளையக்காரர்களுக்கு கோட்டை கட்டுவது, படைகள் வைத்துக் கொள்வது போன்ற உரிமைகள் தடை செய்யப்பட்டன. கட்டபொம்மு மட்டுமே இந்த நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ள மறுத்துத் தீவிரமாக எதிர்த்தார்.

**அணிதிரட்டல்**

வெள்ளையர் நடவடிக்கையை எதிர்த்துப் போராட கட்டபொம்மு ஓர் அணியைத் திரட்டினார். ஏழாயிரம் பண்ணை, காடல்குடி, குளத்தூர், கோலார்பட்டி, நாகலாபுரம் ஆகிய பாளையக்காரர்கள் கட்டபொம்மு அணியில் சேர்ந்தனர். மருதுசகோதரர்களும் இதற்கு ஒத்த கருத்துடன் இணக்கம் தெரிவித்தனர். இந்த உரிமைப் போரை பாஞ்சாலங்குறிச்சியில் தொடங்குவதற்குக் கட்டபொம்மு விரும்பவில்லை. சமவெளியிலுள்ள தன்னுடைய சிறிய மண்கோட்டை மூலம் பெரும் போரைச் சமாளிக்க முடியாது என்று நினைத்து மலை



அடிவாரத்தில் இயற்கை அரணுடன் கூடிய அளவில் பெரியதும், அமைப்பில் வலியதுமான சிவகிரிக் கோட்டையே போரைத் தொடங்குவதற்கான பொருத்தமான இடமெனத் தீர்மானித்தார். எனவே சிவகிரிப் பாளையத்தைத் தன் அணியில் சேர்க்க விரும்பினார். சிவகிரிப் பாளையக் காரரோ வெள்ளையருக்கு ஆதரவாளராக இருந்தார். ஆனால் அவர் மகன் வெள்ளையர் மீது வெறுப்புக் கொண்டிருந்தான். மாப்பிள்ளை வன்னியரும், அமைச்சர் சங்கரலிங்கம் பிள்ளையும் மகனுக்குத் துணை நின்றனர். தந்தையிடமிருந்து ஆட்சியைப் பெற மகன் விரும்பிய போது, மகனுக்கு ஆதரவாக ஊமைத்துரை தலைமையில் இரண்டாயிரம் பேர் அடங்கிய படையை கட்டபொம்மு அனுப்பினார்.

### வெள்ளையரின் கோபம்

வரிசெலுத்தாததாலும், மற்ற பாளையக்காரர்களைத் தம் பக்கம் சேர்த்துக் கொண்டு வெள்ளையரை எதிர்க்கும் செயலில் ஈடுபட்டதாலும் கட்டபொம்முவின் மீது கடுங்கோபம் கொண்டனர் ஆங்கிலேயர். அது மட்டுமன்றிக் கட்டபொம்மு சிவகிரிப் பாளைத்தின் மீது கண்வைத்த காரணத்தை உணர்ந்த வெள்ளையர் இக்கூட்டணி வலுவடையும் முன்னரே தலைவனாகிய கட்டபொம்மனை ஒழித்துவிடவேண்டுமென்று பாஞ்சாலங்குறிச்சி மீது திடீர்ப் படையெடுப்பு நடத்தத் திட்டமிட்டனர். இதன் மூலம் மற்றப் பாளையங்களை ஒடுக்கிவிடலாம் என்று ஆங்கிலேயர் நினைத்தனர். இதை,

“ கட்டனைப் பிடித்துத் திட்டம் பண்ணாவிட்டால்
பட்டணம் ஒன்றும் ஒடுங்காது
பட்டணம் ஒன்றும் ஒடுங்காது
அந்தப்
பாளையக்காரர் அடங்கார்”

என்று கதைப்பாடலும் கூறுகிறது.

### ஆங்கிலேயப் படையெடுப்பு

எனவே, ஆலன்துரை தலைமையில் பெரும்படையைப் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டைக்கு அனுப்பி வைத்தது. திருச்சி முதலான இடங்களில் உள்ள வெள்ளையர் படைகள் யாவும் கயத்தாறு வந்து சேர்ந்தன. எட்டப்பனை அழைத்துப் பானர்மேன் ஆலோசனை கேட்டான். கட்டபொம்மு கோட்டையில் தனியாக உள்ளதாவும், திருச்செந்தூர்த் திருவிழாவிற்குத் தம்பி ஊமைத்துரையும், தானாதிபதி ஆத்தூருக்கும் சென்றுள்ளதால் கோட்டையை முற்றுகையிடுவதற்கு இதுவே சரியான தருணம் என்று ஆலோசனை வழங்கியதோடு தன்னுடைய படையையும் துணைக்கு அனுப்பினான்.

### வீரம் செறிந்த போர் தொடங்கியது

இவர்களின் திடீர்த் தாக்குதலைக் கட்டபொம்மு எதிர்பார்க்கவில்லை. போர் தொடங்கியது. மண்கோட்டை தானே என்று கோட்டை அருகே சென்ற வெள்ளையர்களைப் பாஞ்சாலங்குறிச்சிவீரர்கள் வல்லயம் கொண்டு குத்தி வீசி எறிந்தனர். கோட்டையைப் பிடிக்க முடியாமல் கும்பினிப் படை பின்வாங்கியது. முதல் நாள் போரில் போதிய அளவில் படை திரட்ட நேரம் இல்லாத நிலையில், வெளியிலிருந்து கோட்டைக்கு உதவிப் படைகள் வராதவாறு முற்றுகை இடப்பட்ட சூழ்நிலையில் பாஞ்சாலங்குறிச்சி வீரர்கள் பீரங்கியையும், துப்பாக்கிகளையும் கொண்ட முறையான பயிற்சி பெற்ற வெள்ளையர் படையை எதிர்த்துக் கோட்டையைப் பாது காத்தது வீரம் செறிந்த நிகழ்ச்சியாக வரலாற்றில் பேசப்படுகிறது. எதிரியின் வலிமையைக் குறைத்து மதிப்பிட்ட தவறை உணர்ந்த ஆலன்துரை பாளையங்கோட்டையிலிருந்து 24 பவுண்டு பீரங்கியுடன் கூடிய துணைப்படை வரும் வரை முற்றுகையை நீடிப்பது என்று முடிவு செய்தார். 24 பவுண்டு பீரங்கிக்கு முன் தன்னுடைய கோட்டை தாக்குப் பிடிக்காது என்பதைக் கட்டபொம்மு உணர்ந்த அளவில் தன்னுடைய படை வீராகள் உயிரைத் தெரிந்தே காவு கொடுக்க விரும்பாமல் நம்பிக்கைக் குரிய சிலருடன் கோட்டையை விட்டு வெளியேறினார். 1799,செப்டம்பர் 9இல் ஆங்கிலேயர்கள் கோட்டையைக் கைப்பற்றினர்.

### கட்டபொம்மன் வெளியேறினான்

கோட்டையிலிருந்து வெளியேறிய கட்டபொம்மன் கோலார்பட்டியில் தங்கியிருந்தார். இதை அறிந்த எட்டையபுரத்தார் படை



அங்கும் வரவே கோலார்பட்டியில் கடும் மோதல் ஏற்பட்டது. கட்டபொம்மு ஆறு பேருடன் புதுக் கோட்டையைச் சேர்ந்த ஆனியூர்க் கோட்டையை அடைந்தார். கட்டபொம்மு தப்பியது கண்டு சினம் கொண்ட பானர்மேன் எட்டையபுரம், புதுக்கோட்டை, சிவகிரி, சொக்கம்பட்டி, ஆகிய பாளையக்காரர்களுக்குக் கடிதம் எழுதினார். கட்டபொம்முவை உயிரோடு பிடிக்க முடியவில்லையென்றால் கொல்வதற்கும் தயங்க வேண்டாம் என்றும் அதில் குறிப்பிட்டிருந்தார். தொண்டைமான் உத்தரவின் பேரில் அவரது தளபதி கட்டபொம்முவைத் தேடிக் கைது செய்தார். கட்டபொம்மு 23.09.1799இல் பிடிபட்டார். ஆறு நாட்கள் தொண்டைமானின் காவலில் அவர் இருந்தார். கட்டபொம்மனைப் பிடித்துக் கொடுத்ததற்காகக் கும்பினி அரசு தொண்டைமானைப் பாராட்டி சால்வையும் ஒரு குதிரையும் அத்துடன் இரண்டாயிரம் பொற்காசுகளும் கொடுத்ததாகப் “புதுக்கோட்டையின் பொது வரலாறு” என்ற நூலில் இராதாகிருஷ்ணஅய்யர் குறிப்பிடுகின்றார்.

### உரிமையை விட்டுக்கொடுக் காதிருத்தல்

அரசு அதிகாரிகள் பாளையக் காரர்களைச் சந்திப்பதற்கு எழுத்து மூலமாக அழைக்கப்படுவது மரபு. இதனைக் கவுல் என்று சொல்லுவர். இது கால் (CALL) என்ற ஆங்கிலச்சொல்லின் திரிபாகும். கவுல் பெற்றுச் செல்லும் பாளையக்காரரை மதிப்புடன் நடத்த வேண்டும். சந்திப்பு முடிந்து திரும்பும் போது அதிகாரி ஒருவர் மரியாதை நிமித்தமாகப் பாளையக்காரர் இருப்பிடம் வரை உடன் வந்து செல்ல வேண்டும். ஆட்சியர் கவுல் கொடுத்தால் முறைப்படி வருவேன். இல்லையெனில் வர இயலாது என்று சொல்லி அரசு அதிகாரிகளைச் சந்திக்கக் கட்ட பொம்மன் மறுத்து விட்டார்.

### இராமநாதபுரம் சந்திப்பு

இராமநாதபுரம் சந்திப்பு கட்பொம்மன் வரலாற்றில் முதன்மையான நிகழ்ச்சியாகும். நில அளவை என்னும் பெயரில் தன் பகுதிகளை எட்டையபுரத்தாருக்குக் கொடுத்ததைக் கட்டபொம்மு ஏற்கவில்லை. வரி கட்டவும் மறுத்தார். இது குறித்து ஆட்சியர் ஜாக்சன் பலமுறை அழைத்தும் கட்டபொம்மு சென்று பார்க்கவில்லை. இச்சூழ்நிலையைப் பயன்படுத்தி வெள்ளையருக்கு ஆதரவான பாளையக்காரர்களான எட்டையபுரத்தார், சிவகிரியார் போன்றோர் ஜாக்சனிடம் கட்டபொம்மன் குறித்து குற்றச்சாட்டுகளை அடுக்கினர். அதனால் சினம் கொண்ட ஜாக்சன் படை அனுப்பும்படி ஆளுநருக்குக் கடிதம் எழுதினான். ஆளுநர் படைகளை அனுப்பாமல் கட்டபொம்மனை அழைத்துப் பேசுமாறு ஆலோசனை வழங்கியது ஜாக்சனுக்கு ஏமாற்றத்தைக் கொடுத்தது. எனவே தன் திட்டத்தை நிறைவேற்றும் உள்நோக்குடன், கடிதம் கண்ட 15 நாட்களுக்குள் கட்டபொம்மு இராமநாதபுரத்தில் தன்னைச் சந்திக்குமாறு எழுதி அனுப்பிவிட்டு, ஜாக்சன் குற்றாலம் சென்றுவிட்டான். கட்டபொம்முவை ஆத்திரமூட்டி, ஊர் ஊராக அலைக்கழித்துச் சந்திக்கவிடாமல் செய்து விட்டால் அதையே காரணமாகக் காட்டிப் பதவியிலிருந்து நீக்கிவிடலாம் என்பது ஜாக்சனின் திட்டம். இச்சந்திப்பில் உள்நோக்கம் இருப்பதை சிலர் கட்டபொம்முவிடம் அறிவுறுத்தினர். சந்திப்பதற்கென்று அழைத்துச் சூழ்ச்சி செய்தால் அதையும் சந்தித்து முறியடிப்போம் என்றான் ஊமைத்துரை.

### கட்டபொம்மன்னை சிறைபிடிக்க ஏற்பாடுகள்

கட்டபொம்மனைக் கைது செய்வதற்குரிய ஆயத்த ஏற்பாட்டுடன் சந்திப்பு முடிவு செய்யப்பட்டது. இதைக் கட்டபொம்முவே வாக்குமூலம் அளித்ததாக வே.மாணிக்கம் அவர்கள் தம் நூலில் பின்னிணைப் பாகக் கொடுத்துள்ளதிலிருந்து நாம் அறியலாம்.

“ஆகஸ்டு 23இல் பேட்டி பற்றிய கடிதம் கிடைக்கப் பெற்றேன். என் உடல் நலத்தையும் பொருட்படுத்தாமல் குற்றாலம் சென்றேன். அங்கே பேட்டி கொடுக்க கால அவகாசம் இல்லையென்று மறுக்கப்பட்டு. சொக்கம்பட்டி, சிவகிரி, சேத்தூர், திருவில்லிபுத்தூர் என்று ஒவ்வொரு ஊராகப் பின் தொடரும் நெருக்கடிக்கு ஆளானேன். இறுதியில் இராமநாதபுரம் வந்தேன். அங்கு நான் கைது செய்யப்பட உள்ளதாக நம்பிக்கைக்குரிய சிலரால் எச்சரிக்கப்பட்டேன். கவுல் பெற்றுப் பேட்டிக்கு வந்திருப்பதால் அப்படி எதுவும் நடக்காது என்று நான் அவர்களிடம் கூறினேன். செப்டம்பர் 7 ஆம் தேதி நண்பகல் ஒரு மணிக்குப் பேட்டி என்று அழைப்பு வந்தது. காலையில் பேட்டி நடைபெறுவதே இயல்பு. பேட்டி இராமலிங்க விலாசத்தில் நடப்பதற்குப் பதில் மெத்தை வீட்டில் நடந்தது. வழக்கத்திற்கு மாறாகப் பேட்டியின் இடமும் நேரமும் அமைந்திருந்தது. பொதுவாகப் பேட்டி நடைபெறும் போது என்னுடைய தம்பிமார், மாப்பிள்ளைமார், மாமனார், ஆகியோர் கலந்து கொள்வது வழக்கம். ஆனால் அவர்கள் வாசலிலேயே தடுக்கப்பட்டனர். உள்ளே வர முயன்ற அவர்களைச்

சிப்பாய்கள் கடுமையாகத் தாக்கி வெளியே தள்ளினர். கும்பினியின் அழைப்பைப் பெற்றே வந்துள்ளோம் என்று கூறியதைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை. பேட்டியின் போது நிருவாகத்தின் உத்தரவு வரும் வரை கோட்டைக் குள்ளேயே தங்கியிருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டது. மூன்று மணி நேரம் நடந்த பேட்டியின் போது தண்ணீர் குடிக்கக் கூட அனுமதிக்கப்படவில்லை. என் உடல் நலம் சரியில்லாததாலும் கோட்டைக்குள் அம்மை நோய் பரவியுள்ளதாலும் நான் உள்ளே தங்க மறுத்தேன். ஆனால் கோட்டைக்குள் தான் தங்க வேண்டுமென்று ஆட்சியாளரால் கட்டாயப்படுத்தப்பட்டேன். நான் வெளியே சென்று வர அனுமதி பெற்று வந்த போது திடீரென்று இரண்டு வீரர்கள் என் மடியைப் பிடித்து இழுத்து அவமதித்தனர். வெளியில் என்னுடைய உடைமைகள் ஆங்கில வீரர்களால் ஏலமிடப்படுவதை பார்த்தேன். ஆபத்தை உணர்ந்து வெளிவாயிலை நோக்கிச் சென்றேன்." (ப.64) என்று கட்டபொம்மு தன் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். கணபதியாப் பிள்ளையின் "எட்டையபுரம் அன்றும் இன்றும்" என்ற நூலிலும் இக்கடிதம் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளதையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

பேட்டியிலிருந்து கட்டபொம்மன் வெளியேறியதும் வெளியில் நின்ற பாஞ்சாலங்குறிச்சி வீரர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டனர். இருவர் கைலாகு கொடுக்க வாயிலை நோக்கி விரைந்தார் என்று தி.நா.சு. குறிப்பிடுகிறார். (கைலாகு அரசன் நடந்து வரும்போது தன் இரு மருங்கும் வரும் வீரர்களின் தோள் மீது கைவைத்துக் கொண்டு கம்பீரமாக நடப்பதையே "கைலாகு" என்பர்.)

**கட்டபொம்மன் மீது விசாரணை**

இராமநாதபுரம் சந்திப்பில் ஜாக்சன் நடந்து கொண்ட விதம் தவறு என்று கண்டு கொண்ட ஆங்கிலேய நிருவாகம் அவரைப் பதவி நீக்கம் செய்து லூசிங்டனைப் பொறுப்பில் அமர்த்தியது. பதவியேற்ற லூசிங்டன் கட்டபொம்முவை உடனே வந்து காணுமாறு கடிதம் எழுதினான். கட்டபொம்மன் சந்திப்பதற்கு மறுத்துவிட்டார். கடைசி நேரத்தில் கட்டபொம்மு நிபந்தனை இன்றிச் சந்திக்க வேண்டும் என்று பானர்மேன் விடுத்த அழைப்பையும் கட்டபொம்மன் ஏற்க மறுத்ததால் போர் தொடங்கியது.

கட்டபொம்மு மீது விசாரணையின் போது வெள்ளையரால் முன்வைக்கப்பட்ட நான்கு குற்றங்கள்

1. வரி ஒழுங்காகக் கட்டவில்லை
2. ஆளுநர் அழைத்த போது சந்திக்க மறுத்தது
3. சிவகிரியாரின் மகனுக்கு ஆதரவாகப் படைகளை அனுப்பியது
4. பானர்மேன் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டு சரண்அடையாமல் எதிர்த்துப் போரிட்டது

**கட்டபொம்மானின் வீர முழக்கமும் வீர மரணமும்**


விசாரணையின் போது கட்டபொம்மு கொடுத்த வாக்குமூலம் "குத்தகை என்று நான் யாருக்கும் எப்போதும் பணம் செலுத்தியதில்லை. எனக்கு நண்பர்களாகவோ, பகைவர்களாகவோ இருந்த கும்பினி அதிகாரிகள் என்னை அழைத்த போது அவர்களை நான் அவமதித்தது கிடையாது. எனக்கு எழுத்து மூலம் கவுல் வழங்கப்படும் போது தான் பார்க்கச் செல்லுவது வழக்கம். லூசிங்டன் என்னை முறையாக அழைக்கவில்லை என்பதே அவர் மீது எனக்கு ஏற்பட்ட கோபமாகும். அவரது அலுவலகத்தில் காத்திருப்பதற்கு நான் ஒன்றும் அவரது வேலைக்காரன் அல்லன்.

நீ என்னுடைய கோட்டையை வளைத்துக் கொண்டு சரண் அடை என்றால் என் சுய மரியாதை அதற்கு இடம் கொடுக்குமா? என் கோட்டை உன்னால் தகர்க்கப்பட்டது. நான் ஒரு சுரங்கப்பாதை வழியாக நம்பிக்கைக்குரிய சிலருடன் திருச்சிராப்பள்ளி செல்ல முடிவு செய்தேன். ஆனால் என் குடிமக்களை நிர்கதியாக விட்டுவிட்டு நான் தப்பி ஓடிவிட்டதாகச் செய்தியை நீ பரவ விட்டாய்.

என் தலைக்கு விலை வைத்தாய். என் கோட்டையைத் தரை மட்டமாக்கி, என் பொருட்களைக் கொள்ளையடித்தீர்கள். அந்தக் கொள்ளைக்கு நீயே தலைமை தாங்கினாய். அப்படிப்பட்ட நீயே என் மீது குற்றம் சுமத்தி என்னை வாதிடுமாறு வேண்டுகிறாய். இங்கு வாதிடுவதில் எனக்கு என்ன நியாயம் கிடைக்கும்? இது என் விதி. உன் குற்றச்சாட்டுகளை நான் ஏற்கிறேன். உன் விருப்பம் போல் செய்துகொள்" என்று கட்டபொம்மன் வாக்குமூலம் கொடுத்ததையும் கட்டபொம்முவின் கடைசி நேரச் செயல்குறித்துப் பானர் மேன் ஆளுநர்க்குக் கடிதம் எழுதியதையும் தம்நூலில் பதிவு செய்துள்ளார் வே.மாணிக்கம். "நேற்று விசாரணை நடைபெற்ற போது, கூடியிருந்தவர்கள் முன்பாகப் பாளையக்காரரின் போக்கும், நடத்தையும் அஞ்சா நெஞ்சத்துடனும், ஏளனத்துடனும் இருந்ததை நான் இங்கே குறிப்பிடாமல் இருக்க முடியாது. அவரைப் பிடிப்பதற்குத் தீவிர முயற்சி செய்த எட்டயாபுரம் பாளையக்காரரை அவர் மீண்டும் மீண்டும் சீற்றத்துடனும், நிந்தனையுடனும் உற்றுநோக்கினார். தூக்கிலிடப்படும் இடத்திற்கு அவர் உறுதியுடனும் வீரத்துடனும் நடந்து செல்லும் போது வலப்புறமும், இடப்புறமும் இருமருங்கிலுமிருந்த பாளையக்காரரர்களை ஏளனத்துடன் உற்றுநோக்கிக் கொண்டே அவர் சென்றார். தூக்கிலிடப்படும் இடத்திற்குச் செல்கையில் தன்னுடைய ஊமைச் சகோதரரைப் பற்றிச் சற்றுக் கவலை தெரிவித்ததாக என்னிடம் கூறப்பட்டது. தூக்கிலிடப்படும் மரத்தின் அடியில் சென்றதும் கோட்டையை விட்டுச் சென்றதற்கு அவர் வருத்தம் தெரிவித்ததாகவும், அதைப் பாதுகாப்பதில் தாம் இறந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று கட்டபொம்மான் கூறியதாகவும் என்னிடம் தெரிவிக்கப்பட்டது." (ப.95 96) என்று பானர்மேன் எழுதியுள்ளான். "பாஞ்சாலங்குறிச்சியை விட்டு வெளியேறாது அக்கோட்டையைக் காப்பாற்றும் புனிதப் போரிலே, வீரமரணம் எய்தாமல் போனேனே" என்று சொல்லித் தூக்குக் கயிற்றைத் தானே எடுத்துக் கழுத்தில் மாட்டிக் கொண்டார் கட்ட்பொம்மான் என்று ம.பொ.சி. தனது நூலில் எடுத்துக் காட்டியுள்ளார்.

**நிறைவுரை**

பாளையக்காரர்கள் சாதாரண குத்தகைதாரரே. தனித்த உயர்நிலை எதுவும் அவர்களுக்குக் கிடையாது. கோட்டைகள் கட்டக் கூடாது, படைகள் திரட்டக்கூடாது, போர்க்கருவிகள் வைத்துக் கொள்ளக் கூடாது என்று கும்பினி நிர்வாகம் ஆணை பிறப்பித்த போது, அதை முதலில் எதிர்த்தவர் கட்டபொம்மு ஒருவரே. புதுக்கோட்டை அரசரும், எட்டயபுரத்தாரும் வெள்ளையர் ஆதிக்கம் வேரூன்றப் பல வகையில் துணை நின்ற போதும் அச்சூழலில்




வாழ்ந்த ஆதிக்கத்திற்குக் கட்டுப்படாத கட்டபொம்முவின் விடுதலை உணர்ச்சியை நம்மால் உணரமுடிகிறது. வெள்ளையர் ஆதிக்கத்தை எதிர்த்து வீர முழக்கமிட்டுத் தங்களது இன்னுயிரைத் தியாகம் செய்தவர் வரிசையில் பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரர்களுக்கு முதலிடம் உண்டு என்பதை யாரும் மறுக்க முடியாது. விடுதலைப் போராட்ட வீரர்கள் சிறையில் கட்டபொம்மு கதையைப் பாடியதாக வ.உ.சி. தன்னுடைய சுயசரிதையில் குறிப்பிட்டுள்ளார். "விளைஞ்சாகரிசல் விளையணும், கொடுத்தா கட்டபொம்முபோல கொடுக் கணும்", "தொண்டைக் குழியில் சீவன் உள்ள மட்டும் நோக்குலவார் குலம் தோற்காது" என்ற பழமொழி யும் இன்றும் பாஞ்சாலங்குறிச்சிப் பகுதிகளில் வழங்கி வருவதை அறிய முடிகிறது.

கட்டபொம்மனின் கோட்டையை வெள்ளையர் தகர்த்த போதிலும், பழங்காலத்துக் கோட்டையின் வடிவினை ஒத்த ஒரு கோட்டை அன்றைய தமிழக அரசால் எழுப்பப்பட்டு இருப்பது கட்டபொம்மனின் புகழையும் வீரத்தையும் பறைசாற்றுகின்றது.

---

**–முனைவர் என்.எஸ். கணேஷ்ராம்,** வரலாற்றுப் பேராசிரியர் முதல்வர், ஸ்ரீஎஸ்.இராமசாமிநாயுடு நினைவுக் கல்லூரி (தன்னாட்சி), சாத்தூர்.


**– முனைவர் மூ.கவிதா,** உதவிப் பேராசிரியர், ஸ்ரீஎஸ்.இராமசாமி நாயுடு நினைவுக் கல்லூரி (தன்னாட்சி), சாத்தூர்.



எங்களது வெளியீடுகள்

# நம் காலத்தில் காந்தியைத் தேடுகிறோம்

**ஆசிரியர்: வர்ஷா தாஸ்**




**பக்கங்கள் 145**
**விலை: ரூ. 300**

தங்களின் நம்பிக்கைகளை தங்களின் வாழ்க்கை முறைகளில் எவ்வாறு புகுத்துவது என்பதற்கு வெகுமக்களுக்கு மகாத்மா காந்தி வழிகாட்டினார் என்பதை காந்தியவாதியான வர்ஷா தாஸ் எழுதியுள்ள இந்த நூல் விளக்கிக் கூறுகிறது. உலகில் தாங்கள் காண விரும்பும் மாற்றத்தின்படி வாழ்ந்து காட்டவும், அவற்றைச் செயல்படுத்தவும் மனிதர்களை காந்தி தூண்டினார் என்பது பொருத்தமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 'காந்திஜியின் சிந்தனைகள் காலம் கடந்தும் நிலைத்திருப்பவை' என்பதை நிறுவுவதில் இந்தப் புத்தகம் ஈடுபட்டு, அதை வெற்றிகரமாக அதைச் செய்திருக்கிறது.

விடுதலை பெற்ற இந்தியா பற்றிய அவரது கனவையும், தொலைநோக்குப் பார்வையையும் சுமந்து வரும் காந்திஜியின் 'இந்து சுயராஜ்யத்தின்' முக்கியத்துவத்தை இந்த நூல் ஏற்றுக் கொள்கிறது. முழுமையான அளவுக்கு நாம் காந்தியை உண்மையிலேயே அறிந்திருக்கிறோமா என்பதைப் பற்றி இந்த நூல் ஆழமாக அலசி ஆராய்கிறது. கூட்டுப்போராட்டம் பற்றிய அவரது சிந்தனைகள், ஆக்கப்பூர்வமான உருமாற்றச் செயல்முறை ஆகியவை அவரது சத்தியாகிரகத் தத்துவத்திற்கு வழிவகுத்தன. இதற்கு மகத்தான மன உறுதி தேவைப்பட்டது.

நமது தேசத்தந்தை தவறுகள் செய்யாமல் இருந்திடவில்லை என்பதையும், காந்திஜியின் மனிதநேய அம்சங்களையும் நூல் அலசுகிறது. பல்வேறுபட்ட பண்பாடுகளையும் ஏற்றுக்கொண்டு கடைபிடித்த அவரது செயலானது, ஒவ்வொரு மனிதனிடமும் கடவுள் தன்மையை அவர் கண்டார் என்பதையே காட்டுகிறது. சமூகத்தைப் பற்றிய அவரது பார்வை, பெரும்பாலான மனித நடவடிக்கைகளுக்குப் பின்னால் உள்ள பொருளாதார நோக்கங்களைப் புரிந்துகொள்ளச் செய்தது. வன்முறையும், ஊழலும் உருவாக இவையே வழி செய்கின்றன என்று அவர் தீர்க்கமாக நம்பினார்.

ராமநாமத்தின் மூலம் ஆன்மீகத் தொடர்பையும், தைரியத்தையும் தனது ஆரம்ப நாட்களிலிருந்தே காந்திஜி அடைந்தார். இறுதியாக அவர் உச்சரித்த 'ஹே ராம்' என்ற வார்த்தை அச்சமற்ற ஆன்மீக வாழ்க்கைக்கான உருவகமாக வெளிப்படுத்துவதாக இந்தப் புத்தகம் நினைவுபடுத்துகிறது. எதிர்பார்ப்பு ஏதுமின்றி, சுயவாழ்வை தன்னந்தனியாக வாழக்கூடிய தனிமையான வாழ்க்கை முறையை வலியுறுத்தும் ஸ்ரீமத் பகவத் கீதையின் போதனைகளையும் அவர் போற்றினார்.

புத்தகத்தின் பிற்பகுதி, சத்தியாக்கிரகிகளின் முதல் பெண்கள் குழுவைப் பற்றிப் பேசுகிறது. பெண்களின் வலிமையை வெளிப்படுத்தும், வெற்றி காண இயலாத அவர்களின் இந்த மன உறுதியை காந்திஜி எவ்வாறு பாராட்டினார் என்பதை இது தெரிவிக்கிறது. துன்பப்படும் சமயங்களிலும் கூட நேசத்தைக் கைவிடாத எல்லையற்ற திறமை கொண்டவர்கள் பெண்கள் என்று அவர் நம்பினார். அதனால் பெண்களிடம் உள்ள அகிம்சை உணர்வை அவர் பாராட்டினார்.

அச்சமின்மையே ஆன்மீகம் என காந்திஜி பிரச்சாரம் செய்தார். 'அளவிடற்கரிய வலிமை' இதற்குத் தேவைப்படுகிறது. அனுபவத்தின் மூலம் கற்றுக்கொள்வதே கல்வியில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று அவர் நம்பினார். பாதிப்புகளுக்கு உள்ளாகக்கூடிய, நிலையில்லாத, ஒப்பீட்டு நிலையிலான ஒரு மகிழ்ச்சியாக, பொருள் செல்வத்தை அவர் கருதினார். இந்தப் புத்தகம் காந்தியத் தத்துவத்தை வெளிப்படுத்துகிறது. நம் அன்றாட வாழ்க்கையில் உண்மையான மகிழ்ச்சியைக் கண்டறிய உதவுகிறது. இது பாபுவைப் பின்பற்றுபவர்களுக்குப் பயனுள்ளதாகவும், வாழ்க்கை முறைகளைக் கற்பிப்பதில் உதவியாகவும் இருக்கும்.

ஆசாதி கா அம்ரித் மஹோத்சவ் பற்றிய மேலும் பல புத்தகங்களுக்குப் பார்வையிடவும்: www.publicationsdivision.nic.in





# வேளாண்மை, உணவுப் பதப்படுத்துதல் துறையில் ஏற்படுத்தும் தாக்கங்கள்

- தே.சுரேஷ்குமார்
- வெ.சரவணகுமார்
- ந.கிருத்திகா

மத்திய அரசின் 2022–23 ஆம் ஆண்டின் பட்ஜெட்டானது வேளாண்துறைக்கான நிதி கிடைக்கச்செய்தல், சந்தைப்பகுதியை எளிதாக அடைய வகை செய்தல், சிறந்த விவசாய முறைகளை ஊக்குவித்தல், ட்ரோன் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல் போன்றவற்றை உள்ளடக்கிய தொலைநோக்குத் திட்டங்களுடன் உள்ளது. பருவநிலை மாற்றங்கள், பூச்சி, நோய் தாக்குதல்கள், சந்தை ஏற்றத்தாழ்வு போன்ற பிரச்சினைகளிலிருந்து விவசாயிகளைப் பாதுகாக்கும் விதத்தில் அதிக நிதி ஒதுக்கப் பட்டிருப்பதால் தகுந்த நேரத்தில் வேளாண் இடுபொருள்களை வாங்கவும், விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கவும் வழிவகை செய்கிறது. டிஜிட்டல் வேளாண்மை, வேளாண் தொழில்நுட்ப ஸ்டார்ட் அப்கள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் போன்றவை வரவேற்கத்தக்க முன்னறிவிப்புகளாகும்.

இந்திய வேளாண்மையில் உணவு தானிய உற்பத்தியானது சுதந்திரத்திற்கு பிறகு மிகப்பெரிய அளவில் அதிகரித்துள்ளது. ஐம்பதுகளில் 51 மில்லியன் டன்களாக இருந்த உணவு தானிய உற்பத்தியானது, தற்போது 300 மில்லியன் டன்கள் என்ற அளவில் உயர்ந்துள்ளது. இந்தியாவின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் 18 முதல் 20 சதவீதப் பங்களிப்பை செய்யும் வேளாண்மை, இந்திய மக்கள் தொகையில் 50 சதவீத மக்களின் வாழ்வாதாரத்திற்கு ஊன்று கோலாகவும் உள்ளது. இத்தகைய சாதனைகளைக் கொண்டுள்ள போதிலும், குறைந்த பண்ணை வருமானம், பெரும்பாலானோர் சிறு, குறு விவசாயிகளாக இருத்தல், அதிகரித்து வரும் தண்ணீர்ப் பற்றாக்குறை, நாட்டின் பெரும்பான்மையான பகுதிகளில் மேற்கொள்ளப்படும் நிலையற்ற பயிர் முறை, வேளாண் உற்பத்தியில் ஏற்படும் விலை ஏற்றத்தாழ்வுகள், பருவநிலை இடர்பாடுகள், பூச்சிகள் மற்றும் நோய்களின் தாக்கம், கோவிட் பெருந்தொற்றுப் பரவலால் வேளாண் பொருள்கள் வழங்கல் சங்கிலியில் ஏற்பட்டிருந்த இடையூறுகள் போன்ற பல சவால்களை இந்திய வேளாண்மையானது நித்தமும் எதிர்கொண்டு வருகிறது.

இந்திய வேளாண் துறையின் வளர்ச்சி விகிதம் 2020–21 இல் 3.6 சதவீதமாகவும், 2020–22 இல் 3.9 சதவீதமாகவும் அதிகரித்த போதிலும், வேளாண் துறையில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் பல உள்ளன. தேசிய மாதிரி ஆய்வு அலுவலகத்தின் (NSSO) சூழ்நிலை மதிப்பீட்டு ஆய்வின்படி, பயிர் சாகுபடி செய்வதின் மூலமாக ஒரு சராசரி விவசாயி, ஒரு மாதத்திற்கு 3798 ரூபாயும், மற்ற பிற ஆதாரங்களான தினக்கூலி, கால்நடை, வேளாண் சாராத துறைகள் போன்றவற்றையும் சேர்த்து 10218 ரூபாயும் வருமானம் ஈட்டுவதாக தெரிவிக்கிறது. வேளாண் தொழில்கள் மூலம் ஈட்டப்படும் பண்ணை வருமானம் மிகவும் குறைவானதாகவும், பற்றாக்குறையாகவும் இருப்பதை இதிலிருந்து அறிய முடிகிறது.

இத்தகைய சூழ்நிலையில் வேளாண் துறையின் வளர்ச்சியை ஊக்கப்படுத்த அனைத்து உழவர்களையும் உள்ளடக்கிய நிதி வசதி, சிறந்த போக்குவரத்து மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள், மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்கள் புதுமையான ஆரம்பகட்ட வணிக அமைப்புகள் (ஸ்டார்ட் அப்கள்), வேளாண் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு போன்றவை இன்றியமையாத காரணிகளாக விளங்குகின்றன. இத்தகைய காரணிகளை உள்ளடக்கி 2022–23 நிதிநிலை அறிக்கையானது மத்திய நிதி அமைச்சரால் பிப்ரவரி 1, 2022 அன்று சமர்ப்பிக்கப்பட்டது. இந்த நிதிநிலை அறிக்கையில் வேளாண் துறைக்கு அதிக முக்கியத்துவத்தை அளித்து, விவசாயிகளுக்குப் பாதுகாப்பான வாழ்வாதாரத்தை வழங்குவதுடன், நீடித்த சந்தையையும் வழங்குமென்ற எதிர்பார்ப்பு உழவர்களிடமும், வேளாண்

தொழில் சார்ந்த மக்களிடமும் அதிக அளவுக்கு ஏற்பட்டுள்ளது.

**மத்திய நிதிநிலை அறிக்கை (2022-23) வேளாண்மைக்கான நிதி ஒதுக்கீடு**

மேற்கூறிய சவால்கள் நிறைந்த சூழ்நிலையில், வேளாண்மைக்கான நிதிநிலை அறிக்கையில் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கவும், வேளாண்மையை டிஜிட்டல்மயமாக்கவும், மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்களால் விவசாயத்தை மேற்கொள்ளவும் பல்வேறு திட்டங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட இந்தியாவின் மொத்த செலவினமான ரூ.39.45 இலட்சம் கோடியில், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறைக்கு 3.4 சதவீதம் அதாவது, ரூ.1.33 இலட்சம் கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. வேளாண் துறைக்கான நிதி ஒதுக்கீடு கடந்த ஆண்டை விட 4.5 சதவீதம் அதிகரித்துள்ள போதிலும், ஒட்டு மொத்த பட்ஜெட்டில் வேளாண் துறைக்கான பங்கில் எந்த விதமான மாற்றமும் இல்லாமல் 3.4 சதவீதம் என்ற அளவிலேயே உள்ளது. அதே சமயத்தில் வேளாண்மை சார்ந்த தொழில்களான மீன் வளத்திற்கு சென்ற ஆண்டை விட 50.5 சதவீதம் அதிகமாகவும் (ரூ.2118.47 கோடி), கால்நடைத் துறைக்கு 44.4 சதவீதம் அதிகமாகவும் (ரூ.3918.84 கோடி) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வேளாண் துறையில் இவ்வாண்டின் அதிக நிதியானது, பிரதம மந்திரிகிசான், பயிர் காப்பீடு, வேளாண் நிதிக் கடன் போன்றவற்றிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த அறிக்கையில் இயற்கை வழி விவசாயம், சிறு ரக ஆளில்லா விமானங்கள் (ட்ரோன்) போன்றவற்றை ஊக்குவிக்கும் விதத்தில் அறிவிப்புகளும் வெளியிடப்பட்டுள்ளன.

| வரிசை எண் | திட்டங்கள் | 2022-23 (BE) (ரூ. கோடியில்) | 2021-22 (RE) (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 1 | பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம் (PMFBY) | 15500 | 15989 |
| 2 | மாற்றியமைக்கப்பட்ட வட்டி மானியத் திட்டம் (MISS)* | 19500 | 18142.3 |
| 3 | சந்தை இடையீடு மற்றும் விலை ஆதரவு திட்டம் (MISPSS) | 1500 | 3595 |
| 4 | பிரதம மந்திரி அன்னதத்தா ஆய் சன்ரக்ஷன் திட்டம் (PM-ASHA) | 1 | 1 |
| 5 | மாநில மற்றும் ஒன்றிய பிரதேச நலத்திட்டங்களுக்காக விநியோகிக்கப்படும் பயறு வகைகள் | 9 | 50 |
| 6 | பி.எம் கிசான் | 68000 | 67500 |
| 7 | பிரதான் மந்திரி கிசான் மன்தன் யோஜனா | 100 | 0.5 |
| 8 | உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் (FPO) | 500 | 250 |
| 9 | வேளாண் உள்கட்டமைப்பு நிதி | 500 | 200 |
| 10 | தேசிய தேனீவளர்ப்பு மற்றும் தேன் திட்டம் | 100 | |
| 11 | பயிர் இரகங்கள் பாதுகாப்பு மற்றும் விவசாயிகள் உரிமை ஆணையம் (PPVFRA) | | |
| 12 | தன்னாட்சி வேளாண் அமைப்புகள் (NIPHM, MANAGE, CCSNIAM) | 5.5 | 3 |
| 13 | செயலகம் (Secretariat) | 35 | 45.54 |
| 14 | தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (RKVY) | 633.5 | 927.7 |
| 15 | கிருஷியோன்னதி யோஜனா (Krishionnati Yojana) | 7183 | |
| 16 | வேளாண் ஆராய்ச்சி மற்றும் கல்வி | 8513.62 | 8513.62 |

*2021-22 ஆம் ஆண்டு இந்த திட்டமானது 'விவசாயிகளுக்கு குறுகிய காலக்கடனுக்கு வழங்கப்படும் வட்டி மானியம்' என்ற பெயரால் செயல்படுத்தப்பட்டது.





வேளாண்மைக்கு வழங்கப்பட்ட மொத்த ஒதுக்கீட்டில் பிஎம்கிசான் (ரூ.68,000 கோடி), மாற்றியமைக்கப்பட்ட வட்டி மானியத் திட்டம் (ரூ.15,500 கோடி) மற்றும் பயிர் காப்பீடு (ரூ.15,500 கோடி) ஆகிய மூன்று திட்டங்களுக்கு மட்டும் 77.7 சதவீதப் பங்கு (ரூ.1,03,000 கோடி) ஒதுக்கப்பட்டுள்ளது.

**விலை ஆதரவு**

இந்திய உழவர்களுக்குப் பாதுகாப்பான, நிலையான வருமானத்தை வழங்கக்கூடியது குறைந்த பட்ச ஆதார விலையாகும். இதனைக் கருத்தில் கொண்டு மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையில் இவ்வாண்டில் 1208 இலட்சம் மெட்ரிக் டன் கோதுமை மற்றும் நெல் தானியங்கள் 163 இலட்சம் விவசாயிகளிடமிருந்து ரூ.2.37 இலட்சம் கோடி செலவில் நேரடியாகப் பணம் செலுத்தும் முறையில் கொள்முதல் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டமானது பயிர்களுக்கான விலைப் பாதுகாப்பை உறுதி செய்த போதிலும், அதற்காக தனி நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்பதும் இங்கு சுட்டிக் காட்டப்படுகிறது.

வேளாண்துறைக்கான பட்ஜெட் செலவினங்கள் மொத்தமாக அதிகரித்துள்ள போதிலும், எண்ணெய் வித்துகளையும், பயறுவகைகளையும் கொள்முதல் செய்ய உதவும் சந்தை இடையீடு மற்றும் விலை ஆதரவு திட்டத்திற்கான ஒதுக்கீடு 2021-22 ஆம் ஆண்டில் ரூ.3595.61 கோடி என்ற அளவிலிருந்து குறைந்து ரூ.1500 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் ஏறத்தாழ 62 விழுக்காடு நிதி குறைத்திருப்பது சற்று ஏமாற்றமாக இருந்தாலும் இதற்கான சந்தைவாய்ப்புகளுக்கான உள்கட்டமைப்பு வசதி ஏற்படுத்தப்பட்டு தகுந்த சந்தை விலை கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இதே போன்று பிரதம மந்திரி அன்னதத்தா ஆய் சன்ரக்ஷன் (PM-ASHA) திட்டத்துக்காக கடந்த ஆண்டைப் போலவே எந்த மாற்றமும் இல்லாமல் நடப்பாண்டிலும் ஒரு கோடி நிதி அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மாநில மற்றும் மத்திய நலத் திட்டங்களுக்காக விநியோகிக்கப்படும் பயறு வகைகளுக்கான ஒதுக்கீடும் கடந்த ஆண்டின் ரூ.50 கோடியுடன் ஒப்பிடும் போது, நடப்பாண்டில் ரூ.9 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது. இந்த இரு திட்டங்களுமே குறைந்த பட்ச ஆதார விலையில் வேளாண் பொருள்களை முக்கியமாக எண்ணெய் வித்துகள் மற்றும் பயறு வகைகளைக் கொள்முதல் செய்ய உதவுகின்றன. எனவே, இவ்வாறாகக் குறைக்கப்பட்ட ஒதுக்கீட்டால் வேளாண் பொருள்கள் கொள்முதலில் ஏதேனும் எதிர்மறைத் தாக்கம் ஏற்படுமோ என்ற அச்சம் வேளாண் பெருமக்களுக்கு எழுகின்றது.

**உழவர் வருவாய் ஆதரவுத் திட்டங்கள்**

உழவர்களுக்கு நிரந்தர வருவாயை அளிக்கும் வகையிலும், வேளாண் மற்றும் அதனைத் தொடர்புடைய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், வீட்டுச் செலவினங்களைச் சமாளிக்கவும், மத்திய அரசால் 'பி.எம் கிசான்' (PM-KISAN) என்ற திட்டமானது செயல்படுத்தப்படுகிறது.

இந்த திட்டத்தின் மூலமாக, அதிக வருமானம் ஈட்டும் உழவர்களைத் தவிர்த்து, மற்ற உழவர்களுக்கு, ஒவ்வொரு உழவருக்கும் ஆண்டொன்றிற்கு ரூ.6000 மூன்று தவணைகளாக (ஒரு தவணைக்கு ரூ.2000 வீதம்) நேரடியாக வழங்கப்படுகிறது. இதன் மூலமாக ரூ.12.5 கோடி விவசாயக் குடும்பங்கள் பலனடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்காக இவ்வாண்டின் பட்ஜெட்டில் ரூ.68,000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மொத்த வேளாண் பட்ஜெட்டில் இது 51.32 சதவீதமாகும்.

இது தவிர 60 வயதுக்கு மேலுள்ள சிறு, குறு விவசாயிகளுக்கு ஓய்வூதியம் வழங்கும் நோக்கத்துடன் பிரதான் மந்திரி கிசான் மன்தன் யோஜனா (Pradhan Mantri Kisan Mandhan Yojana) என்ற திட்டமானது செயல்படுகின்றது. இதற்காக கடந்த ஆண்டில் ரூ. 0.5 கோடியாக இருந்த ஒதுக்கீடு நடப்பாண்டில் ரூ. 100 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இதன் மூலம் சிறு, குறு விவசாயிகளின் சமூகப் பாதுகாப்பானது அதிகரிக்கப்பட்டுள்ளது என்பது மிகவும் பாராட்டுக்குரியதாகும்.

**பயிர் காப்பீட்டிற்கான நிதி ஒதுக்கீடு**

விவசாயிகள் தினந்தோறும் சந்திக்கும் பிரச்சினைகளில் மிகவும் தலையாய பிரச்சினை பூச்சி, நோய்கள் மற்றும் பருவநிலை மாற்றங்களால் ஏற்படும் பயிர் இழப்பாகும். இதனைச் சரி செய்யும் நோக்கத்தோடு பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம் (Pradhan Mantri Fasal Bima Yojana - PMFBY) என்ற திட்டமானது



செயல்படுகின்றது. இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு கடந்த ஆண்டிலிருந்து 3.1 சதவீதம் குறைக்கப்பட்டு இவ்வாண்டிற்கு ரூ.15,500 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலமாக விவசாயிகளின் பயிர் இழப்பை ஈடுசெய்வதோடு, புதிய நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்த ஊக்குவிக்கப்படுகிறது. மேலும் இது வேளாண் துறைக்கான கடன்களை வழங்க உறுதி செய்வதன் மூலமாக நாட்டின் உணவுப் பாதுகாப்பு, மாறுபட்டப் பயிர்களை பயிரிடுதல், வேளாண்துறையின் வளர்ச்சி மற்றும் போட்டித் தன்மையை மேம்படுத்துதல் போன்றவற்றிற்கும் உதவுகின்றது.

**வேளாண் கடனுதவி**

உழவர்கள் வேளாண் இடுபொருள்களை வாங்கவும், பிற பயிரிடும் செலவினங்களைக் கையாளவும் வேளாண் கடன்களையே சார்ந்துள்ளனர். இக்கடன்களைப் பெறுவதில் நிலவக்கூடிய இடர்ப்பாடு, வேளாண்மையில் ஏற்பட்டிருக்கும் ஒரு முக்கியமான நெருக்கடியாகும். இதனைக் கருத்தில் கொண்டு, விவசாயிகளுக்கு குறுகிய காலக் கடனுக்கு வழங்கப்படும் வட்டி மானியம் என்ற திட்டத்தை மாற்றியமைத்து 'மாற்றியமைக்கப் பட்ட வட்டி மானியத் திட்டம்' அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கான நிதி ஒதுக்கீடும் பழைய திட்டத்தில் ரூ.18,142 கோடியிலிருந்து 7.5 சதவீதம் அதிகரிக்கப்பட்டு ரூ.19,500 கோடியாக ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக இத்திட்டமானது வேளாண் கடன்களைப் பெறுவதற்கு வழிவகை செய்வதுடன் கந்து வட்டி மற்றும் அதிக வட்டியிலிருந்து உழவர் களைப் பாதுகாக்கின்றது.

**வேளாண் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கான நிதி**

அறுவடைக்குப் பிந்தைய கட்டமைப்பை மேம்படுத்த 'வேளாண் உள்கட்டமைப்பு நிதி' வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்காக இவ்வாண்டு ரூ.500 கோடி வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலமாக உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த நடுத்தர மற்றும் நீண்ட காலக் கடன்கள் வழங்கப்படுகின்றன.

**உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் (FPOs)**

விவசாயிகள் தாங்கள் விளைவித்த பொருள்களைத் தாங்களே சந்தைப்படுத்தும் விதமாக 'உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள்' செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதன் மூலம் ஆயிரத்திற்கும் மேற்பட்ட உழவர்கள் ஒன்றாக இணைந்து தங்கள் விளைபொருள்களை மதிப்புக் கூட்டி விற்றல், தகுந்த சந்தையைத் தேர்ந்தெடுத்து விற்றல், ஏற்றுமதி செய்தல் போன்ற நடவடிக்கைகள் மூலம் தங்கள் வருமானத்தை அதிகரித்துக் கொள்கின்றனர். இதனை ஊக்கப்படுத்தும் வகையில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கான நிதி ஒதுக்கீடு – 2021–22 இல் ரூ.250 கோடியாகயிருந்தது (திருத்தப்பட்ட மதிப்பீடு) நடப்பாண்டில் ரூ.500 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இதன் மூலம் இடைத்தரகர் இல்லாத் விற்பனையானது ஊக்குவிக்கப்படுகின்றது.

**பயிர் இரகங்கள் பாதுகாப்பு மற்றும் விவசாயிகள் உரிமை ஆணையம் (PPVFRA)**

பயிர் இரகங்களைப் பாதுகாக்கவும், புதிய இரக அபிவிருத்தியில் ஈடுபடும் விவசாயிகள் மற்றும் விஞ்ஞானிகளின் உரிமையைப் பாதுகாக்கும் 'பயிர் இரகங்கள் பாதுகாப்பு மற்றும் விவசாயிகள் உரிமை ஆணையத்திற்கு' 2022–23 ஆம் ஆண்டில் ரூ.5.50 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டை விட (ரூ.3 கோடி) 81.6 சதவீதம் அதிகமாகும். இதன் மூலமாக பயிர் இரகங்களைப் பாதுகாத்தல், உழவர்களின் உரிமையை நிலைநாட்டுதல், பாரம்பரிய இரகங்களைப் பேணிக் காத்தல் மற்றும் பாரம்பரிய இரகங்களை அழியாமல் தடுத்தல் போன்றவற்றை மேற்கொள்ள முடியும்.

அடுத்ததாக மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கபட்டு மேற்கொள்ளப்படும் இரு பெரிய திட்டங்களான ராஷ்ட்ரிய கிருஷி விகாஸ் யோஜனா (RKVY) மொத்த ஒதுக்கீட்டில் 7.87 சதவீதம் (ரூ.10433 கோடி), மற்றும் கிருஷியோன்னதி யோஜனா மொத்த ஒதுக்கீட்டில் 5.42 சதவீதம் (ரூ.71.83 கோடி) கொண்டுள்ளது.

**தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் ராஷ்ட்ரிய கிருஷி விகாஸ் யோஜனா (RKVY)**

வேளாண் துறையில் அதிக வளர்ச்சியை ஈட்டுதல், விவசாயிகளின் வருமானத்தை அதிகரித்தல், ஒருங்கிணைந்த மேம்பாடு மூலம் உணவுப் பாதுகாப்பை அதிகரித்தல், நீடித்த நிலையான வேளாண்மையை மேற்கொள்ளுதல், எண்ணெய் வித்து, பயறு வகைகளின் உற்பத்தியை அதிகரித்தல் மற்றும் வேளாண் விரிவாக்கத் திட்டங்களை மேம்படுத்துதல் போன்ற நோக்கங்களைக் கொண்டு



ஆரம்பிக்கப்பட்ட தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்திற்கு (RKVY) 2022–23 ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கீடு (ரூ.10433 கோடி) செய்யப்பட்டுள்ளது.

ஆனால், நடப்பாண்டில் இத்திட்டமானது, ஏற்கனவே நடைமுறையிலுள்ள திட்டங்களான பிரதம மந்திரியின் விவசாய நீர்ப்பாசனத் திட்டம் ஒரு துளி பல பயிர், பாரம்பரிய வேளாண் வளர்ச்சித் திட்டம் (பரம்பராகட கிருஷி விகாஸ் யோஜனா) மண் மற்றும் சுகாதார மேம்பாட்டிற்கான தேசியத் திட்டம், மானவாரி பகுதி மேம்பாடு மற்றும் பருவநிலை மாற்றம், வேளாண் இயந்திரமயமாக்குதல் போன்ற பல திட்டங்களை ஒருங்கிணைத்து நடைமுறைப்படுத்தப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

**கிருஷியோன்னதி யோஜனா**

நடைமுறையிலிருக்கும் 18 திட்டங்களை மறுசீரமைத்து பத்து முக்கிய தலைப்புகளின் கீழ் கிருஷியோன்னதி யோஜனா என்ற திட்டமாக ரூ.7183 கோடி நிதி ஒதுக்கீட்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன்கீழ் முக்கியத் திட்டங்களான எண்வழி (டிஜிட்டல்) வேளாண்மை, வேளாண் சந்தைப்படுத்துதல், தோட்டக்கலை, சமையல் எண்ணெய், வட கிழக்கு மாநிலத்திற்கான மதிப்புக் கூட்டப்பட்ட இயற்கை பொருள்களின் மேம்பாடு போன்ற பல திட்டங்கள் செயல்படுத்தப்படும். முக்கியமாக தோட்டக்கலை பயிரின் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம் (ரூ.1900 கோடி), சமையல் எண்ணெய் பனை எண்ணெய் (ரூ.900 கோடி), சமையல் எண்ணெய் எண்ணெய் வித்துக்கள் (ரூ.600 கோடி) ஆகிய திட்டங்களுக்கு மட்டும் 47 சதவீத நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**வேளாண் ஆராய்ச்சி மற்றும் கல்வி**

இவ்வாண்டில் (2022–23) வேளாண் ஆராய்ச்சி மற்றும் கல்விக்கான நிதி ஒதுக்கீடு சென்ற ஆண்டிலிருந்து (2021–22) எவ்வித வேறுபாடுமின்றி ரூ.8513.62 கோடி என்ற அளவிலேயே உள்ளது. இந்தத் தொகையில், ரூ.5561.48 கோடியானது இந்திய வேளாண் ஆராய்ச்சிக் குழுமத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் தொகையானது 2021–22 ஆம் ஆண்டை ஒப்பிடும் போது ரூ. 315.58 கோடி மட்டுமே அதிகரிக்கப்பட்டுள்ளது. வேளாண் ஆராய்ச்சியில் முதலீடு செய்யும் ஒவ்வொரு ரூபாய்க்கும் ரூ.11.2 பலனாகக் கிடைக்கிறது. ஆனால் வேளாண் ஆராய்ச்சி மற்றும் கல்விக்கான இந்த ஒதுக்கீடு, வேளாண் மொத்த மதிப்பில் 0.4 சதவீதமாக மட்டுமே உள்ளது.

**பிற முக்கிய அறிவிப்புகள்**

**எண்ணெய்வித்து பயிர்களின் உற்பத்தியை அதிகரித்தல்**

2020–21 ஆம் ஆண்டில் இந்தியா 13.35 மில்லியன் டன்கள் சமையல் எண்ணெய் இறக்குமதி செய்துள்ளது. அவ்வாண்டின் உள்நாட்டு நுகர்வு மட்டுமே 22 மில்லியன் டன்களாகும். இதன் அடிப்படையில், 2022–23 ஆம் ஆண்டின் பட்ஜெட் அறிக்கையில், உள்நாட்டில் எண்ணெய்வித்துப் பயிர் விதைகள் உற்பத்தியை அதிகரிக்கவும், வெளிநாட்டிலிருந்து சமையல் எண்ணெய் இறக்குமதியைக் குறைக்கவும் மத்திய அரசு ஒருங்கிணைந்த திட்டத்தை அறிமுகம் செய்ய உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**சிறுதானியங்கள் உற்பத்தி ஊக்குவிப்பு**

2023ஆம் ஆண்டு சிறுதானியங்களின் சர்வதேச ஆண்டாக அறிவிக்கப்பட்டுள்ளதால், உள்நாட்டு சிறுதானிய உற்பத்தியை அதிகரித்து சர்வதேச அளவில் கொண்டு செல்ல மத்திய அரசு ஆதரவளிக்குமென குறிப்பிடப்பட்டுள்ளது.

**இயற்கை வேளாண்மை**

பொருளாதார ஆய்வறிக்கையில் செயற்கை உரங்களைக் குறைக்கவும், குறைந்த செலவு பிடிக்கும் இடுபொருள்களைப் பயன்படுத்தவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் இவ்வாண்டு நிதிநிலை அறிக்கை உரையில், நாடு முழுவதும் இரசாயனக் கலப்பற்ற இயற்கை வேளாண்மை மேம்படுத்தப்படுமென கூறப்பட்டுள்ளது. இதற்காக கங்கை நதிக் கரையை ஒட்டி ஐந்து கிலோ மீட்டர் அகல வழித்தடத்தின் விவசாய நிலங்கள் மீது ஆரம்பக் கட்ட கவனம் செலுத்தப்படுமென்று கூறியிருப்பது வரவேற்புக்குரியதாகும். மேலும், இயற்கை வேளாண்மைக்கு ஏற்ற வகையில் வேளாண் பல்கலைக் கழகங்களின் பாடத்திட்டங்களும் மாற்றப்படுமென கூறப்பட்டுள்ளது. ஆனாலும் இயற்கை விவசாயமுறை தன்னிறைவு உணவு உற்பத்தி பற்றிய கேள்வியை எழுப்பியுள்ளது.

**உயிர்ம எரிபொருள்களைப் பயன்படுத்துதல்**

அனல் மின் நிலையங்களில் உயிர்ம எரிபொருள்கள் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதன் மூலம் கார்பன் நடுநிலைப் பொருளாதாரத்திற்கு வழிவகுப்பதோடு, விவசாயிகளுக்குக் கூடுதல் வருமானம் கிடைக்கவும் வழிவகுக்கப்படும் என்பது பாராட்டுதலுக்குரிய அறிவிப்பாகும்.

**தேனீவளர்ப்பு நிதி**

ஒருங்கிணைந்த பண்ணை முறையில் ஒரு பகுதியாக விளங்கும் தேனீ வளர்ப்பை ஊக்கப்



படுத்த 'தேசிய தேனீவளர்ப்பு மற்றும் தேன் திட்டத்திற்கு' 2022–23 ஆம் ஆண்டில் ரூ.100 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலமாக இயற்கை வேளாண்மைக்கு உதவிபுரியும் மகரந்தச் சேர்க்கை அதிகரிப்பு நடக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**ஆளில்லா சிறு ரக விமானப் பயன்பாடுகளை வேளாண் மையில் ஊக்குவித்தல் (வேளாண் ட்ரோன்கள்)**

வேளாண்மையில் ஆளில்லா சிறு ரக விமானங்களைப் பயன்படுத்தி பயிர் மதிப்பீடு, நில ஆவணங்களை டிஜிட்டல் மயமாக்கல், பூச்சிக்கொல்லிகள் மற்றும் ஊட்டச்சத்து தெளித்தலை அதிகரித்தல் போன்றவற்றிற்குப் பயன்படுத்துவதை ஊக்குவிக்க நிதி உதவி அளிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இம்முறையானது திறன்மிகு வேளாண்மையை (Smart Farming) ஊக்குவிப்பதற்கான முதல் முயற்சியாகப் பார்க்கப்படுகிறது. மேலும், மதிப்புக் கூட்டுச் சங்கிலியில் இருக்கும் இடர்பாடுகளைக் களைய இந்த 'வேளாண் ட்ரோன்கள்' உதவுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் இந்த ட்ரோன்கள் உழவர்களுக்கு குறைந்த இடு பொருள்களைப் பயன்படுத்துதல், பாதுகாப்பான வேளாண்முறைகளைக் கையாளுதல், உற்பத்தியை அதிகரித்தல் போன்றவற்றிற்கும் உதவிபுரிகின்றது. விவசாயத்தில் நிலவும் ஆள்பற்றாக்குறை பிரச்சினையைத் தீர்க்கவும் உதவி புரிகின்றது. மேலும் ஊரக இளைஞர்களுக்கும், இளம் தொழில் முனைவோர்களுக்கும் வேலைவாய்ப்பை அதிகரிக்கவும் இந்த ட்ரோன் தொழில்நுட்பம் பயன்படுகின்றது.

**புதுமையான தொடக்க நிலை வணிக அமைப்புக்கள் (வேளாண் ஸ்டார்ட் அப்கள்)**

பொருளாதார ஆய்வறிக்கையானது வேளாண்மையில் செய்யப்படும் மூலதனத்திற்கும், அதன் வளர்ச்சிக்கும் நேரடித் தொடர்பு இருப்பதாகத் தெரிவிக்கிறது. விவசாயத் துறையில் தொடங்கப்படும் 'வேளாண் ஸ்டார்ட் அப்களுக்கும், கிராமப்புற நிறுவனங்களுக்கும் நபார்டு வங்கிகள் மூலம் நிதி உதவி அளிக்கப்படும். இதுபோன்ற நிறுவனங்கள் வேளாண் உற்பத்திச் சங்கங்களுடன் இணைந்து விவசாயிகளுக்கு நவீன வேளாண் இயந்திரங்களை வாடகைக்கு அளிக்கும். இந்தத் துறைகளில் 'ஸ்டார்ட் அப்' நிறுவனங்களுக்கும், விவசாயிகளுக்கான ட்ரோன்களை வழங்குவதற்கும், அதிநவீன வேளாண் தொழில்நுட்பப் பொருள்களை அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் ஏற்படுத்தவும் நிதி உதவி அளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பயன்தரக்கூடிய பிற அறிவிப்புகள்**

**நீர் மேம்பாடு**

நாட்டின் வேளாண் நீர்ப் பாசனப் பரப்பளவை அதிகரிக்கும் நோக்கத்தோடு தமங்கங்கா பிஞ்சல், பார்தாபி நர்மதா, கோதாவரி கிருஷ்ணா, கிருஷ்ணா பெண்ணாறு மற்றும் பெண்ணாறு – காவேரி ஆகிய ஐந்து நதிகளை இணைக்கும் வகையில் கென்–பெத்வா (Ken-Betwa) நதிநீர் இணைப்புத் திட்டம் மேற்கொள்ளப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலமாக 9.08 இலட்சம் ஹெக்டேர் நிலங்கள் பாசன வசதிபெறும். சுமார் 62 இலட்சம் மக்களுக்குக் குடிநீர் வசதி கிடைக்கும். 103 மெகாவாட் நீர்மின் உற்பத்தி மற்றும் 27 மெகாவாட் சூரிய மின்சக்தி உற்பத்தி செய்யப்படுமெனக் கூறப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக 2021–22 ஆம் ஆண்டில் ரூ.4300 கோடியும், 2022–23 ஆம் ஆண்டில் ரூ.1,400 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலமாக தண்ணீர்ப் பற்றாக்குறையைக் குறைக்க முடியும். விளக்கமான சமூக பயன்பாடுசெலவுக் கணக்கீடு மூலமாகவே இத்திட்டத்தால் ஏற்படவிருக்கும் நீண்டகாலத் தாக்கத்தை அறிய முடியும். மேலும் நீர்ப்பாசன மேம்பாடென்பது,



கண்டிப்பாக விவசாயத்தில் ஏற்பட்டிருக்கும் முக்கியப் பிரச்சினையான நீர்ப் பற்றாக் குறையைக் குறைக்க உதவுகின்றது.

**உரங்கள் மற்றும் உணவு மானியங்கள்**

2022–23 ஆம் ஆண்டில் கோடி மானியங்களுக்கு என ரூ. 3,55,639 ஒதுக்கப்பட்டுள்ளது. இது 2021–22 ஆம் ஆண்டைவிட 27.1 சதவீதம் குறைவாகும்.

**உர மானியம்**

2022–23 ஆம் ஆண்டில் உர மானியத்திற்கு ரூ.1,05,222 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இது 2021–22 ஆம் ஆண்டை விட ரூ.34,900 கோடி குறைவானதாகும். டிசம்பர் 2021இல் ஏற்பட்ட கூடுதல் தேவையின் காரணமாக அவ்வாண்டில் அதிகளவு உரமானியம் வழங்கப்பட்டது. சர்வதேச அளவில் உரங்களின் உற்பத்திக்குப் பயன்படும் மூலப் பொருள்களின் விலை அதிகரிப்பே இதற்குக் காரணமாகும்.

**உணவு மானியம்**

2022–23 ஆம் ஆண்டில் உணவு மானியத்திற்கு வழங்கப்பட்டிருக்கும் ஒதுக்கீடு ரூ.2,06,831 கோடியாகும். இது கடந்த ஆண்டை விட 27.8 சதவீதம் குறைவானதாகும். கடந்த இரண்டாண்டுகளில் கோவிட்–19 தாக்கத்தைக் குறைக்கவும் இந்திய உணவுக் கழகத்தின் கடன்களைக் களையவும் உணவு மானியத்திற்கு அதிக ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டிருந்தது.

**உணவுப் பொருள்கள் பதப்படுத்துதல்**

உணவுப் பொருள்கள் பதப்படுத்துதல் துறைக்கான நிதி ஒதுக்கீடு 2021–22 ஆம் ஆண்டில் ரூ.1304.12 கோடி என்ற அளவிலிருந்து 125.6 சதவீதம் அதிகரித்து 2022–23 ஆம் ஆண்டில் ரூ.2941.99 என்ற அளவிற்கு அதிகரித்துள்ளது. பொருளாதார ஆய்வறிக்கை 2021–22 இன் படி, உணவுப் பதப்படுத்துதல் துறையின் வளர்ச்சியானது கடந்த ஐந்தாண்டுகளில் ஆண்டொன்றின் சராசரி வளர்ச்சி 11.18 சதவீதம் உயர்ந்துள்ளது. இந்தத் துறையானது, தொழில்துறையின் மொத்த மதிப்பு சேகரிப்பில் 9.87 சதவீதப் பங்கினைக் கொண்டுள்ளது.

2017–18 ஆம் ஆண்டின் தொழில் நிறுவனங்களின் வருடாந்திரக் கணக்குப்படி, உணவுப் பதப்படுத்துதல் துறையின் மூலமாக 19.33 இலட்சம் பேர் நேரடியான வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளனர். மேலும் தேசிய மாதிரி ஆய்வு அலுவலகத்தின் (NSSO - 2015-16) கணக்கீட்டின் படி பதிவு செய்யப்படாத உணவு பதப்படுத்துதல் தொழிற்சாலைகளின் மூலம் 51.11 இலட்சம் மக்கள் வேலை வாய்ப்பைப் பெற்றுள்ளனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே அதிகமான சந்தை வாய்ப்புகளைக் கவரவும், உணவுப் பொருள்கள் பதப்படுத்துதல் துறையின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், இத்துறைக்கு அதிகரிக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு வழங்க இது வழிவகை செய்கிறது.

**பிரதான் மந்திரி கிசான் சம்பதா யோஜனா**


மிகப்பெரிய உணவுப் பூங்காக்கள், உணவுப் பதப்படுத்துதல் பகுதிகளுக்கான உள்கட்டமைப்பு, ஒருங்கிணைக்கப் பட்ட குளிர் சேமிப்புச் சங்கிலி மற்றும் மதிப்புக் கூட்டுதலுக்கான உள்கட்டமைப்பு, உணவு பதப்படுத்துதல் கட்டமைப்புகளை உருவாக்குதல் மற்றும் விரிவாக்குதல், பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருள்களை சந்தைப் படுத்தும் வழியின் இணைப்புகளை விரிவாக்குதல் போன்ற பல நோக்கங்களோடு செயல்படும் இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு 2021–22 ஆம் ஆண்டில் ரூ.791 கோடியிலிருந்து 2022–23 ஆம் ஆண்டில் 13.8 சதவீதம் அதிகரிக்கப்பட்டு ரூ.900 கோடியாக ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலமாக உணவு பொருள்கள் பதப்படுத்தும் தொழில் நிறுவனங்களின் உள்கட்டமைப்பு வசதி அதிகரிப்பதுடன், பல்வேறு மக்களுக்கான வேலைவாய்ப்பும் அதிகரிக்கப்படும்.

**உற்பத்தி சார்ந்த ஊக்கத் தொகை திட்டம்**

இந்தியத் தொழில் நிறுவனங்களின் உற்பத்தித் திறன்களை அதிகரிக்கவும், ஏற்றுமதியை ஊக்குவிக்கவும் உணவுப் பொருள்கள் பதப்படுத்தும் நிறுவனங்களின் உற்பத்தி சார்ந்த ஊக்கத் திட்டம் 2022–23 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. உலகளாவிய உணவு உற்பத்தியாளர்கள் உருவாக ஆதரவளித்தல், இந்திய உணவுப் பொருள்களை சர்வதேச சந்தைகளில் வியாபாரப்படுத்துதல், வேலைவாய்ப்புகளை அதிகரித்தல், வேளாண் விளைபொருள்களின் விலையை அதிகப்படுத்தி, விவசாயிகளின் வருமானத்தை அதிகரித்தல் போன்ற நோக்கங்களோடு இத்திட்டமானது அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

**சிறிய அளவிலான உணவுப் பொருட்கள் பதப்படுத்துதல் நிறுவனங்களைத் துவக்கும் பிரதம மந்திரியின் திட்டம்**

ஆத்ம நிர்பார் பாரத் திட்டத்தின் கீழ் 2020 ஆம்



ஆண்டில் 2 இலட்சம் சிறு அளவிலான உணவுப்பொருள்கள் பதப்படுத்தும் நிறுவனங்களை ஊக்குவிக்கும் வகையில் உருவாக்கப்பட்ட இத்திட்டத்திற்கு 2022–23 ஆம் நிதியாண்டில் ரூ900 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இளைய தலைமுறைக்கு அதிக வேலைவாய்ப்பளிக்க இத்திட்டம் உதவுகின்றது.

**ஊரக வேலைவாய்ப்புத் திட்டம்**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்திற்கு 2022–23 ஆம் ஆண்டில் ரூ73,000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டை விட 25.5 சதவீதம் குறைவாகும். 202122 ஆம் ஆண்டின் பட்ஜெட்டில் ரூ.73,000 கோடியாக ஒதுக்கப்பட்ட நிதி கோவிட் 19 தாக்கத்தின் காரணமாக மாற்றியமைக்கபட்ட பட்ஜெட்டில் (RE) 34.2 சதவீதம் அதிகரித்து ரூ.98,000 கோடி ஒதுக்கப்பட்டது.

பிரதம மந்திரி கதி சக்தி திட்டமானது விவசாயிகள், மற்ற சந்தைப் பகுதிகளை இணைக்க உதவுகின்றது.

**எதிர்பார்க்கப்படும் பலன்கள்**

மத்திய அரசின் 2022–23 ஆம் ஆண்டின் வேளாண்துறைக்கான பட்ஜெட்டானது வேளாண் நிதி கிடைக்கச்செய்தல், சந்தைப் பகுதியை எளிதாக அடைய வகை செய்தல், சிறந்த விவசாய முறைகளை ஊக்குவித்தல், ட்ரோன் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல் போன்றவற்றை உள்ளடக்கிய தொலைநோக்குத் திட்டங்களுடன் உள்ளது. பருவ நிலை மாற்றங்கள், பூச்சி, நோய் தாக்குதல்கள், சந்தை ஏற்றத்தாழ்வு போன்ற பிரச்சினைகளிலிருந்து விவசாயிகளைப் பாதுகாக்கும் விதத்தில் விவசாயிகள் நல ஆதரவு மற்றும் விலை ஆதரவுத் திட்டங்களான பி.எம்.கிசான், விலை ஆதரவுத் திட்டம், பயிர்க் காப்பீட்டுத் திட்டம், நீர்ப்பாசன மேம்பாட்டுத் திட்டம் போன்றவற்றிற்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டிருப்பதால் தகுந்த நேரத்தில் வேளாண் இடுபொருள்களை வாங்கவும், விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கவும் வழிவகை செய்கிறது. டிஜிட்டல் வேளாண்மை, வேளாண் தொழில்நுட்ப ஸ்டார்ட் அப்கள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் போன்றவை வரவேற்கத்தக்க முன்னறிவிப்புகளாகும். மத்திய பட்ஜெட் 2022, உறுதியான சந்தை மற்றும் உணவு தானியங்களுக்கான உறுதியான விலை, விவசாயிகளின் வருமானத்தையும், வாழ்வாதாரத்தையும் உறுதிசெய்தல், பயிர் இழப்பு மற்றும் பிற இடர்ப்பாடுகளை பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் குறைத்தல், வேளாண்மையில் டிஜிட்டல் தொழில்நுட்பங்களின் பங்களிப்பை அதிகரிக்கச் செய்தல், ஊரக இளைஞர்களின் வேலை வாய்ப்பை அதிகரிக்கச் செய்தல், இளைய தொழில்முனைவோர்களை ஊக்குவித்தல், ஆளில்லா சிறுரக விமானங்களை (ட்ரோன்) புதுமையான முறையில் பயன்படுத்துதல், இரசாயனமில்லா இயற்கை வேளாண்மை மற்றும் கார்பன் நடுநிலைப் பொருளாதாரத்திற்கு வழிவகை செய்தல், நீர்ப்பாசனப் பரப்பளவு, பயிர் உற்பத்தி மற்றும் பண்ணை வருமானம் போன்றவற்றை அதிகரித்தல் போன்றவற்றின் மூலம் நேர்மறையான விளைவுகளை ஏற்படுத்துகிறது.

சுருக்கமாக, மத்திய பட்ஜெட் 2022–23 இந்திய விவசாயம், அதனைச் சார்ந்த துறைகளின் வளர்ச்சியை அதிகரிக்க ஊக்குவிப்பதுடன், இந்திய விவசாயத்தை நவீன தொழில்நுட்ப யுகத்திற்கு வழி நடத்துவதாக அமைகிறது.

---

– **தே.சுரேஷ்குமார்**, பேராசியர் மற்றும் துறைத்தலைவர்

– **வெ.சரவணகுமார்**, இணைப் பேராசிரியர்

– **ந.கிருத்திகா**, உதவிப் பேராசிரியர், வேளாண் பொருளியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்.



திறன் இந்தியா

# வேலைவாய்ப்பும் மனிதவள மேம்பாடும்

- **அருண் சாவ்லா**

கோவிட் 19 பெருந்தொற்றானது உலகம் முழுவதிலும் உள்ள மக்களின் பொருளாதார நலவாழ்வையும், நீண்டகால வாழ்வாதாரங்களையும் மிகவும் கடுமையாக பாதித்துள்ளது. இந்த நெருக்கடியானது அனைத்து சமூக பொருளாதாரப் பிரிவுகளையும் சேர்ந்த மக்கள் மீது பாதிப்பை ஏற்படுத்தியுள்ள போதிலும் நலிவடைந்த பிரிவினர் இதனால் கூடுதலான பாதிப்புக்கு ஆளாகியுள்ளனர். முறைசாரா தொழில் பிரிவில் வேலைசெய்தல், நிச்சயமற்ற வருமானம், சேமிப்பு மிகவும் குறைவாக இருக்கும் நிலை, தொழில்நுட்பம் உட்பட மூலவளங்களைப் பெற முடியாத நிலை என இந்த நலிவடைந்த பிரிவினர் பெருமளவில் பெருந்தொற்றுப் பரவலால் பாதிக்கப்பட்டுள்ளனர். பொருளாதார வளர்ச்சிக்கும் இளம் வயதுப் பிரிவினர் அதிகமாக உள்ள மக்கள்தொகை என்ற இந்திய சிறப்பம்சத்தின் பலனைப் பெறுவதற்கும் தொழில்திறன் மேம்பாடு என்பது மிகவும் முக்கியமான அம்சமாகும். நமது மக்கள் தொகையில் சுமார் 65 சதவிகிதம் பேர் 35 வயதிற்கும் குறைவாக உள்ள இளம் வயதினர் அடுத்த 25 ஆண்டுகளுக்கு நீடித்து இருப்பார்கள் என எதிர்பார்க்கப்படுவது சிறப்பம்சமாகும். வயதானவர்களை அதிகமாகக் கொண்ட மக்கள் தொகையை மிகவும் வளர்ந்த நாடுகள் பெற்றிருக்கும் போது, தொழில்திறன் பெற்ற மனிதவளத்தை உருவாக்கும் வாய்ப்பை இந்தியா பெற்றுள்ளது. இதனால் உலகின் தொழில்திறன் மையமாக இந்தியா மாறி வருகிறது.

**கொ**ரோனா பெருந்தொற்றானது தொழில்நுட்பத்தை ஏற்றுப் பயன்படுத்துதல், தொடர்ச்சியாக புத்தாக்கங்களைக் கண்டுபிடிக்க வேண்டிய தேவை ஆகியவற்றை விரிவுபடுத்துவதோடு பணிபுரியும் சூழலையும் மாற்றியுள்ளது. செயற்கை நுண்ணறிவு,ப் பெருந்தரவுகள், இன்டர்நெட் ஆஃப் திங், பிளாக் செயின், 3டி அச்சிடலும் வடிவமைப்பும், ஏஆர் / விஆர், ரோபோட்டிக்ஸ், தரவு அறிவியல், குவாண்ட்டம் கம்ப்யூட்டிங், சைபர் பாதுகாப்பு போன்ற நவீன தொழில்நுட்பங்கள் தற்போதுள்ள வர்த்தகங்களை உருமாற்றி உள்ளதோடு, கடந்த காலத்தில் இல்லாத புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் இவை வழிவகுத்துள்ளன. அதிலும் வருங்காலத்தில் எதிர்பார்த்திராத எண்ணற்ற வேலைவாய்ப்புகளை இவை உருவாக்கும். ஏற்கனவே உள்ள பணியாளர்களும், புதிய பணியாளர்களும் முன்னெப்போதும் இல்லாத வகையில் மிகச் சுறுசுறுப்பானவர்களாக, நிலைமைக்குத் தகுந்தபடி தங்களை மாற்றிக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கவேண்டும். மேலும் அவர்கள் தங்களது அறிவு மற்றும் தொழில்திறன்களை தொடர்ந்து மேம்படுத்திக் கொள்ள வேண்டிய தேவையும் உள்ளது. பல்கலைக் கழகப் பட்டம் என்பதில் இருந்து வாழ்நாள் முழுவதுக்குமான கற்றல் என்பதாக கல்வி பற்றிய கருத்தாக்கம் இன்று மாறியுள்ளது.

பெருந்தொற்றுக் காலத்திற்கு முன்பே கூட, பல T-20 நாடுகளில் வேலைவாய்ப்பு வகைப்பாடானது மாறத் தொடங்கியிருந்தது. அதிக அளவு அறிதலும், சமூக உணர்வுத் திறன்களும் தேவைப்படும் வேலைகளை நோக்கியோ அல்லது தரநிலைப்படுத்தப்படாத பணி இலக்குகளை நோக்கியோ வேலைவாய்ப்பு மடைமாறியுள்ளது. வழக்கமான முறையிலான வேலைகள் பெரும்பாலும் தானியங்கி வேலைகளாக மாற்றப்பட்டு வருகின்றன அல்லது பல நிலைகளில் இந்த வேலைகள் அயல்நாடுகளுக்குத் தரப்படுகின்றன. இந்தப் போக்கு கோவிட் பெருந்தொற்றுக்குப் பிறகான காலத்திலும் தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது. எஃப்ஐசிசிஐ எதிர்காலத் தொழில்திறன்கள் அறிக்கை 2020இன்படி, கோவிட் பெருந்தொற்றுக்குப் பிறகான காலகட்டத்தில் உற்பத்தி சார்ந்த தொழில் பிரிவில் முக்கியமான ஐந்து தொழில் திறன்கள் தேவைப்படும். அவை:

1. தரவு குறித்த அடிப்படை அறிவு
2. டிஜிட்டல் மற்றும் கோடிங்
3. விமர்சனப்பூர்வமான சிந்தனை
4. படைப்பாக்கம், புத்தாக்கம் மற்றும்
5. தொழில்நுட்பம் குறித்த செயல்முறை அறிவு ஆகியவையாகும்.

இந்த பட்ஜெட்டானது தொழில் துறையின் மாறிவரும் தேவைகள் குறித்து அங்கீகரித்துள்ளது.




21ஆம் நூற்றாண்டு தொழில் திறன்களுடன் நமது ஆற்றல் மிக்க பணியாளர்களை வலுப்படுத்துவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மத்திய பட்ஜெட் 2022-23 தொழில் திறன் பயிற்சித் திட்டங்களை அறிவித்து இருப்பதோடு, தொழிற்சாலைகளுடன் இணைந்து பங்கேற்பதற்கான அறிவிப்பையும் வெளியிட்டிருக்கிறது. தொடர்ச்சியாக தொழில்திறன் வாய்ப்புகளை அதிகரித்தல், நீடித்த நிலையான பயிற்சியும், வேலைகளும் கிடைப்பதற்கான திறன்கள் கைவரப் பெறுதல் ஆகியவற்றுக்காகவே இந்தப் பங்கேற்பு முன் வைக்கப் படுகிறது. மாறிவரும் தொழிற்சாலைத் தேவைகளுக்கு தேசிய தொழில்திறன் தகுதி நிலைகள் வரைவுச் சட்டகம் (NSQF) என்பதைச் சீரமைப்பது குறித்தும் பட்ஜெட் எடுத்துரைக்கிறது. குறிப்பிட்ட காலகட்டம் வரை நீடித்து நிலையாக இருக்கும் வகையில் வேலை கிடைப்பதற்கான திறன்கள் பெறுவதை மேம்படுத்தும் பணியில் இது ஒரு முக்கியமான நடவடிக்கையாகும். கவனமும் முயற்சிகளும் தேவைப்படுகின்ற இன்றைய தலைமுறைக்கான தொழில்திறன்களில் புவிசார் இடத் தொழில்நுட்பங்கள், ட்ரோன்கள் இயக்குதல், தூய்மையான போக்குவரத்து, பசுமை எரிசக்தி, மரபணுத் தொகையியல் ஆகியவை குறிப்பிடத்தக்க சில திறன்கள் ஆகும். இவை தொழிற்சாலைகளின் தேவைகளுக்கு ஏற்றதாக உள்ளன. வளர்ச்சி பெற்று வரும் இந்தத் தொழில் பிரிவுகள் திறன்மிக்க பணியாளர்களுக்கு எண்ணற்ற வேலைவாய்ப்புகளை வழங்குகின்றன.

தேசிய தொழில்திறன் தகுதி நிலைகள் வரைவுச் சட்டகம் பெருந்தொற்றுப் பரவலுக்கு முன்பாகவே தயாரிக்கப்பட்டிருந்தது. தொழிற்சாலைகளின் தேவைகளுக்கு ஏற்ப அதனை தரநிலை உயர்த்துவதற்கான வாய்ப்பாக இந்தத் தருணம் வாய்த்துள்ளது. பாடத் திட்டத்தை வடிவமைப்பதில் பங்கேற்றல் என்பதைத் தாண்டி தொழிற்சாலைகள் தேசிய தொழில்திறன் தகுதி நிலைகள் வரைவுச் சட்டத்தின் தேசிய தொழில்சார் தரநிலைகள் உருவாக்கத்திற்கு தங்களது கருத்துகளை வழங்கலாம். பயிற்சி நிறுவனங்களோடு பங்கேற்று தொழிற்சாலை அனுபவத்தோடு பயிற்சியாளர்களை உருவாக்குதல் என்பதையும் இதில் சேர்த்துக் கொள்ளலாம். குறிப்பிட்ட கால இடைவெளிகளில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்தல் இதில் முக்கியமானதாகும். காலத்திற்குப் பொருத்தமான தொழில்களிலும், தொழில் பிரிவுகளிலும் வேலை அளிப்பவரின் விருப்பத்திற்கு ஏற்றவாறும் பயிற்சி அளிக்க வேண்டும். தொழிற்சாலை 4.0 என்பதற்கு ஏற்ற தொழில் திறன்களை இளைஞர்கள் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகள் உருவாகும். இதன் மூலம் சரியான வேலை பெறுவதற்கான வாய்ப்புகளும் கிடைக்கும்.

இன்றைய காலகட்டத்தின் தேவை என்பது தொழில்நுட்பப் பரிணாம வளர்ச்சியின் போக்கைப் புரிந்து கொள்வதே ஆகும். இந்தப் பெரும்போக்கு வேலைகள் உலகத்திற்கு எந்த அர்த்தத்தைத் தருகிறது என்பதையும் புரிந்துகொண்டாக வேண்டும். விரைவாக மாறிவரும் தொழிற்சாலைச் சூழலில், இன்றைய கற்போர் வேலை கிடைப்பதற்குத் தேவையான திறன்களைப் பெற்றாக வேண்டும். இந்தத் திறன்கள் பலதரப்பட்ட வேலைவாய்ப்புகளுக்கும் பரிமாற்றம் செய்து கொள்வதாகவே இருக்கும். மாறிவரும் தொழிற்சாலைச் சூழலில் வர்த்தகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான தங்களது அணுகுமுறையை மாற்றி அமைத்துக் கொள்ளவும் இந்தத் திறன்கள் உதவிகரமாக இருக்கும். கற்போர் வெறுமனே தொழில்நுட்பத் தகுதி பெறுதல் என்பதைத் தாண்டி தானியங்கி உலகத்துக்கு ஏற்றவாறு மிகப் பொருத்தமான திறன்களைப் பெற திட்டமிட வேண்டும். வருங்காலங்களில் நமது வாழ்வின் அனைத்துப் பரிமாணங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் இடையூறைத் தாண்டியும் வேகமாக முன்னேறிச் செல்வதற்கு உணர்வுசார் நுண்ணறிவு, துரிதமாகக் கற்றுக் கொள்ளுதல், படைப்பாக்கம், உறவுகளை உருவாக்கிக் கொள்ளுதல் மற்றும் தலைமைத்துவத் திறன்கள் தேவைப்படுகின்றன.



**வேலைவாய்ப்பு**

இந்தியாவின் மக்கள் தொகையில் வேலை செய்யும் வயதுப் பிரிவில் 62 சதவிகிதம் பேர் உள்ளனர் என கணக்கிடப் பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் தோராயமாக 10 மில்லியன் நபர்கள் வேலை தேடுபவர்களின் பட்டியலில் சேர்கின்றனர். நாட்டின் தற்போதைய உழைப்பாளர் சக்தியின் பங்கேற்பு விகிதம் சுமார் 49 சதவிகிதம் ஆகும். இதன் அர்த்தம் என்னவென்றால், வேலைசெய்யும் வயதுப் பிரிவில் உள்ளவர்களில் சுமார் பாதிப் பேர் தான் சம்பளம் கிடைக்கும் வேலையில் உள்ளனர் என்பதாகும். சர்வதேச அளவில் ஏற்பட்டு வரும் வளர்ச்சி வேகத்திற்கு ஈடுகொடுக்க வேண்டும் என்றால், இந்தியா 2020ஆம் ஆண்டுக்கும் 2030ஆம் ஆண்டுக்கும் இடையில் குறைந்த பட்சம் 90 மில்லியன் விவசாயம் சாராத வேலைகளை உருவாக்க வேண்டிய தேவை இருக்கிறது.

தொழில்நுட்பம் விரைவான மாற்றங்களை ஏற்படுத்துவதோடு மனித உழைப்பைச் சார்ந்திருக்க வேண்டிய தேவையையும் குறைக்கிறது. மேலும் தொழில் திறன் பெற்ற பணியாளர்களின் பற்றாக்குறை அதிகரித்துக் கொண்டே வருவதாக "வேலை வாய்ப்பு நிலவரம்" எடுத்துக் காட்டுகிறது. தொழில்நுட்பம், தன்னியக்கமாதல் இரண்டும் வேலை என்பதை மறுவகைப்பாடு செய்தல், மீள்சமநிலை ஆக்குதல் என்ற விளைவுகளுக்கு காரணமாகியுள்ளன. தானியங்கி முறைக்கு மாற்ற முடியாத பணிகளை மேற்கொள்கின்ற தொழிலாளர்கள் கூடுதலான மதிப்பு உடையவர்களாகக் கருதப் படுவார்கள். இதன் அர்த்தம் என்னவென்றால் படைப்பாக்கம், புத்தாக்கம், கற்பனை மற்றும் வடிவமைப்பு திறன்கள் ஆகியவை வேலை அளிப்போரின் முன்னுரிமைப் பட்டியலில் முன்வரிசையில் உள்ளன என்பதாகும். 2030ஆம் ஆண்டுக்குள் உலகம் முழுவதும் தன்னியக்க முறை மற்றும் ஸ்மார்ட் இயந்திரங்கள் 20 மில்லியன் வேலைகளை இல்லாமல் செய்து விடும் என்று சொல்லப்படுகிறது. அதே போன்று, உலக அளவில் 2022ஆம் ஆண்டின் தொடக்க காலகட்டத்திலேயே 133 மில்லியன் புதிய வேலைகள் உருவாக்கப்படும் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது.

பெருந்தொற்றின் காரணமாக ஏற்பட்டுள்ள மிக முக்கியமான நிகழ்வு எதுவெனில் தொலைதூரத்தில் இருந்து வேலை செய்வதற்கான தேவை அதிகரித்து வருவதே ஆகும். இது தொழிலாளர் சந்தையில் குறிப்பிடத்தக்க அளவில் நீண்டகால பாதிப்பை ஏற்படுத்தும். சர்வதேச அளவில் மார்ச் 2020 முதல் அலுவலகப் பணியிடம் இல்லாமல் வேறு ஒரு இடத்தில் இருந்து வேலை செய்கின்ற வேலைகள் நான்கு மடங்கு அதிகரித்துள்ளதை நாம் பார்க்க முடிகிறது. வேலை தேடுவோரிடமும் இந்தப் போக்கு காணப்படுகிறது. மார்ச் 2020இன் தொடக்கத்தில் இருந்து லிங்க்டுஇன் (LinkedIn) தளத்தில் "தொலைதூரம்" (Remote) என்ற வடிகட்டியைப் பயன்படுத்தி வேலை தேடும் எண்ணிக்கை 60 சதவீதம் அதிகரித்துள்ளது. தொலைதூரத்தில் இருந்தே வேலை செய்தல் என்ற போக்கின் பரவலும், மெய்நிகர் உலகு அதிகரித்தலும் மக்கள் ஒருவருக்கு ஒருவர் தொடர்பு கொள்வதிலும் தங்களுக்கான இடைப்பிணைப்பை ஏற்படுத்திக் கொள்வதிலும் உள்ள தடைகளைக் குறைக்கின்றன என்பது கண்கூடாகத் தெரிகிறது.

தொலைதூரத்தில் இருந்து வேலை செய்தல் என்னும் போக்கு அதிகரித்து வருவதால், வேலை வாய்ப்புகளில் ஜனநாயகம் மற்றும் உலகம் முழுவதும் தொழில் திறன்களின் நகர்வு மாற்றம் என்ற ஆச்சரியமூட்டும் போக்குகளை நாம் காண முடிகிறது. நிறுவனங்கள் எளிதில் பலதரப்பட்ட திறன் உள்ளவர்களை நியமித்துக் கொள்ள முடியும். அதிலும் மிகவும் குறிப்பாக தங்களது துறையில் சரியான முறையில் பிரதிநிதித்துவம் இல்லாத குழுக்களில் இருந்தும் அல்லது உள்ளூர் அளவில் தொழில் திறன் உள்ளவர்கள் குறைவாக இருக்கும் போது அத்தகையவர்களையும் தொலைதூரப் பணி என்ற வாய்ப்பின் மூலம் நிறுவனங்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ள முடியும்.

2015இல் அறிவிக்கப்பட்ட "டிஜிட்டல் இந்தியா" என்ற முன்னெடுப்புத் திட்டமானது தொழிலாளர்கள் டிஜிட்டல் திறன் மிக்கவர்களாக மாற வேண்டும் என்ற செயல்திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதில் மிகப்பெரும் பங்காற்றியுள்ளது. தகவல் தொழில்நுட்பம், குடிமக்களுக்கு அதிகாரம் அளித்தல், ஊரகம் நகரம் இரண்டிற்குமான இடைவெளியை இட்டு நிரப்புதல், அதன் மூலம் அரசு சேவைகளை மேம்படுத்துதல் ஆகியவற்றிற்கும் டிஜிட்டல் இந்தியா உந்துதலாக இருந்துள்ளது. இந்தத் திசையில் அடுத்து எடுத்து வைக்க வேண்டிய அடியாக தொழில்திறன் மற்றும் வாழ்வாதாரத்திற்கான டிஜிட்டல் சூழல்சார் அமைப்பைத் தொடங்குகின்ற முன்மொழிவு (DESH-Stack e-portal) மத்திய பட்ஜெட் 2022-23இல் அறிவிக்கப்பட்டுள்ளது. குடிமக்கள் ஆன்லைன் பயிற்சி மூலம் திறன் பெறுதல், மீள்திறன் பெறுதல், திறன்களின் தரநிலையை உயர்த்துதல் ஆகியவற்றில்



அதிகாரம் அளிப்பதை இந்தப் இணைய முகப்பு இலக்காகக் கொண்டுள்ளது. ஏபிஜ அடிப்படையிலான நம்பகமான தொழில் திறன் பயிற்சி முடித்ததற்கான சான்றிதழ்கள், பணம் செலுத்துகை, ஏற்ற வகையிலான பொருத்தமான வேலைகள், தொழில்முனைவு வாய்ப்புகள் ஆகியவற்றைக் கண்டறிவதற்கான கண்டுபிடிப்பு அடுக்குகள் போன்றவற்றையும் இந்தப் முகப்பு வழங்குகிறது. மின்னணுப் புரட்சியின் பலன்களைப் பயன்படுத்திக் கொள்ளுதல் என்பது இந்தியாவின் தொழில் திறன் இடைவெளியைக் குறைப்பதில் முக்கியமான பங்காற்றும். மின்னணு இந்தியாவானது அதிக வளர்ச்சி, அதிக உற்பத்தித் திறன், மத்திய வருவாய் நாடு என்ற அரசின் தொலைநோக்குப் பார்வையை நடைமுறைப்படுத்துவதிலும் முக்கிய பங்கினை ஆற்றும்.

உதயம் (குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் உருவாக்கி இருக்கும் தொழில்முனைவோருக்கான சுயஒப்புதல் முகப்பு), இஷ்ரம் (தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் உருவாக்கியுள்ள ஒருங்கிணைக்கப்படாத தொழில் பிரிவுகளில் உள்ள தொழிலாளர்களுக்கான மையப்படுத்தப்பட்ட ஒரு தரவுத் தொகுப்பு), என்சிஎஸ் (தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் உருவாக்கியுள்ள வேலை தேடுவோர், வேலை தருபவர்கள், தொழில்திறன் பயிற்சி அளிப்போர், பணிவாய்ப்பு ஆலோசகர்கள் ஆகியோர்களை இணைப்பதற்கான ஒரு முகப்பு) மற்றும் திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் அமைச்சகம் உருவாக்கியுள்ள சந்தைத் தேவைக்கேற்ப தொழில்திறன் பெற்ற பணியாளர்களை வழங்கும் நடவடிக்கைக்கு உதவுவதற்கான ஒரு முகப்பு ஆகியவற்றுக்கு இடையில் இணைப்பு ஏற்படுத்துதல் என்பது சரியான நேரத்தில் நடைமுறைக்கு வந்துள்ளது. இவை இப்போது நிகழ்நேரம், உறுப்பு முறை தரவுத் தொகுப்புகள், அரசிடம் இருந்து குடிமக்களுக்கு சேவைகள் (G2C), நிறுவனங்களில் இருந்து நுகர்வோருக்கு சேவைகள் (B2C) மற்றும் ஒரு நிறுவனத்தில் இருந்து மற்றொரு நிறுவனத்திற்குச் சேவைகள் (B2B) ஆகியவற்றுக்கான முகப்புகளாக விளங்கும். கடன்பெறும் வசதி, தொழில்திறன் பெறுதல், பணியமர்த்துதல் தொடர்பான இத்தகைய சேவைகள் பொருளாதாரத்தை மேலும் முறைமைக்கு உட்பட்டதாக மாற்றுவதோடு அனைவருக்கும் தொழில் முனைதலுக்கான வாய்ப்புகளை மேம்படுத்தவும் செய்யும்.

## மனிதவள மேம்பாடு

ஒரு நாட்டின் வளர்ச்சிக்குத் தேவைப்படும் உந்துசக்தியாக மனிதவளம் செயல்படுகிறது. மிகவும் சிக்கலான சமூக பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு சிக்கனமான, லகுவான தீர்வுகளைக் கண்டறிய தொழில்திறன் தொகுப்புகள், தகுதிகள், அறிவு மற்றும் மனப்பாங்கு போன்ற முக்கியமான பண்புகள் உதவுகின்றன. "கல்வி மற்றும் தொழில் திறன்கள் செயல்திட்டம்" 2030-க்கான அறிக்கையின்படி படைப்பாக்கம், விமர்சனப்பூர்வமான சிந்தனை முறை, தொடர்பியல் மற்றும் ஒருங்கிணைந்து செயலாற்றுதல் போன்ற 21ஆம் நூற்றாண்டின் தொழில்திறன்களுடன் அறிவை இணைக்கின்ற ஒரு கல்வி வரைவுச்சட்டகமே பழைய கல்வித் தரநிலைகளுக்கு மாற்றாக நமக்குத் தேவைப்படுகிறது. கரும்பலகையில் இருந்து மெய்நிகர் முறைக்கு வகுப்புகளை மாற்றுதல் மூலம் எளிதாக இதை நாம் அடைந்துவிட முடியாது. மாறாக, நாம் அறிவியலையும், தொழில் நுட்பத் திறன்களையும் கற்பிக்கின்ற மற்றும் கற்றுக் கொள்கின்ற முறையில் புரட்சிகரமான மாற்றத்தினைச் செய்யவேண்டும். உள்ளடக்கத்தை ஒருவழித் தொடர்பியல் மூலம் தெரியப்படுத்துதல், மனப்பாடம் செய்தல் என்பதில் இருந்து தனிநபருக்கான சுயகற்றல் முறைக்கு மாறுவதும் அவசியமாகும்.

ஐந்து ட்ரில்லியன் அமெரிக்க டாலர் அளவிலான பொருளாதார நாடாக மாற வேண்டும் என்ற இந்தியாவின் தொலைநோக்குப் பார்வையானது, மனித மூலதன அபிவிருத்தியோடு அதைத் திறம்பட நிர்வகிப்பதிலும் நெருங்கிய உள்தொடர்பு உடையதாக இருக்கிறது. தொழில் வளர்ச்சிக்கான தனது திறன்மிக்க பங்களிப்பின் மூலம் நகரத்தில் உள்ள மனிதவளம் நமது ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் மிகப் பெரிய அளவில் வளர்ச்சி ஏற்படுவதற்கு மிக முக்கியமான பங்கினை ஆற்ற முடியும். இந்தியா தனது சுதந்திரத்தின் 100ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாட இருக்கும் 2047ஆம் ஆண்டில் இந்தியாவின் மக்கள்தொகையில் பாதியளவு பேர் நகரப் பகுதிகளில் வசிப்பார்கள். இந்த இடைமாற்றத்துக்கு உதவும் போது நாம்

I. நமது நகரங்களுக்கான முறையான திட்டமிடல்

II. வேலை செய்யக்கூடிய வயதுப்பிரிவில் அதிக எண்ணிக்கையில் மக்கள் இருக்கும் சாதகமான அம்சத்தை பயன்படுத்திக் கொள்ளும் வகையில் மனித வளத்தை மேம்படுத்துதல்

ஆகிய இரண்டு சவால்களைச் சந்திக்க வேண்டியதாக இருக்கும். நமது இளைஞர்களை சமுதாயப் பொருளாதார வளர்ச்சியில் ஈடுபடுத்துவதன் மூலம் இதை சாத்தியமாக்கலாம்.

நகரப்புற இந்தியாவில் எழுத்தறிவு விகிதம் அதிக அளவில் இருந்தாலும் (88 சதவீதத்திற்கு நெருக்கமாக எழுத்தறிவு) இளைஞர்களிடமும் (15-29 வயதுப்பிரிவு) வேலை செய்யத் தகுதி பெற்ற வயதுப் பிரிவினரிடமும் (15-59 வயதுப்பிரிவு) முறையான தொழில்பயிற்சி / தொழில்நுட்பப் பயிற்சி மிகவும் குறைவாக இருப்பது கண்டறியப்பட்டிருக்கிறது.

கல்வி வழங்குவதிலும், கல்வி –தொழில்திறன் பயிற்சி– வேலைவாய்ப்பு – மற்றும் தொழில்முனைதல் (ESEE) ஆகியவற்றுக்கான சூழல் சார் அமைப்பை வடிவமைப்பதிலும் வேலை தரும் நிறுவனங்கள் ஈடுபட வேண்டிய தேவை இப்போது உள்ளது. இந்த அணுகுமுறையானது தொடக்கக்கல்வி நிலையில் இருந்து உயர்கல்வி நிலைவரை நீடித்து வேலை கிடைக்கும் வரை என கற்போரின் ஒட்டுமொத்த வாழ்க்கைச் சுழற்சி வட்டத்துக்கும் பொருந்துவதாக இருக்க வேண்டும். நகரங்களிலும், புதிதாக உருவாக இருக்கும் ஊரகக் குடியமர்வுப் பகுதிகளிலும் சமூக பொருளாதார வளர்ச்சிக்கான பாதையை உருவாக்கும் பல்துறை சார்ந்த அணுகுமுறையுடன் நமது இளைஞர்களுக்கு கல்வி, தொழில்திறன், வேலைவாய்ப்பு, தொழில்முனைவு (Education, Skilling, Employment, and Entrepreneurship - ESEE) ஆகியவை அடங்கிய அமைப்பை மேலும் அபிவிருத்தி செய்து வழங்க வேண்டும்.

மனப்பாட முறையிலான கற்றலைத் தவிர்ப்பதற்கு உதவக் கூடிய வகையில் வரைவுச் சட்டகத்தை உருவாக்க வேண்டும் என்பதை தேசிய கல்விக் கொள்கை (NEP) 2020 எடுத்துச் சொல்கிறது. விசாரணை அடிப்படையிலான, செயல்திட்டம் சார்ந்த கல்விக்கான சூழல்சார் அமைப்பின் ஒருங்கிணை வுக்கும் இந்தக் கல்விக் கொள்கை உதவி செய்கிறது. இது கற்றலால் ஏற்படும் நன்மைகளை அதிகரிப்பதோடு தனிநபர்கள் முழுமையான, ஒட்டுமொத்த வளர்ச்சியைப் பெறுவதற்கும் உதவுகிறது.

தேசிய கல்விக் கொள்கையானது பல்துறை சார்ந்த அணுகுமுறைக்கான தேவையை எடுத்துக் காட்டும் அதே சமயத்தில் கலைசார் கல்விக்கான முக்கியத்துவத்திலும் கவனம் செலுத்துகிறது. இந்தக் கலைசார் கல்வியானது மனிதர்களின் அனைத்துத் திறமைகளையும் அதாவது அறிவுத்திறன், அழகியல், சமூக உணர்வு, உடல்திறன், உணர்வு மற்றும் ஒழுக்கவியல் திறன்களை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்த உதவுகிறது. தற்போதைய சூழலில், கல்வியாளர்கள் முன்பு மனிதவள மேம்பாடு குறித்த சில அடிப்படையான கேள்விகள் உள்ளன. சூழலுக்கு ஏற்ப தகவமைத்துக் கொள்பவர்களாக மாணவர்களை எப்படி மாற்றுவது? இன்னமும் உருவாகாத வேலைகளுக்கு நாம் அவர்களை எவ்வாறு தயார் செய்வது? உள்உறவால் பிணைக்கப்பட்டுள்ள உலகில் வெற்றிபெற நாம் அவர்களை எவ்வாறு தயார் செய்வது? இங்கு அவர்கள் பல்வேறுபட்ட கண்ணோட்டங்கள் மற்றும் உலகப் பார்வைகளைப் புரிந்துகொள்ளவும், அவற்றைப் பாராட்டவும் வேண்டிய தேவை இருக்கும். மற்றவர்களுடன் மரியாதையாகப் பழக வேண்டி இருக்கும். நீடித்த தன்மை மற்றும் கூட்டான நலவாழ்வு என்பதை நோக்கி பொறுப்புணர்வுடன் செயல்பட வேண்டியதாக இருக்கும். எதிர்காலம் என்பது வரையறையின்படி பார்த்தால் முன்கணிப்பு செய்ய முடியாததாகும். உலகம் முழுவதும் பரவலாக உள்ள சில போக்குகளை உன்னிப்பாக கவனிப்பதன் மூலம் நாம் கற்றுக் கொள்ள முடிவதோடு மாணவர்கள் கற்றுக்கொள்ள உதவவும் முடியும். எதிர்காலம் எப்படி இருந்தாலும் அதற்கேற்ப தகவமைத்துக் கொள்ள, வளர்ச்சியடைய நாம் உதவுவதோடு எதிர்காலத்தை வடிவமைத்துக் கொள்ளவும் உதவ முடியும்.

---

– **அருண் சாவ்லா**, இந்தியத் தொழில் வணிகக் கூட்டமைப்பின் (FICCI) தலைமை இயக்குநர்.

நீடித்து நிலவும் மேம்பாடு

# சுற்றுச்சூழலும், காடுகளும்

- எஸ்.சி.லஹிரி

> 2022-23க்கான நிதிநிலை அறிக்கையை வெளியிட்டுப் பேசிய நிதியமைச்சர் நாம் எதிர்கொண்டிருக்கும் முக்கியமான சவால்களில் ஒன்று பருவநிலை மாற்றங்கள் என்றும், கரியமிலப் பதிவுகளைக் குறைக்க அரசு உறுதியான நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் கூறினார். பல நகரங்களில் காற்றுமாசு அதிகரித்து வரும் நிலையில் சுத்தமான காற்றுக் கொள்கை ஒன்றை அரசு செயல்படுத்தி வருவதாகவும் அவர் கூறினார்.

இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அரசின் கரியமில வாயு வெளிப்பாட்டுக் குறைப்பு நடவடிக்கைகளையும், நீடித்து நிலவக்கூடிய மேம்பாடு பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. பல நகரங்களில் காற்று மாசு அதிகரித்து வரும் நிலையில் சுத்தமான காற்றுக் கொள்கை ஒன்றை அரசு செயல்படுத்தி வருவதாக நிதியமைச்சர் கூறினார். சிறந்த கண்காணிப்பு அமைப்பு முறை மூலம் கரியமில வெளிப்பாட்டு அளவுகளை குறிப்பிட்ட அளவிற்குள் வைக்க இது உதவும். தேசிய சுத்தமான காற்றுத் திட்டம் 2019இல் துவக்கப்பட்ட மூன்றாண்டுகள் கழித்தும், சில நகரங்களில் சுற்றுச்சூழல் மாசு அளவு கண்காணிக்கப்பட்டதில் ஒரு சிறிதளவே இந்த மாசு அளவு குறைந்திருப்பதாக அறியப்படுகிறது. சுற்றுச்சூழல் மாசைக் குறைக்க மாநில அரசுகள் அதிகமாக செலவு செய்யவில்லை என்பதும் தெரிய வந்துள்ளது. பெரிய நகரங்களிலும், நகர்ப்புற மையங்களிலும் சுற்றுச்சூழல் ஒழுங்குமுறையின் தரத்தை உயர்ந்த அளவில் வைத்திருக்க மத்திய அரசும், மாநில அரசுகளும் தரக்கட்டுப்பாட்டு அமைப்புகளை வலுப்படுத்த வேண்டும். திறமையான ஒழுங்குமுறை அமைப்பு இருந்தால் பல நிலைகளில் சுற்றுச்சூழல் மாசைக் குறைக்க முடியும்.

## நிதிநிலை ஒதுக்கீடு

நிதிநிலை அறிக்கை என்பது அந்த ஆண்டிற்கான உத்தேசிக்கப்பட்ட செலவினங்களையும், வருவாயையும் குறிப்பிடு வதாகவும், அரசின் பொருளாதாரக் கொள்கை வழித்தடத்தை வெளிப் படுத்துவதாகவும், அப்போதைய அரசு மேற்கொள்ளும் புதிய திட்ட முனைவுகளை விவரிப்பதாகவும் இருக்கும். 2022-23வது ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் சுற்றுச்சூழல், காடுகள், பருவநிலை மாற்ற அமைச்சகத்திற்கு ரூ.3030 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இது சென்ற ஆண்டு ஒதுக்கப்பட்ட அளவைவிட 5.6 சதவிகிதம் அதிகமாகும். 2021-22இல் இந்த அமைச்சகத்திற்கு 2869 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீட்டில் ரூ.349 கோடி, அதாவது 12 சதவிகிதம் குறைக்கப்பட்டது. இதில் (i) சுற்றுச்சூழல் காடுகள் மற்றும் வனவிலங்குகள் ஆகியவற்றிற்கு ரூ.96 கோடி குறைக்கப்பட்டது, (ii) மத்திய அரசின் நிர்வாகச் செலவினங்கள் ரூ.71.5 கோடி குறைக்கப்பட்டது (iii) மாசுக் கட்டுப்பாட்டிற்கான செலவினங்கள் ரூ.80 கோடி குறைக்கப்பட்டது. சென்ற ஆண்டு கோவிட் பெருந்தொற்று இருந்த நிலையில் அரசு தன்னுடைய செலவினங்களைக் குறைத்ததை இது பிரதிபலிக்கிறது. பருவநிலை மாற்ற எதிர்கொள் திட்டத்திற்கு சென்ற ஆண்டைப் போலவே ரூ.30 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மாசுக் கட்டுப்பாட்டுக்கு சென்ற ஆண்டு ரூ.470 கோடி ஒதுக்கப்பட்டிருந்த நிலையில் இந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் ரூ.460 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மாசுக் கட்டுப்பாடு திட்ட ஒதுக்கீட்டில் மாசுக் கட்டுப்பாட்டு வாரியங்களுக்கும், குழுக்களுக்கும், தேசிய சுத்தமான காற்றுத் திட்டத்திற்கும் நிதி உதவிகள் வழங்கப்படுகின்றன. இந்த ஆண்டிற்கான செலவினங்களுக்கான நிதிநிலை அறிக்கையில் தேசிய சுத்தமான காற்றுத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இது அல்லாமல், மிக ஆபத்தான பொருள்கள் மேலாண்மைத் திட்டத்திற்கு சென்ற ஆண்டு மிகக் குறைந்த அளவான ரூ.6 கோடி ஒதுக்கப்பட்டிருந்த நிலையில் அது இந்த ஆண்டு ரூ.4.5 கோடியாக குறைக்கப் பட்டுள்ளது. இதைப் போலவே, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டத்திற்கான ஆய்வு மற்றும் மேம்பாட்டுத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூ.4.75 கோடியாக குறைக்கப்பட்டுள்ளது. மத்திய மாசுக் கட்டுப்பாடு வாரியம் நாடெங்கிலும் மாசுக் கட்டுப்பாட்டை மேற்கொள்கிறது. அதற்கான நிதி ஒதுக்கீடு சென்ற ஆண்டைப் போலவே ரூ.100 கோடியாக உள்ளது. பசுமை பாரத இயக்கத் திட்டம், மத்திய அரசு முன்னின்று செயல்படுத்தும் திட்டமாக உள்ளது. அதற்கான நிதி ஒதுக்கீடு சென்ற ஆண்டு ரூ.290 கோடி என்ற இருந்த நிலையில் இந்த ஆண்டு அது 361 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. வனவிலங்குகள் பாதுகாப்புத் திட்டத்திற்கான ஒதுக்கீடு சென்ற நிதியாண்டில் 250 கோடியிலிருந்து 220 கோடியாக குறைக்கப்பட்டிருந்த நிலையில், 2022-23க்கான நிதிநிலை அறிக்கையில் இது ரூ.300 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. 2021-22ஆம் ஆண்டு யானைகள் பாதுகாப்புத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த ரூ.33 கோடி, 2022-23ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டில் 35 கோடியாக உள்ளது. சுற்றுச்சூழல், காடுகள் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தின் கீழ் செயல்பட்டு, புலிகளின் எண்ணிக்கைக் கணக்கெடுப்பை தேசிய புலிகள் காப்பக வாரியம் நடத்துகிறது. அதற்கான ஒதுக்கீடு 2021-22ஐ போலவே 2022-23இல் ரூ.10 கோடியாக உள்ளது. தேசிய கடலோர இயக்கத்திற்கு சென்ற நிதியாண்டில் ரூ.200 கோடி ஒதுக்கப்பட்ட நிலையில் 2022 23ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு 195 கோடியாக உள்ளது. சுற்றுச்சூழல், காடுகள் மற்றும் பருவநிலை மாற்றங்கள் அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தேசிய கடலோர இயக்கம், கடலோரப் பகுதிகளில் வாழும் மீனவர் உள்ளிட்ட எல்லோரின் வாழ்வாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், கடலோரப் பகுதிகளைப் பாதுகாக்கவும் அறிவியல் சார்ந்த முறையில் அந்தப் பகுதிகளில் நிலைத்து நிற்கும் மேம்பாட்டைச் செயல்படுத்தவும் பொறுப்பேற்றுள்ளது.



## கொள்கை முனைவுகள்:


பாலி சிலிக்கான் உற்பத்தி முதல் சூரிய வெப்ப ஃபோட்டோ வோல்டிக் கருவிகள் வரை இணைந்து உற்பத்தி செய்யும் தொழில் நிறுவனங்கள் உயர்திறன் கொண்ட கருவிகளை உற்பத்தி செய்வதற்கான, உற்பத்தி அளவு சார்ந்த ஊக்க நிதி வசதி அளிக்க நிதியமைச்சர் ரூ.1950 கோடி ஒதுக்கியுள்ளார். பசுமைப் பொருளாதாரம் இப்போது ஒரு வளர்ந்து வரும் பொருளாதாரமாக உள்ள நிலையில், இந்த மாற்றம் உற்பத்தித் திறனை உயர்த்தி, வேலைவாய்ப்புகளையும் அதிகரிக்கும். தற்போது தயாரிக்கப்படும் மின்கலன்களின் மேம்பாட்டை உயர்த்த அரசு விரைவில் கொள்கையை அறிவிக்கும் என்று கூறிய நிதியமைச்சர், இதனால் இந்தியாவில் தயாரிக்கப்படும் மின்சார வாகனங்களின் தொழில் துறையும் குறிப்பாக பொதுப் போக்குவரத்து வாகனங்களுக்கு மின்கலன்களை மின்னேற்றும்

பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். போக்குவரத்து வாகனங்களால் கரியமில வாயு வெளிப்பாடு ஏற்படுவதைக் குறைப்பதற்காக மின்சார வாகனங்களை சாலைகளில் பயன்படுத்துவது அரசின் முக்கியமான ஒரு திட்டமாகும். பொதுப் போக்குவரத்திற்கும் சரக்கு வாகனங்களை மின்சாரமயமாக்குவதற்கும் பெரிய அளவில் உள்கட்டமைப்பு வசதிகள் தேவை.


எத்தனால் கலக்காத பெட்ரோலின் விலை அக்டோபர் 22 முதல் லிட்டருக்கு ரூ.2 அதிகலால் வரி வசூலிக்கப்படும் என்று நிதியமைச்சர் நிதிநிலை அறிக்கையில் அறிவித்திருக்கிறார். எத்தனாலை குறிப்பிட்ட சதவிகித அளவிற்கு பெட்ரோலில் கலப்பது அரசின் ஒரு முதன்மையான திட்டமாகும். தற்போது, இந்தியாவில் பெட்ரோல் வழங்கு நிறுவனங்கள் சராசரியாக எட்டு சதவிகிதம் அளவிற்கு பெட்ரோலுடன் எத்தனாலைக் கலந்து விற்கும் நிலையில் இந்த சதவிகிதம் 2025வாக்கில் 20ஆக உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால், எல்லா மாநிலங்களிலும் எத்தனால் ஒரே அளவு கிடைப்பதில்லை. எத்தனால் உற்பத்தி ஆகும் இடத்திலிருந்து தொலை தூரங்களில் இருக்கும் மாநிலங்களில் இந்த எத்தனால் கலப்பு விகிதம் குறைவாகவே காணப்படும்.

நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ள பிற முனைவுகளாவன: அனல்மின் உற்பத்தி நிலையங்களில் 5 சதவீதம் முதல் 7 சதவீதம் வரை உயிரி எரிபொருள்கள் கலந்து பயன்படுத்துவதால் கரியமில வாயு வெளிப்பாடு 38 மில்லியன் மெட்ரிக் டன் அளவிற்குக் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், வட மாநிலங்களில் விவசாயக் கழிவுகள் எரிக்கப்படுவது குறையும். இது அல்லாமல், எரிசக்தியின் தரத்தை உயர்த்த எரிசக்தியைக் குறைத்து செலவிடுவது ஊக்குவிக்கப்படும். இது பெரிய வணிகக் கட்டடங்களில் அறிமுகப்படுத்தப்படும். நிலக்கரியை எரிவாயுவாகவும் பிற இரசாயனப் பொருள்களாக மாற்றவும் நான்கு மாதிரித் திட்டங்கள் அமைக்கப்படும். பொது காடு வளர்ப்பும், தனியார் காடு வளர்ப்புத் திட்டங்களும் ஊக்குவிக்கப்படும். பட்டியலின வகுப்பினரும், பழங்குடி வகுப்பினருக்கும் வேளாண் காடு வளர்ப்புத் திட்டங்களை மேற்கொள்ள நிதி உதவி வழங்கப்படும்.

சுழற்சி முறை பொருளாதார மாற்றத்தால் நிலைத்து நிற்கும் உற்பத்தித் திறன் மேம்பாடு ஏற்படும் என்று கருதப்படுகிறது. இதற்காக வாகனங்கள், பயன்படுத்தப்பட்ட எண்ணெய்க் கழிவுகள், நச்சு மற்றும் ஆபத்தான தொழில்துறை கழிவுகளுக்கான 10 திட்டச் செயல்பாடுகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. சுழற்சி முறைப் பொருளாதாரத்தை ஊக்குவிக்க இந்த 10 தொழில் துறைகளில் உற்பத்தியாளர்களுக்குப் பொறுப்பை விதிப்பதன் மூலம் புதியன கண்டுபிடிப்பு தொழில்முனைவுகள் மேம்பட்டு அதனால் இந்தியாவில் கரியமில வாயு பதிவு குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. குறைவான கரியமில வாயு வெளிப்பாட்டுப் பொருளாதாரத்திற்கு நாம் மாறுவதற்கு வேண்டிய திட்டங்களை வெளியிட்ட நிதியமைச்சருக்கு நிபுணர்கள் வரவேற்பு தெரிவித்துள்ளனர். ஆனால், அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையத்தின் ஒரு கணிப்பின்படி இப்போது அனல் மின் நிலையங்களில் நிலக்கரி பயன்பாட்டால் ஏற்படும் கரியமில







வெளிப்பாட்டை விட, நிலக்கரியை எரிவாயுவாக உற்பத்தி செய்யும் திட்டத்தில் அதிக அளவு கரியமில வெளிப்பாடு ஏற்படும் என்று கருதுகிறார்கள்.

ஆய்வு மற்றும் மேம்பாடு, சம்மந்தப்பட்ட துறைகளில் திறமையானவர்களை பணி அமர்த்துவது, உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் ஆகியவற்றிற்கு நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்பட வேண்டியது அவசியமாகும். (உதாரணத்திற்கு, மத்திய சுற்றுச்சூழல் மாசுக் கட்டுபாட்டு வாரியத்திற்கான நிதி ஒதுக்கீடு கடந்த 4 ஆண்டுகளில் 100 கோடியாகவே உள்ளது. இந்த மத்திய சுற்றுச்சூழல் மாசுக் கட்டுபாட்டு வாரியம் நாடெங்கிலும் காற்று, நீர்நிலைகளின் தரத்தை கண்காணிக்கவும், தொழில்துறை, வணிகப் பயன்பாடுகளால் அவை மாசுபடுவதைக் கட்டுப்படுத்தவும், மாநில அளவில் இந்தப் பணிகளை மேற்கொண்டு மாசுக் கட்டுப்பாட்டு அனுமதிகளை வழங்கும் மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியங்களுக்கு நிதி உதவியும் அளிக்கிறது. ஏற்கனவே நிதியமைச்சர் முன்பு, நிலக்கரிப் பயன்பாட்டில் செயல்படும் அனல் மின் நிலையங்கள் படிப்படியாக மூடப்படும் என்று கூறியிருந்த நிலையில் 2022–23க்கான பட்ஜெட்டில் திறன் குறைந்த அனல் மின் நிலையங்களை மூடுவதைப் பற்றி குறிப்பு ஏதுமில்லை. படிமம் அல்லாத எரிபொருள்கள் மூலம் 40 சதவிகித இந்தியாவின் மின் உற்பத்தி செயல்படுத்தப்படும் என்றும், 2.5 முதல் 3 பில்லியன் டன் அளவிலான கரியமிலப் பதிவுகளை 2030க்குள் குறைப்பதாகவும் பாரிஸ் மாநாட்டில் இந்தியா ஒப்புக் கொண்டது. மத்திய மின்சார வாரியத்தின் தகவல்களின்படி டிசம்பர் 31, 2020 வரை மொத்த மின்சார உற்பத்தித் திறன் கொள்முதலில் படிமம் அல்லாத வளம் மூலம் செய்யப்படும் உற்பத்தித் திறன் அளவு 40.20 சதவீதமாக இருப்பதாகக் கூறப்படுகிறது. இந்திய வன அளவீட்டு அறிக்கை 2021இன்படி இந்தியாவின் காட்டுப்பகுதிகள் அதிகரித்து வருவதாகக் கூறப்படுகிறது. ஆனால், இந்தியா இதுவரை 1600 சதுர கிலோ மீட்டர் அளவிற்கு வனவளத்தை இழந்துள்ளது. ஆனால், இந்த இழப்பை சிறிதளவு நீக்கும் வகையில் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிகளில் செழிப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆனால், அதிகரிக்கப்பட்டுள்ள வனப்பகுதி என்று கூறப்படுவதில் பெரும் பகுதி பயிர்த் தோட்டங்கள் மூலம் ஏற்பட்டுள்ளதால், இந்தத் தோட்டங்கள் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கு காடுகளைப் போல் உதவாது என்று நிபுணர்கள் கூறுகிறார்கள். வடகிழக்கு மாநிலங்களில் நாம் இழந்துள்ள சுமார் 1000 சதுர கிலோ மீட்டர் அளவிற்கான இயற்கையான காட்டுவளம் வருத்தத்தை அளிக்கிறது. பசுமை பாரத இயக்கம் மாநிலங்களில் மேலும் தீவிரமாக செயல்படுத்தப்பட்டு, தரமான மரங்களை நடவேண்டும். பல்லுயிர் வளம், இயற்கை நிலப்பரப்பைப் பாதுகாப்பது, இயற்கையான வளமான பல்லுயிர் உயிரி வளங்களை நாடெங்கிலும் நிலைப்படுத்துவது சார்ந்த ஆய்வுகளை மேற்கொள்ள ஊக்கங்கள் அளிக்கப்பட வேண்டும்.

---

– **டாக்டர்.எஸ்.சி.லஹிரி,** முந்தைய திட்டக் கமிஷனில் 25 ஆண்டுகளுக்கு மேல் தொடர்பு உள்ளவர். தொழில்துறை, கனிமங்கள், வேளாண்மை, கால்நடை பராமரிப்புத் துறைகளில் பணியாற்றியவர்.

# தொடர் பெருக்க விளைவை நாடி

- சாஜன் சிங் யாதவ்

2022–23ஆம் ஆண்டுக்கான மத்திய பட்ஜெட்டில் மக்களின் நுகர்வை ஊக்குவிக்கவும் பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்தவும் ஒரு நல்ல புதிய மாற்று அணுகுமுறையை நிதி அமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கையாண்டிருக்கிறார். இந்த அணுகுமுறையில் பொதுத்துறை மற்றும் தனியார் துறை இரண்டுமே தங்களுடைய மூலதனச் செலவினங்களை மிக அதிக அளவிற்கு உயர்த்த முனைகின்றன. மூலதனச் செலவினங்கள் என்பது திரும்பத் திரும்ப ஏற்படுவதல்ல, அது மூலதனச் சொத்துக்களை உருவாக்குவதற்காக நீண்ட காலச் செலவினமாகும். இந்த மூலதனச் செலவினம் ஏன் அவசியமாகிறது. மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வின்படி மூலதனச் செலவினத்தால் குறுகிய கால கட்டத்தில் 2.45 மடங்கு அளவிற்கு தொடர் பெருக்கு விளைவும், நீண்ட கால கட்டத்தில் 4.8 மடங்கு தொடர் பெருக்கு விளைவும் ஏற்படுகிறது. எளிதாகக் கூறவேண்டுமானால் மூலதனத்திற்காக செலவு செய்யப்படும் ரூ.1 கோடி குறுகிய காலகட்டத்தில் ரூ.2.45 கோடி அளவிற்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியை ஏற்படுத்தும். தொடர் பெருக்கு விளைவு காரணமாக நீண்ட காலகட்டத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தி ரூ.4.8 கோடியாக உயரும். இந்தத் தொடர் பெருக்கு விளைவு எப்படி நிகழ்கிறது?

மூலதனச் செலவினங்களால் மக்களின் வருமானம் உயர்கிறது, வேலை வாய்ப்புக்கள் உருவாகின்றன. துணைத்தொழில்களும், சேவைத் தொழில்களும் விரிவடைகின்றன, பொருளாதாரத்தில் எதிர்காலச் செயல் உற்பத்தித்திறன் மேம்படுகிறது, பொதுவாக மக்களின் நுகர்வு அளவு அதிகரிக்கிறது. அரசின் மூலதனச் செலவினங்களால் ஒரு சாதகமான சுழற்சி ஏற்பட்டு, அதில் அதிக அளவில் தனியார் முதலீடுகளும் அதிகரிக்கின்றன. இதையெல்லாம் விட பொருளாதாரத்தில் நம்பிக்கை ஏற்பட்டு, அந்நிய முதலீடுகளும் ஈர்க்கப்படுகின்றன. 2022–23க்கான மத்திய நிதிநிலை அறிக்கையில் நிதியமைச்சர் மத்திய அரசின் மூலதனச் செலவினங்களுக்கான ஒதுக்கீட்டை 35.4 சதவிகிதம் உயர்த்தியுள்ளார். அதாவது, 2021 22இல் ரூ.5.54 இலட்சம் கோடியாக இருந்தது, ரூ.7.50 இலட்சம் கோடியாக 2022–23 நிதிநிலை அறிக்கையில் உயர்த்தப்பட்டுள்ளது. 2022–23இல் மூலதனச் செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை 2019–20 நிதியாண்டை விட 2.2 மடங்கு அதிகமாகும். கூடுதலாக மாநிலங்களும், மூலதனச் சொத்துக்களை உருவாக்குவதற்கு மத்திய அரசின் திட்டங்களைச் செயல்படுத்தும் போது அவர்களுக்கு மானியங்கள் கிடைக்கும். இதனையும் நாம் சேர்த்துக் கொண்டால் 2022–23இல் மத்திய அரசின் மூலதனச் செலவினங்கள் ரூ.10.68 இலட்சம் கோடியாக அதிகரிக்கிறது.

மாநிலங்களுக்கான மூலதன முதலீடுகளை மேற்கொள்ள அளிக்கப்படும் சிறப்பு நிதி உதவி ரூ.1 இலட்சம் கோடி அளவிற்கு அமைந்துள்ளது நிதியமைச்சரின் 2022–23ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் ஒரு சிறப்பு அம்சமாகும்.

**மாநிலங்களின் மூலதனச் செலவினங்களை வெகுவாக உயர்த்துதல்:**

மார்ச் 2020இல் கோவிட்–19 பெருந்தொற்று நம்மைத் தாக்கிய போது மத்திய, மாநில அரசுகள் இரண்டிற்குமே வரிவருவாய் குறைந்த நிலையில் கடுமையான நிதி நெருக்கடி ஏற்பட்டது. அதே சமயத்தில் கோவிட் பெருந்தொற்றை எதிர்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளுக்காகவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்கள் வழங்குவதற்காகவும் அதிக நிதி தேவைப்பட்டது. மாநில அரசுகளின் செலவினங்களான சம்பளங்கள், ஓய்வூதியங்கள் மற்றும் வட்டிச் செலவு ஆகியவை ஒரு குறிப்பிட்ட அளவில் தொடர்ந்து நிலைப்பதால், குறுகிய காலத்தில் அவற்றைக் குறைக்க முடியாது. ஆகவே, இந்தச் சூழ்நிலையில் மூலதனச் செலவினங்களை ஒத்திப் போட வேண்டிய வாய்ப்புகள் இருந்தன. ஆகவே, மத்திய அரசின் நிதிநிலையில் ஆழ்ந்த அழுத்தம் இருந்த போதும், மத்திய அரசு மாநில அரசுகளுக்கு 2020–21ஆம் ஆண்டில் மூலதனச் செலவினங்களை மேற்கொள்ள சிறப்பு உதவித் திட்டம் அறிவித்தது. இந்தத் திட்டத்திற்கு "மாநிலங்களின் மூலதனச் செலவினங்களுக்கான சிறப்பு உதவி" என்று பெயரிடப்பட்டு, இதற்காக ரூ.12,000 கோடி ஒதுக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ் 50 வருடங்களுக்கு வட்டியில்லா கடன் தொகையாக நிதி வழங்கப்பட்டது. மாநில அரசுகள் இந்தத் தொகையை தற்போதுள்ள மூலதனத் திட்டங்களைச் செய்து முடிக்கவும், புதியனவற்றை மேற்கொள்ளவும் பயன்படுத்திக் கொள்ளலாம். ஏற்கனவே செயல்பட்டு வரும் மூலதனத் திட்டங்களுக்குக் கொடுக்க வேண்டிய செலவினங்களையும் இதிலிருந்து கொடுக்கலாம். மிக எளிதாக உருவாக்கப்பட்டுள்ள இந்தத் திட்டத்தின் மூலம் மாநில அரசுகள் தங்களுக்குத் தேவையான திட்டங்களை மேற்கொள்ளலாம். இந்தத் திட்டங்களுக்கு விளக்கமான திட்ட ஆய்வறிக்கைகள் கோரப்படாமல், எளிய திட்ட வடிவமைப்புகளே வேண்டப்பட்டன.



இந்தத் திட்டத்திற்கு மாநிலங்களில் நல்ல வரவேற்பு இருந்தது. தமிழ்நாடு தவிர, மற்ற எல்லா மாநிலங்களும் இந்த திட்டத்தின் கீழ் நிதியைப் பெற்றுக் கொண்டன. மாநிலங்களில் இந்தத் திட்டத்திற்கு நல்ல வரவேற்பு இருந்ததால் 2021 22 நிதியாண்டில் இந்தத் திட்டத்திற்கான நிதிநிலை ஒதுக்கீடு ரூ.10,000 கோடியாக உயர்த்தப்பட்டது. 2021–22இல் தமிழ்நாடு அரசும் இந்தத் திட்டத்தை ஏற்றுக் கொண்டது. மேலும் 2022–23ஆம் ஆண்டிற்கான நிதிநிலை சமர்ப்பிப்புக்கு முன்பான கலந்தாலோசனைகளில் மாநில முதல்வர்களும், நிதியமைச்சர்களும் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும் என்று நிதியமைச்சரை கேட்டுக் கொண்டனர்.

மாநில அரசுகளின் கோரிக்கைகளைப் பரிசீலித்தும், கூட்டுறவு கூட்டாட்சியின் உண்மை அடிப்படைத் தன்மையைக் கருதியும் மத்திய நிதியமைச்சர் 2022–23 நிதிநிலை அறிக்கையில் ஒரு புதிய அறிவிப்பை மேற்கொண்டார். மாநில அரசுகளின் மூலதனச் செலவுகளுக்கு மத்திய நிதி உதவி தொடரும் என்று அறிவித்ததோடு மட்டுமல்லாமல் 2022–23 பட்ஜெட்டில் அதற்கான ஒதுக்கீடு 2021–22 நிதியாண்டு மதிப்பீட்டை விட 10 மடங்கு உயர்த்தப்பட்டுள்ளது. இப்போது ஒதுக்கப்பட்டிருக்கும் ரூ.1 இலட்சம் கோடி மாநில அரசுகளின் மூலதனச் செலவீட்டினால் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும்.

2022–23 நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்து உரையாற்றிய நிதியமைச்சர் மாநில அரசுகள் பிரதம மந்திரி கதிசக்தி சார்ந்த திட்டத்தையும் பிற பயன்தரும் மூலதனச் செலவினங்களையும் மேற்கொள்ள இந்த ஒதுக்கீடு பயன்படுத்திக் கொள்ளப்படலாம் என்று அறிவித்தார். இது அல்லாமல், இப்போது ஒதுக்கப்பட்டுள்ள நிதி பிரதமமந்திரி கிராமச்சாலைகள் திட்டத்திற்குத் தேவைப்படும் கூடுதல் செலவினங்களுக்கும் பயன்படுத்திக் கொள்ளலாம். பொருளாதாரத்தை மின்மயமாக்குவதற்கும், மின்மய வழங்கல்களை செயல்படுத்தவும் மாநிலங்கள் இதனைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இது அல்லாமல், நகரமைப்புத் திட்டங்கள், சாலைத் திட்டங்கள், துணைச் சட்டங்கள் மேற்கொள்ளுதல், வளர்ச்சி உரிமங்களை மாற்றிக் கொடுத்தல் ஆகிய திட்டங்களுக்காகவும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

மூலதனச் செலவினங்களுக்காக மாநிலங்களுக்கு சிறப்பு நிதி உதவித் திட்டம், முதலாவது மாதிரியில் மூன்று பகுதிகள் இருந்தன. முதல் பகுதி, எட்டு வடகிழக்கு மாநிலங்களுக்கும், இரண்டு மலைசூழ் மாநிலங்களுக்குமானது. இதில் உத்தரகண்ட் மற்றும் ஹிமாச்சல மாநிலங்களுக்கு தலா ரூ.450 கோடி ஒதுக்கப்பட்டது. அஸ்ஸாமிற்கு ரூ.400 கோடி. மீதம் உள்ள ஏழு வடகிழக்கு மாநிலங்களுக்கு தலா ரூ.200 கோடி வழங்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் இரண்டாவது பகுதியில் மீதமுள்ள அனைத்து மாநிலங்களுக்கும் ரூ.7500 கோடி ஒதுக்கப்பட்டது. ஒவ்வொரு மாநிலத்திற்கும் கிடைக்க வேண்டிய தொகை 15வது நிதிக்கமிஷன் 202021 ஆண்டிற்கு அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய மத்திய வரியிலிருந்து கிடைக்க வேண்டிய

அளவின் அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் மூன்றாவது பகுதியில் மத்திய நிதியமைச்சகம் பரிந்துரைத்த மக்கள் பயன்பெறும் திட்டங்களில் ஏதாவது மூன்று திட்டங்களையாவது செயல்படுத்தும் மாநிலங்களுக்கு ஊக்கத் தொகையாக வழங்க ரூ.2000 கோடி ஒதுக்கப்பட்டது.

**மூலதனச் செலவினங்களுக்காக மாநில அரசுகளுக்கு சிறப்பு நிதி உதவி திட்டம் மாதிரி 2.0:**

இந்தத் திட்டத்தின் இரண்டாவது மாதிரியிலும் மூன்று பாகங்கள் உள்ளன. முதலாவது பாகம், வடகிழக்கு மாநிலங்களுக்கும், மலைப்பகுதி மாநிலங்களுக்குமானது. அஸ்ஸாம், ஹிமாச்சலப்பிரதேசம், உத்தரகண்ட் மாநிலங்களுக்கு தலா 400 கோடி ரூபாயும் பிற வடகிழக்கு மாநிலங்களுக்கு தலா ரூ.200 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டது. மீதமுள்ள மாநிலங்களுக்கு ரூ.7400 கோடி ஒதுக்கப்பட்டு, அந்தத் தொகை 15-வது நிதிக்கமிஷன், மத்திய வரி வருவாயிலிருந்து மாநிலங்களுக்குக் கிடைக்க வேண்டிய அளவில் ஒதுக்கப்பட்டது. மூன்றாவது பாகம், மாநில அரசுகள் தங்களுடைய பொதுத் துறை நிறுவனங்களைத் தனியார்மயமாக்கவும், விற்கவும் அரசு சொத்துக்களை பணமாக்கவும் ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டது.

**மாநிலங்களில் சீர்திருத்தங்கள் ஊக்குவிப்பு:**

2020-21 மற்றும் 2021-22 நிதியாண்டுகளில் மூலதனச் செலவினங்களுக்காக மாநில அரசுகளுக்கு அளிக்கப்பட்ட சிறப்பு நிதி உதவித் திட்டங்கள், அம்மாநிலங்கள் தங்களுடைய மூலதனச் செலவினங்களை




அதிகரிக்கப் பயன்படுத்தியதோடு மட்டுமல்லாமல், சில சீர்திருத்தங்களும் மேற் கொள்ள உதவியது. இவற்றை இப்போது பார்ப்போம்:

**அடையாளம் காணப்பட்ட மக்கள் நலச் செயல்பாடுகளில் சீர்திருத்தம்:**

கோவிட்-19 பெருந்தொற்றினால் மாநிலங்களின் நிதி ஆதாரங்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்ட நிலையில், கோவிட் பெருந்தொற்றை எதிர் கொள்ளவும், மக்களுக்கான சேவைப் பணிகளை தொடர்ந்து மேற்கொள்ளவும், மாநில அரசுகளுக்கு கூடுதல் நிதி தேவைப்படுவதால் அவர்கள் தங்களுடைய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இரண்டு சதவிகிதம் அளவிற்குக் கூடுதலாக கடன்களைப் பெறலாம் என்று 2020-21 நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது. இதற்கான விரிவான வழிமுறைகளை செலவினங்கள் துறை 17 மே 2020இல் வெளியிட்டது. ஆனால், நீண்ட காலத்திற்கு அவர்கள் கடன்கள் வாங்குவது நிலைத்து நிற்கவும், எதிர்வரும் காலங்களில் மாநிலங்களில் உள்நாட்டு மொத்த உற்பத்தியை அதிகரிக்கவும் இனிவரும் காலங்களில் வருவாயைப் பெருக்கவும், தேவையற்ற செலவுகளைக் குறைக்கவும், அவர்கள் கூடுதலாக பெரும் கடன்களில் 50 சதவிகிதம் குடிமக்கள் நலன் சார்ந்த நான்கு திட்டங்களைச் செயல்படுத்துவதற்குப் பயன்படுத்த வேண்டும். இந்தச் சிறப்புத் திட்டங்களாவன: ஒரு நாடு, ஒரே ரேஷன் அட்டை முறை, எளிதாக வணிகம் செய்வதற்கான சீர்திருத்தங்கள், நகர்ப்புற உள்ளாட்சிபொதுச் சேவை வழங்கு நிறுவனங்களில் சீர்திருத்தங்கள் மற்றும் மின்சார துறையில் சீர்திருத்தங்கள் ஆகியன. ஒரு நாடு ஒரே ரேஷன் அட்டை என்பது வேலைக்காகப் புலம் பெயர்ந்து செல்லும் மக்கள் உள்ளிட்ட மக்கள் நாட்டில் எந்த நியாய விலைக் கடையிலிருந்தும் ரேஷன் பொருள்களைப் பெறும் திட்டமாகும். எளிதாக வணிகம் செய்வதற்கான சீர்திருத்தம் என்பது, நாட்டில் வணிகத்திற்கு சாதகமான சூழ்நிலையை உருவாக்கி, நாட்டின் பொருளாதாரத்தை வேகமாக வளர்ச்சியடைய செய்வதற்காக. நகர்ப்புற உள்ளாட்சி






அமைப்புகளில் சீர்திருத்தம் என்பது அவற்றின் நிதி ஆதாரங்களைப் பெருக்கி, மக்களுக்கு வேண்டிய உள்கட்டமைப்பு வசதிகளை செய்து கொடுப்பதற்காக. மின்சாரத் துறையில் சீர்திருத்தம் என்பது, அத்துறையில் ஏற்படும் தொழில் மற்றும் வணிக இழப்புகளைக் குறைப்பதற்காகவும், சராசரி வருமானத்திற்கும், சராசரி சேவை வழங்கு திட்டங்களுக்கான செலவினங்களில் இடைவெளியைக் குறைப்பதாகும் மற்றும் விவசாயிகளுக்கு இலவசமாக மின்சாரம் வழங்குவதற்கு பதிலாக அந்த பயன்பாட்டுத் தொகையை அவர்களுடைய வங்கிக் கணக்கிற்கு நேரடியாக செலுத்துவதாகும். இந்த சீர்திருத்தங்களை செய்ய மேலும் ஊக்கமளிக்கும் வண்ணம், மாநிலங்கள் குறிப்பிட்ட குடிமக்கள் நலன் சார்ந்த திட்டங்களில் சீர்திருத்தங்களில் ஏதாவது நான்கை டிசம்பர் 31, 2020க்குள் மேற்கொள்ள ஊக்கத்தொகையாக ரூ.2000 கோடி 2020-2021 நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்டது.

**முதலீடு குறைப்பு மற்றும் பணமாக்கல்**

2021-22 நிதிநிலை அறிக்கையில் மாநிலங்கள் அவர்களுடைய பொதுத்துறை நிறுவனங்களை தனியார்மயமாக்குவதற்கும் அவற்றிலுள்ள முதலீட்டைக் குறைக்கவும், மாநில அரசின் சொத்துக்களைப் பணமாக்குவதற்கும், மறுசுழற்சி செய்வதற்கும் ஊக்கமளிக்கும் வகையில் அவர்கள் மேற்கொள்ள இருக்கும் திறன் மேம்பாடு மற்றும் நிதி ஆதாரங்கள் திரட்டலுக்காக சிறப்பு உதவித் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு ரூ.5000 கோடி ஒதுக்கப்பட்டு, முதலில் வரும் மாநிலங்களின் வரிசைக் கிரமத்தில் நிதி வழங்கப்படும்.

மாநிலப் பொதுத்துறை நிறுவனங்களில் உள்ள தங்களின் சிறுபான்மை முதலீட்டைக் குறைத்து அவர்கள் பெறும் தொகையில் 50 சதவிகிதம் ஊக்கத் தொகையாகப் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இது அல்லாமல், அவர்களின் பொதுத்துறை நிறுவனங்களில் கணிசமான முதலீட்டைக் குறைக்கும் போது, அவர்களுக்குக் கிடைக்கும் தொகை அளவிற்கு 100 சதவிகித ஊக்கத்தொகை கிடைக்கும். கணிசமான என்று சொல்லும் போது அரசின் பங்கில் 50 சதவிகிதத்திற்கு மேல் முதலீட்டைக் குறைத்து, நிர்வாகப் பொறுப்பையும் தனியாரிடம் ஒப்படைக்க வேண்டும்.

சொத்துக்களைப் பணமாக்குதல் மற்றும் அரசு சொத்துக்களை மறுசுழற்சி செய்தல் என்பது அரசின் மற்றொரு முக்கிய பார்வையாக உள்ளது. சொத்துக்களைப் பணமாக்குவதால் அவற்றின் மதிப்பு கிடைக்கிறது, அவற்றைப் பராமரிக்கும் செலவு குறைகிறது மற்றும் அரிய பொதுநிதி வழங்கல் புதிய திட்டங்களுக்குப் பயன்படுகிறது. மாநில அரசுகள் தங்களுடைய சொத்துக்களைப் பணமாக்கும் போது, அவர்களுக்குக் கிடைக்கும் தொகையில் 33 சதவிகிதம் அளவிற்கு ஊக்கத்தொகை அளிக்கப்படும். அப்படி சொத்துக்களைப் பணமாக்கும் போதும், மறுசுழற்சி செய்யும் போதும், கிடைக்கும் தொகையை மூலதனச் செலவினங்களுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

**இந்த திட்டத்தின் செயல்பாடுகள்:**

மாநில அரசுகளின் மூலதனச் செலவுகளுக்கு வழங்கப்படும் இந்தச் சிறப்பு உதவித்திட்டம் வெற்றி பெற்றுள்ளது. 2020-21 நிதியாண்டில் ஒதுக்கப்பட்டிருந்த ரூ.12000 கோடி நிதி அளவில் மாநிலங்களின் முதலீட்டுத் திட்டங்களுக்கு ரூ.11,912 கோடி அளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டு, அவர்களுக்கு ரூ.11830 கோடி வழங்கப்பட்டது. 2021-22 நிதியாண்டில் அந்த ஆண்டிற்கான நிதி நிலை மதிப்பீட்டுத் தொகையான ரூ.10,000 கோடிக்கு எதிராக மூலதனத் திட்டங்களுக்காக பிப்ரவரி 3, 2022 வரை ரூ.9115 கோடி ரூபாய் அளவிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதில் ரூ.5301 கோடி வரை நிதி வழங்கப்பட்டது. இதனால் மாநிலங்கள் நிதி நெருக்கடியால் இதுவரை மேற்கொள்ள முடியாத மூலதனத் திட்டங்களைச் செயல்படுத்த முடிந்துள்ளது. மாநிலங்கள்

| அட்டவணை1 மூலதனச் செலவினங்களுக்காக மாநிலத்தின் சிறப்பு நிதி உதவி ஒதுக்கீடும், வழங்கலும் ரூ. கோடியில் | | | | | |
|---|---|---|---|---|---|
| வரிசை எண். | மாநிலங்கள் | 2021-22 | | 2020-21 | |
| | | ஒதுக்கீடு | வழங்கப்பட்ட தொகை | ஒதுக்கீடு | வழங்கப்பட்ட தொகை |
| 1 | ஆந்திரப்பிரதேசம் | 335.00 | 0.00 | 688 | 688 |
| 2 | அருணாச்சலப்பிரதேசம் | 200.00 | 0.00 | 232.97 | 232.97 |
| 3 | அஸ்ஸாம் | 400.00 | 200.00 | 450 | 450 |
| 4 | பீகார் | 831.00 | 831.00 | 843 | 843 |
| 5 | சத்தீஸ்கர் | 282.00 | 282.00 | 286 | 286 |
| 6 | கோவா | | 33.00 | 97.66 | 97.66 |
| 7 | குஜராத் | 288.00 | 144.00 | 285 | 285 |
| 8 | ஹரியானா | 90.00 | 45.00 | 91 | 91 |
| 9 | ஹிமாச்சலப்பிரதேசம் | 400.00 | 200.00 | 533 | 533 |
| 10 | ஜார்கண்ட் | 273.00 | 109.50 | 277 | 277 |
| 11 | கர்நாடகம் | 301.00 | 150.50 | 305 | 305 |
| 12 | கேரளம் | 159.00 | 0.00 | 163 | 81.5 |
| 13 | மத்தியப்பிரதேசம் | 649.00 | 908.09 | 1320 | 1320 |
| 14 | மஹாராஷ்டிரா | 522.00 | 249.73 | 514 | 514 |
| 15 | மணிப்பூர் | 200.00 | 18.62 | 317.16 | 317.16 |
| 16 | மேகாலயா | 200.00 | 81.20 | 200 | 200 |
| 17 | மிசோரம் | 200.00 | 100.00 | 200 | 200 |
| 18 | நாகாலாந்து | 200.00 | 95.00 | 200 | 200 |
| 19 | ஒடிசா | 374.00 | 143.12 | 471.5 | 471.5 |
| 20 | பஞ்சாப் | 149.00 | 74.50 | 296.5 | 296.5 |
| 21 | ராஜஸ்தான் | 498.00 | 443.41 | 1002 | 1002 |
| 22 | சிக்கிம் | 200.00 | 100.00 | 200 | 200 |
| 23 | தமிழ்நாடு | 337.00 | 0.00 | 0.00 | 0.00 |
| 24 | தெலுங்கானா | 174.00 | 40.20 | 358 | 358 |
| 25 | திரிபுரா | 200.00 | 0.00 | 300 | 300 |
| 26 | உத்திரப்பிரதேசம் | 1483.00 | 741.50 | 976 | 976 |
| 27 | உத்தராகண்ட் | 400.00 | 0.00 | 675 | 675 |
| 28 | மேற்கு வங்கம் | 622.00 | 311.00 | 630 | 630 |

வாரியான ஒதுக்கீடும் நிதி வழங்கலும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம், மூலதன முதலீடுகளை அதிகரித்துள்ளதோடு மட்டுமல்லாமல், மூலதனத் திட்டங்களை முடித்து வைக்கவும், சீர்திருத்தங்களை மேற்கொள்ளவும் உதவியுள்ளது.



இந்தத் திட்டத்தின் முதல் வடிவம் அட்டவணை இரண்டில் காணப்படும் குடிமக்கள் சார்ந்த செயல்பாடுகளில் சீர்திருத்தங்களை மேற்கொள்ள உதவியிருக்கிறது. 17 மாநிலங்கள் ஒரு நாடு, ஒரு ரேஷன் அட்டை திட்டத்தில் சீர்திருத்தங்களை மேற்கொண்டுள்ள நிலையில் 20 மாநிலங்கள் எளிதாக வணிகம் செய்ய ஏதுவான சீர்திருத்தங்களைச் செய்து முடித்துள்ளன. உள்ளாட்சி சார்ந்த சீர்திருத்தங்களை 11 மாநிலங்கள் முடித்துள்ள நிலையில் 17 மாநிலங்கள் மின்சாரத்துறை சார்ந்த சீர்திருத்தங்களை மேற்கொண்டுள்ளன. மாநிலங்கள் முழுமையாக செயல்படுத்திய சீர்திருத்தங்களுக்கு சம்மந்தப்பட்ட அமைச்சகங்கள் சான்றிதழ்கள் வழங்கியுள்ளன.

23 மாநிலங்கள் குறிப்பிடப்பட்ட நான்கு சீர்திருத்தங்களில் ஏதாவது ஒன்றையாவது செய்து முடித்துள்ளனர். கேரளம் மற்றும் உத்தராகண்ட் ஆகிய இரண்டு மாநிலங்கள் குறிப்பிடப்பட்ட நான்கு துறைகளிலும் சீர்திருத்தங்களை முடித்துள்ளனர். ஆந்திரப்பிரதேசம், கோவா, மத்தியப்பிரதேசம், பஞ்சாப், ராஜஸ்தான், திரிபுரா, ஹிமாச்சலப்பிரதேசம், கர்நாடகம், மணிப்பூர், ஒடிசா மற்றும் தெலுங்கானா ஆகிய 11 மாநிலங்கள் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட துறைகளில் சீர்திருத்தங்களை மேற்கொண்டுள்ளனர்.

2021-22ஆம் ஆண்டிற்கான மாநிலங்களின் மூலதனச் செலவினங்களுக்காக அளிக்கப்படும் சிறப்பு நிதி உதவியிலிருந்தும் அவர்கள் குறிப்பிட்ட சீர்திருத்தங்களை மேற்கொள்ள ஏதுவாக இருந்தது. இந்தத் திட்டத்தின் கீழ் மாநிலப் பொதுத்துறை நிறுவனங்களின் முதலீட்டைக் குறைக்கவும், மாநில சொத்துக்களைப் பணமாக்கவும் மத்தியப்பிரதேச மாநிலத்திற்கு ரூ.518.17 கோடி வழங்கப்பட்டது.

2022-23ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் மாநிலங்களின் மூலதனச் செலவினங்களுக்காக அறிவிக்கப்பட்டுள்ள மேம்படுத்தப்பட்ட சிறப்பு நிதிஉதவி ஒதுக்கீடான ரூ.1 இலட்சம் கோடியால் மாநிலங்களில் மூலதன முதலீடுகளும், பொருளாதார வளர்ச்சியும் அதிகரிக்கப்படும் என்பதோடு அல்லாமல் நிதியமைச்சர் தன்னுடைய நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி மாநிலங்கள் சீர்திருத்தங்களை துரிதமாக மேற்கொள்ளவும் பயன்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

| அட்டவணை-2 மாநிலங்கள் குடிமக்கள்சார் சீர்திருத்தங்களை மேற்கொள்ள | |
|---|---|
| குடிமக்கள்சார் திட்டங்கள் | குறிப்பிட்ட சீர்திருத்தங்களை முழுமையாக மேற்கொண்ட மாநிலங்கள் |
| ஒரு நாடு ஒரு ரேஷன் அட்டை முறை | 17 |
| எளிதாக வணிகம் செய்வதற்கான சீர்திருத்தங்கள் | 20 |
| நகர்புற உள்ளாட்சி அமைப்புகள்சேவை நிறுவனங்கள் சார் சீர்திருத்தங்கள் | 11 |
| மின்சாரத்துறைசார் சீர்திருத்தங்கள் (முழுமையாக அல்லது பகுதியாக) | 17 |
| தொழில்நுட்பம் மற்றும் வணிகம்சார் மொத்த இழப்புகளைக் குறைக்க | 5 |
| சேவை வழங்கலுக்கான சராசரி செலவு மற்றும் சேவைக்கான சராசரி வருமானம் இடையே உள்ள இடைவெளியைக் குறைத்தல் | 7 |
| விவசாயிகளுக்கு மின்சாரம்சார் உதவித்தொகையை நேரடியாக வங்கியில் செலுத்துதல் | 15 |

– டாக்டர்.சாஜன் சிங் யாதவ், கூடுதல் செயலாளர், செலவினங்கள் துறை, நிதி அமைச்சகம், இந்திய அரசு

# இந்தியப் பெருவணிக நிறுவனங்களின் கடன் பற்றாக்குறையைப் போக்குதல்

- அவினேஷ் மிஸ்ரா
- பிரியங்கா ஆனந்த்

கார்ப்பரேட் பத்திரங்கள் கடன் சந்தையின் வளர்ச்சிக்காக ஏராளமான வாய்ப்புகளையும், வசதிகளையும் மத்திய அரசு உருவாக்கிய போதிலும், இந்தியாவின் ஒட்டுமொத்த நிதி அமைப்பில் கடன் பத்திரச் சந்தையின் மதிப்பு மிக மிகக் குறைவானதாகவே இருக்கிறது. ஒரு நாட்டின் ஒட்டுமொத்த நிதி அமைப்பில் கார்ப்பரேட் கடன் சந்தையின் பங்கு அமெரிக்காவில் 123 விழுக்காடாகவும், தென் கொரியாவில் 74 விழுக்காடாகவும், சிங்கப்பூரில் 34 விழுக்காடாகவும் உள்ள நிலையில், இந்தியாவில் இதன் மதிப்பு வெறும் 17 விழுக்காடு என்ற அளவிலேயே உள்ளது. இந்தியாவில் காணப்படும் ஏராளமான அமைப்பு சார்ந்த முட்டுக்கட்டைகள் தான் நமது நாட்டில் வலிமையான கார்ப்பரேட் பத்திரச் சந்தையின் வளர்ச்சிக்குத் தடையாக உள்ளது.

இந்திய நிதிச்சந்தைகள் கடந்த சில ஆண்டுகளில் வணிக மதிப்பு, சந்தை மூலதனம், ஆண்டு வருவாய், பட்டியலிடப்பட்டப் பங்குகள் ஆகியவற்றின் அடிப்படையில் கணிசமான அளவுக்கு வளர்ச்சி அடைந்துள்ளன. 1990ஆவது ஆண்டுகளில் அறிமுகம் செய்யப்பட்ட பங்குச் சந்தை ஒழுங்குமுறை அமைப்பு அடையாளம் காணமுடியாத மின்னணு வணிக முறை, பாதிப்பு மேலாண்மைக்காக சிறப்பான தனி அமைப்பு உருவாக்கப்பட்டது, வருங்கால ஒப்பந்தங்கள், வாய்ப்புகள் போன்ற டெரிவேட்டிவ்ஸ் வர்த்தகம், வைப்பகங்கள் உருவாக்கப்பட்டது போன்ற சீர்திருத்தங்கள் தான் இந்திய மூலதனச் சந்தைகளின் இத்தகைய மிகப்பெரிய வளர்ச்சிக்குக் காரணம். இத்தகைய நடவடிக்கைகளின் காரணமாக, நிதிச்சந்தைகளில் திறனும், வெளிப்படைத் தன்மையும் அதிகரித்தது மட்டுமின்றி, பங்குப் பரிமாற்றக் கட்டணங்கள் குறிப்பிடத்தக்க அளவில் குறைவதற்கும் காரணமாக அமைந்தன. நிதிச் சந்தையில் முதலீடு செய்வதற்கான நிதி வாய்ப்புகள் பல்வேறு தளங்களில் விரிவாக்கப்பட்டது முதலீட்டாளர்களின் அளவை அதிகரித்தது. அதுமட்டுமின்றி, பெருநிறுவனங்கள் தங்களுக்குத் தேவையான மிகப் பெரிய அளவிலான முதலீடுகளைத் திரட்டுவதற்கும், வேலைவாய்ப்பு உருவாக்கத்தைப் பெருக்குவதற்கும் இந்த நடவடிக்கை பெருமளவில் உதவியது.

இந்தியாவைப் பொறுத்தவரை, பங்குச்சந்தைகள் தவிர்த்து வணிக வங்கிகளும் இந்திய கார்ப்பரேட் நிறுவனங்களுக்குப் போதுமான கடன் கிடைப்பதை உறுதி செய்வதில் முக்கியமான பங்காற்றுகின்றன. ஆனாலும் கூட, கார்ப்பரேட் பத்திரங்கள், கடன் பத்திரங்கள், வணிகப் பத்திரங்கள் போன்ற சந்தை ஆதாரங்களை நோக்கி கார்ப்பரேட் நிறுவனங்கள் மாறி வருவதை அண்மைக் காலங்களில் பார்க்க முடிகிறது. 2019-20ஆவது நிதி ஆண்டின் முடிவில் மொத்தம் 32.5 இலட்சம் கோடி ரூபாய் அளவுக்கு கார்ப்பரேட் பத்திரங்களும், 3.4 இலட்சம் கோடி ரூபாய் அளவுக்கு வணிகப்பத்திரங்களும் நிலுவையில் உள்ளன. கார்ப்பரேட் பத்திரங்களில் வணிக மதிப்பும் அண்மைக்காலங்களில் மிகப் பெரிய அளவில் உயர்ந்திருக்கிறது. உதாரணமாக, 2020-21ஆம் ஆண்டில் பம்பாய் பங்குச் சந்தையிலும், தேசிய பங்குச் சந்தையிலும் 19 இலட்சம் கோடி ரூபாய் மதிப்புள்ள கார்ப்பரேட் பத்திரங்கள் விற்பனையாகியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமின்றி, 2020-21ஆம் ஆண்டில் இந்திய வணிக நிறுவனங்கள் 7.8 இலட்சம் கோடி ரூபாய் மூலதனத்தை கார்ப்பரேட் பத்திரங்கள் சந்தையில் குறைந்த வட்டியில் திரட்டி இருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

சந்தையில் மிகப்பெரிய வளர்ச்சிக்கான காரணங்களில் மிகவும் முக்கியமானவை இந்திய கார்ப்பரேட் பத்திரங்கள் ஆகும். கார்ப்பரேட் பத்திரங்களுக்கான வெளிநாட்டு போர்ட்போலியோ மூலதன வரம்பு 9 விழுக்காட்டில் இருந்து 15 விழுக்காடாக உயர்த்தப்பட்டது, கார்ப்பரேட் பத்திரங்கள் குறித்த தகவல்களை வெளியிடும் முறை உருவாக்கப்பட்டது, இந்தியாவின் பங்குச் சந்தைகளில் கார்ப்பரேட் கடன் பரிமாற்றத்திற்கான வணிகத் தளங்கள் ஏற்படுத்தப்பட்டது, கார்ப்பரேட் பத்திரங்கள் பரிமாற்றத்திற்கான அனுமதி மற்றும் தீர்வு வசதிகள் ஏற்படுத்தப்பட்டது, கார்ப்பரேட் பத்திரங்களுக்கான ரெப்போ விகிதம் அறிமுகம் செய்யப்பட்டது, கார்ப்பரேட் கடன் பத்திரங்களை மறுவிற்பனை செய்வதற்கு வசதியாக பம்பாய் பங்குச்சந்தை மற்றும் தேசியப் பங்குச்சந்தைகளின் கடன் பிரிவின் முத்தரப்பு ரெப்போ சந்தைத் தளம் உருவாக்கப்பட்டது போன்றவை ஆகும். மேலும், கார்ப்பரேட் கடன், தனியார் பரிமாற்றங்களில் வெளிப்படைத் தன்மையை அதிகரிப்பதற்காக மின்னணு பதிவு பொறிமுறையை பங்குச்சந்தைகள் அறிமுகம் செய்தன. இதன் மூலம், 500 கோடி மற்றும் அதற்கும் கூடுதலான கடன் பத்திரங்கள் பங்குச்சந்தைகள் மூலம் வணிகம் செய்யப்படுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. கடன் பட்டியல் உடன்பாட்டை எளிமைப்படுத்துதல், பெருநிறுவனங்களின் மொத்தக் கடன் மதிப்பில் 25 விழுக்காட்டை கார்ப்பரேட் பத்திரங்கள் மூலம் வாங்குதல், பென்ஷன் நிதி முதலீட்டுக்கான கடன் மதிப்பீட்டு அளவைக் குறைத்தது, கார்ப்பரேட் பத்திரங்களில் 2ஆவது சந்தை வணிகத்தில் வெளிப்படைத் தன்மையை அதிகரிப்பதற்காக பங்குச்சந்தைகளால் ஏல வேண்டுகோளுக்கான (Request for Quote) தளம் உருவாக்கப்பட்டது, தகுதிபெற்ற நிதி ஒப்பந்ததாரர்களின் இருதரப்பு ஒப்பந்தத்திற்கான சட்டப்பூர்வக் கட்டமைப்பு வசதியை ஏற்படுத்தியது, சில்லறை முதலீட்டுக்கான குறைந்தபட்ச பங்கு எண்ணிக்கை அளவைக் குறைத்தது உள்ளிட்ட நடவடிக்கைகளும் இந்திய அரசால் மேற்கொள்ளப்பட்டன.



கார்ப்பரேட் பத்திரங்கள் கடன் சந்தையின் வளர்ச்சிக்காக ஏராளமான வாய்ப்புகளையும், வசதிகளையும் மத்திய அரசு உருவாக்கிய போதிலும், இந்தியாவின் ஒட்டுமொத்த நிதி அமைப்பில் கடன் பத்திரச் சந்தையின் மதிப்பு மிக மிகக் குறைவானதாகவே இருக்கிறது. ஒரு நாட்டின் ஒட்டுமொத்த நிதி அமைப்பில் கார்ப்பரேட் கடன் சந்தையின் பங்கு அமெரிக்காவில் 123 விழுக்காடாகவும், தென் கொரியாவில் 74 விழுக்காடாகவும், சிங்கப்பூரில் 34 விழுக்காடாகவும் உள்ள நிலையில், இந்தியாவில் இதன் மதிப்பு வெறும் 17 விழுக்காடு என்ற அளவிலேயே உள்ளது. இந்தியாவில் காணப்படும் ஏராளமான அமைப்பு சார்ந்த முட்டுக்கட்டைகள் தான் நமது நாட்டில் வலிமையான கார்ப்பரேட் பத்திரச் சந்தையின் வளர்ச்சிக்குத் தடையாக உள்ளது. தனியார் கடன் வணிகத்தைப் பொறுத்தவரை அது குறித்த விவரங்களை பெரிய அளவில் வெளியிடத் தேவையில்லை, வெளியீட்டுச் செலவு மிகவும் குறைவு, வடிவமைக்கப்பட்ட கடன் ஒப்பந்தங்கள் ஏராளமாக இருப்பது உள்ளிட்ட காரணங்களால் கார்ப்பரேட் பத்திரங்கள் விற்பனையை விட இந்தியாவில் தனியார் கடன் விகிதம் அதிகமாக உள்ளது. 2019-20ஆம் ஆண்டில் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கான மொத்தக் கடன் தேவையில் 98 சதவீதம் தனியார் கடன் விகிதம் மூலமாகவே திரட்டப்பட்டது. மிகக் குறைந்த அளவிலான தொகையே பொதுப் பங்கு வெளியீட்டின் மூலம் திரட்டப்பட்டது. அது மட்டுமின்றி, அதிகக் கடன் மதிப்புக் குறியீடு கொண்ட பத்திரங்கள் தான் குறைந்த கடன் மதிப்புக் குறியீடு கொண்ட பத்திரங்களை விட மூலதனங்களை அதிகம் ஈர்க்கின்றன.

ஏஏஏ, ஏஏ, ஏ ஆகிய கடன் மதிப்புக் குறியீடு கொண்ட பத்திரங்கள் கடந்த 2019–20ஆம் நிதி ஆண்டில் வெளியிடப்பட்ட மொத்தக் கடன் பத்திரங்களின் மதிப்பில் முறையே 74 விழுக் காட்டையும், 14 மற்றும் 2.5 விழுக்காட்டையும் கொண்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

கார்ப்பரேட் பத்திரங்கள் பங்குச்சந்தைகளுடன் இணைக்கப்பட்டு இருப்பதால், அவற்றில் முதலீடு செய்வதற்கு வங்கிகளும் தயங்குகின்றன. "விற்பனைக்குத் தயாராக இருப்பவை", "முதிர்வடையும் வரை வைத்திருக்கக்கூடியவை", "வர்த்தகத்திற்கானவை" என மூன்று வகையாக முதலீட்டுக்காக வாங்கப்படும் கடன் பத்திரங்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் "விற்பனைக்குத் தயாராக இருப்பவை", "வர்த்தகத் திற்கானவை" ஆகியவற்றை வங்கிகள் வாங்கி இருந்தால், அவற்றில் ஏற்படும் இலாபமாக இருந்தாலும், நஷ்டமாக இருந்தாலும் அதை வங்கிகள் தான் ஏற்றுக்கொள்ள வேண்டும். அது வங்கிகளின் இலாபத்தைப் பாதிக்கும். அதுமட்டுமின்றி, கடன் ஒப்பந்தங்களுடன் ஒப்பிடும் போது, கார்ப்பரேட் பத்திரங் களுக்கான உடன்படிக்கைகள் தரப்படுத்தப்பட்டிருக்கின்றன. அதனால், கடன் பெறுபவரின் கடன் மதிப்பீடுக் குறியீடு குறைந்தாலும் கூட, அவருக்கு வழங்கப்பட்ட வங்கிக் கடன்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், கடன் ஒப்பந்தத்தில் சில பிரிவுகளை வங்கிகளால் சேர்க்க முடியும். கடன் மதிப்புக் குறியீடு குறைக்கப்படும் போது, கடன் பத்திரங்களின் மதிப்பு மிக விரைவாகக் குறைகிறது. அதே நேரத்தில், கார்ப்பரேட் நிறுவனங் களின் கடன் மதிப்புக் குறியீடு குறைந்தாலும் கூட, அதற்கு வழங்கப்படும் கடன் மதிப்பு குறை வதில்லை. இவற்றைக் கருத்தில் கொண்டு தான் வங்கிகள் கடன் பத்திரங்களில் முதலீடு செய்யத் தயங்குகின்றன.

நிதி அமைப்புகள் அவற்றின் மொத்த முதலீட்டில் ஒரு குறிப்பிட்ட அளவில் மட்டும் தான் கார்ப்பரேட் பத்திரங்களில் முதலீடு செய்ய வேண்டும் என்று அவற்றுக்கான ஒழுங்குமுறை அமைப்புகள் வகுத்த விதிமுறைகள் கட்டுப் படுத்துகின்றன. அதனால், அந்த நிறுவனங்களால் கார்ப்பரேட் பத்திரங்களில் அதிக அளவில் முதலீடு செய்ய முடியாது. அதே போல் கார்ப்பரேட் பத்திரங்களை மதிப்பீடு செய்வதற்கான முறையும் நாடு முழுவதும் ஒரே சீராக இல்லை. அது கார்ப்பரேட் பத்திரங் களின் இரண்டாம்நிலை வணிகத்தைப் பாதிக்கிறது. கார்ப்பரேட் பத்திரங்களை மறுவிநி யோகம் செய்யும் போது அதற்காக முத்திரைக் கட்டணத்தை மீண்டும் செலுத்த வேண்டி இருப்பதாலும், அதன் முதிர்வு நாளின் போது, பலவகைக் கட்டணங்களை திரும்ப செலுத்த வேண்டி இருப்பதாலும், கார்ப்பரேட் பத்திரங்களின் மறுவிநியோகத் திற்கு ஆதரவு இல்லை.

அதே நேரத்தில் இந்தியா போன்ற வளரும் நாடுகளில் நன்றாக வளர்ச்சி அடைந்த கடன் சந்தைகள் ஏராளமான சாதகமான அம்சங்களைக் கொண்டுள்ளன. மத்திய அரசால் அறிவிக்கப் பட்டுள்ள தேசிய உள்கட்டமைப்பு வரிசைத் திட்டம் 2020 முதல் 2025ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் 111 இலட்சம் கோடி முதலீடு செய்ய தீர்மானித் திருக்கிறது. இது 2014ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் இந்தியா வில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக செய்யப்பட்ட முதலீடான 51 இலட்சம் கோடியை விட இரண்டு மடங்குக்கும் அதிகமாகும். இந்திய வங்கிகளின் வாராக்கடன் அளவு மிகவும் அதிகமாக இருக்கும் சூழலில், இனி வரும் காலங்களில் உள்கட்டமைப்புத் திட்டங்களுக் கான முதலீட்டுக்கு வங்கிக்கடனை அதிகமாகச் சார்ந்திருப்பது சாத்தியமாக இருக்காது. இத்தகைய சூழலில், உள்கட்டமைப்புத் துறைக்கான முதலீட்டு இடைவெளியை வலிமையான கடன் பத்திரச் சந்தைகள் நிரப்பும். இது வங்கி அமைப்பின் சுமையையும் பெருமளவில் குறைக்கும்.

இந்திய தொழில் வணிக நிறுவனங்களின் நிதித்தேவையில் பெரும் பகுதியை வெளி வணிகக்கடன் பூர்த்தி செய்கிறது. ஆனால், இந்த வகைக் கடன்களை எப்போதும் நம்ப முடியாது. 2007ஆம் ஆண்டில் ஐரோப்பிய நாடுகளில் கடன் சந்தை வீழ்ச்சி அடைந்ததைத் தொடர்ந்தும், 2013ஆம் ஆண்டில் அமெரிக்க டாலருக்கு எதிரான இந்திய ரூபாய் மதிப்பு சரிந்த போதும், இந்தியாவின் வெளி வணிகக் கடன் கடுமையான அதிர்ச்சிகளை சந்தித்தது. இப்போதும் இந்திய நிறுவனங்கள் வெளி வணிகக் கடன்களை அதிக அளவில் சார்ந்திருக்கும் பட்சத்தில் எதிர்காலத்திலும் இத்தகைய அதிர்ச்சிகளை சந்திக்க வேண்டி இருக்கும். நிறைவாக, அண்மைக் காலங்களில் இந்திய ரிசர்வ் வங்கி அடுத்தடுத்து அறிவித்த வட்டிக் குறைப்பு மற்றும் வெளிச் சந்தையில் ரிசர்வ் வங்கி அளித்த நிதி ஆகியவற்றின் காரணமாக, வங்கிக் கடனுடன் ஒப்பிடும்






போது, கார்ப்பரேட் கடன் பத்திரங்கள் சற்று அதிக வட்டி கொண்டவை ஆகும். எனவே, இந்தியாவில் முழு அளவிலான கார்ப்பரேட் பத்திரங்களின் சந்தையை மேம்படுத்துவதற்கு ஏராளமான கொள்கை நடவடிக்கை களை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

இவை அனைத்திற்கும் மேலாக கடன் பத்திரங்களை பொதுவில் வெளியிடுவதற்கான நேரத்தையும், கட்டணத்தையும் கணிசமாகக் குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியது மிகவும் முக்கியமாகும். பட்டியலிடப் பட்ட நிறுவனங்கள் கடன் பத்திரங் களின் விவரங்களை வெளியிடுதல் மற்றும் பட்டியலிடலுக்கான தேவைகள் ஆகியவற்றையும் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அடுத்தடுத்து கடன் பத்திரங்களை வெளியிடும் போது கூடுதல் விவரங்களை வெளியிட்டால் மட்டும் போது மானது என்ற நிலை ஏற்படுத்தப்பட வேண்டும். இவ்வளவு தடை களுக்கு இடையிலும் கார்ப்பரேட் பத்திரங்களின் பொது வெளியீடு மூலம் திரட்டப்படும் நிதியின் அளவு அதிகரித்திருக்கிறது. 2020ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் நவம்பர் வரையிலான 8 மாதங்களில் கடன் பத்திரங்கள் மூலம் 4 ஆயிரம் கோடி ரூபாய் மட்டுமே திரட்டப்பட்ட நிலையில், 2021ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் நவம்பர் மாதம் வரையிலான 8 மாதங்களில் கடன் பத்திரங்கள் மூலம் 9 ஆயிரம் கோடி கார்ப்பரேட் கடன் திரட்டப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. கடன் தவணை தவறுதல் தொடர்பாக துல்லியமான பொது அறிவிப்புகளை வெளியிடுவதற்காக கடன் பத்திரங்களை வெளியிட்டவர்கள், அதற்கான வட்டியையும் மீட்புத் தொகையையும் சம்பந்தப்பட்ட வைப்பகங்களுக்குச் செலுத்தியாக வேண்டும். அவர்கள் அந்தத் தொகையை முதலீட்டாளர்களுக்கு வழங்குவார்கள். கடன் பத்திரங் களில் முதலீடு செய்தவர்கள் தாங்கள் வணிகம் செய்யும் நிதிக் கருவிகளின் கடன் பாதிப்பு அளவு குறித்து அறிந்து கொள் வதற்காக கடன் மதிப்பீட்டு நிறுவனங்கள் கடன் மதிப்புக் குறியீடு மாற்றங்களை ஒரு குறிப்பிட்ட இடைவெளிக்கு ஒரு முறை வெளியிட்டுக் கொண்டே இருக்க வேண்டும். கடன் மதிப்பீட்டு நிறுவனங்கள் கடன் தகவல் நிறுவனங்களின் உறுப்பினராக ஆகும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட நிறுவனங்களில் கடன் குறித்த தகவல்களை எளிதாகத் திரட்ட முடியும். இதற்கு வசதியாக கடன் தகவல் நிறுவனங்கள் (ஒழுங்குமுறை) சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டும்.

கார்ப்பரேட் பத்திரங்கள் வலிமையடைவதற்கான அடிப் படைத் தேவைகளில் மிகச் சிறப்பாக செயல்படக்கூடிய கடன் தவணை தவறுதல் பரிமாற்றச் சந்தையும் ஒன்றாகும். அண்மை யில் அறிமுகம் செய்யப்பட்ட இந்திய ரிசர்வ் வங்கி (கடன் டெரிவேட்டிவ்ஸ்) வழிகாட்டுதல் விதிகள் 2021இன் படி, வங்கிகள், வங்கிகள் அல்லாத நிதிநிறுவனங் கள், காப்பீட்டு நிறுவனங்கள், ஓய்வூதிய நிதியங்கள், பரஸ்பர நிதிநிறுவனங்கள், மாற்று முதலீட்டு நிறுவனங்கள், வெளி நாட்டு போர்ட்போலியோ முதலீட்டாளர்கள் ஆகியோர் தங்களுக்கு இடையிலான கடன் பரிமாற்றங்கள் குறித்து ரிசர்வ் வங்கிக்குத் தெரிவிக்க முடியும். இந்த விதிகள் நெருக்கடியான நேரத்தில் கடன் பத்திரங்கள் கண்மூடித்தனமாக விற்பனை செய்யப்படுவதைக் குறைப்பதுடன், பத்திரச் சந்தைக்குத் தேவையான நிதியையும் வழங்கும். இது சில்லறைப் பயனாளர்கள் தங்களின் கடன் பாதிப்பை முதலீடு செய்யவும், குறைந்த கடன் மதிப்புக் குறியீடு கொண்ட பத்திரங்களில் முதலீடு செய்ய முதலீட்டாளர்களை ஊக்கு விக்கவும் வகை செய்யும். வங்கி கள் கார்ப்பரேட் பத்திரங்களில் முதலீடு செய்வதை ஊக்குவிக்கும் வகையில் வங்கிகளின் மொத்தக் கடன் வைப்பு விகிதத்தில் கார்ப்பரேட் பத்திரங்களில் செய்யப் படும் முதலீடும் ஓர் அங்கமாகக் கருதப்பட வேண்டும். ஏற்கெனவே கடன் பத்திரத்தை வெளியிட்ட

நிறுவனங்கள் மீண்டும் புதிய கடன் பத்திரங்களை வெளியிடும் போது, அது மறுவிநியோகமாகக் கருதப்பட வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் தான் ஏற்கெனவே வெளியிடப்பட்ட பத்திரங்களுக்கு 2ஆவது சந்தை நிதியை உருவாக்க முடியும்.

இந்தியாவில் ஒட்டுமொத்தமாக வெளியிடப்பட்ட கார்ப்பரேட் பத்திரங்களின் மதிப்பில் சில்லறை முதலீட்டாளர்களின் பங்கு வெறும் 3 விழுக்காடு என்ற அளவிலேயே உள்ளது. கடன்கள் மீதான மூலதன இலாப வரி பங்குச்சந்தை முதலீடுகள் மூலம் கிடைக்கும் இலாப வரிக்கு இணையாகக் குறைக்கப்பட வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் தான் கடன் பத்திரங்களில் சில்லறை முதலீடுகளை அதிகரிக்க முடியும். இந்தியக் கடன் சந்தையில் முதலீடு செய்வதற்கான வரம்பில் வெளிநாட்டு போர்ட்போலியோ முதலீட்டாளர்கள் வெறும் 20 விழுக்காட்டை மட்டுமே பயன்படுத்தியுள்ளனர். கடன் சந்தையில் முதலீடு செய்யும் வெளிநாட்டு போர்ட்போலியோ முதலீட்டாளர் களுக்கு வரி விலக்கு ஊக்கு விப்புகள் நீட்டிக்கப்பட்டால், அவர்களுக்கான முதலீட்டு வரம்பு அளவுக்கு முதலீடு செய்வதற்கான வாய்ப்பு அவர்களுக்கு ஏற்படும். ஒய்வூதிய நிதியங்கள், காப்பீட்டு நிறுவனங்கள் ஆகியவை கார்ப்பரேட் பத்திரங்களில் முதலீடு செய்வதற்கான ஒழுங்குமுறைக் கட்டுப்பாடுகளும் தளர்த்தப்பட வேண்டும்.

இன்றைய சூழலில், இந்திய உள்கட்டமைப்பு நிதிநிறுவனம், உள்கட்டமைப்புப் பத்திரங்களில் செய்யப்படும் முதலீட்டின் ஒரு பகுதிக்கு மட்டும் கடன் உத்திரவாதம் வழங்குகிறது. உள்கட்டமைப்புத் திட்டத்திற்கான கடன் பத்திரங்களுக்கு ஏஏ கடன் மதிப்புக் குறியீட்டை வழங்கும் அந்த நிறுவனம், ஒரு உள்கட்டமைப்புத் திட்டத்திற்கான மொத்த முதலீட்டு மதிப்பில் 20 விழுக்காட்டுக்கு மட்டும் கடன் உத்திரவாதம் வழங்குகிறது. ஆனால் இது போதுமானது அல்ல. இந்தக் கடன் உத்திரவாத வரம்பு அதிகரிக்கப்பட வேண்டும். அதுமட்டுமின்றி, குறைந்த கடன் மதிப்புக் குறியீடு கொண்ட பத்திரங்களுக்கும் இந்த வசதி நீட்டிக்கப்பட வேண்டும். அதன் மூலம் குறைந்த கடன் மதிப்புக் குறியீடு கொண்ட பத்திரங்கள், தங்களின் கடன் மதிப்புக் குறியீட்டை உயர்த்திக் கொள்ள வசதியாக இருக்கும். இந்திய ரிசர்வ் வங்கி அதன் சொத்துச் சீரமைப்பு வசதியின் கீழ் கார்ப்பரேட் பத்திரங்களை சொத்து ஆவணமாக ஏற்றுக்கொள்ள அனுமதிக்க வேண்டும். கார்ப்பரேட் கடன் பத்திரங்களில் செய்யப்படும் முதலீடுகளை அதிகரிப்பதற்காக பாதுகாக்கப் பட்ட பத்திரங்கள் மற்றும் வட்டி விகித டெரிவேட்டிவ்களுக்காக தனிச் சந்தை உருவாக்கப்பட வேண்டும்.

இந்தியாவில் நன்கு வளர்ச்சியடைந்த கடன் சந்தையை உருவாக்குவதற்காக இந்திய ரிசர்வ் வங்கியும், செபி அமைப்பும் ஏராளமான யோசனைகளை வழங்கியுள்ளன. இந்தியாவின் கார்ப்பரேட் பத்திரச்சந்தையை வலுப்படுத்துவதற்காக, சந்தை உருவாக்குவோர் தொகுப்பை ஏற்படுத்த செபி நிறுவனம் திட்டமிட்டிருக்கிறது. இந்த அமைப்புகள் சந்தையில் கடன் பத்திரங்களை வாங்குவது, விற்பனை செய்வது ஆகியவற்றுக்கான விலைக் குறியீட்டை வழங்கும். அதுமட்டுமின்றி, தற்காலிகத் தேவை மற்றும் வழங்கல் இடைவெளியை ஏற்றுக்கொள்ளவும் இந்த அமைப்புகள் வகை செய்யும். இதன் மூலம் சந்தை ஏற்றத் தாழ்வுகளின் போது ஏற்படும் அதிர்வுகளின் தாக்கம் பெருமளவில் குறையும். பங்குச்சந்தைகளில் பங்குகள் மற்றும் அரசுப் பத்திரங்களை விற்பனை செய்யும் போது, அது உறுதியாக தீர்வு செய்யப்படுவதற்கான தளம் இருப்பதைப் போன்று கடன்பத்திரங்கள் சந்தையிலும் ஒரு தளத்தை ஏற்படுத்துவதற்கு செபி அமைப்பு திட்டமிட்டிருக்கிறது. கடன் சந்தைக் குறியீட்டை வடிவமைப்பது தொடர்பாக அதனுடன் சம்பந்தப்பட்ட அமைப்புகளுடன் ஆலோசனைகள் நடத்தப்பட்டு வருகின்றன. கடன் பத்திரங்களை வெளியிடும் நிறுவனங்கள், பங்குச் சந்தைகளுடன் தொடர்பில்லாதவையாக இருக்கும் போது, அவற்றால் வெளியிடப்படும் கடன் பத்திரங்களை "முதிர்வடையும் வரை வைத்திருக்கக் கூடியவை" என்ற பிரிவில் சேர்க்க வேண்டும் என்று இந்திய ரிசர்வ் வங்கி ஆலோசனை வழங்கியுள்ளது.

நன்றாக உருவாக்கப்பட்ட கடன் பத்திரச்சந்தை இந்தியாவில் நீடித்த பசுமைப் பத்திரச் சந்தைக்கு வழி வகுக்கக்கூடும். 2021ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட இந்திய எரிசக்தி கண்ணோட்டம் என்ற தலைப்பிலான அறிக்கையில், இந்தியாவில் தூய்மையான எரிசக்தித் தொழில்நுட்பங்களில் முதலீடு செய்வதற்காக அடுத்த இரு பத்தாண்டுகளில் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் கோடி அமெரிக்க டாலர் அதாவது, 105



இலட்சம் கோடி ரூபாய் முதலீடு இந்தியாவுக்குத் தேவைப்படும். இந்திய நிறுவனங்களால் வெளியிடப்படும் பசுமைப் பத்திரங்களின் மதிப்பு அண்மைக் காலங்களில் 1,630 கோடி டாலர், அதாவது ஒரு இலட்சத்து 22 ஆயிரத்து 250 கோடி ரூபாய் என்ற அளவை எட்டியுள்ளது. ஆனாலும் கூட, இந்தியாவின் ஒட்டுமொத்த கார்ப்பரேட் பத்திரங்களின் வெளியீட்டில் பசுமைப் பத்திரங்கள் வெளியீடு என்பது மிகக் குறைந்த விழுக்காடாகவே உள்ளது. எனவே, பசுமை முதலீடுகளின் அளவை அதிகரிக்க ஊக்குவிக்கும் வகையிலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

பசுமைத் திட்டங்களுக்காகத் திரட்டப்படும் முதலீடுகளில் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்யவும், முறைகேடுகளைத் தவிர்க்கவும், பசுமைப் பத்திரங்களுக்கான தரப்படுத்துதல் மற்றும் சான்றளிக்கும் பொறிமுறைகள் உருவாக்கப்பட வேண்டும். காலநிலை மாற்றப் பத்திரங்களுக்குச் சான்றளிப்பதற்காக, காலநிலைப் பத்திரத் தரத்தை, காலநிலை பத்திர முன்முயற்சி உருவாக்கியுள்ளது. அதே போல், பசுமைப் பத்திரங்கள் கொள்கைகளை சர்வதேச மூலதன சந்தைச்சங்கம் அறிமுகப்படுத்தியுள்ளது. அதில், பசுமைப் பத்திரங்களை வெளியிடுவதற்கான விதிமுறைகள் இடம்பெற்றுள்ளன. பசுமைப் பத்திரங்களுக்கான தரம் மற்றும் கொள்கைகள் முழுமையாகக் கடைபிடிக்கப்படும் போது, அதன் மீதான முதலீட்டாளர்களின் நம்பிக்கை அதிகரிக்கும். போதிய அளவில் முதலீடு செய்வதற்கான பொருள்கள் இருக்கும் போது, பசுமைப் பத்திரங்கள் மீதான பரிமாற்ற விகிதப் பாதிப்பும் குறையும். அதே போல், இந்திய நிறுவனங்களின் சுற்றுச்சூழல், சமூக மற்றும் நிர்வாக விவரங்கள் தொகுக்கப்பட்டால் அது இந்தியாவில் பசுமை நிதியின் மீது நம்பிக்கை ஏற்படுத்துவதற்கு பெருமளவில் உதவும்.

ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் முறைப்படுத்தப்பட்ட நிதிநிலைத் தன்மையை பராமரிப்பதில் வலிமையான கார்ப்பரேட் கடன் பத்திரச் சந்தை முக்கியமான பங்காற்றுகிறது. 2025ஆம் நிதி ஆண்டின் முடிவில், கடன் பத்திரங்களின் வெளியீடு, தற்போது உள்ள 33 இலட்சம் கோடியிலிருந்து இரு மடங்காக அதிகரித்து 65 இலட்சம் கோடி முதல் 70 இலட்சம் கோடியாக இருக்கும் என்றும், ஆனால் அவற்றுக்கான தேவை 60 முதல் 65 இலட்சம் கோடி என்ற அளவிலேயே இருக்கும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. கார்ப்பரேட் கடன் பத்திரங்கள் வெளியீட்டுக்கும், தேவைக்கும் இடையிலான இடைவெளியைக் குறைப்பதற்கும், இந்தியத் தொழில் துறைக்குத் தேவையான கடன் போதிய அளவிலும், குறித்த நேரத்திலும் கிடைப்பதை உறுதி செய்வதற்கும் வசதியாக, தேவையான கொள்கை மற்றும் ஒழுங்குமுறை நடவடிக்கைகளை இந்திய அரசு மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். அதே போல், இந்தியாவில் தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் செபி, இந்திய ரிசர்வ் வங்கி, மத்திய அரசின் பெருநிறுவனங்கள் விவகாரத்துறை அமைச்சகம் போன்ற பல்வேறு ஒழுங்குமுறை அமைப்புகளுக்கு இடையே ஒருங்கிணைப்பும், ஒத்துழைப்பும் வலுப்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும். இந்தியாவில் முழுமையாக ஒழுங்கமைக்கப்பட்ட கடன் பத்திரச் சந்தையின் சுமூகமான செயல்பாட்டுக்கு இது மிகவும் அவசியம். அது மட்டுமின்றி, திறமையான பொதுக்கடன் மேலாண்மை இந்தியாவில் வலிமையான கார்ப்பரேட் கடன் பத்திரச் சந்தையை உருவாக்குவதற்கு பெருமளவில் பங்களிக்கும். இந்தியக் கடன் பத்திரங்கள், வளர்ச்சி அடைந்து வரும் சந்தைப் பத்திரங்கள் குறியீட்டில் சேர்க்கப்பட்ட பிறகு, இந்தியக் கடன் பத்திரங்கள் சந்தையில் வெளிநாட்டு முதலீடு குறிப்பிடத்தக்க அளவில் அதிகரிக்கும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

இத்தகைய சூழலில், குறிப்பாக கொரோனா வைரஸ் பரவல் காரணமாக உலகம் முழுவதும் உற்பத்தி மற்றும் விநியோகச் சங்கிலி பாதிக்கப்பட்டுள்ள சூழலில், இந்திய கார்ப்பரேட் கடன் பத்திரச்சந்தையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்பட வேண்டும். இந்திய நிறுவனங்கள் தங்களின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கும், குறைந்த வட்டியில் போதிய கடன் கிடைக்கும் போதே அதைப் பயன்படுத்தி, தங்களின் முதலீட்டை அதிகரிப்பதற்கும் இது மிகவும் பொருத்தமான கால கட்டம் ஆகும். திறமையான கடன் சந்தைகள் இந்த நோக்கத்தை மிகச் சிறப்பாக நிறைவேற்றும்.

---

– **அவினேஷ் மிஸ்ரா**, ஆலோசகர், நிதி ஆயோக், புதுதில்லி

– **பிரியங்கா ஆனந்த்**, இளம் தொழில் வல்லுநர், நிதி ஆயோக், புதுதில்லி

## மத்திய பட்ஜெட் 2022 - 23

# வேளாண்மைக்கு உன்னதமான 13 திட்டங்கள்



- ❖ விவசாயிகளின் உற்பத்திப் பொருள்களை குறைந்தபட்ச ஆதார விலையில் வாங்கிக் கொள்வதற்கு ரூ.2.37 இலட்சம் கோடி ஒதுக்கீடு. ஒரு கோடியே 60 இலட்சம் கோதுமை, அரிசி விவசாயிகள் பயன் பெறுவர்.
- ❖ விநியோகச் சங்கிலியில் கவனம் செலுத்தி, அதற்காக விவசாயிகளுக்கு மானியம் வழங்குவதற்கென, வேளாண் அமைச்சகத்தின் கீழ் செயல்படும் துறைகளுக்குரூ.1.32 இலட்சம் கோடி நிதி ஒதுக்கீடு.
- ❖ ஒன்பது இலட்சம் விவசாயிகளுக்கும், உயிரினப் பன்மைக்கும் பயனளிக்கும் வகையில் ஐந்து ஆறுகளை இணைப்பதற்காக ரூ.44 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கீடு.
- ❖ பயிர்க் கணக்கெடுப்பு, நிலப்பதிவுகளை மின்னணு மயமாக்கல், பூச்சி மருந்து தெளித்தல், கிராமப்புற இளைஞர்களின் வேலை வாய்ப்பு, விவசாயிகளுக்கு செலவினக்குறைப்பு ஆகிய வற்றிற்குப் பயன்படக்கூடிய வகையில் ஆளில்லா குட்டி விமானங்களின் (ட்ரோன்) சேவைகள் செயல்படுத்தப் படும்.
- ❖ வேளாண் 'ஸ்டார்ட் அப்' களுக்கும், ஊரகத் தொழில் முனைவுகளுக்கும் நிதி உதவி செய்வதற்காக நபார்டு வங்கியின் மூலம் ஏற்பாடு. இதன் மூலம் ஏராளமான எண்ணிக்கையில் வேளாண் தொழில்கள் உருவாகும்.
- ❖ தனியார் வேளாண் தொழில் நுட்பச் செயல்பாட்டாளர்கள், வேளாண் தொழில் பங்கேற் பாளர்களுடன், பொதுத்துறை ஆராய்ச்சி நிறுவனங்களையும், விரிவாக்க மையங்களையும் இணைந்து செயல்பட வைப் பதன் மூலம் விவசாயிகளுக்கு உயர் தொழில்நுட்பச் சேவை கள் கிடைக்கச் செய்யப்படும்.
- ❖ எண்ணெய் வித்துக்களின் இறக்குமதியை அதிகமாகச் சார்ந்திருப்பதைக் குறைக்கும் வகையில், எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியை உள்நாட்டில் அதிகரிப்பதற்கான சிறப்புத்திட்டங்கள்.
- ❖ இரசாயன உரங்களற்ற இயற்கை வேளாண்மை நாடு முழுவதும் ஊக்குவிக்கப்படும். இந்தத் திட்டம் முதலில் கங்கை நதிக்கரை நெடுகவும் ஐந்து கிலோமீட்டர் பரப்பில் தொடங்கப்படும்.
- ❖ சிறுதானியங்களை அறு வடைக்குப் பின் மதிப்புக்கூட்டி உள்நாட்டிலும், வெளிநாடு களிலும் இதன் நுகர்வை அதிகரிப்பதற்கு சிறு தானியங் களுக்கான வணிக அடை யாளக் குறியீடு ஏற்படுத்தப் படும்.
- ❖ வேளாண் காடுகளின் வளர்ப்பை மேற்கொள்ள விரும்பும் பட்டியலின, பழங்குடி மக்களுக்கும், தனியார் காடு வளர்ப்புக்கும் நிதி உதவிகள் வழங்கப்படும்.
- ❖ சிறு விவசாயிகள், சிறு, நடுத்தர முனைவகங்களின் புதிய உற்பத்திப் பொருள் களுக்கு ஆதரவளித்து, திறன்மிக்க ஏற்பாட்டியல் வசதிகளை இந்திய ரயில்வே உருவாக்கித் தரும்.
- ❖ 5 முதல் 7 சதவீத உயிர்க்கூள உருண்டைகளை அனல்மின் உற்பத்தி நிலையங்களில் சேர்த்து எரிப்பதற்கு வழிவகை செய்யப்படும். இதன் மூலம் ஆண்டுக்கு 32 மில்லியன் மெட்ரிக் டன் கரிக்காற்று உமிழ்வு குறைக்கப்படும்.
- ❖ இயற்கை வேளாண்மை, நவீன வேளாண்மை, மதிப்புக்கூட்டல் ஆகிய தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு வேளாண்மைப் பல்கலைக் கழகங்களின் பாடத் திட்டங்களை மாற்றியமைப் பதற்கு மாநிலங்களுக்கு ஊக்கமளிக்கப்படும்.



## 2 ஆம் பக்கத் தொடர்ச்சி: பொருளாதார ஆய்வறிக்கை 2021-22

- 2021-22இல் (ஏப்ரல் - டிசம்பர்) மொத்த விற்பனை விலைக் குறியீட்டு எண் (WPI) அடிப்படையிலான மொத்த விற்பனைப் பணவீக்கம் 12.5 சதவிகிதமாக அதிகரித்துள்ளது.

### நீடித்த நிலையான வளர்ச்சி, பருவநிலை மாறுதல்

- நிதிஆயோக்கின் நீடித்த வளர்ச்சி இலக்குகள் இந்தியா குறியீட்டு எண் மற்றும் டேஷ் போர்டில் இந்தியாவின் ஒட்டுமொத்த மதிப்பு 2020-21இல் 66 ஆக அதிகரித்துள்ளது. இது 2019-20இல் 60 ஆகவும் 2018-19இல் 57 ஆகவும் இருந்தது.
- நிதிஆயோக் - வடகிழக்குப் பிராந்திய மாவட்ட நீடித்த வளர்ச்சி இலக்குகள் குறியீட்டு எண் 2021-22இன்படி 64 மாவட்டங்கள் முன்னணியிலும் (Front Runners) 39 மாவட்டங்கள் அடுத்த நிலையிலும் (Performers) உள்ளன.

### வேளாண்மை, உணவு மேலாண்மை

- கடந்த இரண்டு ஆண்டுகளில் வேளாண்துறை பிரகாசமான வளர்ச்சியை அடைந்துள்ளது. நாட்டின் ஒட்டுமொத்த மதிப்புக் கூட்டலில் (GVA) குறிப்பிடத்தக்க வகையில் 18.8 சதவிகிதம் (2021-22) அடைந்துள்ளது. இந்த வளர்ச்சி 2020-21இல் 3.6 சதவிகிதமாகவும் 2021-22இல் 3.9 சதவிகிதமாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது.
- பல்வகைப் பயிர்களை மாற்றி மாற்றிப் பயிரிடுவதை ஊக்குவிக்கும் வகையில் குறைந்தபட்ச ஆதரவு விலைக் (MSP) கொள்கை பயன்படுத்தப்படுகிறது.
- 2014ஆம் ஆண்டின் நிலவர மதிப்பீட்டு கணக்கெடுப்பின்படி (SAS) ஒப்பிட்டுப் பார்த்தால் அண்மைக்கால நிலவர மதிப்பீட்டு கணக்கெடுப்பின்படி பயிர் விளைச்சலில் இருந்து கிடைக்கும் நிகர வருவாய் 22.6 சதவிகிதமாக அதிகரித்துள்ளது.
- விவசாயத்தோடு தொடர்புடைய இதர துணைத் தொழில் பிரிவுகளான கால்நடைப் பராமரிப்பு, பால்பண்ணை, மீன்வளம் ஆகியன தொடர்ந்து அதிக வளர்ச்சி பெறும் துறைகளாக உள்ளன. வேளாண் பிரிவின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கான முதன்மை உந்துசக்திகளாக இவை விளங்குகின்றன.

### தொழிற்சாலை, உள்கட்டமைப்பு வசதி

- ஏப்ரல் - நவம்பர் 2021இல் ஆண்டுக்கு ஆண்டு என்ற அடிப்படையில் தொழிலக உற்பத்திக் குறியீட்டு எண் (IIP) 17.4 சதவிகிதமாக அதிகரித்தது. ஏப்ரல் - நவம்பர் 2020இல் இது (-) 15.3 சதவிகிதமாக இருந்தது.
- இந்திய ரெயில்வேக்கான மூலதனச்செலவு 2009-14 காலகட்டத்தில் ஓராண்டுக்கு சராசரியாக ரூபாய் 45,980 கோடியாக இருந்தது. இது 2020-21இல் ரூபாய் 155,181 கோடியாக அதிகரித்துள்ளது. இது 2021-22 பட்ஜெட்டில் மேலும் ரூபாய் 215,058 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. 2014 நிலையைக் காட்டிலும் இது ஐந்து மடங்கு அதிகமாகும்.
- ஒரு நாளைக்கு சாலைக் கட்டுமானப் பணி என்பது 2019-20இல் 28 கிலோ மீட்டர் என இருந்தது 2020-21இல் குறிப்பிடத்தக்க அளவில் 36.5 கிலோ மீட்டராக அதிகரித்துள்ளது . அதாவது 30.4 சதவிகிதம் அதிகரித்துள்ளது.
- பெருநிறுவனங்களின் விற்பனைக்கான நிகர இலாபம் 2021-22இல் ஜுலை - செப்டம்பர் வரையிலான காலாண்டில் இதுவரை இல்லாத அளவில் 10.6 சதவிகிதம் என உச்சத்தைத் தொட்டுள்ளது. பெருந்தொற்றுப் பரவல் இருந்த போதிலும் கூட இது சாத்தியமாகியுள்ளது (ரிசர்வ் வங்கி ஆய்வு).
- உற்பத்தியோடு இணைந்த ஊக்க நடவடிக்கைத் (PLI) திட்டத்தை அறிமுகப்படுத்தியது என்பது பௌதீக மற்றும் மின்னணு உள்கட்டமைப்பு வசதிகளுக்கு மிகப்பெரும் உந்துதலாக அமைந்தது. பரிமாற்றச் செலவுகளைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளும், வர்த்தகத்தை எளிதில் மேற்கொள்ளுதல் திட்டமும் இதனோடு சேரும் போது பொருளாதார மீட்சி வேகமாக நடைபெறுகிறது.
- 2021-22இன் ஜுலை - செப்டம்பர் வரையிலான காலாண்டில் ஒட்டுமொத்த மதிப்புக் கூட்டு சேவைகள் பெருந்தொற்றுக்கு முந்தைய நிலையைத் தாண்டி விட்டன. ஆனால் வர்த்தகம், போக்குவரத்து முதலான ஒட்டுமொத்த மதிப்புக் கூட்டு சேவைகள் செறிவாக உள்ள துறைகளில் பெருந்தொற்றுக்கு முந்தைய நிலைக்கு கீழாகவே இது இருந்து வருகிறது.
- ஒட்டுமொத்த சேவைத்துறை ஒட்டுமொத்த மதிப்புக் கூட்டு சேவைகள் 2021-22இல் 8.2 சதவிகிதமாக வளரும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- ஏப்ரல் - டிசம்பர் 2021இல் ரெயில் சரக்குப் போக்குவரத்து பெருந்தொற்றுக்கு முந்தைய நிலையைத் தாண்டிவிட்டது. விமானச் சரக்குப் போக்குவரத்தும் கப்பல் சரக்குப் போக்குவரத்தும் முறையே அந்தந்தத் துறைகளின் பெருந்தொற்றுக்கு முந்தைய நிலையை அடைந்துவிட்டன. உள்நாட்டு விமானச்சேவை, பயணிகள் ரெயில் சேவை ஆகியன படிப்படியாக அதிகரித்து வருகின்றன. முதல் அலையோடு ஒப்பிட, இரண்டாவது அலையின் தாக்கம் வெகுவாக எதிர்கொள்ளப்பட்டு மீண்டெழுந்து வருவது இதன் மூலம் தெரிய வருகிறது.
- 2020-21ஆம் ஆண்டின் ஜனவரி - மார்ச் காலாண்டில் சேவைகள் ஏற்றுமதி பெருந்தொற்றுக்கு முந்தைய நிலையைத் தாண்டிவிட்டது. 2021-22இன் முதல் அரையாண்டில் 21.6 சதவிகிதம் வளர்ந்துள்ளது. சர்வதேச அளவில் ஏற்பட்டு வரும் மென்பொருள் தேவை மற்றும் ஐடி சேவைகள் ஏற்றுமதியில் இந்த வளர்ச்சி சாத்தியமாகியிருக்கிறது.

### சமூக உள்கட்டமைப்பு, வேலைவாய்ப்பு

- பொருளாதார மீள்புதுப்பித்தலுக்குப் பிறகு 2020-21இன் இறுதிக் காலாண்டில் பொருளாதாரக் குறிகாட்டிகள் பெருந்தொற்றுக்கு முந்தையை நிலையை அடைந்துவிட்டன.
- மார்ச் 2021 வரையிலான குறிப்பிட்ட கால இடைவெளியிலான உழைப்பாளர் சக்தி கணக்கெடுப்பின்படி (PFLS) பெருந்தொற்றுப் பரவலால் பாதிக்கப்பட்ட நகரப்பகுதி வேலைவாய்ப்பு ஏறத்தாழ பெருந்தொற்றுக்கு முந்தைய நிலையை அடைந்துவிட்டது.
- மத்திய, மாநில அரசுகள் சமூக சேவைகளுக்காக (சுகாதாரம், கல்வி மற்றும் இதர துறைகள்) மேற்கொள்ளும் செலவினம் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி அளவில் 2014-15இல் 6.2 சதவிகிதமாக இருந்தது. இது 2021-22இல் (பட்ஜெட் மதிப்பீடு) 8.6 சதவிகிதமாக அதிகரித்துள்ளது.
- பெருந்தொற்றுக் காலத்தில் ஊரகப்பகுதிகளில் ஒருங்கிணைக்கப்படாத தொழிலாளர்களுக்கு உதவும் வகையில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்திற்குக் (MNREGS) கூடுதலாக நிதி ஒதுக்கப்பட்டது.

ISSN 0971 - 8362
THITTAM (YOJANA - TAMIL)

Published on: 1st Week of Every Month
Posted on : 5th March 2022
Posted at Egmore RMS / 1 Patrika Channel

Registrar of Newspapers for India No.24495/74
"Registration" No.TN/CC(S)DN//566/2021-2023
WPP No.: TN/PMG (CCR) WPP No. 150/2021-2023




| சந்தா திட்டங்கள் | YOJANA (Development Monthly in English, Hindi, Urdu and 10 other Indian Languages), KURUKSHETRA (Monthly on Rural Development English and Hindi), AJKAL (Literary and Cultural Monthly in Hindi & Urdu), திட்டம் தமிழ் இதழ் இவை ஒவ்வொன்றுக்கும் தனித் தனியாக சந்தா தொகை | | Bal Bhararti Children's Monthly (Hindi) | | Employment News English/ Hindi/ Urdu | |
|---|---|---|---|---|---|---|
| | சாதாரண அஞ்சல் | பதிவு அஞ்சல் | சாதாரண அஞ்சல் | பதிவு அஞ்சல் | அச்சுப் பதிப்பு (சாதாரண அஞ்சல்) | மின் பதிப்பு |
| 6 மாதம் | -- | -- | -- | -- | ரூ. 265 | ரூ. 200 |
| 1 ஆண்டு | Rs.230 | ரூ. 434 | Rs.160 | ரூ. 364 | ரூ. 530 | ரூ. 400 |
| 2 ஆண்டுகள் | Rs.430 | ரூ. 838 | Rs.300 | ரூ. 708 | ரூ.1000 | ரூ. 750 |
| 3 ஆண்டுகள் | Rs.610 | ரூ.1222 | Rs.420 | ரூ.1032 | ரூ.1400 | ரூ.1050 |

நீங்கள் சந்தா செலுத்த விரும்பும் இதழின் பெயரையும், சந்தா செலுத்தும் கால அளவையும் குறிப்பிடவும்.

## SUBSCRIPTION COUPON (New Membership/Renewal/Change in Address)

Please send me ( Journal's Name & Language) for 1Yr/2Yrs/3Yrs

Name (in BLOCK LETTERS): ----------------------------------------------------------------

ADDRESS:----------------------------------------------------------------

PINCODE:---------------- MOBILE No.:-------------------- Subscription Number (If already a Subscriber)

DEMAND DRAFT /POSTAL ORDER/MONEY ORDER No: ------------------------ DATE: ----------------

சந்தா கட்டணத்தை <https://bharatkosh.gov.in>/Product/Product என்ற முகவரியில் இணையதளம் வாயிலாக எளிதில் செலுத்தலாம். வரைவோலையாகச் (DEMAND DRAFT) செலுத்துவோர், ADDITIONAL DIRECTOR GENERAL, MINISTRY OF BROADCASTING, NEWDELHI - 110003 என்ற பெயரில் புதுதில்லியில் மாற்றத்தக்கதாக எடுத்து, EDITOR, JOURNALS UNIT, PUBLICATIONS DIVISION, ROOM No.779, 53 SOOCHNA BHAVAN, CGO COMPLEX, LODHI ROAD, NEWDELHI - 110003 என்ற முகவரிக்கு மேற்காணும் சந்தா கூப்பனுடன் அனுப்பி வைக்கவேண்டும்.

தொடர்புக்கு மின்னஞ்சல் முகவரி: pdjucir@gmail.com
தொலைபேசி எண்: 011-24367453

முதல் இதழ் சந்தாதாரருக்கு வந்து சேர 4 முதல் 6 வாரங்கள் ஆகலாம். சந்தா புதுப்பிப்பு/முகவரி மாற்றம் ஆகியவற்றிற்கு உங்கள் சந்தா எண்ணை மறவாமல் குறிப்பிட்டு எழுதவேண்டும்.

Published by Shri Sanjay Ghosh, Editor/Asst. Director on behalf of DG, Publications Division, Ministry of Information and Broadcasting, Govt. of India.
and Printed by A.Sivakumar at Pavai Printers (P) Ltd., No. 142, Jani Jan Khan Road, Royapettah, Chennai - 14. Ph: 044-28482441.
Published at 'A' Wing, Ground Floor, Rajaji Bhavan, Chennai - 600 090. Ph: 2446 5382.